மயிலை சீனி. வேங்கடசாமி

# தமிழுக்கு வழங்கிய கொடை

3



ஆராய்ச்சிப் பேரறிஞர்

## மயிலை சீனி வேங்கடசாமி

# தமிழுக்கு வழங்கிய கொடை

முதன்முறையாக நூல்வடிவம் பெறும்
மயிலையார் கட்டுரைகள்

மூன்றாம் தொகுப்பு

பதிப்பாசிரியர்
**புலவர் கோ. தேவராசன்,** எம்.ஏ., பி.எட்.,
செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பேரவை, சென்னை

வெளியிடுவோர்
**எம். வெற்றியரசி**
மனை எண் - 9, கதவு எண் - 26,
ஜோசப் காலனி, ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088.
தொலைபேசி: 2455954.

# நன்றி உரை

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்களில் முதன்மையானவர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் என்றால் தினையளவும் மிகையில்லை. இருள் மூடிக்கிடந்த வரலாற்றுக் குகையில் தம் அறிவாலும் ஆற்றலாலும் கடுமையாக உழைத்துத் தளராமல் முயன்று ஒளி ஏற்றிய பெருந்தகை மயிலையார் ஆவார்.

அஞ்சாமல் கருத்து வழங்கியவர் அவர். அவர் ஆய்விலே கண்ட உண்மைகள் தமிழ் மொழியின் ஏற்றத்திற்கும் தமிழர் தம் சிறந்த வாழ்விற்கும் சான்றாக நிற்பன. எத்தனை எத்தனை கருத்துச் செல்வங்களை அவர் தமிழகத்திற்கு வாரி வழங்கியிருக்கிறார் என்பதனை எண்ணுகிறபோது அவை வெறும் எழுத்துப் பணியல்ல; தமிழுக்கும் தமிழருக்கும் வழங்கிய பொற் குவியலினும் மேலான கொடை என்றே கருதத் தோன்றும்.

தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று சென்று ஆய்ந்து ஆய்ந்து அவர் உரைத்தவைகள் கண் போன்ற கருத்து மணிகள். அவர் பல இதழ்களில் எழுதிய கட்டுரைகளை முதன்முதலாக நூல் வடிவில் தொகுத்து வெளியிடுகிறோம். இது மூன்றாம் தொகுப்பு. இக்கட்டுரைகளைத் தங்கக் கட்டிகள் போலக் காப்பாற்றி அளித்த பெரும்புலவர், இந்நூலின் பதிப்பாசிரியர், மாண்புநிறை தேவராசனார் அவர்களுக்கு மிக்க நன்றி.

மயிலையார் நூல்களை நாட்டுடைமை ஆக்கிய தமிழக அரசுக்கு நன்றி. இந்நூலுக்கு மெய்ப்புத்திருத்திய பெருமக்கள் சு. இலம்போதரனார் அவர்களுக்கும் புலவர் சி. தனபால், எம்.ஏ., பி.டி. அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

**பதிப்பாளர்**

# பதிப்புரை

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதனை என் வாழ்வில் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகிறேன். 1960 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதன் முதலாக அவரைச் சந்தித்து உரையாடினேன்.

மயிலாப்பூர் காரணீஸ்வரர் கோவில் தெருவில் மயிலையாருடைய இல்லம் இருக்கிறது. அதே தெருவில் உள்ள ஓர் இடைநிலைப் பள்ளியில் அவர் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். அவர் ஓய்வு பெற்றுச் சென்ற பின்னர் அதே பள்ளியில் நான் தமிழாசிரியராகப் பணியாற்றினேன். அதனால் அடிக்கடி அவரைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

மயிலையாருடைய இல்லம் ஓர் அருங்காட்சியகம் என்று சொன்னால் அது மிகையாகாது. பழைய ஏட்டுச் சுவடிகளும் செப்பேடுகளும், பழங்காசுகளும், அவர் வீட்டில் நிறைந்து இருக்கும். அவர் இல்லம் நோக்கிப் பல் துறை அறிஞர்கள் வருவார்கள். உரையாடுவார்கள். மகிழ்வுடன் திரும்புவார்கள். அறிவில் அவர் இமயம் போன்றவர். எனினும் அவரிடம் காணப்பட்ட எளிமையும் அடக்கமும் எவரையும் வியப்பில் ஆழ்த்தும்.

அவர் என் மீது பொழிந்த அன்பு பாசமிக்க ஒரு தந்தை தன் மகன் மீது பொழியும் அன்புக்கு நிகரானது. வேகவைத்த நேந்திரம் பழத்தை எனக்கு அறிந்து அறிந்து கொடுப்பார். நூலகங்களுக்கு அழைத்துச் செல்வார். அறிவுரைகள் பல கூறுவார். எனது திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வாழ்த்துக் கூறிய பெருந்தகை அவர். அவருடைய தொடர்பு என் வாழ்க்கையில் பல திருப்புமுனைகளை உண்டாக்கியது. நிற்க,

நான் தமிழ் வளர்ச்சிப் பேரவையின் செயலாளன். பேரவையின் சார்பில் மயிலையாருடைய நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று கருதினேன். பேரவையில் அங்கம் வகிக்கும் எனது

நண்பர்கள் புலவர் தமிழமுதன், புலவர் சி. தனபால், திரு. இலக்குமி பதி போன்றவர்கள் கடுமையாக உழைத்தனர்.

தமிழகத்திலேயே முதன் முதலாகச் சென்னை தியாகராயர் கல்லூரியில் 29.1.2000 அன்று மயிலையாருடைய நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

துணை வேந்தர் திரு. பொற்கோ அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றார்கள். முனைவர் சிலம்பொலி செல்லப்பனார், முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி, மூதறிஞர் ஊ. ஜெயராமன், மூதறிஞர் மா.சு. சம்பந்தன் முதலான தமிழறிஞர்கள் மயிலையாரின் சிறப்புகளை எடுத்துக் கூறிப் புகழாரம் சூட்டினர்.

விழாவினை யொட்டி ஒரு கண்காட்சியும் நடைபெற்றது. அதில் மயிலையாரின் நூல்கள், அவருடைய அரிய புகைப்படங்கள், மயிலையார் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. இக்கண்காட்சி விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் ஈர்த்தது.

விழாவில் மயிலையாருடைய நூல்களை நாட்டுடமை யாக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானத்தை வலியுறுத்தித் தமிழ் வளர்ச்சிப் பேரவையின் சார்பில் நூறு தமிழறிஞர்களிடம் கையொப்பம் பெற்றுத் தமிழக அரசுக்கு அனுப்பி வைத்தோம். தமிழக அரசு கருணை உள்ளத்தோடு பேரவையின் கோரிக்கையை ஏற்று மயிலையாரின் நூல்களை நாட்டுடமை யாக்கியது. மயிலையாரின் குடும்பத்திற்கும் பத்து இலட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்கியது, நிற்க,

மயிலையாருடைய கட்டுரைகளைத் தொகுப்பதற்கு நான் பட்ட அரும்பாடுகள் பற்றிச் சில வார்த்தைகள் சொல்வது தவறாகாது என்று கருதுகிறேன். நூலகம் நூலகமாகத் தேடிச் சென்றேன். சென்னையில் மட்டுமின்றி, தஞ்சை, மதுரை போன்ற இடங்களுக்கும் சென்றேன். தனிப்பட்டவர் இல்லங்களுக்கும் சென்றேன். இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் மட்டும் அல்லாது ஆண்டு மலர்கள், வெள்ளி விழா மலர்கள், மணி விழா மலர்கள், நினைவு மலர்கள், தமிழ் அமைப்புகள் சார்ந்த மலர்கள், எனப் பல்வேறு மலர்களையும் பார்த்துத் தொகுத்தேன். அவரது கட்டுரைகள் இடம் பெற்ற நூல்களையும் தேடிக்கண்டு கட்டுரைகளைத் தொகுத்தேன்.

குறிப்பிட்ட மலர்களில் குறிப்பிட்ட இதழ்களில் மயிலையாருடைய கட்டுரைகள் வெளிவந்துள்ளன என்பதை நான் ஓரளவு அறிவேன். அக்கட்டுரைகள் எனக்கு இன்னமும் கிடைக்கவில்லை.

குறிப்பிட்ட நூலகம் ஒன்றிற்குச் சென்றேன். மயிலையார் தமது இளமைக் காலத்தில் எழுதிய ஏறத்தாழ இருபது கட்டுரைகள் அந்நூலகத்தில் உள்ள ஒரு இதழில் வெளி வந்திருப்பதைக் கண்டேன், படித்தேன். ஆனால் படியெடுக்கவோ நகல் எடுக்கவோ என்னை அனுமதிக்கவில்லை. தலைமையிடம் சென்று முறையிட்டேன். குறிப்பிட்ட இதழ்களைப் படிப்பதற்கே நாங்கள் யாரையும் அனுமதிப்பதில்லை என்று கூறியதோடு அமையாது, படிக்கத் தந்த நூலகரையும் கடிந்து கொண்டார். ஏமாற்றத்துடன் திரும்பினேன். மயிலையாருடைய கட்டுரைகளை நான் தொகுப்பதற்குப் பெரிதும் துணையாக இருந்தது **மறைமலையடிகளார் நூலகம்** மட்டுமே. அவர்களுக்கு என் மனம், மொழி, மெய்களால் நன்றி கூறுகிறேன்.

ஒருவர் அரும்பாடு பட்டுச் சேமித்து வைத்த செல்வத்தை யெல்லாம் ஒரே நாளில் வழிப்பறி செய்வோர் உண்டு. வாழ்க்கையில் கண்டிருக்கிறோம். மயிலையாருடைய கட்டுரைகளும் அருஞ் செல்வந்தானே? அவைகளை என்னிடமிருந்து வழிப்பறி செய்ய முயன்றனர் சிலர். என்னுடைய எளிய தோற்றம் அவ்வாறு செய்ய அவர்களைத் தூண்டியது போலும்.

மன உறுதி, அசையா உள்ளம், சகிப்புத் தன்மை, ஓயாத உழைப்பு, பயன் கருதாது பணி செய்தல், தமிழனிடம் நன்றி பாராமை, மனதில் வெறுப்புணர்ச்சி கொள்ளாமை, அறிமடம் போன்ற பண்புகள் மயிலையார் எனக்கு வழங்கிய நன்கொடைகள். அவைகளை வழிப்பறி செய்யலாமே? அன்பர்கள் முன்வருவார்களாக.

பல்லாண்டு முயற்சியின் பயனாக ஏறத்தாழ 131 கட்டுரைகளைத் தொகுத்தேன். இன்னும் தொகுக்கப்பட வேண்டியவை நூறு கட்டுரைகளாவது இருக்கக்கூடும். அவைகளையும் தேடித் தொகுக்கும் முயற்சியுடையேன். தேடித் தொகுத்த கட்டுரைகளில் பல கீழ்க்கண்ட இதழ்களில் வெளிவந்தவை.

செந்தமிழ்ச் செல்வி, கலைக் கதிர், ஆராய்ச்சி, தமிழ்ப் பொழில், நண்பன், இலட்சுமி, குடியரசு, திருக்கோயில், தமிழியல், தமிழ்க் கல்சர், கல்வி, நல்லறம், தமிழரசு, கல்வெட்டு, உண்மை, முக்குடை, முழுமதி போன்ற

இதழ்கள் ஆகும். இதழ்களேயன்றி பல்வேறு மலர்களிலிருந்தும் கட்டுரைகளைத் திரட்டியுள்ளேன்.

"திரட்டி வைத்திருக்கும் மயிலையாருடைய கட்டுரைச் செல்வங்களை உடனடியாக வெளியிட்டு விடுவோம். அதனால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெரும் பயன் விளையும்" என்று எனது அரிய நண்பர் முத்தமிழ்க் கவிஞர், முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்கள் கருத்துத் தெரிவித்தார். அவர் கூறியது சரியென்றே எனக்குப்பட்டது. அவர் உண்மையானவர், நம்பிக்கைக்குரியவர் என்று எனது உள்ளுணர்வு எனக்கு உணர்த்தியது. மயிலையாருடைய கட்டுரைகளை வகைப்படுத்தினேன். 12 தலைப்புகளில் 131 கட்டுரைகள் அடங்கின.

இப்பொழுது மயிலையார் கட்டுரைகள் மூன்று தொகுதிகளாக வெளி வருகின்றன. உங்கள் கரங்களில் தவழ்கின்றன. இவைகளில் உள்ள கட்டுரைகள் இது வரை நூல் வடிவம் பெறாதவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மயிலையார் 1920 முதலே கட்டுரைகள் எழுதத் தொடங்கி விட்டார். ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் தொடர்ந்து பல்வேறு இதழ்களில் கட்டுரைகள் வரைந்துள்ளார். அவருடைய ஒவ்வொரு கட்டுரையும் விலை மதிக்க முடியாத கொற்கை முத்துக்கள் எனலாம். அவருடைய ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒரு வரலாறு உண்டு. சான்றாகச் "சிறுபாணன் சென்ற பெருவழி" என்ற கட்டுரை. ஆறே பக்கங்கள் கொண்டது. அதனை எழுதுவதற்குச் சில ஆண்டுகள் அவருக்குத் தேவைப்பட்டது. "பாண்டியர் வரலாற்றில் ஒரு அரிய புதிய செய்தி" என்ற கட்டுரை. பதினோரு பக்கங்கள் கொண்டது. அதனை எழுதுவதற்கு ஏறக்குறைய மூவாயிரம் சங்கப் பாடல்களை அவர் படிக்க நேர்ந்தது. "சிலப்பதிகாரமும் பங்களரும்" என்ற கட்டுரை. அந்தக் கட்டுரையை எழுதி முடிப்பதற்காகத் தென்னிந்திய சாசனங்கள் முழுவதையும் அவர் கற்றார். "மறைந்து போன மருங்கூர்ப்பட்டினம்" என்ற கட்டுரை. அதில் அவர் தந்த குறிப்புகளை வைத்துக்கொண்டு தொல்பொருள் இலாகா அகழ்வாராய்ச்சி செய்தது. மறைந்து போன மருங்கூர்ப் பட்டினம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்தது. இப்படி ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு. விளக்கப் புகுந்தால் அது தனி நூலாக விரியும்.

*மயிலை சீனி அவர்கள் ஒரு பேருருவம். மகத்தான மனிதர். அவர் எழுதிய நூல்களை மட்டும் படித்து அவருடைய முழு ஆளுமையை நம் மனத்தில் நிலைப்படுத்திக் கொள்ளமுடியாது. அவை உணர்த்துவன அவருடைய ஆளுமையின் செம்பாதி. மற்ற செம்பாதியினை அவருடைய கட்டுரைகளே நிறைவு செய்யும்.*

***பல்வேறு இதழ்களில் சிதறிக் கிடந்த மயிலையாருடைய கட்டுரைகள் இப்பொழுதுதான் முதன்முறையாக நூல் வடிவம் பெறுகின்றன.*** *முதன் முதலாகப் பிறக்கிற குழந்தையை மார்போடு அணைத்துக்கொள்ள வேண்டும் என்ற துடிப்பு மட்டுமே இப்பொழுது என்னை ஆட் கொண்டிருக்கிறது.*

*மயிலையாருடைய கட்டுரைகள் இனி தமிழகமெங்கும் உலாவரும். இக்கட்டுரைகள் பலருடைய அறிவினை மெருகேற்றும். சிந்தனைகளில் செழுமையைக் கூட்டும். எண்ண ஓட்டங்களில் திருப்பு முனையை ஏற்படுத்தும். கருத்தரங்குகள், திறனாய்வுகள், பட்டி மன்றங்கள் புதிய வீச்சினைப் பெறும். முனைவர் பட்ட ஆய்வேடுகளில் புதுமைகள் மிளிரும். இஃதோர் சமூகவியல் மாற்றம். இது நடந்தே தீரும். இம் மாற்றத்திற்கு அருமை நண்பர் முத்தமிழ்க் கவிஞர், முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் துணையாக உள்ளார். இக்கட்டுரைகளை வெளியிட முயன்ற தன் வாயிலாகச் சாதனை நாயகர் பட்டியலில் அவர் இடம் பெறுவார் என்பதில் ஐயமில்லை. அவருடைய தூய தமிழ்ப் பணி வெல்க, வாழ்க என்று வாழ்த்துகிறேன். இந்நூலை வெளியிட்ட அவர்தம் மகளார் வெற்றியரசிக்கு என் வாழ்த்துக்கள்.*

**அன்பன்,**
**கோ. தேவராசன்**

ஆராய்ச்சிப் பேரறிஞர்

மயிலை. சீனி வேங்கடசாமி அவர்களுக்குப்

## பாவேந்தர் பாரதிதாசன் வாழ்த்து

தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்கெட லாற்றா அண்ணல்
வேங்கட சாமி என்பேன்!
விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டோன்!
வீங்கிட மாட்டான்! கல்வி
விளம்பரம் விழைதல் இல்லான்!

தமிழுக்குத் தொண்டு செய்வோர்
தலைச்சங்க முதலாய் இன்றும்
தமிழுக்குத் தொண்டர் யார்க்கும்
தலைத்தொண்டன்; அடிமை அல்லன்;
குமிழ்பகுத் தறிவியக்கக்
கொள்கையில் அசைக் கொணாத
இமயமும் தோற்கும் அண்ணல்!
ஈடிலாத் திறமை ஆற்றல்!

ஒன்றினும் திரியாதுள்ளம்
ஒண்டமிழ்க் குழைப்ப தொன்றே
நன்றினும் நன்று என்று
துறவினை நயந்த மேலோன்.
நன்றிகெட் டதிகாரத்தை

நாடும் எவ்வரசும் அன்னார்
குன்றினும் மிகுந்த சீர்த்தி
கொண்டுயர் வளித்தார் இல்லை.

தமிழையே வணிக மாக்கித்
தன்வீடும் மக்கள் சுற்றம்
தமிழிலே பிழைப்ப தற்கும்
தலைமுறை தலைமுறைக்குத்
தமிழ்முத லாக்கிக் கொண்ட
பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்.!

அஞ்சுதல் அறியா நெஞ்சன்
அகல்வர லாறனைத்தும்
மிஞ்சுதல் இன்றிக் கற்றோன்.
மேம்படும் நூலாராய்ச்சி
கெஞ்சிடும் தனைத்துலக்க
கேண்மையோ டுயர்வு செய்வான்.
எஞ்சுவ துமக்கொன்றுண்டோ
இவனைநீர் மறந்து விட்டால்?

-தமிழ்நிலம் (14-10-52)

# ஆராய்ச்சிப் பேரறிஞர்
# மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் வாழ்வும் தொண்டும்.

-புலவர். கோ. தேவராசன், எம்.ஏ.,பிஎட்.,

**தோற்றுவாய்:-**

*தனித்தமிழ்த் தந்தை என்றால் மறைமலை அடிகளாரைத்தான் குறிக்கும். தமிழ்த் தென்றல் என்றால் திரு.வி.க அவர்களைத்தான் நினைவூட்டும். மொழி ஞாயிறு என்றால் பாவாணர்தான். அதுபோல் ஆராய்ச்சிப் பேரறிஞர் என்றால் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களைத்தான் குறிக்கும். அவர்தான் ஆய்வுலகின் முன்னோடி. ஆய்வுக்கு இலக்கணம் வகுத்த அறிஞர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வுப் பணியினைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர்.*

**குடும்பம்:-**

*சீனி வேங்கடசாமி அவர்கள் ஒரு நல்ல தமிழ்க் குடும்பத்தில் பிறந்தவர். தந்தையார் சீனிவாச நாயகர். பரம்பரை சித்த வைத்தியர். தமிழ்ப் புலமை மிக்கவர். மயிலாப்பூரில் காரனீசுவரர் கோவில் தெருவில் புகழுடன் வாழ்ந்து வந்தார். அவரது இல்லத்தில் சிறந்த நூலகம் ஒன்று இருந்தது. அதில் ஏராளமான ஓலைச் சுவடிகளும், சித்த மருத்துவ நூல்களும் தமிழிலக்கிய நூல்களும் இருந்தன.*

*சீனிவாச நாயகருக்கு மூன்று ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் பிறந்தனர். முதல் மகன் முத்துசாமி என்பவர். இளமையிலேயே இயற்கை எய்தினார். இரண்டாம் மகன் கோவிந்தராசன். பெரும் புலவராய்த் திகழ்ந்தார். மூன்றாம் மகன்தான் ஆய்வுலகம் போற்றும் மயிலை சீனி. வேங்கடசாமி. இவர் 16.12.1900 இல் பிறந்தார்.*

சீனி கோவிந்தராசனாரும், தமிழ்க்கடல் கா. நமச்சிவாய முதலியாரும், ஒருசாலை மாணவர்கள். இருவரும் மகாவித்துவான். மயிலை சண்முகம் பிள்ளையிடம் மரபு வழி தமிழ் கற்றவர்கள். சீனி. கோவிந்தராசனார் அக்காலத்தில் பெரும் புலவர் என மதிக்கப்பட்டார். அவர் 1920 இல் திருக்குறள் காமத்துப்பாலை நாடகமாக எழுதிப் புகழ் பெற்றார். திரு மயிலை நான் மணி மாலை எனும் சீரிய சிற்றிலக்கியத்தையும் படைத்தவர்.

மயிலை சீனி. வேங்கடசாமி தமையனாரின் மேற்பார்வையில் உயர் நெறிகளோடு வளர்ந்தார். அவரிடம் முறையாகத் தமிழ்க் கல்வி பயின்றார். பதினாறு அகவை நிரம்பிய அளவிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். மயிலாப்பூரில் உள்ள புனித சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் பயின்று பள்ளி இறுதி வகுப்பில் தேர்ந்தார். பின்னர் ஓவியக் கல்லூரியில் சேர்ந்து ஓராண்டு பயின்றார். ஓவியப் பயிற்சியால் அவர் இல்லம் ஒரு கலைக்கூடமாய்த் திகழ்ந்தது.

அகவை இருபத்தி மூன்றில் சீனியின் குடும்பத்தில் புயல் வீசத் தொடங்கியது. தந்தையும், தமையனாரும் அடுத்தடுத்து இயற்கை எய்தினர். குடும்பச் சுமை முழுவதும் அவர் மீது விழுந்தது. தமக்கையாரைக் காப்பாற்றும் பொறுப்பும், தமக்கையாரின் இரு பேத்திகளை வளர்த்துக் காப்பாற்றும் பொறுப்பும் அவருக்கு ஏற்பட்டது.

**தொழில்:-**

எனவே மோட்டார் உதிரிப்பாகம் விற்கும் கடையொன்றில் எழுத்தராக வேலைக்குச் சென்றார். நிறைய படிக்கவேண்டும், எழுத வேண்டும் என்ற வேட்கை சீனிக்கு இருந்தது. அவர் செய்து வந்த வேலை அதற்கு ஒத்து வரவில்லை. எனவே வேலையை விடுத்தார்.

தமிழகத்தில் நீதிக்கட்சியினர் ஆட்சி புரிந்த காலம் அது. அவர்கள் நடத்தி வந்த திராவிடன் இதழில் 1925இல் ஆசிரியர் குழுவில் ஒருவராய்ச் சேர்ந்து பணியாற்றினார். பத்திரிகைத் துறையில் பல புதிய அனுபவங்களைப் பெற்றார். எந்தக் கருத்தையும் எளிமையாகவும், தெளிவாகவும், சுவையாக வும் வெளியிடும் திறன் அவருக்கு ஏற்பட்டது.

நாளடைவில் இதழ்ப் பணியிலும் அவருக்கு மனநிறைவு ஏற்படவில்லை. தமிழ் ஆய்வுப் பணியில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்ற வேட்கையே மிகுதியாயிற்று. அதிக அளவில் ஓய்வு கிடைக்கக் கூடிய ஆசிரியர் பணியை அவர் மனம் நாடியது. ஆதலால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயின்று ஆசிரியரானார். தமது இல்லம் இருந்த தெருவில் அமைந்திருந்த நகராண்மைக் கழக இடைநிலைப் பள்ளியொன்றில் ஆசிரியராக அமர்ந்தார். இறுதிவரை இடைநிலை ஆசிரியராகவே பணியாற்றி ஓய்வு பெற்றார்.

**தமிழ்த்தேனீ:-**

மயிலை சீனி ஒரு தமிழ்த் தேனீ. அறிவின் வாயில்களை நோக்கி அவரது கால்கள் எப்போதும் நடந்த வண்ணம் இருந்தன.

சென்னைப் பல்கலைக் கழக நூலகமும், கன்னிமரா நூலகமும், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி ஏட்டு நூலகமும் அவரது அறிவை விரிவு செய்தன. அகண்டமாக்கின. அல்லும், பகலும் நூற்கடலுள் மூழ்கி அரிய முத்துக்களைக் கொணர்ந்தார்.

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதர் ஏட்டுச் சுவடிகளைத் தேடும் பணியில் ஊர் ஊராகக் கால் கடுக்க நடந்து சென்றார். அவர் போன்று மயிலையாரும் ஊர்தோறும் சென்று கல்வெட்டு ஆய்வினைச் செய்தார். கல்வெட்டுகளைத் துல்லியமாகப் படித்துப் பொருள் உணர்ந்தார். பழைய ஏட்டுச் சுவடிகளைத் தெளிவாகப் படித்தறிந்தார். தொன்மையான சாசனங்களை எல்லாம் தேடித் தேடிச் சேகரித்தார். அவைகளில் கூறப்படும் நுட்பமான வரலாற்றுச் செய்திகளை ஐயமின்றி அறிந்தார்.

கோவில்கள், கோபுரங்கள், கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள், சிலைகள் முதலியவற்றைக் கண்டு மகிழ்வதில் பெரு விருப்பங்கொண்டார் மயிலையார். ஒரு கோயிலைப் பார்த்தவுடன் அதைக் கட்டிய மன்னன் யார்? எந்தக் காலத்தில் அது கட்டப்பட்டது? அக்கோயில் எவ்வகையான அமைப்பை உடையது? அக்கோயில் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் எவை? என்பன போன்ற விவரங்களைத் துல்லியமாகக் கூறக்கூடியவர். கோயில் கற்கள் ஒவ்வொன்றும் அவருக்கு ஒவ்வொரு கதையைக் கூறியது. கல்லில் வடிக்கப்பட்ட சிற்பங்கள் அவரிடம் காவியம் பாடியது.

மயிலையார் ஒரு நுண்கலை வாணர். தமிழர் வளர்த்த கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாடகக்கலை அனைத்தையும் மிக நுட்பமாக ஆய்வு செய்தவர். நம் மூதாதையர் வளர்த்த அழகுக் கலைகள் அழிந்து கொண்டும், அழிக்கப்பட்டுக் கொண்டும் வருவதை அறிந்து கண்ணீர் வடித்தார்.

தமிழ்நாட்டில் நிலவிய சமயங்களை எல்லாம் வெகு நுட்பமாக ஆய்வு செய்தார். தமிழ் மொழியின் வரலாறும், தமிழ் இலக்கிய வரலாறும் சமய வரலாற்றைச் சார்ந்தே உள்ளதால் விருப்பு வெறுப்பின்றி ஆய்வு செய்தார். அறிவுக் கண்கொண்டு ஆய்வு செய்தார்.

தமிழ் எழுத்தியல் வளர்ச்சியை நன்கு அறிந்தவர் மயிலையார். தமிழுடன் தொடர்புடைய கோலெழுத்து, கிரந்த எழுத்து, பல்லவர் எழுத்து, பிராமி எழுத்து எனப் பல்வகையான எழுத்து முறைகளையும் நன்கு அறிந்தவர். அவர் ஒரு பன்மொழி அறிஞருங்கூட. தமிழ், வடமொழி, ஆங்கிலம், திராவிட மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்.

எந்தப் பேராசிரியரின் துணையும் இல்லாமல் எந்தப் பல்கலைக் கழகத்தின் அரவணைப்பும் இல்லாமல் ஆய்வின் பொருட்டு மயிலையார் சென்ற இடங்கள் பல. ஆய்ந்த கல்வெட்டுகள், செப்பேடுகள் மிகப் பல. கண்ட அருங்காட்சியங்களும் மிகப் பல.

கடுமையான உழைப்பாலும், ஊக்கத்தாலும், வாழ்நாள் முழுவதும் பல்வேறு துறைகளில் தமது அறிவெல்லைகளை விரித்துக் கொண்டே சென்றார். அறிவின் வாயில்களைத் தேடித் தேடிச் செல்லும் தேனீயாக விளங்கியவர் மயிலை சீனி.

**பல்கலை வாணர்:-**

சுருங்கச் சொன்னால் மயிலையார் ஒரு பல்கலை வாணர். இலக்கியக் கடல், வரலாற்றறிஞர், மொழிநூற் புலவர், சமயநூல் வித்தகர், நுண்கலை வாணர், வரிவடிவ வரலாற்று வல்லுநர், சொல்லாய்வுச் செம்மல், கல்வெட்டு, சாசனம், தொல்லியல் துறைகளில் தனி முத்திரை பதித்தவர். பன்மொழிப் புலவர், மானிடவியல், சமூகவியல் அறிஞர் எனப் பல்வேறு பரிமாணங் களின் பெட்டகமாகத் திகழ்ந்தார்.

*பாவேந்தர் பாராட்டு:-*

*மயிலையார் தமிழ் மொழியில் தொடாத ஆய்வுத்துறை என்று எதுவும் இல்லை. தொட்டுத் துலக்காத பகுதி என்று எதுவும் இல்லை. அவர் இடைநிலைப் பள்ளி ஆசிரியர் என்றாலும், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தொடாத பகுதிகளை, தொடுவதற்கு அஞ்சும் பகுதிகளை எல்லாம் தேடித் தேடி எடுத்துத் துலக்கினார்.*

**''அகல் வரலாறு அனைத்தும்**
**மிஞ்சுதல் இன்றிக் கற்றோன்**
**மேம்படும் நூலாராய்ச்சி**
**கெஞ்சிடும் தனைத் துலக்க**
**கேண்மையோடு உயர்வு செய்வான்''**

*என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் மயிலையாருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.*

*தொடர்பு:-*

*மயிலையார் பரந்துபட்ட கல்வியறிவோடு விரிந்துபட்ட அறிஞர் பெருமக்களின் தொடர்புகளையும் பெற்றிருந்தார்.*

*மயிலையார் வாழ்க்கையில் மிகப் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியவர் கிறித்துவக் கல்லூரியில் பேராசிரியராக விளங்கிய ச.த. சற்குணர் என்பவர் ஆவர். அவர் தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய மூன்று துறைகளிலும் பேரறிஞராய் விளங்கியவர். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மொ.சு. துரையரங்கனார், அ.கி. பரந்தாமனார் போன்ற அறிஞர்கள் சற்குணரிடம் தமிழ் பயின்றவர்கள். மயிலையாரும் சற்குணரிடமே ஆங்கிலமும், தமிழும் பயின்றார். கிறித்துவ சமய இலக்கியங்கள் குறித்தும், வாழ்க்கை நெறிமுறைகள் பற்றியும் அறிந்தார். அஞ்சாமை என்னும் அருங்குணத்தையும் அவரிடமிருந்து பெற்றதாக மயிலையாரே ஒரு பேட்டியில் கூறியுள்ளார். சற்குணரிடம் கொண்ட தொடர்பு மயிலையார் வாழ்க்கையில் ஒளிவிளக்கை ஏற்றிவைத்தது.*

தொடக்கத்தில் மயிலையார் நீதிக் கட்சியினர் நடத்திய திராவிடன் இதழில் துணையாசிரியராய்ப் பணிபுரிந்தார். பின்னர் தந்தை பெரியாரின் குடியரசு இதழில் கட்டுரைகள் எழுதினார். அதன் விளைவாகப் பெரியாரின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. மனத்திற்குச் சரி என்று பட்டதைத் துணிந்து கூறவேண்டும் என்ற உணர்வு தந்தை பெரியாரிட மிருந்து தாம் பெற்றதாக மயிலையாரே ஒரு பேட்டியில் கூறியுள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரிடமும், குத்தூசி குருசாமியிடமும் மயிலையார் நெருங்கிப் பழகினார். அதன் விளைவாகச் சுயமரியாதைச் சுடரொளியாய்த் திகழ்ந்தார்.

மறைமலையடிகளார், திரு.வி.க., நாவலர் பாரதியார், கா.சு. பிள்ளை போன்றவர்களுடன் அடிக்கடி உறவு கொண்டு அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்றார்.

சுவாமி விபுலானந்தரின் தொடர்பு மயிலையாருக்குக் கிடைத்தது. சுவாமிகள் மயிலாப்பூர் இராமகிருட்டிணா மடத்திற்கு வரும்பொழுதெல் லாம், இருவரும் சந்தித்து உரையாடி மகிழ்வர். சிலப்பதிகாரம், தமிழிசை, நடனம், நாடகம் குறித்துப் பல செய்திகளை மயிலையார் சுவாமிகள் வாயிலாக அறிந்து பயன் பெற்றார். தமிழறிஞர் தெ.பொ.மீ அவர்களிடமும் மயிலையார் தமிழிலக்கியங்களைக் கற்றார். தெ.பொ.மீ அவர்கள் சிந்தாதிரிப்பேட்டையில் நடத்தி வந்த வேதாந்த சங்கத்தில் அவ்வப்போது கருத்தரங்குகள் நடைபெறுவது வழக்கம். ஓர் அமயம் "சமயமும் தமிழும்" என்ற பொருளில் ஆறு பொழிவுகள் நடைபெற்றன. மயிலையார் அவை களைக் கேட்டுப் பயன்பெற்றார். அதன் விளைவாகக் கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும் என மூன்று அரிய நூல்களை எழுதினார்.

1937இல் நடந்த இந்தி எதிர்ப்பின்போது முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களுடன் ஒத்துழைத்துத் தமிழ் காத்தவர் மயிலை சீனி.

வரலாறு, கல்வெட்டு, சாசனத் துறைகளில் மயிலையாருடைய உற்ற நண்பர்களாகத் திரு. சதாசிவப் பண்டாரத்தார், கே.கே. பிள்ளை, மா. இராசமாணிக்கனார் போன்றோர் விளங்கினார்.

சமணப் பேரறிஞர்கள் ஜீவபந்து ஸ்ரீபால், அ. சக்கரவர்த்தி நயனார் போன்றோருடன் தொடர்பு கொண்டு சமண சமய நுட்பங்களை எல்லாம் அறிந்தார். அவர்களுடன் பலமுறை சைன சின்னங்கள் உள்ள ஊர்களுக்குச் சென்று கள ஆய்வு செய்தார்.

சென்னை மகாபோதி சங்கத்தின் தலைவர் நந்தீஸ்வர தேரோ, இலங்கை பௌத்த மதத் துறவி தருமரத்தின தேரோ போன்றோர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டு பௌத்த மதத் தத்துவங்களை எல்லாம் நன்கு அறிந்தார்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவர் கா. சுப்பையா பிள்ளை, கா. அப்பாத்துரையார், அ. சிதம்பரநாதன், மீ.ப. சோமு, அழ. வள்ளியப்பா, பொருளியல் அறிஞர் பா. நடராசன் போன்றோர் மயிலையாரின் அருமை பெருமைகளை எல்லாம் உணர்ந்து போற்றினர். அவருக்கு உற்ற தோழராக விளங்கினர்.

செக்கோஸ்லாவிய தமிழறிஞர் கபிலசுவலபில் மயிலையாரைத் தமது குருவாகவே மதித்துப் போற்றினார்

**குணக்குன்று:-**

பரந்துபட்ட கல்வியறிவினால் மயிலையார் நுண்மாண் நுழைபுலம் மிக்க மாமேதையாகத் திகழ்ந்தார். விரிந்துபட்ட அறிஞர்கள் தொடர்பால் ஆய்வுலகில் பொலிவு பெற்றார். தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் தமிழ்ச் சான்றோனாய் விளங்கினார். குணக்குன்றாய், நிறை குடமாய், எளிமை, இனிமை, அடக்கம் ஆகிய உயர் பண்புகளுக்கு உறைவிடமாய்த் திகழ்ந்தார். பெரும் புலமையும், பொறுமையும், விடா முயற்சியும், சலியாத உழைப்புமே அவர் அணிந்த அணிகலன்கள். கடல் போன்ற ஆழமான கல்வி, நிலவுலகம் போல் பரந்து விரிந்த அறிவு, வானம் போல் உயர்ந்த பண்புகள் இம்மூன்றின் சங்கமம்தான் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்.

**தோற்றம்:-**

மயிலை சீனி எங்ஙனம் தோற்றமளிப்பார் என்பது குறித்து அறிஞர் நாரண துரைக்கண்ணன் கீழ்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்.

''ஐந்தடிக்கு உட்பட்ட குறள் வடிவம். பளபளக்கும் வழுக்கைத் தலை. வெண்மை படர்ந்த புருவங்களை எடுத்துக் காட்டும் அகன்ற நெற்றி. கனவு காணும் கண்ணிமைகளைக் கொண்ட வட்டமுகம். எடுப்பான மூக்கு. படபடவெனப் பேசத் துடிக்கும் மெல்லுதடுகள். கணுக்கால் தெரியக் கட்டி இருக்கும் நான்கு முழு வெள்ளை வேட்டி. காலர் இல்லாத முழுக்கை சட்டை. சட்டைப் பையில் மூக்குக் கண்ணாடி. பவுண்டன் பேனா. கழுத்தைச் சுற்றி மார்பின் இருபுறமும் தொங்கும் மேல் உத்தரீயம். இடது கையில் தொங்கிக் கொண்டிருக்கும் புத்தகப்பை. இப்படியான தோற்றத்துடன் கன்னிமரா நூலகத்தை விட்டு வேகமாக நடந்து வெளியே வருகிறாரே! அவர்தான் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்''

**மூன்று செய்திகள்:-**

மயிலையார் குறித்து ஆய்வு செய்யும்போது மூன்று செய்திகளை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

ஒன்று மயிலையார் பத்தாம் வகுப்புக்கு மேல் படிக்காதவர். இடைநிலைப் பள்ளி ஆசிரியர். என்றாலும் பல்கலைக் கழகங்கள் போற்றும் வண்ணம் உயர்ந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டார். ஏன்? பல்கலைக்கழகங்கள் செய்யாத ஆய்வுகளையும் தன்னந்தனி மனிதராய்ப் பிறர் உதவியின்றிச் செய்து முடித்தார். அவர் படைத்த பல நூல்கள் பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாகத் திகழ்கின்றன.

இரண்டு, அவர் திருமணம் செய்து கொள்ளாமல், வாழ்நாள் முழுவதும் ஆறுமுக நாவலர் போன்று தமிழுக்குத் தொண்டு செய்தார். தமது இன்பங்களை அறவே துறந்து சமண பௌத்த துறவிகளைப் போல் வாழ்ந்தார். புகழ் நாடாது, பொருள் விரும்பாது தன்னை வருத்திக் கொண்டு தமிழுக்காகவே தவம் செய்தார்.

மூன்று, மயிலையார் தனித் தன்மை வாய்ந்த ஆராய்ச்சியாளர். ஆராய்ச்சி செய்வதே வாழ்வாகவும், வாழ்க்கை முழுவதுமே ஆராய்ச்சிப் பணிக்கெனவும் அமைத்துக் கொண்டு வாழ்ந்தவர். அவரது ஆய்வுப் பணியில் சில சிறப்புக் கூறுகள் உள்ளன.

1. ஆராய்ச்சி உலகில் எவரையும் பின்பற்றாது தனக்கெனத் தனி மரபை வகுத்துக் கொண்டார்.

2. அவரது ஆராய்ச்சியானது செய்திகளின் தொகுப்பன்று. சுரங்கத்திலிருந்து தங்கத்தை வெட்டியெடுப்பது போன்ற கடினமான பணி அவருடையது. ஆழ் கடலில் இருந்து மூச்சினை அடக்கி முத்தெடுப்பது போன்றது. தமிழ்க் கடலுள் மூழ்கிப் புதிய புதிய உண்மைகளை வெளிக் கொணர்ந்தார். எவருக்கும் அஞ்சாது தன் முடிவுகளைத் துணிவோடு எடுத்துரைத்தார்.

3. காய்தல், உவத்தல் இன்றி நடுநிலைமையோடு ஆராய்ச்சி செய்தார். எதனையும் தகுந்த சான்று காட்டி நிறுவினார்.

4. மானிடவியல், சமூகவியல் அறிவுடன் தமிழர் பண்பாட்டு வரலாற்றை முதன் முறையாக ஆய்வு செய்தவர் மயிலையாரே.

5. தமிழருடைய கலை, பண்பாடு, சமயம் ஆகிய துறைகளில் கருத்து வடிவங்களுக்கு விளக்கம் தேவைப்படுகிறது. அத்துறையில் முதன் முதலாக ஆராய்ச்சி செய்தவர் மயிலையாரே.

**மூன்று தமிழ் மரபுகள்:-**

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் மூவகை தமிழ் மரபுகள் நிலவி வந்தன. அம் மரபுகள் இலக்கிய உலகிலும், வரலாற்று உலகிலும் தோற்றுவித்த ஆய்வுக் களங்கள், இலக்கியப் போர்கள் மிகப் பலவாகும்.

**ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபு:-**

இம்மரபுகளில் ஒன்று ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபினர் தமிழின் தனித் தன்மையை ஏற்க மறுத்தனர். சமஸ்கிருத மொழியின் மீது இவர்களுக்குத் தணியாத தாகம் உண்டு. மூட பக்தியும் உண்டு. தமிழ் இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு அனைத்துமே தமிழ் மக்களுக்குச் சமஸ்கிருதம் அளித்த நன்கொடை என்பது இவர்கள் கருத்து. தமிழின் தொன்மைக்கும், தனித் தன்மைக்கும் எதிரான கருத்துக்களை வெளியிடுவதே

இவர்களது முழுநேர இலக்கியப் பணியாக இருந்தது. வடமொழி நூல்களுக்கு முதன்மை தருவதற்காகத் தமிழ் இலக்கியக் காலத்தைப் பின்னுக்குத் தள்ளினர்.

**இந்திய தேசியம் சார்ந்த தமிழ் மரபு:-**

மற்றொரு மரபு இந்திய தேசியஞ் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபினர் இந்திய தேசியத்தை முன்னிறுத்தினர். தமிழ்த் தேசியத்தைப் பின்னுக்குத் தள்ளினர். தமிழரின் தனித்தன்மையை இந்திய தேசிய நீரோட்டத்தில் கரைத்து விட்டனர். தமிழின் தனித்தன்மையை வலியுறுத்துவது இந்திய தேசியத்திற்கு எதிரானது என்ற கருத்தோட்டம் இவர்களுக்கு உண்டு. இந்திய தேசியத்தால் தமிழ்த் தேசியம் நலிவுற்றபோது எதிர்ப்புக்குரல் எழுப்பாது மௌனம் காத்தனர்.

**தமிழ்த் தேசியம் சார்ந்த தமிழ் மரபு:-**

மூன்றாவது மரபு தமிழ்த் தேசியம் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபின் அடித்தளம் தமிழின் தனித்தன்மையைக் காப்பதும் வளர்ப்பதும் ஆகும். மொழி, வரலாறு, கலை, பண்பாட்டுத் துறையில் தமிழின் தொன்மையைப் பேணிக்காப்பதும், மீட்டுருவாக்கம் செய்வதும் ஆகும். இந்த மரபின் முன்னணி வீரர்களாகத் திகழ்ந்த தமிழறிஞர்கள் பலர். அவருள் குறிப்பிடத் தகுந்தவர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் ஆவார். மயிலையார் இந்திய தேசியத்திற்கு எதிரானவர் அல்லர். ஆயினும் தமிழின் தொன்மையை மீட்டுருவாக்கம் செய்வதை முதன்மைப் பணியாக மேற்கொண்டார்.

மயிலையாருடைய நூல்களும், கட்டுரைகளும், மீட்டுரு வாக்கத்தின் வாயில்கள். அவர் கடந்த கால வளங்களை நினைவூட்டினார். நாம் தாழ்ந்து போனதற்கான காரணங்களைத் தேடினார். நம் பெருமைகளை விரிவாக விளக்கினார். நம் மீட்சிக்கான வழி வகைகளை ஆய்வு செய்தார். அவருடைய நூல்கள் ஆரியஞ்சார்ந்த தமிழ் மரபினருக்கு எதிரான படைக்கலன்கள். இந்தப் படைக்கலன்களை ஆரவாரம் இல்லாமல், மேடை முழக்கம் இல்லாமல், ஆராய்ச்சி பூர்வமாக அசைக்க முடியாத ஆதாரங்களோடு வடித்துக் கொடுத்தார். பண்டைத் தமிழ் மரபை நாம் எளிதில் உணரும் வண்ணம் மீட்டுருவாக்கம் செய்தார்.

**மயிலையாரின் இதழ் படைப்புகள்:-**

மயிலையார் தமிழுக்கு அளித்த நன்கொடைகள் மிகப் பலவாகும். பல்வேறு தமிழ் இதழ்களில் 200 க்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வழங்கியுள்ளார். அவற்றுள் 150க்கு மேற்பட்டவை நூல்வடிவம் பெறாதவை. மயிலையார் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிய இதழ்களில் சில பின்வருமாறு:

குடியரசு, திராவிடன், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தமிழ்ப் பொழில், ஆராய்ச்சி, திருக்கோயில், நண்பன், கல்வி, இலட்சுமி, ஆனந்த போதினி, தமிழ்நாடு, சௌபாக்கியம், ஈழகேசரி முதலியனவாகும்.

இவருடைய ஆய்வுகள் பல திறத்தன. சங்க கால ஆய்வுகள், சிலப்பதிகார ஆய்வுகள், திருக்குறள் ஆய்வுகள், இலக்கிய ஆய்வுகள், சமணம் பௌத்தம் பற்றிய ஆய்வுகள், வரலாறு, சமயம் பற்றிய ஆய்வுகள், கல்வெட்டு சாசனம், நாணயம் பற்றிய ஆய்வுகள், சிற்பங்கள் பற்றிய ஆய்வுகள், சொல்லாய்வுகள், இலக்கண ஆய்வுகள் எனப்பல துறைகளில் ஆய்வு செய்து கட்டுரைகள் வழங்கியிருக்கிறார். இவருடைய கட்டுரைகள் திட்பமும், நுட்பமும் கொண்டு விளங்கும் அரிய ஆராய்ச்சிக் கருவூலங்கள் ஆகும்.

**நூல்கள்:-**

மயிலையார் தமிழன்னைக்கு அணிகலன்களாக முப்பது நூல்களைப் படைத்துள்ளார். அவர் படைத்துள்ள நூல்களின் பெயர்களைப் பார்த்தாலே அவரது பரந்து விரிந்த கல்விப் பரப்பும், கடுமையான உழைப்பும் புலனாகும்.

மயிலை சீனி அவர்களின் பெரும் பங்களிப்பு வரலாற்றுத் துறைக்கு அவர் ஆற்றியுள்ள பெரும் பணியேயாகும். வரலாற்று ஆய்வுக்கென்று ஒன்பது அரிய நூல்களை வழங்கியிருக்கிறார். அவர் தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு உறுப்பினராகவும் பணி புரிந்திருக்கிறார். தமிழக அரசு வெளியிட்ட ''சங்க கால அரசியல்'' என்ற நூலில் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவரசர்களைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார். வரலாற்றுக்குத் துணைபுரியும் கல்வெட்டுகளை ஆய்வு செய்துள்ளார். இலங்கைத் தமிழர் குறித்து வரலாற்று நோக்குடன் விரிவாக ஆராய்ந்திருக்கிறார். ஏறத்தாழ 350 பக்கங்களில் ஐந்து கட்டுரைகளை எழுதியுள்ளார். இவைகளேயன்றிப் பல்வேறு இதழ்களில் வரலாற்றுத் தொடர்பாக நாற்பதுக்கு மேற்பட்ட

கட்டுரைகளை வரைந்துள்ளார். வரலாற்றுத் துறைக்கு மயிலையார் ஆற்றிய பணி மகத்தானது என்பதில் ஐயமில்லை.

மயிலையார் இலக்கிய ஆய்வு நூல்கள் என்ற வகையில் ஆறு நூல்களை எழுதியுள்ளார். ''19-ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்'', ''மறைந்து போன தமிழ் நூல்கள்'' எனும் இரு நூல்களும் காலத்தால் அழியாமல் என்றும் நிலைத்து நிற்கக் கூடியன. ''தொல்காப்பியத்தில் ஆய்வுரைகள்'' என்ற சொற்பொழிவு நூல் குறிப்பிடத்தக்க நூலாகும். ''அஞ்சிறைத்தும்பி''- அருமையான சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் கொண்டது.

மயிலையார் சமய ஆய்வு நூல்கள் என்ற வகையில் நான்கு நூல்களை எழுதியுள்ளார். சமணர்களும், பௌத்தர்களும், கிறித்தவர்களும், இசுலாமியர்களும் தமிழுக்கு ஆற்றிய பெருந்தொண்டுகளை நினைவுகூர்ந்து போற்றுகிறார். சமயக் காழ்ப்பின்றி, விருப்பு வெறுப்பு இன்றி ஆய்வு செய்திருக்கிறார். தமிழிலக்கிய வரலாற்றில் சமயங்களின் தாக்கத்தைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

மயிலையார் கலையியல் ஆய்வு நூல்கள் என்ற வகையில் ஐந்து நூல்களைப் படைத்துள்ளார். தமிழர் வளர்த்த அழகுக் கலைகளான கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, கூத்து, காவியம், நாடகம் போன்ற கலைகளை ஆய்வு செய்திருக்கிறார். இத்துறை நூல்கள் மிகவும் அரியன. புதியன.

இதுபோன்றே கல்வெட்டு, சாசனம் என்ற வகையில் இரு நூல்களும், பொது நூல்கள் என்ற வகையில் நான்கு நூல்களும் ஆக முப்பது நூல்கள் தமிழன்னைக்குக் காணிக்கையாக வழங்கியிருக்கிறார்.

மயிலையார் எழுதி அச்சில் வராமல் கையெழுத்துப் பிரதியாக நின்றுவிட்ட நூல்கள் சிலவும் உள்ளன. அவை: 1. இந்து மதமும் தமிழும் 2. இஸ்லாமும் தமிழும் 3. சமணமும் தமிழும் பாகம் 2 4. 18-ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் 5. யானைக் கோயில் வரலாறு 6. தமிழ்நாட்டுச் சிற்பக் கலை என்பவை ஆகும்.

மயிலையாருடைய ஆய்வு நூல்களுக்கு என்று சில தனிச் சிறப்புகள் உள்ளன.

1. அவரது ஆய்வு நூல்களில் பெரும்பாலானவை தமிழுலகிற்கு அவரால் முதன் முதலாக வழங்கப்பட்டவையாகும்.

2. அவருடைய ஆய்வு நூல்கள் அனைத்தும் அறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் ஒரு சேர விருந்தளிப்பவையாகும். எளிமை, இனிமை, வெளியீட்டு நுட்பம் காரணமாக இரு திறத்தாரையும் ஈர்க்கக்கூடியது.

3. அவரது ஆய்வு நூல்களில் வேண்டாத நூல் என்று எதனையும் ஒதுக்கமுடியாது. அன்றியும் ஒரு நூலில் எந்த ஒரு சிறு பகுதியையும் வேண்டாதவை என்று ஒதுக்க முடியாது.

4. அவரது ஆய்வு நூல்கள் பல்வேறு ஆய்வு நூல்கள் தோன்றுவதற்கு வழி வகுத்துள்ளன.

5. மயிலையார் தமது நூல்களுக்குத் தாமே படம் போட்டு விளக்குவார். சங்ககால மதுரையையும், காவிரிப்பூம் பட்டினத்தையும், வஞ்சி மாநகரத்தையும், காஞ்சி மாநகரத்தையும் படம் வரைந்து விளக்கியுள்ளார். ஏராளமான வரைபடங்களையும் ஒளிப்படங்களையும் அவரது நூல்களில் காணலாம். மயிலையாருடைய 30 நூல்களைப் பற்றியும் சிறு குறிப்புகளேனும் தரவேண்டும். ஆயினும் 3 நூல்களுக்கு மட்டுமே இங்கே சில குறிப்புகள் தரப்படுகின்றன.

### 19-ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்:-

மயிலையாருடைய 19ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் ஓர் அரிய கலைக் களஞ்சியம். தகவல் களஞ்சியம் எனலாம். ''இந்நூல் எழுதுவதற்குப் பல நூற்றுக்கணக்கான புத்தகங்கள் எனக்குத் துணையாக இருந்தன'' என்று மயிலையார் தமது நூலின் முன்னுரையில் கூறியுள்ளார். இம்மாதிரியான நூல்களை மயிலை சீனி அவர்கள்தான் இயற்ற முடியும் என்று செக்கோஸ்லாவியா அறிஞர் கபிலசுவலபில் புகழாரம் சூட்டியுள்ளார். இந்நூலில் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 226 தமிழ்ப் புலவர்களைப் பற்றிய அரிய குறிப்புகள் உள்ளன. 19ஆம் நூற்றாண்டில் அச்சான இலக்கிய நூல்கள், உரைநடை நூல்கள், நாடக நூல்கள் என 625 நூல்களைப் பற்றிய பதிவுகள் உள்ளன. 113 இதழ்கள் பற்றிய பட்டியல் தரப்பட்டுள்ளது. அச்சகங்களின்

வரலாறு, எகர, ஒகர எழுத்துக்களின் வரிவடிவ வரலாறு, தமிழ் எண்கள் மாற்றம் பெற்ற வரலாறு, கீழ்க்கணக்கு நூலாராய்ச்சி, ஆசிரியர் மாணவர் பரம்பரையெனப் பல செய்திகள், நுட்பமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. கிறித்தவர்கள், இசுலாமியர்கள், ஆங்கிலேயர்கள் வருகையால் தமிழிலக்கியம் செழித்த வரலாறு சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூற்றாண்டைப் பற்றியும் இதுபோன்ற ஆராய்ச்சி நூல்கள் வெளிவர வேண்டுமென்று டாக்டர் அ. சிதம்பரநாதன் அணிந்துரையில் குறிப்பிடுகிறார்.

**மறைந்து போன தமிழ் நூல்கள்:-**

இந்நூல் மற்றுமொரு அரிய படைப்பாகும். மயிலையாருடைய குடும்பத்தில் இளம் வயதில் இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டனர். அந்தத் துயரம் அவரால் தாங்க முடியவில்லை. அந்நிகழ்ச்சியின் விளைவால் தமிழ் இலக்கியக் குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இறந்து போயின என்று கணக்கெடுத்தார். அதன் விளைவாகத் தோன்றியதுதான் 'மறைந்து போன தமிழ் நூல்கள்' உரை யாசிரியர்களின் உரைகளையெல்லாம் ஊன்றிப் படித்து மறைந்து போன தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புகளையெல்லாம் ஒன்று விடாமல் தேடித்தொகுத்துத் தந்தப் பெருமை மயிலையாருக்கு உரியதாகும். இந்நூலில் மறைந்து போன 195 தமிழ் நூல்களைப் பற்றிய அரிய குறிப்புக்களையும், இறந்தன போக எஞ்சி நின்ற செய்யுட் பகுதிகளையும், ஒரு சேரத் தொகுத்துத் தந்துள்ளார். இது அரிதினும் அரிய மீட்டுருவாக்கப் பணியாகும். நாம் இழந்துவிட்ட நூல்களைத் தேடிய முதல் அறிஞர் இவரே. மறைந்த மாநகரங்களை அகழ்ந்து எடுப்பது போலத் தமிழ்ப் பெருங்கடலுள் புதையுண்டுபோன புதையல்களைத் தேடிஎடுத்தார். மிக நுண்ணிய தடயங்களைக் கொண்டே நூல்களை அடையாளங்கொண்டு, சிதைந்து போன உருவத்தைச் செப்பம் செய்து உயிரூட்டி உலவவிட்டவர் மயிலையார். தமது முன்னுரையில் மயிலையார் எழுதுகிறார், "மறைந்துபோன நூல்களின் முழுத் தொகுப்பு அல்ல இந்நூல். விடுபட்ட நூல்களும் உள்ளன. அவற்றைப் பிறகு எழுதித் தொகுக்கும் எண்ணம் உடையேன்" என்று. இந்நூல் 1959ல் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து இத்துறையில் இன்னொரு நூல் வெளிவரவில்லை. தமிழ் நூல் கடலுள் இன்னும் எத்தனை எத்தனை நூல்கள் புதையுண்டு கிடக்கின்றனவோ? அவைகளில் என்னென்ன செய்திகள்

மறைந்து கிடக்கின்றனவோ? அவைகளை வெளிப்படுத்த இன்னொரு மயிலையார் எப்பொழுது தோன்றுவாரோ? யார் அறிவார்?

கருவி நூல்கள் இல்லாத காலத்தில், தகவல்களைத் திரட்டும் வாய்ப்புகள் குறைவான காலத்தில் பல்கலைக் கழகங்கள்கூட செய்ய முடியாத பணியினைத் தன்னந்தனி மனிதராய் இருந்து செய்திருக்கிறார் என்று எண்ணும் போது வியப்பு மேலிடுகிறது.

**தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்:-**

நுண்கலைகள் பற்றிய சிறந்த ஆய்வு நூல் இது. கலைகள் குறித்து முழுமையான செய்திக் களஞ்சியம் எனலாம். தமிழகமே கலைகளின் தாயகம் என்பதனை மயிலையார் வலியுறுத்துகிறார். சங்கக் காலந்தொட்டு கட்டடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை, நாடகக்கலை யாவும் தமிழகத்தில் செழித்து வளர்ந்து வந்துள்ள பரிணாம வளர்ச்சியை இந்நூலில் படம் பிடித்துக் காட்டுகிறார். இடைக்காலத்தில் இக்கலைகள் அழிந்து போயின. இக்கலைகள் யாவும் மீண்டும் மீட்டுருவாக்கம் செய்யப்படவேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட அற்புதமான நூல் இது. இத்துறையில் தமிழில் வெளிவந்த முதல் நூல். தமிழக அரசின் முதற் பரிசு பெற்ற நூல். தமிழகம் முழுவதும் உள்ள கோவில்களுக்குச் சென்று கலை ஆய்வு செய்து எழுதப்பட்ட கலைப்பெட்டகம் இந்நூல். நமது முன்னோர் போற்றி வளர்த்த கலைகள் யாவும் அழிந்து கொண்டும், அழிக்கப்பட்டுக் கொண்டும் வருகிறதே என்று மயிலையார் கண் கலங்கினார். பொறுப்பற்ற தமிழ் மக்களை எண்ணி எண்ணிப் பெருமூச்சு விட்டார். இந்நூலில் ''கலைகளைப் போற்றுக'' எனும் பகுதி உள்ளது. இப்பகுதியை மயிலையார் மையினால் அன்று, கண்ணீரால் தான் எழுதியிருக்கக்கூடும்

**ஆய்வு வகைகள்:-**

மயிலையாருடைய ஆய்வு நெறிகளை நான்கு வகையாகப் பகுக்கலாம். அவை:

1. புதிய செய்திகளைத் தருவது 2. புதிய விளக்கங்களைத் தருவது 3. இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டுவது 4. தவறான கருத்துகளை மறுத்து உண்மையை நிலை நாட்டுவது என்பதாகும்.

**1. புதிய செய்திகளைத் தருதல்:-**

''பாண்டியர் வரலாற்றில் ஓர் அரிய புதிய செய்தி'' என்றொரு கட்டுரையை மயிலையார் வரைந்துள்ளார். சங்க காலத்தில் மூவேந்தர் கொடியில் பொறிக்கப்பட்டிருந்த சின்னங்கள் பற்றிய ஓர் ஆய்வு இது.

சோழன் கொடியில் புலிச்சின்னம், சேரன் கொடியில் வில் சின்னம், பாண்டியன் கொடியில் மீன் சின்னம் பொறிக்கப் பட்டிருப்பது வழி வழி மரபாகும். ஆனால் சங்க காலத்தில் பசும்பூண் பாண்டியன் கொடியில் மட்டும் யானைச் சின்னம் பொறிக்கப் பட்டிருந்தது. இவ்வரிய செய்தியைச் சங்கப் பாடல் ஒன்றின் வழியாக விளக்குகிறார். ஏறத்தாழ மூவாயிரம் பாடல்கள் கொண்ட சங்கச் செய்யுட்களில் ஒரே ஒரு பாட்டில் ஒரே ஒரு வரியில் இக்குறிப்பு வருகிறது. அகநானூற்றில் 162 ஆம் செய்யுளில் பரணர் இக்குறிப்பைத் தருகிறார். இதை விளக்குவதுதான் இக்கட்டுரை. இதுபோல எண்ணற்ற புதிய செய்திகளைத் தந்தவர் மயிலையார்.

**2. புதிய விளக்கம் தருதல்:-**

''மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள்'' என்றொரு நூல் மயிலையார் எழுதியது. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் அருச்சுனன் தவசு அல்லது பகீரதன் தவசு என்பதைக் குறிப்பன என்று பலரும் எழுதி வந்தனர். ஆனால் மயிலையார் இதனை மறுத்து மாமல்லபுரத்துச் சிற்பங்கள் சமணர்களின் அஜீத நாதர் புராணத்தில் கூறப்படுகிற சகரசாகரர்களின் கதையென ஆராய்ந்து விளக்கினார். மகாபலிபுரம் என்று தவறாக வழங்கப்பட்ட பெயரை மாமல்லபுரம் என்று அறிமுகப்படுத்திய பெருமையும் மயிலையாரையே சேரும். இதுபோன்று எத்தனையோ புதிய விளக்கங்களைத் தந்தவர் மயிலையார்.

**3. இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டுதல்:-**

மயிலையார் வரலாற்றின் இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டினார். துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த வரலாற்றுத் துணுக்குகளை எல்லாம் தமது மதி நுட்பத்தால் இணைத்து ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்தி முழுமையான வரலாற்றை உருவாக்கியவர். ''களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'' என்ற நூலே இதற்குப் போதுமான சான்றாகும்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தை வரலாற்றாசிரியர்கள் இருண்ட காலம் என்று ஒரே வரியில் எழுதி முடித்துவிட்டார்கள். அந்த இருண்ட காலத்திற்கு 69 நூல்களைச் சான்று காட்டி 175 பக்கங்கள் எழுதி ஒளியூட்டியவர் மயிலையார்.

**4. தவறான கருத்துக்களை மறுத்து உண்மையை நிலை நாட்டுதல்:-**

திரு. வையாபுரிப்பிள்ளை, கே.ஏ. நீலகண்ட சாத்திரியார், இராமசந்திர தீட்சிதர், மு. இராகவையங்கார், பி.எஸ். சுப்பிரமணிய சாத்திரியார் போன்ற பேராசிரியர்கள் எழுதிய தவறான பல கருத்துக்களைச் சான்று காட்டி மறுத்தவர் மயிலையார். மறுத்து அவர் எழுதிய நூல்கள் சில. கட்டுரைகள் மிகப் பல. நூல்களுள் ''தொல்காப்பிய ஆய்வுரை'' சிறப்புடையது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவு அந்நூல். அந்நூலில் கூறப்பட்ட சில மறுப்புரைகள் பின் வருமாறு:-

1. வச்சிரநந்தி என்னும் சமணன் சமண சமய வளர்ச்சிக்காகக் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தினான். அதனை ''பாண்டியர்கள் தோற்றுவித்த தமிழ்ச்சங்கம்'' என்று வையாபுரியார் தவறாக உணர்ந்தார். அதன் அடிப்படையில் தமிழிலக்கியக் காலத்தைப் பின்னுக்குத் தள்ளினார்.

வையாபுரியாரும் மேற்கண்ட பேராசிரியர்களும் தொல்காப்பியமும், திருக்குறளும் கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றின என்றனர். சிலப்பதிகாரம் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்றனர். மயிலையார் அதனை மறுத்தார். தொல்காப்பியம் கி.மு. எட்டாம் நூற்றாண்டிலும், திருக்குறள் கி.மு. முதல் நூற்றாண்டிலும், சிலப்பதிகாரம் கி.பி. 2ஆம் நூற்றாண்டிலும் தோன்றியது எனச் சான்று காட்டி நிறுவினார்.

2. வடமொழியில் எழுதப்பட்ட மனுநீதி, அர்த்த சாத்திரம், காம சூத்திரம், பரத நாட்டிய சாத்திரம் போன்ற நூல்களிலிருந்து கருத்துக்களைப் பெற்றே தொல்காப்பியமும், திருக்குறளும் எழுதப்பட்டன என்ற அவர்களின் கருத்தையும் மறுத்தார். அவர்களின் சமஸ்கிருத மூட பக்தியையும் கண்டித்தார். இவை போன்று பலர் கூறிய தவறான கருத்துக்களை எல்லாம் மறுத்தார்.

மயிலையாரின் ஆராய்ச்சி வண்மையை உணர்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

**''பல்கலைத் தலைவன் எல்லாம்**
**தமிழ்ச்சீனி வேங்கடத்தின்**
**கால்தூசும் பெறாதார் என்பேன்''** என்று புகழாரம் சூட்டினார்.

***மயிலையாரும் வாழ்க்கைப் போராட்டங்களும்:-***

மயிலையார் தமது வாழ்நாள் முழுவதும் பல்வேறு இன்னல்களுக்கு இடையே வாழ்ந்தவர். இதனைத் தாம் எழுதிய முன்னுரைகளில் இலைமறை காயாக வெளிப்படுத்தியுள்ளார்.

1940-இல் வெளிவந்த ''பௌத்தமும் தமிழும்'' என்ற நூலின் முன்னுரையில் மயிலையார் பின்வருமாறு கூறுகிறார்,

''பல இன்னல்களுக்கு இடையே இதனை எழுத வேண்டியிருந்தது''.

1954 இல் வெளிவந்த ''சமணமும் தமிழும்'' என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்,

''வாழ்க்கைப் போருக்கு இடையே பல இன்னல்களுக்கு இடையே சிறுசிறு ஓய்வுக் காலத்தைப் பயன்படுத்தி இந்நூல் எழுதி முடிக்கப்பட்டது.''

1974இல் வெளிவந்த ''களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'' என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்,

''வாழ்க்கையில் ஏற்பட்ட மனக்கவலையும் துன்பமும் நோயும் தொடர்ந்து வருத்துகிற காலத்தில் இந்நூலை எழுதினேன்.''

இங்ஙனம் 1940இல் தொடங்கிய இன்னல் 1976 வரைகூட விடுபடாமல் வாழ்ந்திருக்கிறார் என்பதை அறியும்போது நெஞ்சு நெகிழ்கிறது.

''சமணமும் தமிழும்'' என்ற நூலில் மனம் வெதும்பிக் கூறுகிறார்,

''ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன், உண்மையாக உழைத்து ஆராய்ச்சி நூல் எழுதும் உழைப்பாளர்களுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை'' என்று.

பொதுவாக மயிலையார் தமது இன்னல்களை வெளிப்படையாகக் கூறமாட்டார். தமது உழைப்புக்கு ஏற்ற பொருளும், புகழும், அங்கீகாரமும் கிடைக்கவில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். அந்த உணர்ச்சி அவரது அடிமனத்தின் ஒரு மூலையில் இருக்கத்தான் செய்தது. இருந்தாலும் வெளிப்படையாகக் கூறிச் சலித்துக் கொண்டதில்லை. ஒரோர் அமயம் ஓரிரண்டு வார்த்தைகளில் மட்டுமே தம் மனத் துயரத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். வாழ்நாள் முழுவதும் மனத்துயரங்களை உள்ளடக்கிப் பொது நன்மைக் கருதி அயராது உழைத்த பெருந்தகையவர்.

மயிலையார் தாம் வாழ்ந்த காலத்தில் போற்றப்பட வேண்டிய அளவிற்குப் போற்றப்படவில்லை என்பதை உணர்ந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் மனம் வருந்தியிருக்கிறார். அவரது உள்ளத்தில் இந்த ஏக்கம் மிகுதியாக இருந்திருக்கிறது. இதனைக் கீழ்வருமாறு வெளிப்படுத்தினார்:-

**''நன்றி கெட்டு அதிகாரத்தை**
**நாடும் எவ்வரசும் அன்னார்**
**குன்றினும் மிகுந்த சீர்த்தி**
**கொண்டுயர் வளித்தார் இல்லை''**

***சில சிறப்புகள்:-***

பாலைவனத்தில் பசுஞ்சோலை போன்று மயிலையார் ஓரிரு சிறப்புக்களையேனும் பெற்றிருக்கிறார்.

1961இல் மயிலையாருக்கு மணிவிழா நடைபெற்றது. சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற அவ்விழாவில் நீதியரசர் கணபதியா பிள்ளை, மயிலையாருக்கு ''**ஆராய்ச்சிப் பேரறிஞர்**'' என்ற பட்டத்தை நல்கிச் சிறப்பித்தார்.

1961ஆம் ஆண்டில் தமிழ் எழுத்தாளர் சங்கம் மயிலையாருக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தது.

1963-1964ஆம் ஆண்டுகளில் மயிலையார் தமிழக எழுத்தாளர் சங்கத் தலைவராக வீற்றிருந்து சிறப்பித்தார்.

1970ஆம் ஆண்டு தமிழக அரசு தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு உறுப்பினராக மயிலையாரை நியமனம் செய்தது.

1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் மதுரைப் பல்கலைக் கழகம் மயிலையாருக்குத் "தமிழ்ப் பேரவைச் செம்மல்" என்ற பட்டத்தினை அளித்துச் சிறப்பித்தது.

பல்லாண்டு காலம் தமிழகப்புலவர் குழுவில் அங்கம் வகித்தார். மயிலையார் மறைந்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தொண்டுக்கு உரிய சிறப்புக் கிடைத்தது. ஆம். கி.பி. 2001இல் தமிழக அரசு அவரது நூல்களை நாட்டுடைமையாக்கியது. அவரது குடும்பத்தினருக்குப் பத்து இலட்சம் ரூபாய் நன்கொடையாக அளித்தது. இது மயிலையார் தொண்டுக்குக் கிடைத்த மாபெரும் நன்றிக் காணிக்கையாகும்.

மறைவு:-

மயிலையார் தமது இறுதிக் காலத்தில் கடைசி பத்து நாட்கள், மூளை நரம்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் செயல்பாடு அற்று இருந்தார். இராயப்பேட்டை மருத்துவ மனையில் 8.5.1980ஆம் நாள் இரவு 8.30 மணி அளவில் மறைந்தார். மறைந்தார் என்பதை விடத் தமது மாபெரும் ஆராய்ச்சிப் பணியை நிறுத்திக் கொண்டு ஓய்வெடுத்துக்கொண்டார் என்பது சாலப் பொருந்தும். உண்மையில் அவர் மறையவில்லை. அவருடைய நூல்களே நிலை பெற்ற சின்னங்களாய் விளங்கி அம்மேதையை நமக்கு நினைவூட்டிக் கொண்டேயிருக்கும். ஆய்வுலகில் என்றென்றும் புகழுடம்பு தாங்கிய வண்ணம் உலா வருபவர் அவர். மயிலை சீனி வேங்கடசாமியின் மாண்புகழ் நீடு வாழ்க.

# ஆராய்ச்சிப் பேரறிஞர்
# மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்
# எழுதிய நூல்கள்

முதற்பதிப்பு

**வரலாற்று ஆய்வு நூல்கள் (9)**

| | | |
|---|---|---|
| 1. | சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் | 1970 |
| 2. | பழங்காலத் தமிழர் வாணிகம் | 1974 |
| 3. | களப்பிரர் ஆட்சியில் தமிழகம் | 1976 |
| 4. | சேரன் செங்குட்டுவன் | 1966 |
| 5. | மகேந்திரவர்மன் | 1955 |
| 6. | நரசிம்மவர்மன் | 1957 |
| 7. | மூன்றாம் நந்திவர்மன் | 1958 |
| 8. | கொங்கு நாட்டு வரலாறு | 1974 |
| 9. | துளுநாட்டு வரலாறு | 1966 |

**இலக்கிய ஆய்வு நூல்கள் (6)**

| | | |
|---|---|---|
| 1. | தொல்காப்பியத்தில் சில ஆய்வுரைகள் | 1970 |
| 2. | இறையனார் களவியல் ஆராய்ச்சி | 1943 |
| 3. | 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் | 1962 |
| 4. | மறைந்து போன தமிழ் நூல்கள் | 1959 |
| 5. | மனோன்மணீயம் - பதிப்பும் குறிப்புரையும் | 1961 |
| 6. | அஞ்சிறைத்தும்பி | 1958 |

**சமயமும் தமிழும் ஆய்வு நூல்கள் (4)**

| | | |
|---|---|---|
| 1. | பௌத்தமும் தமிழும் | 1940 |
| 2. | கிறித்துவமும் தமிழும் | 1936 |
| 3. | சமணமும் தமிழும் | 1954 |
| 4. | சமயங்கள் வளர்த்த தமிழ் | 1966 |

**கலையியல் ஆய்வு நூல்கள் (5)**

| | | |
|---|---|---|
| 1. | தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் | 1956 |
| 2. | நுண்கலைகள் | 1967 |
| 3. | இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம் | 1948 |
| 4. | மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள் | 1950 |
| 5. | இசைவாணர் கதைகள் | 1970 |

**கல்வெட்டு, சாசனம் ஆய்வுநூல்கள் (2)**

| | | |
|---|---|---|
| 1. | சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள் | 1981 |
| 2. | சாசனச் செய்யுள் மஞ்சரி | 1959 |

**பொது நூல்கள் (4)**

| | | |
|---|---|---|
| 1. | உணவு நூல் | 1965 |
| 2. | புத்தர் ஜாதகக் கதைகள் | 1960 |
| 3. | பௌத்தக் கதைகள் | 1952 |
| 4. | கௌதம புத்தர் | 1956 |

மேலும் 200க்கு மேற்பட்ட அரிய ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

# பொருளடக்கம்

**கல்வெட்டு சாசனங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | சங்க காலத்துப் பாண்டிய அரசனின் பிராமி எழுத்துச் சாசனம் | 37 |
| 2. | சங்க காலத்துச் சேர அரசனின் பிராமி எழுத்துச் சாசனம் | 43 |
| 3. | கொங்கு நாட்டு பிராமி எழுத்துக்கள் | 52 |
| 4. | வரகுண பாண்டியனின் கல்வெட்டு | 54 |
| 5. | தேனவரை நாயனார் சாசனம் | 58 |
| 6. | எழுத்து ஆக்கம் | 62 |
| 7. | உதிரப்பட்டி அல்லது இரத்தக்காணி | 68 |
| 8. | மணி பல்லவம் - ஐம்புகொல பட்டினம் | 72 |
| 9. | திருவக்கரை | 77 |
| 10. | திருக்காரிக்கரை | 84 |
| 11. | திருப்பாலைவனம் | 88 |
| 12. | இராமேசுவரத் தீவு | 92 |

**சொல்லாய்வும் மொழி ஆய்வும்**

| | | |
|---|---|---|
| 13. | சொல் ஆராய்ச்சி | 96 |
| 14. | 'தொறு' என்றும் சொல்லின் வரலாறு | 105 |

15. 'மெய்' என்னும் சொல்லாராய்ச்சி 112

16. பாவாடை 115

17. கந்தியார் 120

18. அத்திரி 123

19. கருமாறு பாய்ச்சல் 128

20. நிகண்டனார் - கலைக் கோட்டுத் தண்டனார் 130

21. கன்னடமும் தமிழும் 133

22. மலையாள மொழி 138

**இலக்கணம்**

23. தொல்காப்பிய ஆராய்ச்சிக்காரர்கள் 142

24. தமிழ் அகம் 146

25. தமிழ் அகப்பொருள் 152

26. வெண்பா நூற்கள் 156

**பொது**

27. வசந்த குசுமாகர மாத்திரை 161

28. கிறீன் வைத்தியர் 162

29. முதுமையைத் தடுத்தல் (அ) எப்பொழுதும் வாலிபம் 164

30. 55 வயதில் குழந்தை பெறுதல் 168

31. ஆசார சீர்திருத்தம் 170

| | | |
|---|---|---|
| 32. | தூக்கம் | 177 |
| 33. | சிருஷ்டி கர்த்தாவுடன் யுத்தம் | 183 |
| 34. | பன்னிரண்டு சூரியர் | 187 |
| 35. | சவச் சடங்கில் சீர்திருத்தம் | 190 |
| 36. | சென்னை நகரம் யாருக்குரியது? | 193 |
| 37. | சாமிகள் இனி அவதாரம் செய்யுமா? | 195 |
| 38. | எழுத்தாளர் சங்கத்தின் மாநாட்டுத் தலைமையுரை | 199 |
| 39. | இயற்கைப் பொருணூற் கடலின் ஒரு துளி | 207 |
| 40. | கல்விச் செல்வம் வழங்கும் கொடை வள்ளல் | 215 |
| 41. | தமிழாசிரியர் மாணவர் வழிமுறை விளக்கம் | 216 |
| 42. | தமிழ் நூல்களில் மீன் வகை | 220 |
| 43. | காலக் குறிப்பு | 227 |
| 44. | ஓடத்தில் ஒருநாள் | 231 |
| 45. | தருமரதன தேரோ | 235 |
| 46. | சிறப்புரை - குத்தூசி குருசாமி அவர்களைப் பற்றியது | 240 |
| 47. | நற்பண்பாளர் - குத்தூசி குருசாமி | 245 |
| 48. | நான் கண்ட பெருந்தமிழன் - மறைமலையடிகளார் | 247 |
| 49. | கவிமணிக்கு அஞ்சலி | 249 |

# 1. ''சங்க காலத்துப் பாண்டிய அரசனின் பிராமி எழுத்துச் சாசனம்''

கடைச் சங்க காலத்துச் சேர அரசர்களைக் கூறுகிற பிராமி எழுத்துச் சாசனத்தைப் பற்றிச் சென்ற இதழில் எழுதினோம். இந்த இதழிலே கடைச் சங்க காலத்துப் பாண்டியனைக் கூறுகிற பிராமி எழுத்துச் சாசனத்தைப் பற்றிக் கூறுவோம்.

பாண்டி நாட்டிலே மதுரை மாவட்டத்து மதுரைத் தாலுகாவிலே மதுரை நகரத்துக்கு அருகிலே உள்ள மாங்குளம் என்னும் ஊரிலேயுள்ள மலைப் பாறை யொன்றிலே இந்தப் பிராமி எழுத்துச் சாசனம் செதுக்கியமைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாசனம் வேறு சாசனங்களும் எபிஃகிராபி (சாசன) இலாகாவின் 1906- ஆம் ஆண்டு அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது. *(460&465 of 1906, 242 of 1963-64)* இந்தச் சாசனம் கண்டு பிடிக்கப்பட்டு அறுபது ஆண்டுகளாகியும், இந்தச் சாசனத்தைச் சாசன இலாகா வாசித்து வெளியிடாமலே இருந்திருக்கிறது. சமீப காலத்தில்தான் இச்சாசனம் முதன் முதலாகத் திரு.ஐ. மகாதேவன் அவர்களால் படித்து வெளியிடப்பட்டது.

மேலே கூறிய இடத்தில், இயற்கையாக அமைந்துள்ள குகைவாயிலின் மேற்புறத்துப் பாறையின் மேலே முன்பக்கத்தில் இந்தச் சாசனம் பெரிய எழுத்துகளால் ஒரேவரிசையாக எழுதப்பட்டிருக்கிறது. இக்குகையிலே அக்காலத்தில் வசித்திருந்த பௌத்த அல்லது ஜைன (சமண) முனிவர் படுப்பதற்கு ஏற்றதாக இக்குகையின் கற்றரை மழமழவென்று அமைக்கப்பட்டிருக்கிறது. அக்காலத்து பௌத்த ஜைன முனிவர்கள் ஊரில் தங்கி வசிக்காமல், ஊருக்கப்பால் மலைக்குகைகளிலே தங்கி வசிப்பது வழக்கம். அவர்களுக்கு வசதியாக இருக்கும்படி கற்படுக்கைகளை மழமழப்பாக அமைத்துக் கொடுப்பது ஊரார் கடமை. அந்த முறைப்படி ஒருவர் இந்தக் - குகையிலே கற்படுக்கைகளை அமைத்துக் கொடுத்து அக்குகை வாயிலின் மேற்புறத்தில் இந்தப் பிராமி எழுத்துச் சாசனத்தை எழுதிவைத்தார். இந்தச் சாசனம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அல்லது கி.மு. முதல் நூற்றாண்டில் எழுதப்

பட்டிருக்க வேண்டும் என்பது இந்தச் சாசன எழுத்தின் உருவ அமைப்பைக் கொண்டு கருதப்படுகிறது. ஒருவேளை இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோக சக்கரவர்த்தி அரசாண்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். அசோக சக்கவர்த்தி, தமது ஆட்சிக்கு உட்படாத தமிழகத்தில் (சேரசோழ பாண்டிய சத்திய புத்திர நாடுகளில்) பௌத்த முனிவர்களை அனுப்பியதாக அவருடைய சாசனங்களில் இரண்டு சாசனங்கள் கூறுகின்றன.

நமது ஆராய்ச்சிக்குரிய இந்தச் சாசனத்திலே அந்தக் குகையில் வசித்த முனிவரின் பெயரும், அக்குகையில் கற்படுக்கைகளையமைத்தவர் பெயரும். அக்காலத்தில் அரசாண்டிருந்த பாண்டியன் பெயரும் கூறப்படு கின்றன.

சங்க காலத்துச் சாசனங்கள் கிடைக்கவில்லை என்று இதுவரை குறை கூறப்பட்டு வந்தது. இந்தச் சாசனம் அந்தக் குறையை நீக்கிவிட்டது.

இனி, இந்தச் சாசனம் என்ன கூறுகிறது என்பதை ஆராய்வோம். கணியன் நந்தி என்னும் முனிவர் பெயரும் நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன் பெயரும் குகையைச் செப்பஞ் செய்து கொடுத்த கடலன் வழுதி என்பான் பெயரும் இந்தச் சாசனத்தில் கூறப்படுகின்றன. நெடுஞ்செழியன் என்னும் பெயர்கள் சங்க இலக்கியங்களிலே காணப்படுகின்றன. மதுரைக் காஞ்சியின் தலைவனாகிய தலையாலங்கானத்துப் போரை வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனையும் அவனுக்கு முன்பு இருந்த ஆரியப்படை கடந்த அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியனையும் (இவன் கோவலனைத் தவறாகத் கொன்றவன்) அறிவோம். அந்நெடுஞ்செழியர்கள் கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருந்தவர்கள். ஆனால், இந்தச் சாசனத்தில் கூறப்படுகிற நெடுஞ்செழியன் அவர்கள் காலத்துக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவன். இது இந்தச் சாசன எழுத்தைக் கொண்டு யூகிக்கப்படுகிறது. எனவே இந்தப் பாண்டியன் நெடுஞ்செழியன் கடைச் சங்க காலத்தில் இருந்தவன் என்பது தெரிகின்றது.

இந்தச் சாசனம், குகையின் முன்புறத்தில் பெரிய எழுத்துகளால் ஒரே வரியாக எழுதப்பட்டிருக்கிறது என்னும் கூறினோம். ஒரே வரியாக எழுதப் பட்டுள்ள இந்தச் சாசனத்தை ஐந்து வரியில் அமைத்துக் கீழே காட்டியுள்ளோம்.

பிராமி எழுத்தினால் எழுதப்பட்டுள்ள இந்தத் தமிழ் மொழிச் சாசனத்திலே தம்மம் (தர்மம்) என்னும் பிராகிருத மொழிச் சொல் காணப் படுகிறது. இச்சொல் பாலி என்னும் மாகதி மொழி அல்லது சூரசேனி என்னும் அர்த்த மாகதி மொழியிலிருந்து வந்திருக்க வேண்டும். ஏனென்றால் பௌத்தரும் ஜைனரும் இந்த மொழிகளைத் தங்கள் தெய்வ பாஷையாக அக்காலத்தில் வழங்கி வந்தார்கள். எனவே இந்தக் குகையில் வசித்த முனிவர் பௌத்த சமயத்தவராகவோ, ஜைன சமயத்தவராகவோ இருந்திருக்க வேண்டும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

இந்தச் சாசனத்திலிருந்து, கணியன் நந்தி என்னும் முனிவரின் பெயரும் அவருக்காக இக்குகையில் கற்படுக்கைகளை அமைத்த கடலன் வழுதி என்பவரின் பெயரும் இவர்கள் காலத்தில் பாண்டிய நாட்டையரசாண்ட நெடுஞ்செழியன் என்னும் அரசன் பெயரும் கூறப்படுகின்றன.



**இந்த சாசனத்தின் வாசகம் இது:**

**கணிய் நந்தி அஸிரிய் ஈ**
**குவ்அ னிகெ தம்மம் ஈ**

**த்தஅ நெடுஞ்சழியன் ப**
**ணஅன் கடல்அன் வழுத்தி**
**ய் கொட்டுபித்தஅ பளிஈய்**

இந்தச் சாசனத்தின் கருத்தை விளக்கிக் கூறுவதற்கு முன்பு இவ்வெழுத்துக்களைப் பற்றிச் சில கூறவேண்டும். இப்பிராமி எழுத்துச் சாசனத்தில் உயிர்மெய் அகர எழுத்துகள் ஆகாரக் குறியீடு கொடுக்கப் பட்டுள்ளன. (முதல் வரியில் க, ந, இரண்டாம் வரியில் ம. மூன்றாம் வரியில் த.ச.ய.ப. நான்காம் வரியில் ண,க,ட,வ, ஐந்தாம் வரியில் த.ப, ஆகிய இவ்வெழுத்துக்கள் ஆகாரக் குறி கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை உயிர் மெய் அகர வெழுத்துகளாகப் படிக்க வேண்டும். மேலும், முதல் வரியில் எட்டாவது எழுத்தாகிய ஸி என்பது வடமொழி அல்லது பிராகிருத மொழி எழுத்தாக எழுதப்பட்டுள்ளது. இரண்டாவது வரியில் உள்ள 6,7,8,9 - ஆம் எழுத்துகளும் தம்மம் என்று வடமொழி அல்லது பிராகிருத மொழி எழுத்துகளெல்லாம் தமிழ் பிராமி எழுத்துகளே.

மேலும் இச்சாசனத்தில் றன்னகரம் தந்நகரம்போல எழுதப்பட்டு முடி வளைந்து காணப்படுகின்றது. (இரண்டாம் வரி நான்காம் எழுத்தும், மூன்றாம் வரி பத்தாம் எழுத்தும், நான்காம் வரி மூன்றாம் எழுத்தும், எட்டாம் எழுத்தும், றன்னகர எழுத்துக்களே. இவை கோடு பெறாதபடியால் இவற்றை ன் என்று மெய்யெழுத்தாகவே வாசிக்க வேண்டும்.

**விளக்கம்:-**

கணிய் = கணி. அஸிரிய்ஈ = ஆசிரியர். குவ் அனிகெ = குவவனிகெ (குவவனுக்கு). தம்மம் = தர்மம். ஈத்தஅ நெடுஞ் = ஈத்தவன் = நெடுஞ். நெடுஞ்செழியன் = நெடுஞ்செழியன். பண அன் = பணவன் (பணயன்). வழுத்திய் = வழுதி. கொட்டு பித்தஅ = கொத்து பித்த. (கொத்துவித்த). பளிஈய் = பள்ளி.

*மிகை எழுத்துகளைத்தள்ளி, சந்திகளைப் புணர்த்தி, தவறுகளைச் சரிப்படுத்தினால் இச்சாசனத்தின் வாசகம் இவ்வாறு அமையும்:-*

*கணி நந்தி ஆசிரியர் குவவனுக்குத் தர்மம். ஈத்தவன் நெடுஞ்செழியன். பணயன் கடலன் வழுதி கொத்துவித்த பள்ளி.*

*திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் இந்தச் சாசனத்துக்கு இவ்வாறு பொருள் கூறுகிறார்:-*

*"உவ்விடம் (உவன்) வசிக்கிற முனிவன் (ஆசிரியன்) கணிய நந்திக்குத் தர்மம் நெடுஞ்செழியன்பண(வ)ன் (பஞ்சவன்) கடலன் வழுதி இந்தப் பள்ளியைக் கொடுப்பித்தான்".**

*குவவன் என்பதை உவன் என்று திரு.ஐ. மகாதேவன் வாசிக்கிறார்.*

*ஆனால், இந்தச் சாசனத்தின் வாசகத்தைக் கீழ்க்கண்டபடி அமைப்பது பொருத்தம் என்று தோன்றுகிறது:-*

*கணியனந்தி ஆசிரிய குவவனுக்கு (கொடுத்த) தருமம். (இதை) ஈத்தவன் நெடுஞ்செழியன். பணயன் (ஆகிய) கடலன் வழுதி கொட்டுபித்த (கொத்தவித்த) பள்ளி.*

*(கொட்டுவித்த என்பதன் கருத்து பாறையைச் கொத்திச் செப்பம் செய்து கற்படுக்கையமைத்த என்று இருக்கலாம்.)*

*இந்தத் தருமத்தை யளித்தவன். அதாவது, முனிவர் வசிப்பதற்குக் குகையைத் தானமாகக் கொடுத்தவன் நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய அரசன் என்பதும், அந்தக் குகையைச் செப்பஞ்செய்து முனிவர் வசிப்பதற்கு ஏற்றதாகப் பள்ளியாகச் செய்வித்தவன் அப்பாண்டியனுடைய பணயன் ஆகிய (தச்சனாகிய) கடலன் வழுதி என்பதும், இந்தப் பள்ளியைத் தானமாகப் பெற்ற முனிவன் கணியன் நந்தி குவவன் என்பதும் இச்சாசனத்திலிருந்து அறியப்படுகின்றன.*

---

*Page 1. Corpus of the Tamil - Brahmi Inscriptions by Iravatha, Mahadevan. 1966.*

திரு.ஐ. மகாதேவன் அவர்கள், இந்தத் சாசனத்தை யளித்த பாண்டி யனின் பெயர் நெடுஞ்செழியன் பஞ்சவன் கடவலன் வழி என்று படிக்கிறார். இச்சாசனத்தில் வருகிற பணவன் என்னும் சொல் பிராகிருத மொழி என்றும், அது பஞ்சவன் என்று பொருள்படும் என்றும் அது பஞ்சவனாகிய பாண்டி யனைக் குறிக்கிறது என்றும் அவர் கூறுகிறார்.

அவர் கூற்று தவறு என்று தோன்றுகிறது. பணயன் என்பதே சரியான சொல். அது கற்றச்சன், கருமான் என்னும் பொருள் உள்ளது. அரசனுடைய தச்சனுக்குப் பணயன் என்று அக்காலத்தில் பெயர் வழங்கி வந்தது. பிற் காலத்தில், பணயன் என்னுஞ் சொல் பணயகாரன் என்று வழங்கப்பட்டதைச் சாசனங்களில் காணலாம். வேள்விக்குடி, செப்பேடு, சின்னமனூர் செப்போடு, சிவமங்கல செப்பேடு முதலிய பிற்காலத்து காண்டியரின் செப்பேட்டுச் சாசனங்களை எழுதியமைத்தவரின் பெயர்கள் அச்சாசனங்களில் கூறப்படு கின்றன. அவர்கள் அச்சாசனங்களில் பயணகாரன் என்றே கூறப்படுகின்ற னர். எனவே, பணவண் அல்லது பணயகாரன் என்பது அரசரின் கீழ் பணி புரிந்த தச்சர்களைக் குறிப்பனவாகும் என்பது ஐயமறத் தெரிகின்றது. இந்தச் சாசனத்தில் வருகிற பணயன் என்பதற்கும் கல்தச்சன் என்பதே பொருளாகும். அது பணவன் என்னும் பிராகிருதச் சொல்லின் திரிபு என்று கருதுவது தவறு ஆகும்.

அந்தப் பணயனாகிய கற்றச்சனின் பெயர் கடலன் வழுதி என்று சாசனம் கூறுகிறது. கடலன் என்பது தச்சனுடைய சிறப்பு பெயர். வழுதி என்பது பாண்டி மன்னரின் சிறப்புப் பெயர். அரசரின் கீழ் அலுவல்புரியும் உத்தியோகஸ்தர்கள் தங்கள் அரசரின் பெயரையே தாங்களும் சூட்டிக்கொள் வது அக்காலத்து மரபு. இதனைப் பழைய சாசனங்களில் காணலாம். அந்த வழக்கப்படி இந்தக் கல்தச்சனாகிய பணயனும் வழுதி என்னும் பாண்டியன் பெயரைச் சூட்டிக் கொண்டிருக்கிறான்.

இந்தச் சானத்துக்கு இதுவே சரியான பொருள் என்பது தெரிகின்றது. ஈத்தவன் நெடுஞ்செழியன் கொட்டுபித்தவன் (கொத்துவித்தவன் என்று இருக்க வேண்டும். எழுதுவோர் பிழையால் கொட்டுவித்தவன் என்று எழுதப் பட்டிருக்கிறது.) பெயர் பணயன் கடலன் வழுதி என்பது வழுத்தி என்று தவறாக எழுதப்பட்டிருக்கிறது.

கொட்டுபித்த என்பதைக் கொடுப்பித்த என்று திரு.ஐ. மகாதேவன் கருதுகிறார். அப்படியானால் ஈத்தவன், கொடுப்பித்தவன் என்று இரண்டு சொற்கள் மிகையாக உள்ளன காண்க.

சங்க காலத்துப் பிராமி எழுத்துத் தமிழ்ச் சாசனகளில் தமிழ் அரசரின் பெயர் காணப்படவில்லை என்றும் அக்காலத்தில் அரசர்கள் இருந்திருந்தால் அவர்களுடைய பெயர்கள் சாசனங்களில் கூறப்படாமல் இருக்குமா? என்றும் ஆகவே, சங்ககாலம் என்பது பொய்க்கதை என்றும் சில போலி ஆராய்ச்சிக் காரர் விதண்டா வாதம் செய்துவந்தனர். அவர்களுக்கு இந்தச் சானமும் முன் இதழில் வெளியிட்ட சாசனமும் தகுந்த விடையளிக்கின்றன. இனியேனும் அவர்கள் சங்க காலத்தைப் பற்றி ஐயப்படமாட்டார்கள் என்று கருதுகிறோம்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட இந்தச் சாசனத்தைச் சாசன இலாகா படித்து வெளியிடாமல் மறைத்து வைத்திருந்த இரகசியம் புரியிவில்லை. இப்படிப்பட்ட முக்கியமான சாசனங்களை இருட்டில் வைத்திருக்கும் காரணம் என்ன? வெளியிடாத சாசனங்களை இனி யேனும் வெளியிட்டுத் தமிழ்நாட்டு வரலாறு எழுதுவதற்குத் துணைபுரிவார் களா? இதுகாறும் தூங்கிக்கொண்டிருந்ததுபோலத் தூங்கப்போகிறார்களா?

இந்தச் சாசனத்தை முதன் முதலாக வெளியிட்ட திரு.ஐ. மகாதேவன் அவர்களுக்கு எமது நன்றி.

**- கல்வி, டிசம்பர் 1966**

# 2. சங்க காலத்துச் சேர அரசரின் பிராமி எழுத்துச் சாசனம்

சங்க காலத்து வரலாற்றைப் பற்றிப் புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு முதலான இலக்கியங்களிலிருந்து அறிகிறோம். ஆனால், சங்க காலத்துச் சரித்திரம் இன்னும் முறையாக எழுதப்படவில்லை. இக்காலத்துச் சரித்திர ஆசிரியர்களில் ஒரு சிலர் சங்க காலத்தைப் பற்றிச் சந்தேகப்படவும் செய்கின்றனர். சங்க காலத்துச் சரித்திரத்தைபற்றிச் சங்க இலக்கியங்களைத்

தவிர வேறு சான்றுகள் ஏன் கிடைக்கவில்லை? சங்க காலத்து அரசர்களின் சாசன எழுத்துக்கள் ஏன் கிடைக்கவில்லை? என்னு கூறிச் சங்க கால அரசர் களைப் பற்றிச் சந்தேகப்படுகின்றனர்.

சங்க காலத்தைப் பற்றிய சான்றுகள், அதாவது ஆர்க்கியாஜி, எஃபி கிறாபி சான்றுகள், கிடைக்காததற்குக் காரணம் என்னவென்றால் இவ்விரண்டு இலாகாக்களும் தமிழ் நாட்டிலுள்ள பழைய சாசனங்களையும் இடங் களையும் இன்னும் சரியாக ஆராய்ச்சி செய்யவில்லை; கிடைத்துள்ள சில சான்றுகளையும் வெளிப்படுத்தாமல் இருட்டறையில் மூடிவைத்துள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் சில இடங்களிலிருந்து கிடைத்த உரோம நாட்டு நாணயப் புதையல்களும், புதுச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேடு என்னும் கடற்கரையூரில் அகழ்ந் தெடுக்கப்பட்ட கிரேக்க உரோமப் பொருள்களும் சங்க நூல்கள் கூறுகிற யவன - தமிழர் வாணிகத் தொடர்பைச் சான்று காட்டி வலியுறுத்தின. அதன் பிறகு, சரித்திர ஆசிரி யர்கள், கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் யவன - தமிழர் வாணிகத் தொடர்பு இருந்ததை ஒப்புக்கொண்டு சரித்திர நூல்களில் எழுதி வரு கிறார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு காவிரிப்பூம்பட்டினத்தில் அகழ்ந் தெடுக்கப்பட்ட பழம் பொருள்கள் சிலப்பதிகாரமும், மணிமேகலை யுங் கூறுகிற காவிரிப்பூம்பட்டினத்துச் செய்திகளை வலியுறுத்தி மெய்ப் பித்தன. காவிரிபூம்பட்டினத்தின் ஆராய்ச்சி இன்னும் முற்றுப் பெறவில்லை, தமிழ் நாட்டிலும் பொதுவாகத் தென் இந்தியாவிலும் ஆர்க்கியாலஜி, எஃபி கிறாபி இலாகாக்கள் சரிவர வேலை செய்யாமலே இருக்கிறபடியால், பழய சான்றுகள் கிடைக்கவில்லை.

ஆனால், கிடைத்துள்ள சில சான்றுகளையாவது சரியான முறையில் வெளிப்படுத்தி உலகத்துக்குக் காட்டிற்றா என்றால், அதுவும் செய்யவில்லை. உதாரணமாகக் கொங்கு நாட்டுப் புகழுருக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துச் சாசனத்தைக் கூறலாம்.

புகழூருக்கு அருகில் உள்ள ஆறுநாட்டார்மலை என்னும் மலையில் இயற்கையாக அமைந்த குகையிலே இந்தப் பிராமி கல்வெட்டெழுத்து 1927-இல் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தச் சாசன எழுத்தைப் பற்றிய செய்தி, எஃபிகிறாபி இலாகாவின் 1927-28 ஆம் ஆண்டு அறிக்கையில் வெளியிடப்

பட்டிருக்கிறது. ஆனால், அதில் எழுதப்பட்டிருக்கிற வாசகம் என்ன என் பதைப் படித்து வெளியிடாமல் இதுவரையில் இருந்து விட்டனர் ஏறத்தாழ 39 ஆண்டுகள் ஆகியும் அந்தச் சாசனத்தைப் படித்து அதன் வாசகத்தை வெளியிடாமலே இருந்து விட்டனர்!

சென்ற ஆண்டிலே திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் இந்தப் பிராமி எழுத்துச் சாசனத்தை முதன் முதலாக வாசித்து வெளிப்படுத்தினார். திரு.ஐ. மகாதேவன் அவர்கள் எஃபிகிறாபி (சாசன) இலாகா உத்தியோகஸ்தர் அல்லர். அவர் வேறு துறையில் உத்தியோகஸ்தராக இருக்கிறார். ஆனாலும், தனிப்பட்ட முறையில் ஓய்வு நேரத்தில் தமிழ் நாட்டுப் பிராமி எழுத்துச் சாசனங்களைப் படித்து ஆராய்ச்சி செய்து வருகிறார். மேலே கூறியபடி புகளூர் பிராமி எழுத்துச் சாசனத்தையும் அவர் படித்து வெளியிட்டுள்ளனர். அந்தச் சாசனத்திலிருந்து சங்க காலத்துச் சேர அரசர் சிலரைப்பற்றி யறிய முடிகிறது. அவரே பாண்டி நாட்டிலுள்ள இன்னொரு பிராமி எழுத்துச் சாசனத் தையும் படித்தறிந்து வெளியிட்டிருக்கிறார் அது சங்க காலத்துப் பாண்டிய அரசனைப் பற்றியது.

அவ்விரண்டு சாசனங்களும் சங்க காலத்துப் பாண்டிய, சேர அரசர்களைப் பற்றிக் கூறுகின்றன. சங்க காலத்து அரசர்களைப் பற்றிய சாசனங்கள் ஏன் கிடைக்கவில்லை என்று ஐயப்படுகிற சந்தேகப் பேர்வழி களுக்கு இந்தச் சாசனங்கள் தகுந்த விடை கூறுவதுபோல முன் நிற்கின்றன.

முப்பத்தொன்பது ஆண்டுகளாகப் படிக்கப்படாமல் எஃபிகிறாபி இலாகாவில் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்த புகழூர் பிராமி எழுத்துச் சாசனத்தை முதன் முதலாகப் படித்து அதன் வாசகத்தை வெளியிட்டவர் திரு ஐ. மகாதேவன் அவர்கள் என்று கூறினோம். அந்தச் சாசனத்தின் எழுத்தையும் அதன் வாசகத்தையும் இங்கே தருகிறோம்.

**உதவி ஐ. மகாதேவன்**

**இச்சாசனத்தின் வாசகம்:-**

1. தி அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய
2. கோ ஆதன் சேல்லிரும் பொறை மகன்
3. பெருங்கடுங்கோன் மகனிளங்
4. கடுங்கோ ளங்கோ ஆக அறுத்த கல்.

**இதன் கருத்து:-**

இளவரசனாகிய இளங்கடுங்கோ அமண முனிவனாகிய ஆற்றூர் செங்காயபன் வசிக்க அமைத்துக் கொடுத்த மலை அல்லது குகை.

**விளக்கம்:-**

அமணர்கள் (பௌத்த ஜைன மத முனவர்கள்) ஊருக்கப்பால் மலைகளில் தங்கி வசிப்பது பழங்காலத்து வழக்கம். அவர்கள் மலைகளில் இயற்கையாக அமைந்துள்ள குகைபோன்ற பொடவுகளில் தங்கி வசிப்பார் கள். அவர்கள் பாயில் படுக்கமாட்டார்கள். தரையில்தான் படுப்பார்கள். ஆகவே, அமணத் துறவிகள் படுப்பதற்காகப் பாறைக் கல்லைக் கரடுமுரடு இல்லாமல் மழமழவென்று பாயும் தலையணையும் போன்று அமைத்து, அரசர்களும் பிரபுக்களும் அவர்களுக்குக் கொடுப்பது வழக்கம். அந்த வழக்கப்படி, சேர இளவரசனாகிய இளங்கடுங்கோ ஆறு நாட்டார் மலைக்

குகையில் கற்படுக்கைகளை அமைத்து அவற்றை ஆற்றூர் செங்காயபன் என்னும் முனிவனும் அவனைச் சேர்ந்த துறவிகளும் தங்குவதற்காகத் தானஞ் செய்ததை இச்சாசனங் கூறுகிறது.

இச்சாசனத்திலிருந்து சரித்திர ஆதாரமாக நமக்குக் கிடைக்கின்ற சான்று என்னவென்றால், சேர நாட்டு அரச பரம்பரையில் மூன்று அரசர்களின் பெயர் கிடைத்திருப்பதுதான். அதாவது கோ ஆதன் சேரல் இரும்பொறை என்னும் பாட்டனும், அவன் மகனான பெருங்கடுங்கோன் என்பவனும், அவன் மகன் இளவரசரான இளங்கடுங்கோ என்பவனும் இச்சாசனத்தில் கூறப்படு கின்றனர். இந்தச் சாசனம் எழுதப்பட்ட ஆண்டு கூறப்படவில்லை எந்த ஆண்டு என்று அறுதியிட்டுக் கூற முடியாவிட்டாலும், பொதுவாக இந்தச் சாசனத்தின் காலத்தை இதன் எழுத்திலிருந்தும், அரசர் பெயரிலிருந்தும் அறிந்துகொள்ளலாம்.

இந்தச் சாசனம் பிராமி எழுத்தினால் எழுதப்பட்டிருப்பதைக் காண் கிறோம். பிராமி எழுத்து அசோக சக்கரவர்த்தி காலத்தில் வட இந்தியாவி லிருந்து வந்து தென் இந்தியாவிலும் இலங்கையிலும் வழங்கப்பட்டது. அஃது ஏறத்தாழ கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையில் வழங்கி வந்தது. (அதன் பிறகு வட்டெழுத்து வழங்கலாயிற்று) இந்தப் பிராமி எழுத்தைக் கொண்டும் இதில் கூறப்படு கின்ற அரசர்களின் பெயரைக் கொண்டும் இந்தச் சாசனம், ஏறத்தாழக் கி.பி.150 இல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கொள்வதில் தவறு இல்லை. ஆகவே, இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் எழுதப்பட்ட சாசனம் என்று கொள்ளலாம்.

இந்தச் சாசனத்தைப்பற்றிச் சில விளக்கங்கள் கூற வேண்டியிருக் கின்றன. அவை:

1. சாசனத்தின் முதல் வரியில் முதல் எழுத்து என்றிருக்கிறது. இதற்குத் திரு.ஐ. மகாதேவன் அவர்கள் விளக்கங்கூறவில்லை. இந்தத் தி என்னும் எழுத்து திரு என்பதைக் குறிக்கிறதாகத் தோன்றுகிறது. (இந்தச் சாசனம் எழுதப்பட்ட ஏறத்தாழ அதே காலத்தில் வட இந்தியாவில் வழங்கப்பட்ட காசுகள் சிலவற்றில் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. அப்பிராமி எழுத்துக்களில் தி என்னும் எழுத்து த்ரி(ஸ்ரீ) என்னும் பொருளில் எழுதப்

பட்டுள்ளது. அந்த எழுத்தைப்பற்றி இங்கு விளக்கங் கூறுவதற்கு இட மின்மையால் எழுத விரும்பவில்லை) ஸ்ரீ என்னும் பொருளுள்ள திர் என்னும் எழுத்தே இந்தச் சாசனத்தின் முதலில் உள்ள தி என்னும் எழுத்து என்று கருதலாம்.

2. முதல் வரியில் இரண்டாவது சொல் அமணன் என்று இருக்க வேண்டியது அமண்ணன் என்று ணகர ஒற்று மிகுந்திருக்கிறது இச்சாசனத்தில். அமணன் என்பது சமணன் என்பதன் திரிபு. சமணன் என்பது சிரமணன் என்னும் பாலி மொழிச் சொல்லின் திரிபு. அமணன், சமணன், சிரமணன் என்னும் பெயர்கள் பௌத்த மத அல்லது ஜைன மதத் துறவிகளைக் குறிக்கின்றன. ஆகவே, இதில் கூறப்பட்டுள்ள யாற்றூர் செங்காயபன் (செங்காசிபன்) பௌத்த மதத் துறவியாகவோ ஜைன மத துறவியாகவோ இருக்க வேண்டும்.

3. இரண்டாவது வரியில், ''கோ ஆதன் செல்லிரும் பொறை'' என்று திரு.ஐ. மகாதேவன் அவர்கள் படிக்கிறார். இவ்வரசனை அவர் பதிற்றுப் பத்து 7 ஆம் பத்தின் தலைவனான செல்வக் கடுங்கோ வாழியாதனுடன் பொருத்திக் கூறுகிறார். ஆனால், செல்லிரும் பொறை என்று படிப்பதை விட சேல்லிரும் பொறை என்று படிக்கலாம் என்பது என்னுடைய கருத்து. சேரல்லிரும் பொறை என்று எழுத வேண்டியதைக் கல்தச்சன் தவறுதலாக ரகரத்தை விட்டு விட்டான் போலும் இப்படி ''கோ ஆதன் சேரல்லிரும் பொறை'' என்று வாசிக்க வேண்டும். சாசன எழுத்துக்களில் எகரத்தையும் ஒரே விதமாக எழுதுவர். எனவே, செல்லிரும் பொறை என்பதைவிட சேரல்லிரும்பொறை என்று படிப்பதே பொருத்தமானது.

4. நான்காவது வரியில் ''கடுங்கோ ஆக'' என்று எழுதப்பட்டிருக்கிறது. இங்கும் கல்தச்சன் தவறு செய்திருக்கிறான் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது: எழுத்துக்கள் விடுபட்டிருக்கின்றன. ''கடுங்கோ விளங்கோ ஆக'' என்று எழுதப்பட வேண்டியதில் வி என்னும் எழுத்து விடுபட்டுள்ளது. எனவே, விடுபட்டுள்ள எழுத்தைச் சேர்த்துப் படித்தால், இந்தச் சாசன வாசகம் இவ்வாறு அமையும்:-

1. ''திரு அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய
2. கோ ஆதன் சேரல்லிரும் பொறை மகன்

3. பெருங்கடுங்கோன் மகனிளங்
4. கடுங்கோ விளங்கோ ஆக அறுத்த கல்.''

இனி, இந்த அரசர்கள் யார் என்பதை ஆராய்வோம். திரு.ஐ. மகாதேவன் அவர்களின் கருத்து இது:- ''கோ ஆதன் செல்லிரும் பொறை என்று சாசனத்தில் கூறப்படுகிறவன் பதிற்றுப் பத்து 7 ஆம் பத்தின் தலைவனாகிய செல்வக் கடுங்கோ வாழியாதன். அவன் மகன் கடுங்கோன் என்று சாசனத்தில் கூறப்படுகிறவன் பதிற்றுப் பத்து 8 ஆம் பத்தின் தலைவனாகிய தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. அவன் மகன் இளங்கோவாகிய இளங்கடுங்கோ என்று சாசனத்தில் கூறப்படுகிறவன் பதிற்றுப்பத்து 9 ஆம் பத்தின் தலைவனாகிய இளஞ்சேரலிரும் பொறை''

இதில் இரும் பொறை என்பதும் கடுங்கோன் என்பதும் சேர அரச பரம்பரையில் இளைய வழியைச் சேர்ந்தவரும் கொங்கு நாட்டை அரசாண்ட வருமாகிய சேரர் பரம்பரையினர் என்று கூறப்படுகின்றனர் என்பதில் சற்றும் ஐயமில்லை. இந்தச் சாசனம், அக்காலத்தில் சேர இராச்சியத்துடன் இணைந்திருந்த கொங்கு நாட்டில் காணப்படுவதும் இதனை வலியுறுத்து கிறது. ஆனால், இவ் அரசர்கள் பதிற்றுப்பத்து 7,8,9 ஆம் பத்துகளின் தலைவர்கள் என்று திரு.ஐ. மகாதேவன் கூறுவதை ஏற்றுக் கொள்ள சில தடைகள் உள்ளன. அவற்றை விளக்குவோம்.

சாசனம் கூறுகிற கோ ஆதன் சேல்லிரும் பொறை அல்லது கோ ஆதன் சேரல்லிரும் பொறை 7 ஆம் பத்தின் தலைவனாகிய செல்வக் கடுங்கோ வாழி யாதனாக இருக்க முடியாது என்பதை இப் பெயர்களே நன்கு தெரிவிக்கின்றன. எனவே, இருவரும் வெவ்வேறு அரசர்கள் ஆவர்.

சாசனங் கூறுகிற பெருங்கடுங்கோன் 8 ஆம் பத்தின் தலைவனாகிய (தகடூர் எறிந்த) பெருஞ்சேரல் இரும்பொறையாக இருக்க முடியாது. ஏனென்றால், பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் பெருங்கடுங்கோ என்னும் பெயர் சங்க இலக்கியத்தில் எங்குங் கூறப்படவில்லை. எனவே, இருவரும் வெவ்வேறு அரசர்கள் ஆவர்.

சாசனத்தில் கூறப்படுகிற இளங்கடுங்கோ, 9 ஆம் பத்தின் தலைவனாகிய இளஞ்சேரல் இரும்பொறையாக இருக்க முடியாது. இளஞ்சேரல்

இரும்பொறைக்கு இளங்கடுங்கோ என்று பெயர் கூறப்படவில்லை. அன்றியும் 8 ஆம் பத்துக்குரிய பெருஞ்சேரலிரும் பொறையின் மகன் அல்லன் 9 ஆம் பத்துக்குரிய இளஞ்சேரல் இரும்பொறை. அவன் பெருஞ் சேர விரும்பொறையின் தம்பியான குட்டுவன் இரும்பொறையின் மகன். இதனைக் கீழ்க் கண்ட வழி முறையில் காண்க:-

**(7 ஆம் பத்து) செல்வக்கடுங்கோ வாழியாதன் இவனுக்கு 2 பிள்ளைகள் (துணைப் புதல்வர் 7- ஆம் பத்து 10:21) இருந்தனர். அவர்கள்:**

| | |
|---|---|
| தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை (முதல் மகன் 8- ஆம் பத்து) | குட்டுவன் இரும்பொறை (2-ஆம் மகன்) (9-ஆம் பத்தின் பதிகம்) |
| ஒரு மகன் (8-ஆம் பத்து 4:21) யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை (?) | இளஞ்சேரல் இரும்பொறை (9-ஆம் பத்தின் தலைவன்) |

பதிற்றுப்பத்தில் கூறப்படுகிற சேர அரசர்களின் இளைய வழிப் பரம்பரை இது. ஆனால் சாசனம் கூறுகிற பரம்பரை, கோ ஆதன் சேரலிரும் பொறை, அவன் மகன் பெருங்கடுங்கோ, அவன் மகன் இளங்கடுங்கோ என்று திட்ட வட்டமாகக் கூறுகிறது எனவே இம்மூவரை 7,8,9 ஆம் பத்தின் தலைவர் எனக் கூற இயலாது. அப்படியானால் சாசனங் கூறுகிற அரசர் யாவர்?

பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ என்று இரண்டு சேர அரசர் சங்கத் தொகை நூல்களில் கூறப்படுகின்றனர். ஆனால், அவர்களின் உறவு முறை கூறப்படவில்லை. சாசனங் கூறுகிற பெருங் கடுங்கோவும் அவன் மகன் இளங்கடுங்கோவும் அவர்களாக இருக்கக்கூடும். அகப் பொருளில் பாலைத்திணையைப் பாடியவர் பெருங் கடுங்கோ. அவர் அகநானூற்றில் - 1 செய்யுளையும், கலித்தொகையில் 35 செய்யுளையும் குறுந் தொகையில் 10 செய்யுளையும், நற்றிணையில் 10

செய்யுளையும், புறநானூற்றில் (282) ஒரு செய்யுளையும் இயற்றியுள்ளார். புறப் பாட்டைத் தவிர ஏனைய 67 செய்யுளும் பாலைத்திணையைப் பற்றியன எனவே, இவர் பாலைப் பாடிய பெருங்கடுங்கோ எனப் பெயர் பெற்றார். அகப்பொருளின் மருதத்திணையைப் பாடியவர் இளங்கடுங்கோ இவர் அகநானூற்றில் 2 செய்யுளும் நற்றிணையில் ஒரு செய்யுளும் மருதத் திணையைப் பற்றிப் பாடியுள்ளார். ஆகவே, மருதம் பாடிய இளங்கடுங்கோ எனப் பெயர் பெற்றார்.

பாலை பாடிய பெருங்கடுங்கோவும் மருதம் பாடிய இளங்கடுங் கோவும், சாசனத்தில் காணப்படுகிற பெருங்கடுங்கோ இளங்கடுங்கோவாக இருக்கக்கூடும். அப்படியானால் பாலை பாடிய பெருங்கடுங்கோவும் மருதம் பாடிய இளங்கடுங்கோவும் முறையே தகப்பன் மகன் முறையினர் ஆவர். இந்தச் சாசனம் இவர்களின் முன்னோனாகிய கோ ஆதன் சேரல் இரும் பொறையைக் கூறுகிறது. இந்த மூன்று அரசர்களும் சேர மன்னரின் இளைய கால்வழியில் வந்த கொங்கு நாட்டையாண்ட சேர அரசர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். சங்கச் செய்யுள்களில் கூறப்படுகிற இவர்களைப் பற்றி இந்தச் சாசனத்தில் அறிகிறோம்.

சங்க காலச் சேர அரசர்களைப் பற்றித் தெரிவிக்கிற பழைமையான பிராமி எழுத்துச் சாசனம் இதுவே.

சங்க காலத்து அரசர்களைப் பற்றிய சாசனங்கள் கிடைக்கவில்லையே என்று குறை கூறியவர்களுக்கு ஒரு சான்றாக இந்தச் சாசனம் இருக்கிறது. இது போன்று சங்க காலத்துப் பாண்டிய அரசனான நெடுஞ்செழியனைப் பற்றிய பிராமி எழுத்துச் சாசனம் ஒன்றும் கிடைத்திருக்கிறது. அது பற்றி அடுத்த இதழில் எழுதுவோம்.

முப்பத்தொன்பது ஆண்டுகள் ஆகியும் படிக்கப் படாமல் கிடந்த இந்தச் சாசனத்தை முதன் முதலாகப் படித்து வெளியிட்ட திரு.ஐ. மகாதேவன் அவர்களுக்கு எமது பாராட்டு உரியதாகும்.

**- கல்வி - நவம்பர் 1966**

# 3. கொங்கு நாட்டில் பிராமி எழுத்துக்கள்

பிலவ ஆண்டு வைகாசித் திங்கள் 13-ஆம் நாள் வெள்ளிக்கிழமை (26-5-1961) பகல் இரண்டுமணிக்கு நாங்கள் கொங்கு நாட்டு அரசலூரை யடைந்தோம். நாங்கள் என்றால் இக் கட்டுரையாளரும், சீவபந்து ஸ்ரீபால், வித்துவான் செ. இராசு, வித்துவான், பச்சையப்பன், வித்துவான். சென்னி யப்பன், அவர்களும் ஆகும். அரசலூர் ஈரோடிலிருந்து பழைய கோட்டை வழியாக 12 ஆவது கல்லில் இருக்கிறது. வெயில் எரிக்கும் பகல் வேளையில் அவ்வூர் மலையடிவாரத்தை ஒட்டிய காட்டுவழியாக ஒருமைல் தூரம் நடந் தோம். பாதை இல்லாத காட்டுவழி யாகையால் முட்செடி கொடிகளால் இடர்ப் பாடுகள் விளைந்தன. எப்படியோ தட்டித்தடுமாறி மலையின் மற்றொரு புறத்திலிருக்கிற ஆண்டிப் பாறை என்னும் இடத்துக்கு வந்துசேர்ந்தோம். ஆண்டிப் பாறை என்னும் இடம், மலையின் மேலே உள்ள ஒரு பாழி. அதாவது, பொடவு என்று கூறப்படுகிற இயற்கையாக அமைந்த குகை.

இந்தக் குகையிலே மேடுபள்ளமாக இருக்கிற பாறையிலே ஐந்து கற்படுக்கைகளும், மூன்று பிராமி தமிழ்ப்பொழில்-துணர் 36, மலர் 4, 1960 எழுத்துச் சாசனங்களும் இருப்பதைக் கண்டோம். கற்படுக்கைகள், இக்குகையிலே முனிவர்கள் வசித்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கின்றன. அந்த முனிவர்கள் பௌத்த முனிவர் களாகவோ, ஜைன முனிவர்களாகவோ இருக்கவேண்டும்.

இந்தக் கற்படுக்கைகளிலே மூன்று சாசனங்கள் பிராமி எழுத்தினால் எழுதப்பட்டுள்ளன. சாசனங்கள் சுருக்கமாக இரண்டுவரி, மூன்றுவரிகளில் எழுதப்பட்டுள்ளன. இரண்டு சாசனங்களின் எழுத்துக்கள் சிதைந்து காணப் படுகின்றன. ஒரு சாசனம் சிதையாமல் நல்லநிலையில் இருக்கின்றது. இதிலும் மூன்று நான்கு எழுத்துக்கள் சிறிது சிதைந்துள்ளன. சாசன எழுத்துக் கள் பிராமி எழுத்தினால் எழுதப்பட்டிருப்பதனால், ஏறக்குறைய இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சாசனங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். பிராமி எழுத்துக்கள் தமிழ்நாட்டிலே வழங்கப்பட்டது அசோக சக்கரவர்த்தி காலத்தில் ஆகும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் தொடகத்திலே அசோக சக்கரவர்த்தி காலத்திலே பௌத்த பிக்ஷுக்கள் தமிழ் நாட்டுக்கு வந்தார்கள். அவர்கள் பிராமி எழுத்துக்களைத் தமிழ்நாட்டில் புகுத்தினார்

கள். பிராமி எழுத்துக்கள் தமிழ் நாட்டிலே கி.மு. 2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரையில் வழங்கிவந்தன. எனவே, இந்தக் குகையில் பிராமி எழுத்துக்கள் காணப்படுவதனாலே, ஏறக்குறைய 2000 ஆண்டு களுக்கு முன்பு இவ்வெழுத்துக்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதலாம். படுக்கைகளில் ஓரிடத்தில், ஓர்ஆள் நின்றுகொண்டு கைகளை மார்பில்வைத்து வணங்குவது போலக் கோட்டுச் சித்திரம் வரையப்பட்டிருக் கிறது. இன்னோர் இடத்தில் சூலம் போன்ற வடிவம் செதுக்கப்பட்டிருக்கிறது. குகைக்கு வெளியேயுள்ள பெரிய பாறைக் கல்லில் கமண்டலம் போன்ற ஓர் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க சாசன இலாகாவும், பழம் பொருள் ஆராய்ச்சி இலாகாவும் (எபிகிராபி, ஆர்க்கியாலஜி இலாகாக்கள்) இதுவரையில் இந்த இடத்தைக் கண்டுபிடிக்கவும் இல்லை. எழுத்துக்களைப் படிஎடுக்கவும் இல்லை.

இந்த இடத்துக்குப் போக நல்லபாதை அமைத்து, இந்தக் குகையையும் இதிலுள்ள எழுத்துக்களையும் பாதுகாப்புப் பழம் பொருள்கள் என்று அரசாங்கத்தார் தெரிவிக்கவேண்டும். இந்தப் பிராமி எழுத்துக்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பது இன்னும் படிக்கப்படவில்லை. இத்துறை யில் வல்லவர்கள் இதனைச் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

இந்த ஆண்டிபாறைக்குச் சற்றுத் தூரத்தில் இதே மலையில் இன்னொரு குகையும் அதில் எழுத்துக்களும் இருக்கின்றனவாம். அந்தக் குகை மிகவும் ஆபத்தான இடத்தில் இருப்பதனால் நாங்கள் அங்குப் போகவில்லை. சமயம் வாய்க்கும்போது மற்றொரு சமயம் போகக்கூடும்.

பாண்டிநாட்டு மலைகளிலே பிராமி எழுத்துச் சாசனங்கள் சில முன்னமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், கொங்கு நாட்டிலே பிராமி எழுத்துச் சாசனம் இப்போதுதான் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சாசன எழுத்தையும் குகையையும் பாதுகாப்புச் சட்டத்தின்படி அரசாங்கத்தார் பாதுகாக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்த நாள் (27-5-61) நாங்கள் நகரத்தில் ஒரு பழைய கோவிலைக் கண்டுபிடித்தோம். இந்தக் கோவில் பல்லவ அரசர் காலத்துக் கட்டட அமைப்புப்படி கட்டப்பட்டிருக்கிறது. மண்மூடிப் புதைந்துகிடந்த இந்தக் கோவில் சில காலத்துக்கு முன்பு தோண்டி எடுக்கப்பட்டதாம். மகிமாலீசுவரர் கோவில் என்பது இதற்குப் பெயர். இந்தக் கோவில் இருப்பது இதற்கு முன்

பலர் அறிந்திருந்தாலும், இக்கோவில் பல்லவ அரசர் காலச் சிற்ப முறைப்படி அமைந்த பழைய கட்டடம் என்பதை ஒருவரும் இதுவரையில் அறிய வில்லை.

நாங்கள் சென்று பார்த்தபோது, பல்லவர் காலத்துச் சிற்ப முறைப்படி அமைந்த பழைய கோவில் என்பதைத் தெளிவாக அறிந்தோம். மகாபலி புரத்துத் ''தர்மராச இரதம்'' என்னும் கோவிலின் விமானம் போன்றது இந்தக் கோவிலின் விமானம். எட்டுப்பட்டை விமானம். விமானத்தில் அமைந்துள்ள சாலை, பஞ்சரம், கர்ணகூடு முதலிய உறுப்புகளும் பல்லவர் காலத்துச் சிற்ப முறைப்படி அமைந்துள்ளன. துவாரபாலகர் திருவுருவங்களும் பல்லவர் காலத்துச் சிற்ப முறைப்படி அமைந்துள்ளன. பல்லவர் காலத்துக் கோவில் களைப் போலவே இந்தக் கோவில் சுவர்களும் நான்கு அடி அகலமுள்ளவை யாக உள்ளன. திருவுண்ணாழிகையில் (கர்ப்பக்கிருகத்தில்) உள்ள சிவ லிங்கத் திருவுருவம் மகேந்திரவர்ம பல்லவ அரசன் காலத்துச் சிவலிங்கம் போன்றும் பெரியதாகவும் இருக்கின்றது.

இந்தக் கோவில் கர்ப்பக்கிருகமும் (திருவுண்ணாழிகையும்) விமானமும் பல்லவர்காலத்துக் கட்டடமாகும். இப்போதுள்ள மகாமண்டபம், முகமண்டபம் அம்மன் கோவில் ஆகியவை பிற்காலத்தில் அமைக்கப் பட்டவை. சுவாமியுள்ள திருவுண்ணாழிகையின் வெளிப்புறத்தில் இருந்த துவாரபாலகர் உருவங்களைப் பிற்காலத்தில் மகாமண்டபத்து வாயில் பக்கத் தில் வைத்திருக்கிறார்கள். கொங்கு நாட்டிலே பல்லவ அரசர் ஆட்சி பரவிய தாகத் தெரியவில்லை. ஆனால், பல்லவ சிற்பக்கலை அங்கும் பரவியிருந்தது என்பது இந்தக் கட்டடத்தினால் தெரிகிறது.

ஈரோடிலுள்ள இந்த மகிமாலீசுவரர் கோவிலையும் பழம்பொருள் பாதுகாப்புச் சட்டத்தின்படி அரசாங்கத்தார் பாதுகாக்கவேண்டுகிறோம்.

**- செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 35**

## 4. வரகுண பாண்டியனின் கல்வெட்டு

இரண்டாம் வரகுண பாண்டியன் கி.பி. 6ஆம் ஆண்டில் முடிசூடி பாண்டியநாட்டை அரசாண்டான். 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவன். மிக்க சிவபக்தியுள்ளவன் இவன் காலத்திற்கு முன்னே (ஏறத்

தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்புதான்). அப்பர் சுவாமிகளும் திருஞான சம்பந்த சுவாமிகளும் தமிழ்நாடெங்கும் பக்தி இயக்கத்தை பரப்பி சைவ சமயத்தை வளர்த்துச் சென்றனர். இந்த பாண்டியனின் காலத்திலே பக்தி இயக்கம் மறைந்துவிடவில்லை. அவர்கள் காலத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாழ்ந்திருந்து சமயப்பிரச்சாரம் செய்தார். இவனுடைய காலத்தில் அரசியல் விருப்பங்கள் அதிகமாக இருந்தன. இவன் பகையரசருடன் பல போர்களை செய்ய வேண்டியவனாக இருந்தான். ஆனால் அந்த போர்களுக்கு இடையேயும், சிவபக்தனான இவன் சைவத் தொண்டுகளைச் செய்து கொண்டி ருந்தான். வரகுணனுக்கு சிவலோகம் காட்டிய திருவிளையாடல் போன்ற சில திருவிளையாடல்கள், இவன் காலத்தில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது.

திருசெந்தூரில் உள்ள முருகப்பெருமான் திருக்கோயிலில், வரகுண பாண்டியனுடைய நீண்ட கல்வெட்டுச் சாசனம் ஒன்று காணப்படுகின்றது. இவன் திருச்செந்தூர் முருகப்பெருமானுக்கு நித்திய கட்டளை அமைத்ததை, இந்தச் சாசனம் கூறுகிறது. 1400 பொற்காசுகளை, இவன் இந்த கோயிலுக்கு தானம் செய்து அக்காசு முதல் கெடாமல் அதன் வட்டிப் பணத்திலிருந்து நித்திய பூசை நடைபெற ஏற்பாடு செய்ததை இச்சாசனத்திலிருந்து அறிகிறோம். இந்தப் பாண்டியனிடத்தில் காவலர்களாக இருந்த **இருப்பைக்குடிக் கிழவன்** அளற்று நாட்டுக்கோன் சாத்தம் பெருமான் என்பவர்களிடம் இந்த பொற்காசுகளைக் கொடுத்தனுப்பி, நித்திய பூசைகள் நடைபெறுவதற்கு இவ்வரசன் ஏற்பாடு செய்தான். இதிலிருந்து அந்தக் காலத்தில் (1100 ஆண்டுகளுக்கு முன்னரே திருச்செந்தூர் முருகப் பெருமான் கோயிலில் நடைபெற்ற நித்தியபூசைகளின் விவரம் நன்கு தெரிகின்றது. அதனைக் கீழே தருகிறோம்.

சுப்பிரமணிய படாரர் கோயில், திருமூலத்தானத்துப் படாரர்க்கு உரிய நித்தியப்படி விவரம் பின்வருமாறு:-

**திருவமுது**: அரிசி, செந்நெற்றீட்டல் ஒருவேளைக்கு நானாழியாக, நான்கு வேளைக்கு அரிசி பதினாறுநாழி.

**நெய்யமுது**: திருவமுதுக்குப் பசுவின் நறுநெய், ஒரு வேளைக்கு உழக்கு. "கறிதுமிக்கவும் பொரிக்கவும் ஒரு வேளைக்கு ஆழாக்காக நான்கு வேளைக்கு நெய்யமுது நாழிஉரி."

**தயிரமுது**: நிவேதிக்கத் தயிரமுது ஒரு வேளைக்கு நாழி. கட்டுத்தயிர் அமுது ஒரு வேளைக்கு உரி. ஆகநான்கு வேளைக்குப் பசுவின் தோய் தயிர் ஆறுநாழி.

**வாழைப்பழ அமுது**: ஒருவேளைக்கு நான்கு பழமாக நான்கு வேளைக்கு வாழைப்பழம் பதினாறு.

**சர்க்கரை அமுது**: ஒருவேளைக்கு ஒருபலமாக நான்கு வேளைக்கு நான்குபலம்.

**கறிஅமுது**: காய்கறி ஒன்று, புளங்கறி ஒன்று, புழுக்குக் கறி ஒன்று, பொரிக்கறி ஒன்று, ஆகக் கறி அமுது நான்கினுக்கு ஒருவேளைக்குப் பத்துப் பலமாக நான்கு வேளைக்கு கறி அமுது நாற்பதுபலம்.

**காயம்**: மிளகு அமுது, மஞ்சளமுது, சீரக அமுது, சிறுகடுகு அமுது, கொத்தம் பரி அமுது; ஆகக்காயம் ஐந்து. இவை ஒருவேளைக்கு முச் செவிடாக நான்கு வேளைக்கு காயம் உழக்கே இரு செவிடு.

**கும்மாயம்**: (கும்மாயம் என்பது சிறுபயற்று அவியலுடன் வெல்லமும் நெய்யும் கலந்து செய்வது.) இதற்குச் சிறு பயற்றுப்பருப்பு ஒருவேளைக்கு உரியாக நான்கு வேளைக்கு இருநாழி சிறுபயிறு.

**இலைஅமுது**: (இது இலையமுது என்றும், வெற்றிலை அமுது என்றும் கூறப்படும்.) ஒருவேளைக்கு மூவடுக்காக நான்கு வேளைக்கு வெற்றிலை அமுது மூன்று பற்று.''

**அடைக்காயமுது**: (பாக்கு அமுது) ஒரு வேளைக்குப் பதினான்கு. நான்கு வேளைக்கு அடைக்காயமுது ஐம்பத்தாறு.

**திருநந்தாவிளக்கு**:/ விளக்கு ஒன்றுக்கு உரிநெய். ஐந்து திரு விளக்குப் பசுவின் நறு நெய் நியதி இருநாழி உரி.

**திருமஞ்சனம்**: (அபிஷேகம்) பசுவின்பால் நியதி (நாள் ஒன்றுக்கு) நானாழி, பசுவின் தயிர் நானாழி, இளநீர் வழுவை உட்பட நாழி இளநீருக்கு நான்கு இளநீராக நியதி இளநீர் எட்டு.

***திருப்பள்ளித்தாமம்***: *பூமாலை. நாள் தோறும் அளக்கக்கடவ நறும்பூ பத்து நாழி.*

***பயற்றுப்பொரி***: *சிறுபயற்றுப் பொரிக்காக நாழி உழக்கு.*

***பற்றுமஞ்சள்***: *திருமேனிபூசி அருளமேற்றோல் சிதைத்த பற்று மஞ்சள் நியதி உழக்கு.*

***வெண்கூறை***: *(கூறை - ஆடை). மூன்று மாதத்திற்கு நான்கு இணை (ஜோடி)யாக ஓராண்டு நான்குமுறைக்கு வெண்கூறை பதினாறு இணை.*

*மேற்கட்டிப் புடவை: திருவடைப்பள்ளிக்கு மேற்கட்டியாகப் புடவை(துணி) இரண்டு. ஆறு திங்களுக்கு ஈரிணை; ஓராண்டு இரண்டு முறைக்குப் புடவை நால் இணை.*

***தூபம்***: *ஸ்ரீதூபம் சீதாரியினுக்கு வேண்டும் உறுப்பு அதில் உட்படக் கற்பூரமும்தேனு நியதி அரைக்காணம் விலைபெற இடுவது.*

***மேற்கட்டு வெண்கூறை***: *கர்ப்பத்துக்கு மேற்கட்டி வெண்கூறை இரண்டு. ஆறு திங்களுக்கு நாலுமுறையாக ஓராண்டு இரண்டு முறைக்கு கூறை எட்டு இணை.*

***திருப்பலி***: *திருப்பலிக்குப் பசுவின் தயிர் நாள் ஒன்றுக்கு நாழி.*

*கொற்று: தட்டளி கொட்டி (வாத்தியம் வாசிப்போருக்கு), (சோறு), திங்கள் ஒன்றுக்கு நாலுபத்துக் குறுணி நாழி உரியாக. இரண்டு திங்களுக்கு நெல்லுதின் நாராயத்தால் ஐம்பத்தேழுலகம்.*

***ஸ்ரீஉடையாடை***: *மூன்று திங்களுக்கு இணையாக நான்கு முறைக்கு ஸ்ரீஉடையாடை.*

***நாலிணை***: *இன்னொரு ஸ்ரீ உடையான ஆண்டுக்கு நாலிணை.*

***திருமஞ்சன நெய்***: *''திருமஞ்சனம் அருளப் பசுவின் நறுநெய் நியதி நாழி''.*

**சந்தனக் குழம்பு**: "திருமேனி சந்தனக் குழம்புச் சந்தனம் நியதி பலம்"

**கற்பூரம்**: திருமேனிபூசும் திருச்சந்தனத்தோடு கட்டி அரைக்கும் கற்பூரம் நியதி ஏழரைக் காணம்.

**திருமஞ்சன இளநீர்**: "திருமஞ்சனம் அருள இளநீர் வழுவை (வழுக்கை) பட, நியதி இருநாழியினுக்கு நாழி நீருக்கு நாலிளநீராக, நியதி இடும் நீர் "எட்டு".

(குறிப்பு: கற்பூர தீபம் இதில் குறிப்பதில்லை. அக்காலத்தில் கற்பூரத்தீபம் கோயில்களில் வழக்கத்தில் இல்லைப்போலும். அது பிற் காலத்தில் ஏற்பட்ட வழக்கமாக இருக்கலாம். தேங்காய் உடைப்பதும் குறிப் பிடப்படவில்லை. இதுவும் பிற்காலத்து ஏற்பட்ட வழக்கம் போலும். தேவாரப் பாடல்களிலும் கற்பூர தீபாரதனை குறிப்பிடப்பெறவில்லை.)

சிவபக்தனான வரகுண பாண்டியனுடைய பக்தி, இந்தக் கட்டளை யிலிருந்து நன்கு தெரிகிறது. இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாழ்ந்திருந்த 9 - ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சாசனம் என்பதும் கருதத்தக்கது.

**திருக்கோயில் - செப்டம்பர் 1968**

# 5. தேனவரை நாயனார் சாசனம்

இலங்கையிலே கொளும்பு நகரத்துப் பொருட்காட்சிசாலையிலே ஒரு சாசனக்கல் இருக்கிறது. இந்தச் சாசனக்கல் இலங்கையின் தென்கோடியில் உள்ள காலி என்னும் ஊரியிலிருந்து கொண்டு வரப்பட்டது. இந்தக் கல் 4 அடி 9 அங்குல நீளமும், 2 அடி 6 அங்குல அகலமும், 5 அங்குலக் கனமும் உள்ளது. இதிலே தமிழ், சீனம், பாரசீகம் என்னும் மூன்று மொழிகளில் சாசனம் எழுதப்பட்டுள்ளது.

(இந்தக் கல் கண்டெடுக்கப்பட்ட வரலாறு முதலியவற்றை *J.R.A.S (C.B.) Vol. XXII. P. 129* ல் காண்க. இந்தச் சாசனத்தின் மொழிபெயர்ப்பு முதலிய செய்திகளைப்பற்றி *The Galle Trilingual Stone by Mr. E.W. Perera, Spolia Zeylanica Vol. VIII. pp. 122 ff.* காண்க.)

சீன தேசத்துச் சக்கரவர்த்தி யுவுங்லோவின் 7 ஆம் ஆண்டில், இரண்டாம் மாதத்தில் இந்தச் சாசனங்கள் எழுதப்பட்டன. யுவுங்லோ அரசன் கி.பி. 1403 இல் ஆட்சிக்கு வந்தான்.

தேனவரை நாயனாரின் புகழைக் கேள்விப்பட்ட சீனத்து அரசன். தமது தூதர்களாகிய சிங்வோ, உவிங் சுவிங் என்பவர்களின் மூலமாகச் சில பொருள்களைக் காணிக்கையாக அனுப்பியதையும் அப்பொருள்களின் விபரத்தையும் இந்தத் தமிழ்ச் சாசனம் கூறுகிறது. சீனமொழி சாசனத்தில் இந்தத் தூதர்களின் பெயர்கள் ச்சிங்ஹோ என்றும் வங் ச்சிங் லீன் என்றும் கூறப் படுகின்றன.

தமிழ்ச் சாசனம் தேனவரை நாயனாரைத் தேனவரை ஆழ்வார் என்றும் கூறுகிறது. தெய்வங்களை நாயனார் என்றும், ஆழ்வார் என்றும், பட்டாரகர் என்றும் கூறுவது தமிழ் மரபு. சீனமொழி சாசனம், டி சீனத்து அரசன் புத்தர் கோவிலுக்கு அளித்த காணிக்கைப் பொருள்களைக் கூறுகிறது. பாரசீக மொழி சாசனம் மிகவும் சிதைந்து, அழிந்து காணப்படுகிறபடியால் யாருக்குக் காணிக்கைப்பொருள் அளிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. முகம் மதியர் சம்பந்தமான நிலையத்துக்கு அளிக்கப்பட்ட காணிக்கைப் பொருள் களைக் கூறுகின்றது என்பதில் ஐயமில்லை. தமிழ்ச் சாசனத்தில் கூறப்படுகிற காணிக்கைப் பொருள்களைப் போன்ற பொருள்களே மற்ற இரண்டு சாசனங்களிலும் குறிப்பிடப்படுகின்றன.

சிங்கள மொழியில் தேவுநுவர என்பது தேவநகரம் என்று பொருள்படும். இப்போதைய சிங்கள மொழியில் இந்நகரம் தேவுத்தர என்று வழங்கப்படுகிறது. தமிழில் தேனவரை என்று வழங்கப்படும் போர்ச்சுகீசியர் இப்பெயரை தனவரெ என்று வழங்கினார்கள். ஆங்கிலத்தில் இப்பெயர் தொண்டரா என்று வழங்குவர். இந்த நகரம் இலங்கைத்தீவின் தென்கோடி யில் இருக்கிறது. இது பண்டைக்காலத்தில் பேர்போன துறைமுகப்பட்டின மாக இருந்தது. 17 ஆம் நூற்றாண்டில், போர்ச்சுகேசியர் கொழும்பு துறை முகம் உண்டாக்கிய பிறகு, பழைய துறைமுகப் பட்டினமாகிய தேனவரை நாளடைவில் சிறப்புக்குன்றி, சாதாரண சிறு கிராமமாக மாறிப் போயிற்று.

தேனவரைத் துறைமுகப்பட்டினம் சிறப்புற்றிருந்த காலத்தில் அக்காலத்து வியாபாரம் கப்பல்கள் இங்குவந்து தங்கின. மிகப் பழைய

காலத்தில் யவனக் கப்பல்கள் (கிரேக்க கப்பல்கள்) இங்கு வந்தன. பிற்காலத்தில் அரபியர்களும், சீனர்களும் மற்றவர்களும் இந்தத் துறைமுகத்தில் தமது வியாபாரப் பொருள்களைக் கொண்டு வந்து இறக்கியும், இங்கிருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டும் வியாபாரம் செய்தார்கள். தொன்றுதொட்டு தமிழகக் கப்பல் வியாபாரிகளும் இந்நகரத்தில் வியாபாரம் செய்தனர். அன்றியும், தமிழர் பலர் இந்நகரத்தில் தங்கிக் குடியிருந்தனர். அவர்கள் இந்நகரத்திலே வருணனுக்குக் கோயில் அமைத்து வழிபட்டனர்.

தேனவரை நகரத்தில் கோயில் கொண்டிருந்த வருணனைச் சிங்களவர் தமது மொழியில் உபுல்வன் (இது உதகபால வருணன் என்பதன் திரிபு) என்று வழங்கினார்கள். பிற்காலத்தில் உபுல்வன் என்னும் சொல் உப்பலவண்ணன், உத்பலவர்ணன் என்று பாலி மொழியிலும், வடமொயிலும் கூறப்பட்டது. பின்னர், மாலிக்காபூர் முதலான முகம்மதியரின் படையெடுப்புக்காலத்தில், தமிழ்நாட்டுப் பார்ப்பனர் சிலர் சிங்கள அரசரிடம் அடைக்கலம் புகுந்தனர். அவர்களை ஆதரித்த சிங்கள அரசர் அவர்களைத் தேவாலயங்களில் (பௌத்த ஆலயங்கள் அல்ல - இந்து தேவாலயங்கள்) பூசை செய்ய நியமித்தார்கள். நாளடைவில், காலப் போக்கில், இவர்கள் உப்பலவண்ணனை விஷ்ணுவாக மாற்றிவிட்டனர். தேனவரை நகரத்திலும் பார்ப்பனர் குடியிருந்த செய்தி சாசனங்களினால் தெரிகிறது.

தேனவரையில் இருந்த (உபுல்வன்) உப்பவண்ணனைப் பிற்காலத்தவர் தேனவரை ஆழ்வார் என்றும், தேனவரை நாயனார் என்றும் பெயரிட்டழைத்தனர். சிங்களவர் தேவுந்தர தேவியோ (தேவுந்தர நகரத்துத்தெய்வம்) என்று வழங்கினார்கள்.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தொடக்கத்திலே தேனவரை நாயனார் கோவில் சீனநாடு வரையில் புகழ்பெற்றிருந்ததென்பதை இந்தச் சாசனத்தினால் அறிகிறோம். (இந்நகரத்தில் முற்காலத்தில் இருந்த வருணன் (உபுல்வன்) கோயிலைப்பற்றியும், வருணன் வழிபாட்டைப் பற்றியும் முன்னைய 'பொழில்'களில் கூறியுள்ளேன்.)

1. ஸ்வ(ஸ்தி)..... ... .. . . . . .... . . ...
2. இரா சாதிராச பரமேசுரன் பூர்ண சந்திரப் பிரகாசன் சீனத்தில்
3. மஹாஇராசா இலங்கா ராச்சியத்தில் நாயினார் தேநவரை

4. நாயினார்க்குத் திரு முன் காணிக்கையான நாயினார் பிரகா
5. சங்கேட்டு தூதர் சிங்வே உவிங் சுயிங்ங் கையி
6. லே வரக்காட்டினது இப்பாசிதம் கேட்பது.இ
7. ந்தப் புவனத்திலுண்டான பிராணிகளெல்லாம். நாயி
8. னார் கிருபையினாலே சுகமே பரிபாலியா நின்றது. ஆங்கு வரு
9. கிற ரோங்கும் மனித்தரும் தேநவரைநாயினார் திரு அரு
10. ளத்தால் ஒழிந்தாண்டரையேயாள் நின்றது. இப்படியை
11. த் தேனவரை ஆழ்வார்க்கு காணிக்கை ஆக காட்டினது.
12. ஆகப்படி பொன் வெள்ளி துலுக்கி பட்டு சந்தனம்
13. எண்ணைக் காப்புப் பல காணிக்கைக்கு வகை பொன் ஆயிரம்க
14. ழஞ்சு வெள்ளி அய்ஞ்சாயிரக் கழஞ்சு பல நிறத் துலுக்கி அயம்பது பல
15. நிறப் பட்டு அய்ம்பது பொன் எழுத்து (காசதார)த் தூசஞ்சுவடு நாலு
16. ந்த சுவடு இரண்டு நீலத் தூசஞ் சுவடு இரண்டு பழஞ் செப்பு சிவ தூபம்இ
17. டுகிற செப்புப் பாத்திரம் அஞ்சு பூக்குத்துகிற செப்புக்
18. கெண்டி பத்து கறிக்கால் பத்து குத்து விளக்கிச் சாவான் அஞ்சு கறி.
19. க்கால் அஞ்சு மரத்தாலே பொன் பூசின தாமரைப்பூ சுவடு ஆறு
20. அகில் வைக்கிற பொன் பூசின செப்பு அஞ்சு மெழுகுதிரி சுவடு ப்பத்து
21. எண்ணை இரண்டாயிரத்து அஞ்ஞூறு கட்டி சந்தன முறி

22. பத்து ஆக இவ்விசைப் படியாலுள்ளது..... நாயினார்.

23 தேனவரை நாயினார்க்கு திரு முக்காணிக்கையாகக் குடுக்கவும்.

24. யுங்லொக்கு யாண்டு ஏழா யிரண்டா(ம்ம)டி.*

குறிப்பு:- 6 - ஆம் வரி ''இப்பாசிதம் கேட்பது'' என்பதில் பாசிதம் என்பது பாஷிதம் என்னும் சொல்லின் திரிபு. 8,9 ஆம் வரி ''வருகிற ரோங்கும்'' என்பதை ''வருகிறவரோங் கும்'' என்று வாசிக்கவும். 12,14 ஆம் வரி களில் வருகிற ''துலுக்கி'' என்பது பட்டுத்துணியைக் குறிக்கிறது போலும். 13,21 ஆம் வரிகளில் வரும் ''எண்ணை'' என்பதை, ''எண்ணெய்'' என்று வாசிக்கவும். 15 ஆம் வரியில் ''தூசம்'' என்பது துவசம் என்பதன் திரிபு போலும். துவசம் = கொடி ஷை வரியில் ''சுவடு'' என்பது இரட்டை எனப்பொருளுள்ள கோடி என்பதன் திரிபாக இருக்கலாம். 21 ஆம் வரி இரண்டாயிரத்து அஞ்ஞூறு கட்டி என்று வாசிக்கவும். கட்டி என்பது முகத்தல் அளவை. சீன நாட்டுச் சொல்லாகிய 'சட்டிஸ்' என்பதன் திரிபுபோலும், சந்தன முறி = சந்தன மரத்துண்டு.

**தமிழ்ப் பொழில் துணர் - 34 மலர் - 11**

# 6. எழுத்து ஆக்கம் **

பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னே மனிதன் பேசக் கற்றுக் கொண்டான். அஃதாவது தன் எண்ணங்களைப் பேச்சின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்கக் கற்றுக்கொண்டான். மனிதன் கற்றுக்கொண்ட பேச்சை அவனை மிருகத்தன்மையிலிருந்து மனிதத் தன்மைக்கு உயர்த்திவிட்டது. பின்னும், பல காலம் சென்ற பிறகு மனிதன், தன் எண்ணங்களையும் கருத்துக்களையும், எழுத்துமூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயற்சி

---

* *Epigraphia Zeylanica Vol. III.*

** அகில இந்திய வானொலியில், சென்னை நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டது. இசைவுபெற்று வெளிவருகிறது.

செய்தான் முயற்சிசெய்து அதில் வெற்றி அடைந்தான் எழுத்துக்களைக் கண்டுபிடித்து அதன் மூலமாகத் தன் கருத்துக்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்கக் கற்றுக்கொண்ட வித்தையானது, மனிதனை மிக உயர்ந்த நாகரிகத்தை அடையச் செய்துவிட்டது. எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளாமல், வெறும் பேச்சோடு மட்டும் நின்றுவிட்டிருந்தால், இப்போது மனிதன் அடைந்திருக்கிற உயர்ந்த நாகரிக நிலையை அடைந்திருக்க முடியாது.

எழுத்தைக் கண்டுபிடித்த ஆதிகாலத்து மனிதர், இப்போது உலகத்திலே வழங்குகிற ஒலி எழுத்துக்களைக் கண்டுபிடிக்கவில்லை. அஃதாவது, தனித்தனியாக ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வொரு எழுத்தைக் கண்டுபிடிக்கவில்லை. உருவங்களைச் சித்திரம் வரைவதுபோல வரைந்து அவற்றின் மூலமாக அக்காலத்து மனிதர் தமது எண்ணங்களை மற்றவர்களுக்குத் தெரிவித்து வந்தார்கள். ஆதிகாலத்திலே சித்திர எழுத்துக்களைப் பல நாட்டினரும் எழுதிக்கொண்டிருந்தார்கள் என்பதற்கு ஆர்க்கியாலஜி, எபிகிராபி சான்றுகள் கிடைத்திருக்கின்றன. எகிப்து தேசத்திலும் சீன தேசத்திலும் அமெரிக்காகக் கண்டத்து மெக்ஸிகோ நாட்டிலும் நமது இந்தியா தேசத்திலும் ஆதிகாலத்தில் ஓவிய எழுத்துகள் வழங்கிவந்தன.

நமது இந்தியா தேசத்திலே சிந்து நதிக்கரையிலே மொஹஞ்சதாரோ ஹாரப்பா என்னும் பெயருள்ள இரண்டு நகரங்கள் சுமார் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சிறந்த நாகரிகம் உள்ள நகரங்களாக இருந்தன. இந்த நகரங்கள் சுமார் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மண்ணில் புதைந்து மறைந்துவிட்டன அண்மைக் காலத்திலே இந்திய அரசாங்கத்து ஆர்க்கியாலஜி இலாகா அதிகாரிகள் இந்த இடங்களைத் தோண்டிக் கிளறிப் பார்த்த போது அங்கே பலப்பல பொருள்களைக் கண்டெடுத்தார்கள். அப்படிக் கிடைத்த பொருள்களில், ஒருவகையான சித்திர எழுத்துக்கள் எழுதப்பட்ட முத்திரைகளும் ஏராளமாகக் கிடைத்தன. இதனால் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இந்தியாவில் சித்திர எழுத்துக்கள் வழங்கிவந்தன என்பது உறுதியாகத் தெரிகிறது.

மொஹஞ்சதாரோவில் காணப்பட்ட சித்திர எழுத்துக்களைப் படித்து அதன்பொருளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்த, பூனா பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் ஹீராஸ் பாதிரியார் அவர்கள், இந்தச் சித்திர எழுத்துக்கள் திராவிட (தமிழ்) மொழியுடன் தொடர்புமுடையன என்று கூறுகிறார். சில

சித்திர எழுத்துக்கள், குறள்வெண்பாவாக அமைந்திருக் கின்றன என்றும் கூறுகிறார். ஆனால், இவர் கருத்தைப் புராதன புதை பொருள் ஆராய்ச்சிக் காரர்கள் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை மிகப் பழைய காலத்தில் தமிழ்நாட்டிலும் சித்திர எழுத்துகள் வழங்கிவந்தன என்றும், அந்த எழுத்துக்களுக்குக் கண் எழுத்து என்றும் ஓவிய எழுத்து என்றும் உரு எழுத்து என்றும் வேறு பெயர்கள் உண்டு என்றும் தமிழ் நூல்களிலிருந்து தெரிகிறது.

**''காணப்பட்ட உருவம் எல்லாம்**
**மாணக் காட்டும் வகைமை நாடி**
**வழுவில் ஓவியன் கைவினைபோல**
**எழுதப் படுவது உருவெழுத் தாகும்.''**

என்று ஒரு பழைய இலக்கணச் சூத்திரம் கூறுகிறது.

சித்திர எழுத்துக்கள், எழுதுவதற்குச் சிரமமாக இருந்தது ஓவிய எழுத்து என்றும், கோடு கருத்துக்களைத் தெளிவாகவும் முழுமையாகவும் தெரிவிக்க முடியாதனவாக இருந்தன. ஆகவே காலச்சிரமத்தில் புதுப்புது எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுக் கடைசியாக இப்போது வழங்குகிற ஒலிஎழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒலிஎழுத்துகள் எழுதுவதற்குச் சிரமம் இல்லாமலும் கருத்துக்களை முழுதும் தெரிவிக்கக் கூடியவை களாகவும் இருக்கின்றன.

இந்தியா தேசத்தில் பழைய காலத்திலே சிறப்பாக வழங்கி வந்த ஒலி எழுத்துக்கள் இரண்டு. அவை, கரோஷ்டி, பிராமி என்பவை. கரோஷ்டி, இந்தியாவில் வடமேற்குப் பக்கத்தில் மட்டும் வழங்கி வந்தது. பிராமி எழுத்து வட இந்தியா முழுவதும் வழங்கி வந்தது பிராமி எழுத்தின் உற்பத்தியைப் பற்றிச் சில கதைகள் கூறப்படுகின்றன. பிரமா கண்டுபிடித்தது பிராமி எழுத்து என்பர் சிலர். ரிஷப தீர்த்தங்கரரின் மகளான பிராமி என்பவள் கண்டுபிடித்தது பிராமி எழுத்து என்பர் ஜைனர்கள். கௌதம புத்தர், சித்தார்த்த குமாரன் என்னும் பெயரையுடைய சிறுவராக இருந்தபோது பிராமி எழுத்தைக் கண்டு பிடித்தார் என்று ஹேமேந்திரர் என்பவர் தாம் இயற்றிய புத்த ஜனனம் என்னும் நூலிலே கூறுகிறார். இந்தக் கதைகளை உண்மையான சான்றுகளாகக் கொள்ளாவிட்டாலும், இவற்றிலிருந்து ஒரு உண்மை தெரிகிறது. அஃது என்னவென்றால், வட இந்தியாவில் பண்டைக்காலத்தில் பெரிதும் வழக்

காற்றில் இருந்துவந்த எழுத்து பிராமி எழுத்து என்பதே. பிராமி எழுத்து கி.மு. 5 - ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்து வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டிலே கி.மு. 3 - ம் நூற்றாண்டுக்கு முந்திய காலத்திலே வழங்கி வந்த தமிழ் எழுத்து இன்னது என்று இப்போது அறிய முடிய வில்லை. ஆனால், ஏதோ ஒருவகையான எழுத்து வழங்கி வந்தது என்பதை உறுதியாகக் கூறலாம். பாண்டிய நாட்டிலே தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் ஒன்றின்பின் ஒன்றாக ஏற்படுத்தப் பட்டு முத்தமிழ் நூல்கள் ஆராய்ப்பட்டன என்று வரலாறு கூறுகிறது. அந்தச் சங்கங்களிலே சிவபெருமான், முருகக் கடவுள், கிருஷ்ணன், குபேரன் முதலான கடவுள்கள் அங்கத்தினராக இருந்தார்கள் என்பதையும், அந்தச் சங்கங்கள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நடைபெற்றுவந்தன என்பதை யும் மிகைபடக்கூறல் என்று ஒதுக்கிவிடலாம். ஆனால், சங்கங்கள் இருந்தன என்பதையும் அவற்றில் முத்தமிழ் நூல்கள் ஆராயப்பட்டன என்பதையும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. அந்தச் சங்கங்களிலே தமிழ் நூல்கள் ஆராயப்பட்டன என்றால், அதற்கு ஏதோ ஒருவகையான எழுத்துக்கள் இருந்திருக்கவேண்டும் அல்லவா? அந்த எழுத்து இன்னது என்பது இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் கி.மு. 3 - ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 - ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டிலே வழங்கிவந்த எழுத்து பிராமி எழுத்துத்தான் என்பதற்குச் சிறிதும் ஐயம் இல்லை. ஏனென்றால், இதற்கு ஆர்க்கியாலஜி, எபிகிராபி சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

வட இந்தியாவில் வழங்கிவந்த பிராமி எழுத்து தமிழ்நாட்டிற்கு எப்படி வந்தது? பிராமி எழுத்தைத் தென் இந்தியாவிலே பரவச்செய்தவர்கள் பௌத்தபிக்ஷுக்கள் ஆவர். கி.மு. 3 - ஆம் நூற்றாண்டில் இந்தியாவை அரசாண்ட அசோக சக்கரவர்த்தி, பௌத்தமதத்தைப் பிரசாரம் செய்வதற் காகப் பல நாடுகளுக்கும் பௌத்தபிக்ஷுக்களை அனுப்பினார். அவ்வாறு அனுப்பப்பட்ட பிக்ஷுக்கள் இந்தியாவில் உள்ள பல நாடுகளுக்கும் சென்று பௌத்தமதப்பிரசாரம் செய்தார்கள். அவர்கள் தம் பௌத்தமதக் கொள்கைப்படி அந்தந்த நாட்டுத் தாய்மொழியிலே பௌத்தமதக் கொள்கைகளைப் பிரசாரம் செய்துவந்தார்கள் என்றாலும், அவர்கள் எல்லா நாடுகளிலும் ஒரேவிதமாகப் பிராமி எழுத்தே வழங்கி வந்தார்கள். இவ்வித

மாகப் பௌத்த பிக்ஷுக்களால் முதல்முதல் இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் பிராமி எழுத்து புகுத்தப்பட்டு வழக்காற்றில் வந்தது. அன்றியும் அசோகச் சக்கரவர்த்தி, தென் இந்தியா உட்பட இந்தியா முழுவதிலும் ஆங்காங்கே பல இடங்களில் அரச சாசனங்களைக் கல்வெட்டுகளில் எழுதி அமைத்திருக் கிறார். அந்தச் சாசனங்கள் இப்போதும் இருக்கின்றன. அந்தச் சாசனங்கள் பிராமி எழுத்தினால் எழுதப்பட்டிருக்கின்றன இதனால், அசோக சக்கரவர்த்தி காலத்திலே, அதாவது கி.மு. 3- ஆம் நூற்றாண்டிலே பிராமி எழுத்து தென் இந்தியாவிலும் வழங்கப்பட்டது என்பது நன்கு விளங்குகின்றது.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையில், சுமார் 600 ஆண்டுகளாகப் பிராமி எழுத்து தமிழ்நாட்டில் வழங்கிவந்தது இதற்கு ஏபிகிராபி சான்றுகள் தமிழ் நாட்டிலே, முக்கியமாகப் பாண்டிய நாட்டிலே மலைக்குகைகளிலும், மலைப்பாறைகளிலும் காணப்படுகின்றன. அழகர்மலை, கழுகுமலை, நாகமலை, சித்தர்மலை, திருப்பரங்குன்றம், கொங்கர் புளியங்குளம். முத்துப்பட்டி, அரிட்டாபட்டி, குன்னக்குடி, மருகான் சலை, ஆறுநாட்டார்மலை முதலிய இடங்களில் காணப்படும் தமிழ்ச் சாசனங்கள் பிராமி எழுத்தினாலே எழுதப்பட்டவை இவைகளைத் தவிர வேறு புதிய ஏபிகிராபி சான்று இப்போது கிடைத்திருக்கிறது. புதுச்சேரிக்குத் தெற்கே 2 மைல் தூரத்தில் கடற்கரையோரத்திலே அரிக்கமேடு என்னும் ஒரு மேடு இருந்தது. 5 ஆண்டுகளுக்கு முன் இந்திய ஆர்க்கியாலஜி இலாகா அதிகாரிகள் இந்த மேட்டைக் கிளறித் தோண்டிப் பார்த்தார்கள். இங்கிருந்து பல பொருள்கள் அகற்றப்பட்டன. அப்பொருள்களுடன், பிராமி எழுத்தில் எழுதப்பட்ட இவை தமிழ்மொழியாக இருக்கின்றன. அரிக்கமேடு, இன்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்னே அதாவது கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் சிறந்த துறைமுகப்பட்டினமாக இருந்தது என்று ஆர்க்கியாலஜி இலாகா ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இந்தச் சான்றுகளிலே, கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டிலே தமிழர் பிராமி எழுத்தை வழங்கிவந்தார்கள் என்பது ஐயம் இல்லாமல் தெரிகிறது., தமிழர் பழைமையாக எழுதியிருந்த பழைய எழுத்தைக் கைவிட்டு புதிதாகப் பிராமி எழுத்தை எழுதத்தொடங்கிய போது, தமிழ் மொழிக்கே சிறப்பாக உள்ள ள,ழ,ற,ன என்னும் எழுத்துக்கள் பிராமி எழுத்தில் இல்லாதபடியினால், இவ்வெழுத்துக்களைப் பழைமையாக வழங்கிவந்த எழுத்துக்களில் இருந்தபடியே வழங்கிவந்தார்கள் போலும்.

சுமார் கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலே தமிழ் நாட்டிலே பிராமி எழுத்து மறைந்து வட்டெழுத்து என்னும் புதுவகையான எழுத்து வழங்கத் தொடங்கிற்று. வட்டெழுத்தும், பிராமி எழுத்திலிருந்து உண்டானதுதான். அந்தக்காலத்தில் பனையோலையும் எழுத்தாணியும் எழுதுகருவிகளாக இருந்தன. பிராமி எழுத்தைப் பனையோலையில் எழுத்தாணியால் எழுதும் போது, அவ்வெழுத்தின் உருவம் மாறுதல் அடைந்து கடைசியில் வட்டெழுத்தாக மாறிவிட்டது. பண்டைக்காலத்தில் சேரநாடு என்னும் பெயருடன் தமிழ்நாடாக இருந்து இப்போது மலையாள நாடாக மாறிப்போன கேரள நாட்டிலே முற்காலத்தில் வழங்கி வந்த கோலெழுத்து என்பதும் வட்டெழுத்தின் திரிபேயாகும் வட்டெழுத்து தமிழ் நாட்டில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரையில் வழங்கிவந்தது. பிறகு வட்டெழுத்து மறைந்து இப்போது வழக்காற்றில் இருந்து வருகிற கிரந்த எழுத்து வழங்கி வருகிறது.

கிரந்த எழுத்தை உண்டாக்கினவர்கள் தென்னாட்டில் இருந்த பௌத்தரும் ஜைனரும் ஆவர். பௌத்தரும் ஜைனரும் தங்கள் மதநூல்களை மாகதி, அர்த்தமாகதி என்னும் பிராகிருத மொழிகளில் எழுதியிருந்தார்கள். அவர்கள் தமிழிலே தனித் தமிழ் நூல்களை எழுதியதோடு, தமது மதச் சார்பான நூல்களை பிராகிருதம்; சமஸ்கிருதம், தமிழ் என்னும் மொழியில் உள்ள சொற்களைக் கலந்து மணிப்பிரவாள நடையில் வசன நூல்களை எழுதினார்கள் மணிப்பிரவாள நூல்களை எழுதுவதற்கு, தமிழில் க்ஷ,ஜ, ஷ,ஹ,ஸ முதலான எழுத்துக்கள் இல்லாதபடியினாலே, இவ்வெழுத்துக்களை எல்லாம் அமைத்துக் கிரந்த எழுத்து என்னும் ஒருவகை எழுத்தைக் கண்டுபிடித்து, அந்த எழுத்தினாலே மணிப்பிரவாள நூல்களையும் பிராகிருத சமஸ்கிருத நூல்களையும் எழுதினார்கள். இந்தக் கிரந்த எழுத்தையும் அவர்கள் பிராமி எழுத்தில் இருந்துதான் உண்டாக்கினார்கள்.

இவ்வாறு பௌத்த ஜைனர்களாலே உண்டாக்கப்பட்ட கிரந்த எழுத்து முதலில் அந்த மதத்தினரால் பயிலப்பட்டு வந்தது. பின்னர், பிற்காலத்துச் சோழ அரசர்கள் இந்தக் கிரந்த எழுத்தை ஆதரிக்கத் தொடங்கினார்கள். ஆகவே, கி.பி. 10- ஆம் நூற்றாண்டில் சோழநாட்டை அரசாண்ட ராஜராஜன் (முதலாவன்) பாண்டியநாட்டை வென்று அந்த நாட்டிலும் சிறந்த எழுத்தை வழங்கத்தொடங்கினான் என்பதற்கு எபிகிராபி சான்று இருக்கிறது. ராஜ

ராஜசோழன் காலத்திலே, பாண்டி நாட்டில் வழங்கிவந்த வட்டெழுத்து மறைந்து கிரந்த எழுத்து வழங்கத் தொடங்கியது. இந்தக் கிரந்த எழுத்துக் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் இப்போதும் தமிழ்நாட்டில் வழங்கி வருகின்றனது.

கி.மு. 3- ஆம் நூற்றாண்டில் இருந்து பிராமி எழுத்து தமிழ் நாட்டிலே வழங்கத் தொடங்கி, அதுவே காலக்கிரமத்தில் வட்டெழுத்தாகவும், கோலெழுத்தாகவும், கிரந்த எழுத்தாகவும் வெவ்வேறு உருவம் அடைந்து இன்றளவும் வழங்கிவருகிறது.

தமிழ் எழுத்து மட்டுந்தான் பிராமி எழுத்திலிருந்து உண்டாயிற்று என்று நினைக்கவேண்டாம். தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, மராட்டி, வங்காளி, தேவநாகிரி முதலிய எழுத்துக்க்ள் எல்லாம் பிராமி எழுத்திலிருந்தே உண்டானவை. ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள எல்லா மொழி எழுத்துக்களும் லத்தீன் எழுத்து எவ்வாறு தாய் எழுத்தாக இருந்ததோ அதுபோன்று, இந்தியமொழியில் உள்ள எழுத்துக்களுக்கெல்லாம் தாய் எழுத்தாக இருந்தது பிராமி எழுத்தேயாகும்.

**செந்தமிழ்ச்செல்வி சிலம்பு 25**

# 7. உதிரப்பட்டி அல்லது இரத்தக் காணி

**"பரும யானையொடு பாஞ்சால ராயனை**
**வெங்களத் தட்ட வென்றி யிவையென**
**நெய்த்தோர் பட்டிகை யாக வைத்துப்**
**பத்தூர் கொள்கெனப் பட்டிகை கொடுத்து"**

என்பது பெருங்கதை. (வத்தவ காண்டம்: கொற்றங் கொண்டது 10-13) நெய்த்தோர்ப் பட்டிகை என்பதற்குக் குறிப்புரை எழுதிய டாக்டர் சாமிநாத ஐயர் அவர்கள், "நெய்த்தோர் = இரத்தம். பட்டிகை = பத்திரிகை" என்று எழுதி யிருக்கிறார்கள். ஆனால், இத்தொடருக்கு விளக்கம் காண முடியவில்லை. இஃது ஐயரவர்களுடைய குறையன்று. இக்காலத்துப் புலவர்கள் வேறு யார் உரை எழுதினாலும் இவ்வளவுதான் எழுதமுடியும். பண்டைக் காலத்து உரை

யாசிரியர்கள் இத்தொடருக்கு உரை எழுதியிருந்தால் உரையாசிரியர்கள் இத்தொடருககுத் தெளிவான விளக்க வுரை எழுதியிருப்பார்கள். பண்டை வுரையாசிரியர் ஒருவரும் இதற்கு உரை எழுதவில்லை.

''நெய்த்தோர்ப் பட்டிகை'' என்பது, பண்டைக் காலத்தில் வழக்காற்றில் இருந்து இக்காலத்தில் வழக்கற்றுப் போன ஒரு செய்தியெனத் தெரிகிறது. பண்டைக்காலத்துச் சாசனங்களின் உதவியினாலே, இச்சொற்றொடரின் உண்மைப் பொருள் அறியக்கிடக்கிறது.

உதயணன், பாஞ்சால மன்னனை வென்று, அவ்வெற்றியின் மகிழ்ச்சி யினாலே, பத்து ஊர்களை நெய்த்தோர்ப் பட்டிகையாகக் கொடுத்தான் என்பது மேலே காட்டிய செய்யுளின் கருத்து. நெய்த்தோர் என்பது இரத்தம் அல்லது உதிரம் எனப் பொருள்படும். பட்டிகை என்பதற்குப் பத்திரிகை என்று பொருள் கொள்வதைவிட பட்டி எனப் பொருள் கொள்வது சிறப்புடைத்து. நெய்த்தோர்ப்பட்டி என்று பெருங்கதையில் வழங்கப் பட்டுள்ள இச்சொற்றொடர் சாசனங்களில் உதிரப்பட்டி என்று வழங்கப்பட்டி ருக்கிறது. வேறு சாசனங்களில், இரத்தக் காணி என்றும் கூறப்பட்டுள்ளது. இதனால், நெய்த்தோர்ப்பட்டி, உதிரப்பட்டி, இரத்தக் காணி என்னும் பெயர் கள் பொருளைக் குறிக்கின்றன என்பது விளங்குகிறது.

தன் அரசனுடைய வெற்றிக்காகப் போர்க்களம் புகுந்து பகைவருடன் ஆற்றலோடு போர் புரிந்து உதிரத்தைச் சிந்திக் கொற்றத்தை நாட்டிய போர் வீரர்களுக்கு, வெற்றிபெற்ற அரசன் நிலங்களை இனாமாக அளிப்பது வழக்கம். இவ்வாறு தானம் செய்யப்பட்ட நிலத்திற்கு இரத்தக் காணி, உதிரப்பட்டி, நெய்த்தோர்ப்பட்டி என்று பெயர் வழங்கப்பட்டன. சில சமயங்களில், போர் வீரன் உயிர் நீத்தலும் உண்டு. அப்போது அவனது ஆற்றலைப் பாராட்டி, இறந்துப்பட்ட வீரனுடைய உறவினருக்கு உதிரப்பட்டி வழங்கப்படும். தமிழ் நாட்டு மூவேந்தரும், குறுநில மன்னரும் மறைந்து போன இக்காலத்திலே, பண்டைய பழக்க வழக்கங்களும் மறைந்து போயின. ஆயினும், பழைய நூல்களிலே அப்பழைய பழக்க வழக்கங்களைக் குறிக்கும் சொற்கள் நின்று நிலவுகின்றன. இக் காலத்து அச்சொற்களுக்குப் பொருள் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது. சாசனங்கள், சில சமயங்களில், இவ்விதச் சொற்களுக்குப் பொருள் காண உதவிசெய்கின்றன. உதிரப் பட்டியைக் குறிக்கும் சில சாசனங்களைக் கீழே தருகிறேன்

இராமநாதபுரம் சில்லா, திருப்புத்தூர் தாலுகா, சிவபுரியில் உள்ள சுயம்பிரகாசர் கோயில் சாசனம், திரிபுவன சக்கரவர்த்தி விக்கரம சோழ தேவருடைய 7-வது ஆண்டில் எழுதப்பட்டது. இதில், கந்தன் கங்கை கொண்டான் என்னும் பெயருடைய துவராபதி வேளான் என்பவன், தனது வாளினால் (வாள் வீரர்?) போர்க்களத்தில் இறந்ததற்காக அவ்வீரர்களின் சுற்றத்தார்க்கு உதிரப்பட்டியாக நிலம் கொடுக்க வாக்குறுதி செய்ததைக் கூறுகிறது. 47 of 1928.

இராமநாதபுரம் சில்லா, சாத்தூர் தாலுகா, திருத்தங்கல் கிராமத்தில் உள்ள பாறைக்குன்றில் எழுதப்பட்ட சாசனம் 577 of 1922. இதில், வரதுங்கராம தனிப்புலி, கலங்காத கண்டநாயனரின் வழிவந்த, வள்ளி பொம்மன் கலங் காத கண்ட நாயகர் என்பவருக்குத் திருத்தங்கல் கிராமத்தில் இரத்தக் காணி தானம் செய்யப்பட்ட செய்தி கூறப்படுகிறது. (இந்தச் சாசனத்தின் பக்கத்தில், ஒரு வீரன் தரையில் நின்றவண்ணம் அருகில் இருக்கும் குதிரையின் தலையை வாளால் வெட்டுவது போன்றும், அக்குதிரையின் மீது ஒருவீரன் அமர்ந்து வாளேந்தியிருப்பதுபோன்றும், இக்குதிரை வீரனுக்கும் பக்கத்தில் மற்றொரு வீரன் குதிரைமீதமர்ந்து இருப்பது போன்றும் சிற்பம் கற்பாறையில் செதுக்கப்பட்டிருக்கிறது.)

தென்ஆர்க்காடு சில்லா, திருக்கோவிலூர் தாலூகா, காடையார் கிராமத்துச் சாசனம் கி.பி. 18- ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இதில், நாடியா கவுண்டர் மகன் கலிதீர்த்தான் என்பவன் போர்க்களத்தில் உயிர் நீத்தமைக்காக, ஏரம நாயகர் என்பவர் நிலம் தானம்செய்த செய்தி கூறப்படு கிறது. 237 of 1936.

போர்களத்தில் பிறருக்காக உயிர் கொடுத்தவருக்கு மட்டும் உதிரப்பட்டி தானம் அளிக்கப்பட்ட போதிலும், போரில் இறக்காமல் தனிப்பட்ட முறையில் பிறருக்காவோ அல்லது பிறர் தொந்தரவு பொறுக்க முடியாமலோ உயிர் விட்டவர்க்கும் உதிரப்பட்டி வழங்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு உதாரணம்:-

தென் ஆர்க்காடு சில்லா, சிதம்பரம் தாலூகா, அரகண்ட நல்லூர் ஒப்பி லாமணி ஈசுரர் கோயில் சாசனம். இது, பொன்னாண்டை என்னும் பெயருள்ள

தேவராட்டியார் மகன் இளவெண்மதி சூடி ஆடினான் என்பவன், கோயில் மண்டபம் கட்டி முற்றுப் பெறும் பொருட்டுத் தன் தலையை அறுத்துக் கொண்டதற்காக 100 குழி நிலம் உதிரப்பட்டியாகக் கொடுக்கபட்டதைக் கூறுகிறது. *197 of 1934-1935.*

புதுக்கோட்டை,திருமய்யம் தாலூகா காரமங்கலம் அகத்தீசுவரர் கோயில் சாசனம், பாண்டியன் ஸ்ரீ குலசேகர தேவரின் 32-வது ஆண்டில் எழுதப் பட்டது. ஷை கோயில் மண்டபத்தைப் பழுது தீர்த்துக்கொண்டிருந்த கல் தச்சன், அறங்குளவன் என்பவன் பெரிய அடிபட்டுக் காயம் பட்ட படியால், மிழலைக் கூற்றத்து பாம்பாற்று நாட்டுத் தலைவனான தன்ம ஆட் கொண்ட தேவர் என்னும் தன்மராயர் அவனுக்கு உதிரப்பட்டியாக நிலம் தானம் செய்தார் என்று இச் சாசனம் கூறுகிறது.

ஜடாவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ வல்லப தேவருடைய 13-வது ஆண்டுச் சாசனம் *172 of 1935-36.* சுந்தர பாண்டிய பட்டன் மனைவி பிறர் கொடுமை தாங்காது நஞ்சுண்டு இறந்தமைக்காக ஷை பட்டனுக்கு உதிரப் பட்டியாக நிலம் தானம் செய்யப்பட்ட செய்தியைக் கூறுகிறது.

தஞ்சை சில்லா நன்னிலம் தாலூகா அச்சுதமங்கலம் சோமநாதேசுரர் கோயில் சாசனம், ராசராச தேவருடைய 20-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது *406 of 1925.* இதில், சோமநாத மங்கலம், சோமநாத சதுர்வேதி மங்கலம் என்னும் கிராமங்களுக்கும் சீதக்க மங்கலம் என்னும் கிராமத்துக்கும், முடி கொண்ட சோழப் பேராறு என்னும் ஆற்றின் நீரை நிலங்களுக்குப் பாய்ச்சு வதில் சச்சரவு ஏற்பட்டு அதன் காரணமாக ராசராசப் பேரரையன் என் பவனைத் தவறாகக் கொன்றுவிட்ட குற்றத்திற்காக அவன் மகன் எதிரிலாப் பேரரையனுக்கு உதிரப்பட்டியாக நிலம் தானம் செய்யப்பட்ட செய்தி கூறப்படுகிறது.

இதுகாறும் எடுத்துக் காட்டிய சாசனச் சான்றுகளிலிருந்து இரத்தக் காணி, உதிரப்பட்டி, நெய்த்தோர்ப்பட்டி என்பன இன்னதென்பது அறியக் கிடக்கிறது.

**செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு 22.**

# 8. மணிபல்லவம் - ஜம்புகொல பட்டினம்

சங்ககாலத்து நூலாகிய மணிமேகலையிலே, இலங்கைத் தீவின் வட கோடியில் இருந்த மணிபல்லவம் என்னும் துறைமுகப்பட்டினம் கூறப் படுகிறது. பாலிமொழியில் எழுதப்பட்டுள்ள பழைய பௌத்த நூல்களி லேயும் இலங்கைத்தீவின் வடகோடியில் இருந்த ஜம்புகொல என்னும் துறை முகப் பட்டினம் கூறப்படுகிறது. தமிழ்நூலில் கூறப்படும் குறிப்புகளைக் கொண்டும் பாலிமொழி நூல்களில் கூறப்படுகிற குறிப்புகளைக் கொண்டும் மணிபல்ல வமும் ஜம்புகொல பட்டினமும் ஒரே இடம் என்று துணியலாம் பெயர் வேறுபடுவதிலிருந்து இரண்டும் வெவ்வேறிடங்கள் எனக் கருதும்படி இருந்தாலும், இவைகளைப்பற்றிக் கூறப்படும் செய்திகளை உற்றுநோக்கி னால், இரண்டும் ஒன்றே என்பது ஐயமற விளங்குகிறது. இதனை ஈண்டு ஆராய்வாம்.

இலங்கைத்தீவின் வடபகுதி பல சிறு தீவுகளைக் கொண்டது. இத்தீவுகள் ஒன்றிலேதான் மணிபல்லவம், அல்லது ஜம்பு கொல பட்டினம் இருந்தது. ''தென்றிசை மருங்கிலோர் தீவு'' (9-வது காதை), ''மணிபல்லவம் என்னும் தீவகம்'' (21-ஆம் காதை) என்று மணிமேகலை கூறுவது காண்க. சோழநாட்டின் துறைமுகப்பட்டினமாகிய புகார்ப்பட்டினத்தில் இருந்து தெற்கே 30-யோசனை தொலைவில் மணிபல்லவம் இருந்தது. (மணி. 6-ஆம் காதை) மணிபல்லவம் கடற்கரைப்பட்டினம் என்பது, மணிமேகலை 8 ஆம் காதையினால் அறியப்படுகிறது.

இது நாகநாட்டைச் சேர்ந்தது என்று மனிமேகலை 8-ம் காதை கூறு கிறது. நாகநாடு என்பது இலங்கைத்தீவின் வட பகுதிக்குப் பண்டைக்காலத் தில் வழங்கப்பட்ட பெயர். மகா வம்சம் என்னும் நூலிலே, இந்தப் பகுதி நாக தீபம் என்று கூறப்படுகிறது. நாகதீபம் என்பது தீவு அன்று. மணிமேகலை நாக நாடு என்று கூறுகிற, இலங்கையின் வட பகுதியைத்தான் மகாவம்சம் என்னும் நூலும் நாகதீபம் என்று கூறுகிறது. (மகாவம்சம் முதல் அத்தியாயம் 47.) நாகநாடு என்றும் நாகத்தீவு என்றும் ஏன் பெயர்பெற்றது என்றால், இங்கு நாகர் என்னும் இனத்தவர் அக்காலத்தில் வாழ்ந்துவந்தனர். தமிழ்நாட்டிலும் நாகர் என்னும் இனத்தவர் இருந்தனர் என்பதைச் சங்கநூல்களினால் அறிகிறோம். 'நாகநாட்டு நாகஅரசன் வலைவாணன் என்பவன் மகள்

பீலிவளை என்பவளைச் சோழநாட்டு மன்னன் வடிவேற்கிள்ளி காதல் மணம் புரிந்தான்' என்று மணிமேகலை நூல் கூறுகிறது.

சாவகநாடு (ஜாவா தீவு), காழகநாடு (பர்மா நாடு) முதலிய கீழ் நாடுகளுக்குத் தமிழ் நாட்டிலிருந்து வாணிகத்தின் பொருட்டு மரக்கலம் ஓட்டிச்சென்ற தமிழ் வணிகர், இடை வழியிலே மணிபல்லவத் துறைமுகத்தில் தங்கிச் செல்வது வழக்கம். இதனை, மணிமேகலை 14-ஆம் காதையினால் அறியலாம். கம்பலச் செட்டி என்பவன் கடலில் சென்று வாணிகம் செய்து திரும்பி வருகிற வழியில் மணிபல்லவத்தில் தங்கினான் என்றும், சாவக நாட்டரசன், புத்தரது பாத பீடிகையை வணங்க மரக்கலம் ஏறி மணிபல்லவம் வந்தான் என்றும் மணிமேகலை கூறுகிறது. ஆபுத்திரனும் மணிமேகலையும் அங்குச் சென்றனர்.

இலங்கை அரசன் தேவனாம்பிய திஸ்ஸன், அரிட்டன் என்னும் பௌத்த தேரரை அசோகசக்கரவர்த்தியிடம் அனுப்பி, போதிமரத்தை இலங்கைக்குக் கொண்டுவரச் செய்தபோது, அவர் மரக்கலம் ஏறிச்சென்றது இந்த ஜம்புகொல பட்டினத்திலேதான். மீண்டும் போதிமரத்துடன் திரும்பிவந்து இறங்கியதும் இந்த ஜம்புகொல பட்டினத்திலேதான். (மகாவம்சம் 19-ம் அதிகாரம் சமநமபாசாதிகா என்னும் பாலிநூலும் இதனைக் கூறுகிறது. அநுராதபுரத்தில் நடப்பட்ட போதிமரத்தினின்றும் உண்டான ஒருபோதி மரக்கன்றை பிற்காலத்தில் ஜம்பு கொல துறைமுகத்தில் நட்டு வளர்த்ததாகவும், தேவனாம்பிய திஸ்ஸன் அங்கு பௌத்த பிக்ஷு களுக்காக ஒரு விகாரையைக் கட்டினான் என்றும், அவ்விகாரை ஜம்புகொல விகாரை என்று வழங்கப்பட்டதென்றும் மகாவம்சம் என்னும் நூலினால் அறிகிறோம். (19-ஆம் அதிகாரம்) அன்றியும் இங்கு ஒரு சேதியும் (புத்தபாத பீடிகை) அமைக்கப்பட்டிருந்தாகவும் சமந்த பாசாதிக என்னும் பாலி நூலினால் தெரிகிறது. ஜம்புகொல பட்டினத்தில் விகாரை ஏற்பட்டிருந்ததும், புனிதமான போதி மரம் நட்டு வளர்க்கப்பட்டிருந்ததும், அதன் அருகில் பௌத்த சேதியம் இருந்ததும் ஆகிய இவை எல்லாம், அவ்விடம் பௌத்தர் களுக்குப் புண்ணிய இடமாக இருந்ததென்பதைத் தெரிவிக்கின்றன. இங்கிருந்த பாத பீடிகையை (சேதியம்) வணங்குவதற்காக வெளிநாடுகளில் இருந்தும் யாத்திரிகர் வந்தனர் என்றும், வெகுதூரத்திலிருந்து யோனரட்டலி விருந்தும். (யவன தேசம்) யாத்திரிகர் வந்தனர் என்றும் சமந்த பாசாதீக என்னும் நூல் கூறுகிறது. மணிமேகலையும், இங்கிருந்த பாத பீடிகையைக்

(சேதியத்தை) கூறுகிறது. ஆனால், இங்கிருந்த பௌத்த விகாரையைக் கூறவில்லை. 'மாதவி மகள் மணிமேகலையும், சாவக நாட்டரசனும் நாகநாட்டரசன் மகள் பீலிவளை என்பவளும் இந்தச் சேதியத்தை வணங்கினார்கள்' என்று மணிமேகலை கூறுகிறது. (ஜம்பு கொல பட்டினத்தை, யாழ்ப்பாணத்தில் உள்ள சம்பிலித்துறை என்று கூறுகிறார் இலங்கை சரித்திரச் சுருக்கம் என்னும் நூலை இயற்றிய காட்ரிங்டன் என்பவர்). 'பிராமண திஸ்ஸன் காலத்தில் இலங்கையில் உண்டான கொடிய பஞ்ச காலத்தில், இலங்கையில் இருந்த பௌத்த பிக்குகள் அந்நாட்டைவிட்டு இந்தியாவுக்கு வந்தபோது, இந்த ஜம்புகொல பட்டினத்திற்கு வந்து கப்பல் ஏறிச் சென்றார்கள்' என்று சம்மோஹவினோதனீ என்னும் பாலி நூல் கூறுகிறது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், தேவனாம்பி திஸ்ஸன் என்னும் அரசனால் கட்டப்பட்ட பௌத்த விகாரையில் வசித்திருந்த பிக்குகளைத் தவிர, வேறு மக்கள் இங்கு வசித்திருந்ததாகப் பௌத்த நூல்கள் கூறவில்லை. மணி பல்லவம் மக்கள் வசிக்காத ஓர் ஒதுக்கிடம் என்று கூறுகிறது (14-ஆம் காதை).

இலங்கையின் வடபகுதியாகிய நாகநாட்டிலே (நாகதீபம்) பேர்பெற்ற பௌத்த சேதியம் ஒன்று இருந்ததென்றும், அதனை இலங்கையிலிருந்த பௌத்தர்கள் பெரிதும் போற்றி வணங்கினார்கள் என்றும் பௌத்த நூல்கள் கூறுகின்றன. அந்த சேதியம் ஜம்புகொல பட்டினத்தில் (மணிபல்லவத்தில்) இருந்த சேதியந்தானா என்பது விளங்கவில்லை.

இந்தப் புத்த பீடிகையைப்பற்றி (சேதியத்தைப்பற்றி) ஒரு கதை வழங்குகிறது. மாமனும் மருகனும் ஆகிய இரண்டு நாக அரசர்கள் ஒரு மணி ஆசனத்தைப் பற்றித் தம்முள் போர் செய்ய, அதனை அறிந்த புத்தர் அவர்கள் முன்னிலையில் தோன்றி, "இஃது என்னுடைய ஆசனம். நீங்கள் இதன் பொருட்டுப்போர் செய்யவேண்டா" என்று கூறி அவர்களது போரை நிறுத்திப் பின்னர் அவ்வாசனத்தில் அமர்ந்து அவர்களுக்கு அறிவுரை நிகழ்த்தினார் என்பது அக்கதை. இதனை மணிமேகலை இவ்வாறு கூறுகிறது.

**"கீழ்நிலை மருங்கில் நாகநா டாளும்**<br>
**இருவர் மன்னவர் ஒருவழித்தோன்றி**<br>
**எமதீ தென்றே எடுக்க லாற்றார்**<br>
**தம்பெரும் பற்று நீங்கலும் நீங்கார்**<br>
**செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்**<br>
**தம்பெருஞ் சேனையாடு வெஞ்சமம் புரிநாள்**

***இருஞ்செரு வொழிமின் எமதீ தென்றே***
***பெருந்தவ முனிவன் இருந்தறம் உரைக்கும்***
***பொருவறு சிறப்பில் புரையோ ரேத்தும்***
***தரும பீடிக தோன்றிய தாங்கென்''***

மேலும்,

***'வேக வெந்திறல் நாகநாட் டரசர்***
***சினமா சொழித்து மனமாசு தீர்த்தாங்(கு)***
***அறச்செவி திறந்து மறச்செவி யடைத்துப்***
***பிறவிப்பிணி மருத்துவன் இருந்தறம் உரைக்கும்***
***திருந்தொடி ஆசனம் சென்றுகை தொழுதி''***

என்றும் கூறுகிறது. இதே வரலாற்றினை மகாவம்சம் என்னும் பௌத்த நூலும் கூறுகிறது. அது வருமாறு:

மகோதரன் என்னும் நாகராசனுக்கு ஒரு தங்கை இருந்தாள். அவள், கண்ணாவத்தனமலைக்கு அரசனான ஒரு நாகராசனுக்கு மணம்செய்து கொடுக்கப்பட்டாள். அவளுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் சூலோதரன். சூலோதரனுடைய தாய்வழிப்பாட்டன் இறந்த பிறகு, அவனிடம் இருந்த ஒரு மணி ஆசனத்தின் பொருட்டு மருகனும் மாமனும் ஆகிய இவ்விருவரும் கடும்போர் செய்தார்கள். இதனை அறிந்த புத்த பகவான் ஆகாய வழியே வந்து வழியே அவர்களுடைய போரைநிறுத்தி ஆசனத்தில் அமர்ந்து உபதேசம் செய்தார். பிறகு, அந்த ஆசனத்தை நாக அரசர்களுக்குக்கொடுத்து, 'நான் இதில் அமர்ந்திருந்தபடியால் இந்த ஆசனம் உங்களுக்கு நன்மையையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும். இதை எனது ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்ளுங்கள்' என்று கூறிச் சென்றார். இக்கதை மகாவம்சம் முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்தக்கதையில் கூறப்பட்ட மணி ஆசனந்தான், மணிபல்லவத்தில் இருந்த புத்தபீடிகை (சேதியம்) என்று மணிமேகலை நூலினால் அறிகிறோம். இனி, மணி பல்லவம் என்னும் பெயர் வந்ததன் காரணத்தை ஆராய்வாம்.

மணிபல்லவம் என்பது மணிபல்லங்கம் என்பதன் திரிபு எனத் தோன்றுகிறது. பல்லங்க என்னும் பாலி மொழியின் பொருள், பலகை அல்லது ஆசனம் என்பது மணிபல்லங்க என்றால் மணியாசனம் எனப் பொருள்படும். மணிபல்லங்க என்னும் சொல் தமிழில் மணிபல்லவம் என்று

திரிந்து வழங்கியதுபோலும். இலங்கையிலேயுள்ள பௌத்தர்கள் பாராயணம் செய்யும் செய்யுள்களில் ரத்னத்திரய வந்தனா காதா என்பதும் ஒன்று. இத் தோத்திரச் செய்யுள்களில் ஒன்று இது:

**''பஹினிஸுத மாதுலேஹி தின்ன**
**மணிபல்லங்க வரே யஹிங் நிஸின்னோ**
**முனி தம்மமதேஸயீ முனீனங்**
**ஸிரஸா தங் பணமாமி நாகதீபங்''**

இந்தப் பாலிமொழிச் செய்யுளின் பொருள் வருமாறு:-

பாஹினி ஸுத = தங்கையின் மகனும், மாதுலேஹி = மாமனும், தின்ன = கொடுத்த, வரே = உத்தமமான, மணிபல்லங்க = மணி ஆசனமானது யஹிங் = எந்த இடத்தில் உள்ளதோ அங்கு, நிஸின்னோ = அமர்ந்து, முனி = புத்தபகவான், முனீனம் = பிக்ஷுக்களுக்கு, தம்மம் = தர்மத்தை. அதேஸயீ = போதித்த, தம்நாகதீபம் = அந்த நாகத் தீவை, ஸிரஹா = தலை வணங்கி, பணமாமி = வணங்குகிறேன்.

இச் செய்யுள், நாகத் தீவிலே (நாக நாட்டிலே) நாக அரசர்களால் புத்த பகவானுக்கு அளிக்கப்பட்ட மணிபல்லங்கத்திற்கு (மணி ஆசனத்திற்கு) வணக்கம் கூறுகிறது. இந்த மணியாசனம் மணிபல்லவத் துறைமுகப் பட்டினத்தில் இருந்ததாக மணிமேகலை நூல் கூறுவதை மேலே காட்டினோம். மணி பல்லங்கம்,அல்லது தமிழ் வழக்குப்படி மணிபல்லவம் அமைந்திருந்த இடத்திற்கு அந்த ஆசனத்தின் பெயரையே அமைத்துத் தமிழர் வழங்கினார்கள் போலும். சென்னைக்குத் தெற்கேயுள்ள சிங்கப்பெருமாள் கோயில் என்னும் ஊர், அங்குள்ள சிங்கப் பெருமாள் கோயிலின் பெயரையே கொண்டிருப்பதுபோல, மணிபல்லங்க சேதியம் உள்ள இடமும் மணிபல்லங்கம் எனப் பெயர் வழங்கப்பட்டு பிற்காலத்தில் மணிபல்லவம் எனத் திரிந்து வழங்கியதுபோலும். பண்டைக்காலத்திலே தமிழ் நாட்டிலும் பௌத்தர்கள் இருந்தார்கள் என்பதும், அவர்கள் பாலி மொழியைத் தமது சமயமொழியாகக் கொண்டிருந்தார்கள் என்பதும், பௌத்த வேதமாகிய திரிபிடக நூல்களில் சிலவற்றிற்குத் தமிழ் நாட்டிலேயிருந்த தமிழ்ப் பௌத்தர்கள் உரை எழுதியிருக்கிறார்கள் என்பதும் ஈண்டு நினைவுகூறற்பாலன.

இக்கட்டுரையினால், மணிபல்லவம் என்பதும் ஜம்புகொல பட்டினம் என்பதும் ஒரே இடத்தைக் குறிப்பன என்பதும், மணிபல்லங்கம் என்னும் பெயர் தமிழில் மணிபல்லவம் எனத் திரிந்து வழங்கப்பட்டதென்பதும் விளக்கப்பட்டன. வாசகர், இக்கருத்து பொருத்தமுடைத்தென்று கருதினால் கொள்க; இன்றேல் தள்ளுக.

***செந்தமிழ்ச்செல்வி : சிலம்பு - 23***

# 9. திருவக்கரை

தென்னாற்காடு மாவட்டத்தில் விழுப்புரம் தாலூகாவில் திருவக்கரை என்னும் திருப்பதி இருக்கிறது. இங்குள்ள சிவன் கோவிலில் சந்திர சேகரே சுவரரும், வடிவாம்பிகை அம்மையும் எழுந்தருளியிருக்கின்றார்கள். திரு ஞானசம்பந்த மூர்த்திநாயனார், இக் கோயிற் சிவபெருமானைப் பாடி யுள்ளார்

***'சந்திரசேகரனே! அருளாய்' என்று தண் விசும்பில்***
***இந்திரனும்முதலா இமையோர்கள் தொழு திறைஞ்ச***
***அந்தர மூவெயிலும் அனலாய்விழ ஓரம்பினால்***
***மந்தர மேரு வில்லா வளைத்தானிடம் வக்கரையே'***

என்பது அத்திருப்பதிகத்தில் மூன்றாஞ் செய்யுள்.

திருவக்கரைத் திருக்கோயிலிலே பல கல்வெட்டுடெழுத்துக்கள் இருக் கின்றன. இக்கல்வெட்டெழுத்துகளிலிருந்து இந்தக் கோயிலைப் பற்றிய பழைய செய்திகளை அறிகிறோம். இந்தக் கல்வெட்டெழுத்துக்களில் காலத் தினால் பழமையானது, முதலாம் இராஜராஜசோழன் காலத்தது. இவனுடைய 16-வது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1000 1001). இந்தக் கோவில் கற்றளியாகக் கட்டப்பட்டது. கற்றளியாகக் கட்டப்படுவதற்கு முன்பு இக்கோவில் செங்கற் கட்டடமாக இருந்திருக்க வேண்டும். இந்தக் கோயிலைக் கற்றளியாகக் கட்டியவர், செம்பியன்மாதேவியார் என்னும் சோழ அரசியார்.

''ஸ்ரீகோராஜராஜ ராஜகேசரி பன்மற்குயாண்டு 16-வது ஸ்ரீ கண்ட ராதித்த தேவர் தம்பிராட்டியார் ஸ்ரீஉத்தம சோழரைத் திருவயிறு வாய்ந்த உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவியார் எடுப்பித்தருளின ஸ்ரீவக்

கரைத்திருக்கற்றளிச் சிவலோகம் உடைய பரமசுவாமிகள்'' என்று இந்தச்சாசனம் கூறுகிறது.

இதனைத் தொடர்ந்து வருகிற நீண்ட சாசனம் முற்றுப் பெறவில்லை. நிலமும் பொன்னும் தானஞ் செய்து அவற்றின் வருவாயிலிருந்து திருவமுது நெய்யமுது, பொரிக்கறி, மிளகுபொடி ஆகிய கறியது இரண்டு, தயிர் அமுது அடைக்காயமுது வெற்றிலையமுது முதலியவற்றுக்கு நிபந்தங்கள் செய் திருக்கிறார். தலைப்பறை கொட்டும் உவச்சன், திருப்பதிகம் பாடுவார், திருப்பள்ளித் தாமம் பறிப்பான், திருவுலகும் திருமெழுக்கும் இட்டுப் பள்ளத்தாமம் தொடுப்பவள், ஸ்ரீகாரீயஞ் செய்கிறவர்கள் முதலியோருக்கு நிபந்தங்கள் செய்கிறார். மற்றும் 'கலசங்களும் சால்களும் குடங்களும் பெருந் திருவமுதுக்கும் பானைகளும் சட்டிகளும்' இடும் குசவனுக்கும், நிபந்தங்கள் செய்திருக்கிறார் (222. நி.த.இ.க. தொகுதி 17.)

இங்கு ஒன்றைக் கவனிக்கவேண்டும். இந்தக் கோவிலைக்கருங் கல்லினால் கற்றளியாகக் கட்டி நிலங்களையும் பொன்னையும் வழங்கின இந்த அரசியார், பானை சட்டிகளில் திருவமுது செய்ய நிபந்தங்கள் செய் திருக்கிறார். சோழப் பேரரசியராகிய மூவர் விரும்பியிருந்தால்பொன், வெள்ளி, வெண்கலப் பாத்திரங்களை வழங்கியிருக்கலாம். அப்படி இல்லாமல் மட்கலங்களை நியமித்தது. அக்காலத்து வழக்கத்தைத் தெரிவிக் கிறது. அரசர்களுங்கூட அக்காலத்தில் மட்கலங்களையே சமைப்பதற்கு உபயோகித்தார்கள் என்பது இதனால் தெரிகிறது.

முதலாம் இராஜ ராஜனுடைய 29-ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்ட இன்னொரு சாசனம் இக்கோவிலில் இருக்கிறது. அது கி.பி. 1013-14 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. அது மாம்பாக்கம் உடையான் சாத்தன் ஆலை என்பவன் இந்தக் கோவிலில் நந்தா விளக்கு ஒன்று வைத்து, அவ்விளக்குக்கு நாள்தோறும் நெய் அட்டுவதற்காகத் தொண்ணூறு ஆடுகளைத் தானஞ் செய்ததைக் கூறுகிறது. அதாவது ஆட்டுப்பாலிலிருந்து நெய் எடுத்துத் திருவிளக்கு ஏற்றவேண்டும் என்று ஏற்பாடு செய்ததைக் கூறுகிறது. (195. தெ.இ.க. தொகுதி 17)

இராஜேந்திரசோழன் (முதலாவன்) ஏழாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1018) நந்தி ஏறன் என்பவன் திருநந்தாவிளக்கு ஒன்று இக்கோயிலுக்கு வைத்தான். விளக்கு எரியும் நெய்க்காகத் தொண்ணூறு ஆடுகளையும் கோயி

லுக்குத் தானம் செய்தான். இதனை இன்னொரு சாசனம் கூறுகிறது. (197. தெ.இ.க. தொகுதி 17)

இராசேந்திர சோழனின் 21-ஆம் ஆண்டில் (கி.பி. 1052) இந்தக் கோவிலில், இணையன் ஆடல்வல்லானான பெரியன் என்பவர் 72 பலம் நிறையுள்ள வெண்பலத்தினால் செய்த ஒரு செய்கையினால் (சோமகூடம்) தானம் செய்தார் என்று இன்னொரு சாசனம் கூறுகிறது. (198)

முதலாங்குலோத்துங்க சோழனின் பத்தாம் ஆண்டுச் சாசனம் (கி.பி. 1079) ஒன்று, அழகிய சோழப் பல்லவரையனுடைய அகமுடையான் தாமருடையான் திருவாறை பொன் என்பவர், இக்கோயிலுக்குச் சந்தி விளக்குக்காகப் பன்னிரண்டு ஆடுகளைத் தானஞ் செய்ததைக்கூறுகிறது. (199) இந்தச் சோழனுடைய 29-ஆம் ஆண்டுச் சாசனம் (கி.பி. 1098) இந்தக் கோவிலுக்குத் தேவரடியாரைத் தானம் செய்ததைக் கூறுகிறது.

''ஜயங்கொண்ட சோழ மண்டலத்து (தொண்டை மண்டலத்து) மாத்தூர் நாட்டுப் பந்திமங்கலத்துப் பரலிகை ஏர் இருக்கும் வேளாளன் மாம்பாக்க முடையான் அமுதன் பள்ளி கொண்டானும், அமுதன் வேளானும், அமுதன் உய்ய வந்தானும் இவ்வனைவோங்கள் அடியாள் அங்காடியும், இவள்மகள் பேரங்காடியும், இவள் மக்களும் திருவக்கரையுடைய மாதேவற்குத் தேவரடி யாராக ஸ்ரீஹஸ்தத்தே நீர்வார்த்துக் குடத்தோம்'' என்று இந்தச் சாசனம் கூறுகிறது. (204)

விக்கிரமசோழனுடைய மூன்றாம் ஆண்டு (கி.பி. 1120) சாசனம். ஒய்மா நாட்டு முந்நூற்றாக்குடிப்பள்ளி செங்கெணி அம்மையைப்பன் பண்டி என்பவர் இக்கோயில் பெருமானுக்கு மந்திரபோனகம் நெய்யமுது கறியமுது அடைக்காகயமுது தயிரமுது முதலியவற்றிற்கு நிவந்தம் செய்ததைக் கூறுகிறது. (201) இவருக்கு நரலோகவீரப் பேரரையன் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.

திருவக்கரைச் சிவன் கோவிலில், எழுந்தருளியுள்ள வரதராஜப் பெருமாள் கோவிலின் வாயிலில் இடதுபுறத்து வாயிலின் நிலையில் ஒரு செய்யுள் எழுதப்பட்டிருக்கிறது. அது கீழ்வருமாறு:

***ஸ்வஸ்திஸ்ரீ***
***இசைவிளங்குடையன்மன் எங்கோனுக்கு***
***இருபத்து நாலாமாண்டு***
***குகைவிளங்கு மறையவர்கள் குழுமிய***
***வக்கரை மாலின் கோயில் சாலத்***
***திசை விளங்கு திருவாசல் பொற்கதவு***
***சமைத்தான் வென்றி***
***திசைவிளங்கு வேற்கண்டன் துருவ்வைகோன்***
***வழிக்காசி மடந்தை கோவே.***

*இந்தச் சாசன எழுத்து, கி.பி. 11- ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. (230)*

*சோழ அரசனான இரண்டாம் இராஜாதிராஜனால் ஏழாம் ஆட்சி யாண்டில் (கி.பி. 1169), திருவக்கரைக் கோயிலின் கோபுரம் கட்டப்பட்டது. இதற்கு முன்னர்க் கோபுரம் இல்லை என்று தோன்றுகிறது. இந்தக் கோபுரத்தைக் கட்டினவன் அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவராயன் என்பவன். இந்தச் சானத்தின் வாசகம் இது:-*

*"ஸ்வஸ்திஸ்ரீ. திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராஜாதிராஜதேவற்கு யாண்டு ஏழாவது திருவக்கரை ஆளுடையார் கோயிலில் திருக்கோபுரம். கண்டர் சூரியன் திருக்கோபுரம் என்னும் பெயரால் செய்வித்தான் அம்மை யப்பன் பாண்டிநாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவராயன்"(217).*

*இந்தச் சம்புவராயனே இத்திருக்கோவிலில் ஆயிரக்கால் மண்டபத்தை யும் கட்டினான். இந்த மண்டபம் மூன்றாங் குலோத்துங்க சோழனுடைய இரண்டாவது ஆண்டில் (கி.பி. 1179) கட்டப்பட்டது. இந்தச் சாசனத்தின் வாசகம் இது:-*

*"ஸ்வஸ்திஸ்ரீ: திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித் தலையுங் கொண்டருளின, ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 2-வது. இராஜராஜவள நாட்டு மாத்தூர் நாட்டு உடையார் திருவக்கரை ஆளுடையார் கோயிலில் இத்திருமண்டபம் கண்டர் சூரியன் திருமண்டபம்*

என்னும் பெயரால் செய்வித்தான் அம்மை அப்பன் பாண்டிநாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவராயன் (212).

மூன்றாம் குலோத்துங்க சோழனின் பதினாறாவது ஆண்டில் (கி.பி. 1194) எழுதப்பட்ட இன்னொரு சாசனம், இந்தக் கோயிலில் நான்கு நந்தாவிளக்கு தானங்கொடுத்தைக் கூறுகிறது. தானங்கொடுத்தவர் ஒரு காடவராயர். "இத்திரு நந்தாவிளக்கு நாலுக்கும் விட்ட சாவா மூவாப்பசு 128. ரிஷபம் 4, ஒரு நந்தாவிளக்கு 32 பசுக்கள் வீதம் 4 விளக்குகளுக்கு 128 பசுக் களைக் கொடுத்தார். இந்த பசுக்களின் பாலிலிருந்து நெய் எடுத்து அந்த நெய்யினால் விளக்கேற்றவேண்டும் என்பது கட்டளை. 4 ரிஷபம் (காளை மாடு) கொடுத்தது எதுக்கென்றால். இவை "சாவாமூவாப் பசுக்கள்" ஆகை யால் இப்பசுக்களின் எண்ணிக்கை குறையாமல் கன்றுகள் ஈன்று வளர்ச்சி எய்தி இருப்பதற்கு (215)

இந்த மூன்றாங் குலோத்துங்க சோழனுடைய 16-ஆம் ஆட்சி யாண்டில் (கி.பி.193) கண்டர் சூரியன் சம்புவராயன் இரண்டு குத்து விளக்குகளைத் தானஞ்செய்தான். இந்தச் சம்புவராயன் இக்கோவிலில் கோபுரத்தையும் ஆயிரக்கால் மண்டபத்தையும் கட்டினதை முன்னமே கூறினோம். குத்துவிளக்குச் சாசனத்தின் வாசகம் இது:

"ஸ்வஸ்திஸ்ரீ. திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழதே வற்கு யாண்டு 16வது உடையார் திருவக்கரை ஆளுடையார்க்கு அம்மை அப்பன் பாண்டிநாடு கொண்டானான கண்டர் சூரியன் செய்வித்து இட்ட ஐஞ்சு நிலைக்குத்து விளக்கு 2-னால் இருப்பு நாராசம் உட்படத் தாராஎடை ஆயிரத்து நூற்று எண்பத்து இருபலம்." (216. தெ.இ.க. தொகுதி 17).

மூன்றாம் விக்கரமபாண்டியனுடைய நான்காம் ஆண்டில் (கி.பி. 1285) எழுதப்பட்ட சாசனம், இப்பாண்டியனுடைய அரசி இக்கோவிலில் ஒரு மண்டபம் கட்டியதைக் கூறுகிறது. "பெருமாள் விக்கரமபாண்டிய தேவர் நம்பிராட்டியார் உலகமுதுடையார் செய்வித்த திருமண்டபம் யாண்டு 4." (210)

இந்தப் பாண்டியனுடைய ஆறாவது ஆண்டில் (கி.பி.1288) எழுதப் பட்ட சாசனம் இந்தப் பாண்டியன் இந்தக் கோவிலுக்கு நிலம் தானங்

கொடுத்ததைக் கூறுகிறது. இவன் தன் பேரால் நித்தியபூகை, திருநாள்களை அழைத்தான். ''நம்பேரான் இந்தபுன் விக்கிரம பாண்டியன் சந்திக்கும் விக்கரமபாண்டியன் திருநாளுக்கும் அழுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் நித்த நைமித்திகங்களுக்கும் திருநாமத்துக் காணி'' என்று இச்சாசனம் கூறுகிறது (202).

முதலாங் குலோத்துங்க சோழனுடைய 24 - ஆம் ஆண்டுச் சாசனம் (கி.பி. 1113),இக்கோயிற் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் துர்க்கைக்கும் திருவிளக்காக (65) பொற்காசு தானம் செய்யப்பட்டதைக் கூறுகிறது. ''இக்காசு அறுபத்தஞ்சுக்குத் திருவக்கரை ஆளுடையார்க்கு ஒரு திருநந்தாவிளக்கும், திருவக்கரை ஆழ்வார்க்கு ஒரு திருநந்தா விளக்கும், துர்க்கையார்க்கொரு சந்தி விளக்கும், துர்க்கையார்க்கொரு சந்தி விளக்கும் இரண்டு தேவர்களுக்கும் சனி எண்ணெய் காப்பு மாசத் திருநாழி எண்ணெயும் நீக்கி நீன்றது தூண்டுவான் சந்திராதித்தவல் இக் கோயிலிரண்டுங், குடமும் அலகுங்கொண்டு புகுவார் இத்திரு விளக்கும் எரித்துக் கோயில் கைக்கொண்டு திருவாராதனை செய்வோம்'' என்று இந்தச்சாசனப்பகுதி கூறுகிறது(263).

சாலிவாசன சக ஆண்டு 1352- இல் (கி.பி. 1430 இல்) செம்மந்தை காங்கேயன் என்பவர் இக்கோயிலில் ஒரு கோபுரத்தையும் ஒரு மண்ட பத்தையுங் கட்டினார் என்று ஒரு செய்யுட் சாசனங் கூறுகிறது. இந்தக் கோபுரமும் மண்டபம் முற்கூறிய கண்டர் சூரியன் சாம்புவராயன் அமைத்த கோபுரமும் மண்டபமும் அல்ல; இவை வேறு.

விம்பச்சகா - மற்றொராயிரத்து
முந்நூற்றுக்குமேல்
ஐம்பத் திரண்டினில் வக்கரையார்க்கு
அணிகோ - புரமுஞ்
செம்பொற்றிரு மண்டபமுங் கண்டான்
செஞ்சொலதேவரசன்
கப்பக் களிற்றண்ணல் இதூர்மன்
செம்மந்தை காங்கேயனே'' (218)

இந்தக் கோபுரமும் மண்டபமும் பிற்காலத்தில் குடைந்தபோது செவ்வண்ணன் என்பவர் இவற்றைப் புதுப்பித்தாரென்று இங்குள்ள இன்

னொரு சாசனச் செய்யுள் கூறுகிறது. இந்தச் சாசனத்தின் எழுத்து பிற்காலத்தது இந்தச் சாசனச் செய்யுள் இது.

**"பன்னாக பூஷணர் வக்கரை**
**ஈசற்குப் பத்தியுடன்**
**முன்னாளிற் காங்கயன் கோபுரம்**
**மண்டபம் முற்றுங்கண்டான்**
**இந்நாள் அதனை யெல்லாம்**
**நவமாக்கினன் எங்கள் கச்சிச்**
**சின்னான் துணைவன் அரசன்**
**குமாரன்நற் செவ்வண்ணனே"** (219)

இந்தச் செய்திகளையெல்லாம் திருவக்கரைத்திருக்கோயிலில் எழுதப் பட்டிருக்கிற கல்வெட்டுச் சாசனங்களிலிருந்து அறிகிறோம். கல்லில் எழுதி வைக்காமலிருந்தால் இவைகளை நாம் எங்ஙனம் அறிய முடியும்?

திருக்கோயில்களில் திருவிளக்கு ஏற்றினால் ஞானம் பெறலாம் என்பது ஆன்றோர் வாக்கு. திருவிளக்கு இடுவது பெரும் புண்ணியமாகக் கருதப்படுகிறது. திருவிளக்கேற்றிக் கடவுளை வணங்கினால் கடவுள் திரு வருள் கிடைக்கும்.

**விரும்பிநல் விளக்குத் தூபம்**
**விதியினால் இடவல்லார்க்குக்**
**கரும்பினிற் கட்டிபோல்வார்**
**கடவூர் வீரட்டனாரே.**

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுவது காண்க.

முற்காலத்துப் பெரியவர்கள் எண்ணெய் விளக்கேற்றுவதைவிட, நெய் விளக்கு ஏற்றுவதை உயர்வாக மதித்தார்கள் (இதனால் எண்ணெய்விளக்கு கூடாது என்பதன்று) இதனால்தான் அக்காலத்தவர் வசதியிருந்த போது திருக்கோயில்களில் நெய்யினால், திருவிளக்கு ஏற்றினார்கள். அதற்காக ஆடுகளையும் பசுக்களையும் திருக்கோயில்களுக்குத் தானம் கொடுத்தார்கள். செல்வர்கள் அக்காலத்தில் பசுக்களையும் ஆடுகளையும் திருக்கோயில் களுக்குத் தானஞ்செய்து, அவற்றின் பாலிலிருந்து கிடைக்கிற கலப்பற்ற

நெய்யினால் திருவிளக்கேற்ற நிபந்தகளைச் செய்தார்கள். இச்செய்திகளைக் கல்வெட்டெழுத்துகளிலிருந்து அறிகிறோம்.

- திருக்கோயில் மே - 1970

# 10. திருக்காரிக் கரை

திருக்காரக்கரைத் திருக்கோயில், செங்கல்பட்டு மாவட்டத்துத் திருவள்ளூர் தாலுகாவில் இராமகிரி என்னுமிடத்தில் இருக்கிறது. திருக்காரிக் கரை என்னும் பழைய பெயர் மாறி, இப்போது இராமகிரி என்று பெயர் வழங்கப்படுகிறது. திருக்காரிக்கரை நாகலாபுரத்துக்கு அருகில் இருக்கிறது. நாகலாபுரத்திலிருந்து தும்பூரு கோனைக்குப் போகிற இடைவழியில், திருக்காரிக்கரைக் கோவில் இருக்கிறது. இக்கோவிலில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் பெயர் வாலீசுவரர் என்பது. சாசன எழுத்துக்களில் 'திருக்காரிக்கரை உடைய நாயனார்' என்று பெயர் கூறப்படுகிறார். பழைய சாசன எழுத்துக்களிலே, "ஜயங்கொண்ட சோழ மண்டலத்து (தொண்டை மண்டலத்து)க் குன்றவர்த்தனக் கோட்டத்து நின்றையூர் நாட்டுத் திருக்காரிக் கரை" என்று கூறப்படுகிறது.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்காளத்திக்குச் சென்றபோது, போகிற வழியில் திருக்காரிகரைக் கோவிலுக்கு வந்து, சிவபெருமானை வணங்கிச் சென்றார் என்று பெரிய புராணத்தினால் அறிகிறோம்.

**"பல்பதியும் நெடுங்கிரியும் படர்வனமும் சென்றடைவார்**
**செல்கதிமுன் அளிப்பார்தம் திருக்காரிக்கரை பணிந்து**
**தொல்கலையின் பெருவேந்தர் தொண்டர்கள் பின், உம்பர் குழாம்**
**மல்குதிருக் காளத்தி மாமலைவந் தெய்தினார்."**

(திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் - 343) இதனால், திருக்காரிக்கரை வாலீசுவரர் திருக்கோவில், மிகப் பழமையானது என்பது தெரிகின்றது.

இந்தக் கோவிலிலே கல்வெட்டுச் சாசனங்கள் சில காணப்படுகின்றன. அவை கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து எழுதப்பட்டிவை அவை, இந்தக்

கோவிலுக்கு நிலங்களும் ஆடுமாடுகளும் பொருள்களும் தானம் செய்யப்பட்டதைக் கூறுகின்றன.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்துச் சாசனங்களும், மூன்றாம் இராசராசன் காலத்துச் சாசனங்களும், இங்குக் காணப்படுகின்றன. மூன்றாங் குலோத்துங்க சோழன் காலத்துச்சாசனங்களாகவன:-

இவனுடைய 6-ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டவை இரண்டு சாசனங்கள். திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீவீரராஜேந்திர சோழ தேவருடைய (மூன்றாங்குலோத்துங்க சோழனுடைய) 6-வது ஆண்டில் (கி.பி. 1184-இல்) எழுதப்பட்டவை. பையூர் நாடாழ்வான் குவளையும்அழகியான் ஒற்றி அரசன், இக்கோயிலுக்குத் திருநந்தாவிளக்குக்காகத் தொண்ணூற்றாறு ஆடுகளைத் தானங் கொடுத்ததைக் கூறுகிறது. அதாவது இந்த ஆடுகளின் பாலிலிருந்து நெய் எடுத்து நாள்தோறும் ஒரு விளக்கு ஏற்றுவதற்காக இந்த ஆடுகள் தானம் செய்யப்பட்டன. *(N0. 710,S.I.I.Vol. XVII)* இதே ஆள் இந்தக் கோவிலுக்குத் தொண்ணூற்றாறு ஆடுகளைத் தானஞ்செய்ததை இன்னொரு கல்வெட்டு கூறுகிறது. இந்தச் சாசனத்தின் விசித்திரம் என்ன வென்றால். ''திருநாயற்றுக் கிழமை தோறும் ஒரு ஆடு வெட்டக்கடவதாக விட்ட ஆடு தொண்ணூற்றாறு'' என்று இந்தச் சாசனத்தில் எழுதப்பட்டிருப்பது தான். *(No. 708. S.I.I. Vol. XVII)*

இதுமிகவும் புதுமையாகக் காணப்படுகிறது. சிவன் கோவில்களில் ஆடு வெட்டுவது வழக்கம் இல்லை. இதுவரையில் இந்த வழக்கம் இருந்தது இல்லை. ஆனால் இந்த ஒரே சாசனம் ஆடுவெட்டுவதைக் கூறுகிறது! காணி கோயிலுக்கு ஆடு வெட்டுவது மரபுதான். ஆனால் சிவன் கோவிலில் வெட்டு வது மரபு அன்று வழக்கமும் அன்று. நிச்சயமாக கிடையாது. இந்தக் கல் வெட்டுடெழுத்துக் கூறுவதன் கருத்து என்ன என்று தெரியவில்லை.

இந்த அரசனுடைய 11-ஆம் ஆண்டில் கி.பி.1188-89-இல்) எழுதப் பட்ட சாசனம், கோசலத்தரையன் வலந்தருவான் கோசலத்தரையன், இக் கோயிலில் திருவிளக்கு எரிப்பதற்காக முப்பதிரண்டு பசுக்களைத்தானஞ் செய்ததைக் கூறுகிறது. இந்தப் பசுக்களின் பாலிலிருந்து கிடைக்கிற நெய் யினால் திருவிளக்கு எரிக்கவேண்டும் என்று இந்தச் சாசனங் கூறுகிறது. நெய் அளிக்கும் உழக்குக்கு திருக்காரிக்கரையுடையான்' உழக்கு என்று பெயர் கூறப்பட்டுள்ளது. *(No, 686 S.I.I. Vol. XVII)*

இவ்வரசனுடைய 15-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட சாசனம் (கி.பி. 1192-93) இதன் பிற்பகுதி எழுதப்படாமல் விடப்பட்டுள்ளது. இது இத்திருக் கோவிலில் விளக்கு எரிப்பதற்காக 49- பழங்காசு கொடுக்கப்பட்டதைக் கூறுகிறது. *(No, 688 S.I.I. Vol. XVII)*

இந்த அரசனுடைய 32-வது ஆண்டில் எழுதப்பட்ட இரண்டு சாசனங்கள் (கி.பி. 1209-10, தனி நின்று வென்ற வீரநரசிங்க மாதவராயின். இந்தக் கோவிலில் சித்திரைத் திருநாள் உற்சவத்துக்கு நீர்வாயில் என்னும் ஊரைத் தேவதானமாகக் கொடுத்ததைக் கூறுகிறது. 'நீர்வாயில் காசாயம் பொன்னாயம் நெல்லாயம் உட்பட' விட்டதாகக் கூறுகிறது. *(No, 696. S.I.I. Vol. XVII)* இரண்டாவது சாசனம், ''திருக்காரிக்கயையுடைய பிள்ளையார்க் கும் பூசைக்கும் அமுது கிடைக்கும்'' ஆக வேலூரும் சாத்தமங்கலமும் நாவலூர்த் தடையும் சர்வமானியமாகக் கொடுத்ததைக் கூறுகிறது. *(No. 697 S.I.I. Vol. XVII)*

**மூன்றாம் இராஜராஜசோழன் காலத்துச் சாசனங்கள்:-**

இவ்வரசனுடைய 10-ஆம் ஆண்டில் கி.பி. 1225-26) எழுதப்பட்டது. இக்கோயிலில் நந்தாவிளக்கு ஒன்றுக்காக முப்பத்திரண்டு பசுக்களை, நின்றையூர் நாட்டு வேளான் தானங் கொடுத்ததைக் கூறுகிறது. *(No. 715, S.I.I. Vol. XVII)*

இந்தச் சோழனுடைய 25 ஆம் ஆண்டில் (கி.பி.1240-41) எழுதப் பட்ட சாசனம் காரிப்பிள்ளை என்பவர் மூன்று மாடைகளை (பொற்காசு) இந்தக் கோவிலுக்குத் தானஞ் செய்ததைக் கூறுகிறது. இந்தக் காசுகளின் வட்டியிலிருந்து ஒரு நந்தாவிளக்கு நாள் தோறும் ஏற்ற வேண்டுமென்ற இந்தச் சாசனங் கூறுகிறது. *(No. 712 S.I.I. Vol. XVII)*

இவ்வரசனுடைய 27 - ஆம் ஆண்டில் (கி.பி. 1242-43) எழுதப்பட்ட சாசனம், இக்கோவிலில் திருவிளக்கு ஏற்றுவதற்காகக் கோட்டூர் வடுகன் ஒன்றரை மாடைப் பொன்னைத் தானம் செய்ததைக் கூறுகிறது. *(No. 710 S.I.I. Vol. XVII)*

இவ்வரசனுடைய 29-ஆம் ஆண்டுச் சாசனம் (கி.பி. 1245) கொட்ட ளத்தூர் கிழவன் (கிழவன் - தலைவன்) வடுகப்பிள்ளை என்னும் வயிராதரா யன் இக்கோயிலில் திருவிளக்கு ஏற்றுவதற்காகப் பதினாறு மாடைப் பொற்காசுகளைத் தானஞ்செய்ததைக் கூறுகிறது. *(No. 713. S.I.I. Vol. XVII)*

சாளுக்கிய வீர கண்ட கோபாலனுடைய 3-வது ஆண்டு (கி.பி. 1294-49) வீரநரசிங்க தேவனான யாதவராயரின் சேனாபதி நகுலன் விழுப் பதராயன் இக்கோவிலுக்குப் பதினாறு எருமைகளைத் தானஞ்செய்ததைக் கூறுகிறது. இவ் எருமைகளின் பாலிலிருந்து நெய் எடுத்துத் திருவிளக்கு ஏற்ற வேண்டுமென்ற இச்சாசனங்கள் கூறுகின்றன. *(No. 716. S.I.I. vol. XVII)*

யாதவராயரின் 36-வது ஆண்டில் எழுதப்பட்டசாசனம். அரிகண்ட புரத்து ஊரார் இந்தக் கோவிலுக்குத் தங்கள் ஊரில் நிலம் தானஞ் செய்ததைக் கூறுகிறது. இந்த நிலத்தின் வருவாயிலிருந்து இக்கோவிலில் திருநாளுக்கு (உற்சவத்துக்கு)ச் செலவு செய்யவேண்டுமென்று இந்தச் சாசனம் கூறுகிறது. *(No. 705. S.I.I.Vol. XVII)*

இரண்டாம் ஹரிஹரராயர் காலத்துச் சாசனம் (கி.பி. 1400) நின்றையூர் நாட்டில் உள்ள வேலூர்க் கிராமத்தார், தங்கள் மனைகளையும் தோட்டத் துரவு களையும் இக்கோவிலுக்குத் தானஞ் செய்ததைக் கூறுகிறது. (இந்த ஊரில் இதற்கு முன்பே கோவிலுக்குத்தானஞ் செய்யப்பட்ட நிலம் இருந்தது. *(No. 700 S.I.I. Vol. XVII)*.

இரண்டாம் புக்கராயர் காலத்துச் சாசனம் (கி.பி. 1382) திருக்காரிக் கரையில், 'திருவாளன்மடம்' என்னும் பெயருள்ள ஒருமடம் இருந்ததையும், அந்த மடத்துத்தலைவர் சத்திய தரிசினி என்பவர் இருந்ததையும், அந்த மடத்துக்கு நின்றையூர் நாட்டு வெண்குளத்தூரார் நிலம் தானம் செய்ததையுங் கூறுகிறது. காவந்தகண்டநல்லூர் நத்தமும் ஏரியும் நன் செய் புன்செய் நிலங்களும் இந்த மடத்துக்குத் தானம் செய்யப்பட்டன. *(No. 699 S.I.I. Vol. XVII)*

சாலிவாகன சக ஆண்டு 1358-இல் (கி.பி. 1436 - இல்) ஸ்ரீ சக்கரகர் என்னும் சிற்றரசன் இக்கோவிலில், திருக்கதவுகளை அமைத்து, திருப்பள்ளி யறை நாச்சியாரையும் எழுந்தருளிவித்தார் என்ற ஒரு சாசனங் கூறுகிறது. *(No.693 S.I.I. Vol. XVII)*

வீர நரசிங்க யாதவராயரின் 36-வது ஆண்டில் எழுதப்பட்ட சாசனம் இந்தக் கோவிலில் பூசைசெய்து கொண்டிருந்த சிவப்பிராரமணர், தங்களு டைய 42-வட்டத்தில் பத்துவட்டத்தை (பத்துநாள் பூசையை) அகவலன் சூரிய பட்டனுக்கு விற்றுவிட்ட செய்தியைக் கூறுகிறது. *(No.711 S.I.I. Vol. XVII)*

திருக்காரிக்கரைக் கோவில் குளக்கரையில் ஒரு கருங்கல் நந்தி இருக்கிறது. அதன் வாயிலிருந்து நீர் விழுந்துகொண்டிருக்கிறது. இந்த நந்தியின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள எழுத்து கி.பி. 10- ஆம் நூற்றாண்டு எழுத்தாகத் தெரிகிறது. இதன் வாசகம்:- "ஸ்ரீ பிரசாதஞ் செய்யச் சாமுண்டி மகன் கூசத்துப் பெருந்தாசன் விட்ட ஏறு" என்பது. *(No.717 S.I.I. Vol. XVII)*

கூவம் என்னும் ஊரில் இருந்த சாமுண்டி என்பவனின் மகனான பெருந்தச்சன் என்னும் சிற்பியின் கனவிலே சிவபெருமான் தோன்றிக் கல்லினால் ஒரு நந்தியைச் செய்துவை என்று கூற, அதன்படியே அவன் இந்த நந்தியைச் செய்து இதன் வாயிலிருந்து நீர்வரும்படி அமைத்தான் என்பது இதன் பொருள்.

இங்கு இன்னுஞ்சில கல்வெட்டெழுத்துக்கள் உள்ளன. அவை அவ்வளவு முக்கியமானவை அல்ல. அவற்றுள் சில சிதைத்துள்ளன. இது வரையும் கூறியதிலிருந்து இந்தக் கோயிலைப்பற்றி மறைந்துபோன எத்தனையோ பல செய்திகளை அறிந்துகொள்கிறோம்.

**- திருக்கோயில், மார்ச்சு 1970**

# 11. திருப்பாலைவனம்

இந்த ஊருக்கு 4,5 ஆண்டுகளுக்கு முன்பு வந்திருக்கிறேன். இந்த ஊர்க் கோயிலை (கோயில் கட்டடத்தைப்) பார்ப்பதற்காகவே வந்தேன். பகலில் வந்து கோயிலைப் பார்த்துவிட்டு உடனே திரும்பிவிட்டேன், பஸ் வசதி இல்லாத காரணத்தினால். கோயில் கட்டட அமைப்புகளில் ஏழு விதமான விமானங்கள் சொல்லப்படுகின்றன. அந்த விமான அமைப்புகள் சிலவற்றை அப்பர் சுவாமிகளும் தமது தேவாரத்தில் கூறுகிறார். அவ் விதமான அமைப்புக்களில் ஆலக் கோயில் அல்லது யானைக் கோயில் என்பதும் ஒன்று.

ஆலக் கோயில் என்றால் ஆனைக் கோயில். ஆனைக் கோயில் கட்டடங்களைக் கஜபிருஷ்ட விமானம் என்று சிற்பசாஸ்திரங்களில் பெயர் கூறப்படுகிறது. கஜபிருஷ்ட விமானக் கோயில்களாகிய ஆனைக் கோயில் கட்டடங்கள் தொண்டைநாட்டில் (தொண்டை மண்டலத்தில்) தான் அதிகமாக இருக்கின்றன. சோழ நாட்டில் சில யானைக் கோயிலைகள் மட்டும் இருக்

கின்றன. பாண்டி நாட்டிலும் சேர நாட்டிலும் கஜபிருஷ்ட விமானக் கோயில் கள் நானறிந்தவரையில் இல்லை. தென் கன்னட மாவட்டத்தில் சில கோயில் கள் கஜபிருஷ்ட அமைப்பாக அமைந்திருக்கின்றன.

தொண்டை மண்டலத்தில் இருக்கிற ஆனைக் கோயில் கட்டடங்கள் பலவற்றை நேரில் போய்ப் பார்த்திருக்கிறேன். ஆனைக் கோயில் கட்டடங் களில் அடிப்படையான அமைப்பில் மாறுதல் இல்லை. ஆனால், அந்தக் கட்டடங்களின் சிறப்பு அமைப்புக்கள் (உறுப்புகளின் அமைப்புக்களில்) ஒவ்வொரு கோயிலிலும் வெவ்வேறு வகையான புதுமைகள் அமைந்திருக் கின்றன. இந்த திருப்பாலைவனத்து ஆனைக் கோயிலின் அமைப்பு தனிப்பட்ட அமைப்புடன் அழகும் உடையது. மற்ற ஆனைக் கோயில்களின் அமைப்பைப் பார்த்துவிட்டு இந்த கோவிலின் அமைப்பைப் பார்த்தால் இதனுடைய புதுமையான சிறப்பு நன்றாகத் தெரியும், மற்ற ஆனைக்கோவில் களின் அமைப்பைப் பாராதவர்கள் இந்தக் கோயில் கட்டட அமைப்பை மட்டும் பார்ப்பார்களானால் அதனுடைய அருமையும் பெருமையும் நன்கு அறியமாட்டார்கள். இந்தத் திருப்பாலைவனத்து யானைக் கோயிலைப்போல அமைந்திருக்கிற இன்னொரு கோயில் (நான்கண்டவரையில்) காஞ்சி புரத்துக்குத் தெற்கே மாகறல் என்னும் ஊரில் இருக்கிற சிவன் கோயில் கட்டடம் ஆகும். ஆனால், மாகறல் ஆனைக் கோயிலை விட திருப்பாலை வனத்து யானைக் கோயிலில் அழகான சிறப்புகள் இருக்கின்றன. இந்தக் கோவில், பிற்காலச் சோழர் ஆட்சியில் ஏறக்குறைய கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. திருப்பாலைவனம் என்னும் ஊரின் பெயரைப் பார்க்கும்போது இவ்வூரில் பண்டைக் காலத்தில் பாலைமரங்கள் அதிகமாக இருந்தன என்பதை அறிகிறோம். பாலைமரம் இந்தக் கோவிலின் ஸ்தல விருக்ஷமாக இருக்கிறது.

இவ்வளவு அழகான கட்டடம் உள்ள இந்தக் கோவிலைப்பற்றி ஒரு நல்ல அழகான புத்தகம் ஒன்றை இக்கோவில் அதிகாரிகள் வெளியிடுவார் களானால் நலமாக இருக்கும். யாரும் இல்லாத காட்டிலே ரோஜாவும், மல்லிகையும் தாமரையும் அழகாகப் பூத்திருக்குமானால் அவற்றின் அழகு ஒருவருக்கும் தெரியாமலே போகும். அப்படித்தான் இருக்கிறது இந்தக் கோவிலின் செய்தி. இதன் அருகில் உள்ளது பழவேற்காடு என்றும் ஊர். பழவேற்காட்டைப் பற்றிச் சில செய்திகள் சொல்ல விரும்புகிறேன். பாலை மரங்கள் இருந்த இடம் பாலைவனம் (திருப்பாலைவனம்) என்று பெயர்

பெற்றதுபோல, வேல்காடு (வேல மரக்காடு) இருந்த இடம் வேற்காடு என்று பெயர் பெற்றது. பழவேற்காடு என்றால் பழைமையான வேல் என்பது பொருள் பூந்தமல்லிக்கு அருகில் திருவேற்காடு என்னும் ஊர் உண்டு. அதன் ஊரிலும் ஒரு கஜபிருஷ்ட விமானக் கோட்டை (ஆனைக்கோயில்) உண்டு. மரங்கள் நிறை காடுகள் பிற்காலத்திலே ஊர்களாக மாறும் போது, அந்தந்தக் காடுகளின் பெயர் அந்தந்த ஊர்களுக்குப் பெயராக அமைந்தவிட்டன. ஆர்க்காடு, வேற்காடு, ஆலங்காடு, காய்க்காடு, மாங்காடு, தில்லைவனம், பாலைவனம், கடம்பவனம் முதலிய பெயர்கள் எனலாம் அவை ஆதி காலத்தில் அந்தந்த மரங்களையுடைய காடுகளாக இருந்தன என்பதை தெரிவிக்கின்றன.

பழவேற்காட்டிலே, 350 ஆண்டுகளுக்கு முன்னே ஐரோப்பாக் கண்டத்திலிருந்து டச்சுக்காரர்கள் வந்தார்கள். வந்து 1610-ல் ஒரு கோட்டையைக் கட்டி அதில் இருந்து வியாபாரம் செய்தார்கள். அந்த வாணிகம் முக்கியமாக மலாக்கா, மலேயா நாடுகளுடன் நன்மை பெற்றது. ஆகவே பழவேற்காடு ஒரு நல்துறைமுகப்பட்டினமாக அமைந்தது. டச்சுக்காரர்கள் ஹாலண்டு தேசத்திலிருந்து வந்தவர்கள். இவர்களுக்குத் தமிழில் உல்லாந்தர் என்றும் ஒல்லாந்தர் என்றும் பெயர் வழங்கிற்று. ஒல்லாந்தர் இருந்த பழவேற்காட்டு கோட்டையை கி.பி. 1781 - இல் ஆங்கிலேயர் கைப்பற்றி அரசாண்டார்கள். ஆங்கிலேயே பழவேற்காட்டைப் புலிக்காட் என்றனர். புலிகள் உள்ள காடு அல்ல. பழவேற்காடு என்னும் சொல் ஆங்கிலேயன் வாயில் நுழையாமல் புலிக்காட் ஆயிற்று.

பழவேற்காட்டுக்குத் தெற்கே கடற்கரையோரமாக இருப்பதும் சிந்தாமணிகோயில் என்பது. சிந்தாமணி கோவிலுக்குக் கிழக்கே கர்ணம் என்னும் பெயரும் உண்டு. ஏனென்றால், மேற்குக் கடற்கரை ஓரமாக, தெற்கு கன்னடம் மாவட்டத்தில் கோகர்ணம் என்னும் ஒரு க்ஷேத்திரம் இருக்கிறது. அதற்கு நேர்கிழக்கில் இந்தச் சிந்தாமணி கோயில் இருப்பதனால் இதற்குக் கீழைக்கோகர்ண என்று பெயர். இந்த இடத்தில், சோழர் காலத்தில் ஒரு துறைமுகம் இருந்ததென்று அங்குள்ள சாசனத்தினால் தெரிகிறது.

சிந்தாமணி கோயிலுக்குத் தெற்கே திருகாட்டுப் பள்ளி என்னும் ஊர் இருக்கிற சாதாரணமாகக் காட்டுப் பள்ளி என்று கூறுவார்கள். திருக்காட்டுப் பள்ளியில் யஜ்ஞபட்டன் என்பார் யஜ்ஞேஸ்லாம் என்னும் கோயிலைக்

கட்டினான். இந்த யஜ்ஞ பட்டம், நந்திவர்மனுடைய புரோகிதன் மூன்றாம் நந்நிவர்மன் என்றும் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்றும் கூறப்படுகிற நந்திக் கலம்பகத்தின் தலைவனாகிய நந்திவர்மனுடைய புரோகிதன். திருக் காட்டுப்பள்ளிக் கோவிலுக்கு தெள்ளாறெறிந்த நந்திவர்மன் நிலங்களைத் தானம் செய்திருக்கிறான் என்பதை அவனுடைய செப்பேட்டுச் சாசனத் தினால் அறிகிறோம்.

கடைசியாக பழவேற்காட்டு ஏரியைப்பற்றிச் சொல்லவேண்டும். இந்த ஏரி இப்போது கடலுடன் சேர்ந்து கடலின் ஒருபகுதியாக ஆகிவிட்டது. முற்காலத்தில் இது காயல் ஆக இருந்தது என்றும் கூறுவர். கடற்கரை ஓரமாக இருந்த காயல்களின் இடையிடையே அந்தக் காலத்தில் ஊர்களும் இருந்தன. பிறகு கடல் பெருக்கெடுத்து காயலில் புகுந்து பெரியதோர் ஏரியாக மாறி விட்டது. பழவேற்காட்டு ஏரியின் நீளம் ஏறக்குறைய 37 மைல். அகலம் சில இடங்களில் 11 மைல். சில இடங்களில் 3 மைல். சென்னைப் பட்டினத்துக்கு வடக்கே 14 மைல் தூரத்தில் எண்ணூர் என்னும் ஒரு ஊரில் ஒரு காயல் இருக் கிறது. சென்னை சாகரின் பேசினிலிருந்து ஒரு கால்வாய் 1802-இல் வெட்டி இதனுடன் இணைக்கப்பட்டது. பிறகு எண்ணூர் காயலிலிருந்து 154 ஆண்டு களுக்கு முன்பு 1806- இல் கந்தப்பிள்ளை கால்வாய் என்னும் ஒரு கால்வாய் வெட்டி பழவேற்காட்டு ஏரியுடன் இணைக்கப்பட்டது படகு போக்கு வரத்துக்காக.

பழவேற்காட்டு ஏரியைக் 'கடல் கொண்ட சகாகதிநாடு' என்று ஒரு சாசனம் கூறுகிறது. (காகந்தி - காவிரிப்பூம்பட்டினம். பூம்புகார்).

திருப்பாலைவனம், பழவேற்காடு இரண்டும் செங்கற்பட்டு மாவட்டத் தின் பொன்னேரி தாலுகாவில் உள்ளன. இந்தமாவட்டத்தின் பழைய பெயர் பையூர்க் கோட்டம் என்று கூறப்படுகிறது. பையூர்க் கோட்டத்தின் வடக்கே பையூர் இளம் கோட்டம் என்னும் ஒரு கோட்டம் கூறப்படுகிறது. சாசனங் களில். பையூர்க் கோட்டமும் பையூர் இளங் கோட்டமும் ஒரே கோட்டத்தானா அல்லது வெவ்வேறு கோட்டங்களா என்பது ஆராய்ச்சிக்கு உரியது.

பண்டைக்காலத்திலே தொண்டைமண்டலம் 24 கோட்டங்களாகப் பிரிக்கபட்டிருந்தது. சோழ, பாண்டி, சேர நாடுகளில் கூற்றங்கள் இருந்தன. கோட்டமும் கூற்றமும் ஒன்றே. ஒவ்வொரு கோட்டமும் இரு நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. அதாவது பல கிராமங்கள் சேர்ந்தது நாடு. சில நாடுகள்

சேர்ந்தது கோட்டம் அல்லது கூற்றம். இவ்வாறு இருந்த பழைய நிலப் பிரிவு ஆங்கிலேயர் காலத்தில் வேறு பெயர் பெற்றது. அங்கிலேயர் இந்நாட்டைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கியபோது, கர்நாடக நவாப்பு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை, ஆட்சிசெய்வதற்கு எளிதாக நாட்டைப் பிரித்துத் தரும்படி கேட்டுக் கொண்டார்கள். கேட்டுக்கொள்ளப்பட்ட அந்த முஸ்லீம் உத்தி யோகஸ்தர், பிர்க்கா, தாலுகா, ஜில்லா என்று பிரித்துக் கொடுத்தார். அதன் படியே ஆங்கிலேயர் பெயரிட்டு ஏற்றுக் கொண்டார்கள். அக்காலம் முதல் பழைய கோட்டம், நாடு என்னும் பிரிவுகள் மறக்கப்பட்டுவிட்டன. அவை இப்போது சாசனங்களில் மட்டும் காணப்படுகின்றன.

**செங்கற்பட்டு மாவட்டத் தமிழ் எழுத்தாளர் சங்கம்,**
**முதல் மாநாட்டு விழா மலர் 1963**

# 12. இராமேசுவரத் தீவு

(வரலாற்றுப் பேரறிஞரான திரு. மயிலை சீனி வேங்கடசாமி ஐம்பது ஆண்டுகளாகத் தமிழக வரலாற்றைப் பற்றி விரிவாக ஆராய்ந்து பல் வேறு நூல்களும் நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதி யுள்ளார். தமிழ் மொழிக்கும் பௌத்த, சமண, கிறிஸ்தவப் பேரறிஞர்கள் செய்த தொண்டுகளை முழு அளவில் ஆராய்ந்து தனித்தனி நூல்கள் எழுதி யவர் இவரே. 'இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள்' என்னும் இவரது நூல் சிவபெருமான் ஆடிய நடனங்களின் கலைச்சிறப்பினையும் அவற்றில் பொதிந்துள்ள சமய உண்மைகளையும் தெளிவாக எடுத்துக் காட்டும் சிறப்பு நூலாகும். இவருடைய எழுத்தாற்றலைப் பாராட்டித் தமிழ் எழுத்தாளர் சங்கம் கேடயம் வழங்கிப் பாராட்டியது. இவர்தம் நூல்களில் சில தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழக அரசு ஆகியவற்றின் பரிசுகளைப் பெற்றுள்ளது. 'கல்வெட்டுக் கலை'யில் இவர் ஆழ்ந்த புலமையுடையவர். தமிழர்களின் எழுத்துக்களை ஓவியக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் சிறப்புகளை விளக்கும் நூல்களையும் கட்டுரைகளையும் இவர் படைத் துள்ளார்.)

இராமேசுவரம் என்னும் இச்சிறு தீவு முற்காலத்தில் இராமநாத புரத்தோடு இணைந்து ஒரே நிலமாக இருந்து பிறகு சிறு தீவாக மாறிற்று என்னும் வரலாறு பலருக்குத் தெரியாது. இச்செய்தி பலருக்கு வியப்பாக

இருக்கும். ஆனால், இராமேசுவரம் தீவும் இராமநாதபுரமும் ஒரு காலத்தில் இணைந்திருந்தது என்பது உண்மை.

தென்னிந்தியாவின் கடற்கரை ஓரங்கள் எக்காலத்திலும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. கடற்கோள்களினாலும் கடல் அரிப்பினாலும் நமது நாட்டுக் கடற்கரைப் பக்கங்களில் எத்தனையோ மாற்றங்கள் நெடுங் காலமாக நடந்துள்ளன. இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. இப்போது பாண்டிய நாட்டுக்கு அருகில் இருக்கிற இலங்கைத்தீவு முன்னொரு காலத்தில், பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னே தமிழகத்தோடு இணைந்து ஒரே நிலமாக இருந்தது. இந்தப் பெரிய நிலப்பரப்பு, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே கடற்கோளினாலும் கடல் அரிப்பினாலும் சிறிது சிறிதாகச் சிதைந்துபோய்க் கடைசியில் தனித் தீவாகப் பிரிந்து போய் பிற்காலத்தில் இலங்கைத் தீவாக மாறிப் போயிற்று. நில ஆராய்ச்சி செய்யும் அறிஞர்கள் இந்த வரலாற்றுச் செய்தியை கூறுகிறார்கள். இலங்கை, தனித் தீவாகப் பிரிந்துபோன பிறகுங் கூட, கொழும்புக்குத் தெற்கேயுள்ள கடலோரங்களில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு அந்தப்பகுதி நிலங்கள் கடலில் முழுகிப்போயின என்று மகாவம்சம் என்னும் இலங்கை வரலாற்று நூல் கூறுகிறது.

கன்னியாகுமரி இப்போது தமிழகத்தின் தெற்கெல்லையாக அமைந்திருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னே. கன்னியாகுமரிக்குத் தெற்கே ஒருநிலப்பரப்பு தமிழகத்தோடு இணைந்திருந்தது. அந்த நிலப்பரப்பு ஏறத்தாழ இரண்டு மாவட்டங்கள் (ஜில்லாக்கள்) அளவு இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அந்த நிலப்பரப்பு பிற்காலத்தில் கடற் பெருக்கினாலும் கடல் அரிப்பினாலும் பையப்பைய கடலில் முழுகிப் போய்விட்டது. அந்த நிலப்பரப்பு முதல் தடவை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் ஒருபகுதி மறைந்துபோய். எஞ்சியிருந்த இன்னொரு பகுதி நிலம் மற்றுமொரு கடற் பெருக்கினால் மறைந்து போயிற்று. இந்த வரலாற்றுச் செய்தியைச் சிலப்பதிகாரமும் கலித்தொகையும் கூறுகின்றன. இறையனார் அகப்பொருள் உரைப் பாயிரமும், கடற் கோள்களினால் முழுகிப்போன இந்த நிலங்களைக் கூறுகிறது.

திருப்பதி என்னும் திருவேங்கடமலையை எல்லோரும் அறிவார்கள். வேங்கடமலையைச் சூழ்ந்திருக்கும் நாடுகளுக்கு வேங்கடக் கோட்டம் என்பது பழைய பெயர். இந்த வேங்கடக் கோட்டத்துக்குக் கிழக்கே

கடற்கரையோரமாகப் பவத்திரிக் கோட்டம் என்னும் ஒரு நிலப்பரப்பு இருந்தது. பவத்திரிக் கோட்டம் ஒரு ஜில்லா (மாவட்டம்) அளவுள்ள நிலம். இந்தப் பவத்திரி நாட்டை 1800 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நக்கீரர். அக நானூறு 340-ம் செய்யுளில் கூறுகிறார். இந்தப் பவத்திரிக் கோட்டம் கி.பி.11-ம் நூற்றாண்டில் கடலில் மூழ்கிப்போயிற்று. கடலில் முழுகிப் போன பவத்திரிக் கோட்டம் இப்போது திருவேற்காடு ஏரி என்று பெயர் பெற்று பெரும் நீர்ப்பரப்பாக இருக்கிறது. பவத்திரிக் கோட்டம் இருந்ததையும் அதுகடலில் முழுகிப் போனதையும் பிற்காலத்துச் சோழ அரசர்களின் கல்வெட்டுகள் கூறுகின்றன. பவத்திரிக் கோட்டத்தில் இருந்த ஊர்களில் ஒன்று காகந்தி என்பது. இதைக் 'கடல்கொண்ட காகந்தி' என்று சோழர் கல் வெட்டுகள் கூறுகின்றன. நெடுங்காலமாகத் தொண்டை நாட்டின் கடற்கரை யோரமாக இருந்த பவத்திரிக் கோட்டம் கடலில் முழுகிப் போய் இப்போது திருவேற்காடு ஏரியாக மாறிப்போய் விட்டது. இந்த ஏரியின் தென்பகுதி இப்போது தமிழக அரசாட்சிக்குட்பட்டும் வடபகுதி ஆந்திர அரசுக்குட் பட்டும் இருக்கின்றன.

தமிழகத்தின் தெற்கே பாண்டிநாட்டிலே கிழக்குக் கடற்கரையை யடுத்து, கொற்கைக் குடாக் கடல் இருந்தது. கொற்கைக் குடாக் கடல் நிலத்தில் புகுந்து உள்கடலாக அமைந்துருந்தது. கொற்கைக் குடாக்கடலின் மேற்கே கொற்கைப் பட்டினம் இருந்தது. இது துறைமுகப் பட்டினமாகவும் முத்துக் குளிக்கும் இடமாகவும் இருந்தது. கொற்கை நகரத்தைப் பற்றிச் சங்கப் பாடல்கள் சிறப்பாகக் கூறுகின்றன. தாமிரபரணி ஆறு அக்காலத்தில் கொற்கைக் குடாக் கடலில் சென்று விழுந்தது. கடற்கரையிலிருந்து ஐந்து மைல் தூரம் உள்புகுந்து உள்நாட்டுக் கடலாக இருந்த கொற்கைக் குடாக் கடல் பிற்காலத்தில், ஏறத்தாழக் கி.பி. 10-ம் நூற்றாண்டில் மண் மூடி மறைந்து போய் விட்டது. கடற்கரைப் பக்கமாகக் கடல் அலைகள் மணலைக் கொண்டு வந்து கொற்கைக் குடாக் கடலின் ஒரு புரத்தைத் தூர்த்து விட்டது. தாமிரபரணி ஆறு மணலை அடித்துக் கொண்டுவந்து கொற்கைக் குடாக்கடலின் இன்னொரு புரத்தைத் தூர்த்து விட்டது. இவ்வாறு இருபுறமும் மணல் தூர்ந்து கொற்கைக் குடாக் கடல் அடியோடு மறைந்துபோய் இப்போது அது இருந்த இடம் நிலமாக மாறிவிட்டது. தாமிரபரணி ஆறும் இடம் மாறிவிட்டது. இவ்வாறு கடற்கரையோரங்களில் கடல் அரிப்பினாலும் கடல் பெருக்கி னாலும் பல இடம் கடல் மாறிப்போனதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம்.

இராமேசுவரம் ஒரு காலத்தில் இராமநாதபுரத்தோடு இணைந்திருந்த தென்றும் அது பிற்காலத்தில் தீவாகப் பிரிந்து தாய்நாட்டிலிருந்து பிரிந்து விட்டதென்றுங் கூறுகிறோம். அதனை விளக்குவோம். இராமேசுரம் இராம நாதபுரத்துடன் இணைந்திருந்த காலத்தில் இராமேசுவரக் கோயிலிலிருந்து இராமலிங்கப் பெருமானை இராமநாத புரத்துக்கு எழுந்தருளிவித்து ஒருவாரம் தங்கிப் பிறகு மீண்டும் இராமேசுவரத்துக்குக் கொண்டு போவது வழக்கமாக இருந்தது. இவ்வாறு ஆண்டுதோறும் வழக்கமாக இருந்தது. இவ்வாறு இராமேசுவரம் தீவாக மாறுவதற்கு முன்புவரையில் நடந்து வந்தது. தீவாக மாறிப்போன பிறகு இராமேசுவர் இராமநாதபுரத்துக்கு எழுந்தருளு வது நின்றுவிட்டது. ஏறத்தாழக் கி.பி. 12-ம் நூற்றாண்டில் இலங்கையை அரசாண்ட சிங்கள அரசன் தமிழ் நாட்டின் மேல் படையெடுத்துப் போர் செய்ய வந்தபோது. அவன் தன்னுடைய சேனையைக் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு வந்து இராமேசுவரத்தில் இறங்கிப் பிறகு அந்தச் சேனையை இராம நாதபுரத்துக்கு அழைத்து வந்தான் என்று சுல்லவம்சம் என்னும் இலங்கை நூல் கூறுகிறது. இதனாலும் இராமநாதபுரமும் இராமேசுவரமும் முற் காலத்தில் ஒன்றாக இணைந்திருந்தது என்பதை அறிகிறோம்.

ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்பு இராமநாதபுர வட்டத்தில் போர்ச்சுக்கீசியர் வந்து கப்பல் வாணிகம் செய்தார்கள். அக்காலத்தில் பெரும் புயலடித்துக் கடல் கொந்தளித்துக் கடலில் நீண்டுகிடந்த இராமேசுவரத்தைத் தீவாகப் பிரித்துவிட்டதும் கடல்நீர், சிறு கால்வாய் போல் பாய்ந்து இராமநாதபுரத்தையும் இராமேசுவரத்தையும் பிரித்துவிட்டது. சிலகாலம் வரையில் இந்தச் சிறு கால்வாயைக் கடந்து இராமநாதபுரத்துக்குப் போக்குவரத்து இருந்தது. பிறகு இந்தக் குறுகலான கால்வாயில் கடல்நீர் புகுந்து அதை அகலமாக்கி விட்டது. அப்போது போர்ச்சுகீசிய வாணிகர் தங்களுடைய வணிகக் கப்பல்களின் போக்குவரத்துக்காக இந்தக் கால் வாயை ஆழமாகவும் அகலமாகவும் செய்துவிட்டார்கள். அதற்காக இவர்கள் ஆயிரக்கணக்கான வராகன்களைச் செலவுசெய்தார்கள்.

புயல் அடித்துக் காற்று மழையினாலும் கடல் கொந்தளிப்பினாலும் இயற்கையாக உடைப்புண்ட இராமேசுவரம் பிறகு பையப் பைய உடைப்பு அகலமாகிக் கால்வாயாகி விட்டது. அந்தக் கால்வாயைப் போர்ச்சுகீசிய வாணிகர் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதாக அகலமும் ஆழமுமாகச் செய்து விட்டனர். இவ்வாறு இராமேசுவரம் தனித்தீவாகப் பிரிந்து போயிற்று. இராமநாதபுரத்துக்கும் இராமேசுவரத்துக்கும் இடையில் உள்ள கால்வாய்

இப்போது பாம்பன் கால்வாய் என்று பெயர் கூறப்படுகிறது. இராமேசுவரமும் இராமநாதபுரமும் முன்னொரு காலத்தில் இணைந்து ஒரே நிலமாக இருந்தது என்பதைப் பிற்காலத்தவர் மறந்துவிட்டார்கள்.

**இராமநாத சுவாமி கோவில் கும்பாபிசேக மலர் 1975**

# 13. சொல் ஆராய்ச்சி

**'கருவொடு பெயரிய இல்'**

பத்துப்பாட்டில் ஏழாம் பத்தாக உள்ள நெடுநல்வாடை, தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்மேல் நக்கீரர் பாடியது. போர் செய்யச் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பாசறையில் தங்கிப் போர்ச் செயலில் ஈடுபட்டிருப்பதையும் அவனுடைய அரசி பாண்டி மாதேவி அரண்மனையில் இருந்து அரசனைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப் பதையும் நெடுநல்வாடையில் நக்கீரர் பாடுகிறார். அரண்மனையைக் கூறுகிற இடத்தில் நக்கீரர் 'கருவொடு பெயரிய காண்பின் நல் இல்' (அடி 114) என்று கூறுகிறார். இதில் கூறப்பட்ட கருவொடு பெயரிய இல் என்பது இப்போது நம்முடைய ஆராய்ச்சிக்கு உரிய பொருள்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர், 'கருவொடு பெயரிய இல்' என் பதற்குக் கருப்பக்கிருகம் என்று பொருள் எழுதியுள்ளார். ''கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல் - புதைத்த கருவோடே பெயர்பெற்ற காட்சிக் கினிய் நன்றாகிய இல். என்றது கருப்பக்கிருக மென்றவாறு'' என்பது அவர் கூறுகிற உரை. நச்சினார்க்கினியர் சங்ககாலத்துக்கு மிகப் பிற்காலத்தில் இருந்தவர் என்பது தெரிந்ததேயாகும்.

அண்மைக்காலத்தில் வெளிவந்த நெடுநல்வாடைப் புதிய உரையிலும் 'கருவொடு பெயரிய இல்' என்பதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையே தரப்பட்டுள்ளது. 'கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல் - கருவோடே பெயர்பெற்ற காட்சிக்கு இனிய நன்றாகிய இல்' என்று பொருள் கூறி, அதன் அகல உரையில் 'கருவொடு பெயரிய இல் என்பது கருப்பக்கிருகம் என்ற வாறு' என்று விளக்கங் கூறப்பட்டுள்ளது.

அரண்மனைக்குக் கர்ப்பக்கிருகம் என்னும் பெயர் எக்காலத்திலும் வழங்கியதில்லை. ஆனால், நச்சினார்க்கினியர் அரண்மனையைக் கர்ப்பக்

கிருகம் என்று கூறுகிறார். இஃது எவ்வாறு பொருந்தும்? திருக்கோயில்களில் தெய்வத் திருமேனிகள் எழுந்தருளியுள்ள இடத்துக்குக் கர்ப்பக்கிருகம் என்று பெயர் உண்டு. இந்தக் கர்ப்பக்கிருகம் என்னும் பெயரும் அண்மைக் காலத்தில் வழங்கப்பட்டது. கர்ப்பக்கிருகம் என்னும் வடமொழிப் பெயர் வழங்குவதற்கு முன்பு அகநாழிகை, உண்ணாழிகை என்னும் தமிழ்ப் பெயர் கள் வழங்கி வந்தன. இப் பெயர்களைக் கல்வெட்டெழுத்துச் சாசனங்களில் காண்கிறோம். கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்த அப்பர் அடிகளும் கோயிற் கருவறையை உண்ணாழிகை என்று கூறியுள்ளார்.

**''அண்ணாமலை யமர்ந்தார் ஆரூர் உள்ளார்**
**அளப்பூரார் அந்தணர்கள் பாடக் கோயில்**
**உண்ணாழிகையார் உமையாளோடும்**
**இமையோர் பெருமானார் ஒற்றியூரார்''**

**(திருவீழிமிழலைத் திருத்தாண்டகம், 3)**

அகநாழிகை, உண்ணாழிகை என்னும் பெயர்களை மாற்றிக் கர்ப்பக் கிருகம் என்னும் வடமொழிப் பெயர் வழங்கப்பட்டது மிக மிகப் பிற்காலத்தி லாகும். மேலும், கர்ப்பக்கிருகம் என்னும் செ..ல் கோயில் கருவறைக்கு வழங்கப்பட்டதேயல்லாமல் அரண்மனைக்குக் கர்ப்பக்கிருகம் என்னும் பெயர் வழங்கியதில்லை. ஆனால், நச்சினார்க்கினியர் அரண்மனையைக் கருப்பக்கிருகம் என்று கூறுகிறார். இஃது எவ்வாறு பொருந்தும்? இவர் கூறியது தவறு என்று எனக்குத் தோன்றியது. அரண்மனைக்குக் கர்ப்பக் கிருகம் என்னும் பெயர் வழங்கியதை நான் கண்டதில்லை. நச்சினார்க் கினியர் இவ்வுரையில் தவறு செய்திருக்கிறார் என்பது தோன்றுகிறது. அப்படியானால் 'கருவொடு பெயரிய இல்' என்பதற்குச் சரியான பொருள் என்ன? இந்தக் கேள்விக்குறி என் மனத்தில் சில ஆண்டுகளாக இருந்தது. அண்மையில் சில நாட்களுக்கு முன்பு தான் இதற்கு விடை கண்டேன். இந்த விடை, திராவிட இனமொழியான கன்னட மொழியிலிருந்து கிடைத்தது!

கன்னடம், தமிழ்மொழியைப் போலவே மிகப் பழைய மொழி. வடமொழிக் கலப்பு கன்னடத்தில் ஏற்படுவதற்கு முன்பு கன்னடமும் தமிழும் ஒரே மொழியாக இருந்தன. அதனால்தான் பழங்கன்னட மொழியில் மிகப் பழைய தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன. கடைச்சங்ககாலத்தில் வழங்கி வந்து பிற்காலத்தில் வழக்கு வீழ்ந்துபோன பல தமிழ்ச் சொற்கள் பழங் கன்னட மொழியில் இருப்பதை இன்றுங் காண்கிறோம். ஹளெ கன்னட

(பழைய கன்னட) மொழியில் எழுதப்பட்ட பழைய இலக்கிய நூல்கள் இன்றும் உள்ளன. இந்தப் பழைய கன்னட நூல்களில் முற்காலத்தில் வழங்கி வந்த பல பழைய சொற்களும் காணப்படுகின்றன. ஆகவே 'கருவொடு பெயரிய இல்' என்பதற்குச் சரியான, நேரான பொருள் பழங்கன்னட இலக் கியத்தில் கிடைக்கும் என்று கருதி ஆராயத் தொடங்கினேன். நற்காலமாக நான் தேடிய பொருளைக் காணப் பெற்றேன். மட்டிலா மகிழ்ச்சியடைந்தேன்.

கரும்மாட (கருமாடம்) என்னுஞ் சொல் பழங்கன்னடத்தில் வழங்கி வந்துள்ளது. கருமாடம் என்பதற்குப் பெரிய வீடு என்பது பொருள். கரு - பெரிய. மாடம் - மாடிவீடு. மாடி வீடு, கருமாடம் என்று பழங்கன்னடத்தில் வழங்கப்பட்டிருந்தது. பழைய கன்னட மொழிப் புலவர்கள் இச்சொல்லைத் தங்கள் நூல்களில் வழங்கியுள்ளார்கள். கன்னட கவிகளில் பம்ப என்பவர் ஒருவர். இவர் இயற்றியுள்ள கன்னட பாரத்துக்குப் பம்ப பாரதம் என்பது பெயர். இந்தப் பாரதத்தில் இவர் கருமாட (4,10) என்னுஞ் சொல்லை ஆண்டிருக்கிறார். இந்தப் புலவர் இயற்றிய ஆதிபுராணத்திலும் கருமாட என்னும் சொல் (4,25) ஆளப்பட்டுள்ளது. அபிநவ பம்ப என்னும் மற்றொரு கன்னடப் புலவர் தம்முடைய இராமாயணத்தில் இக்கருமாடம் என்னுஞ் சொல்லை (3,26 வசனம், 3,28. 7, 62 வசனம். 10,36 வசனம். 11,149. 16,71 வசனம்) ஆண்டுள்ளார். கன்னட ஜைமினி பாரதத்திலும் (6,10,11,8,5,15,5) இச்சொல் வழங்கப்பட்டுள்ளது. இராஜசேகரி விலாசம் (13-1. வசனம் கப்பிகரகெய்பிடி என்னும் கன்னட நூல்களிலும் கருமாடம் என்னுஞ் சொல் காணப்படுகிறது.

கருமாடம் என்னுஞ் சொல் பிற்காலத்தில் கருவாடம் என்றும் திரிந்து வழங்கப்பட்டுள்ளது. மகரம் வகரமாகத் திரிகிற மரபுப்படி கருமாட என்பது கருவாட என்று திரிந்தது. எடுத்துக்காட்டாக: தாமரெ (தாமரை) என்பது தாவரெ என்றும் சமண என்பது சவண என்றும் கமுகு என்பது கவுங்கு என்றும் சிமுட்டு (கண் சிமுட்டுதல்) என்பது சிவுட்டு என்றும் திரிந்ததுபோலக் கருமாட என்பது கருவாட என்று பிற்காலத்தில் திரிந்து வழங்கிற்று.

இந்தச் சான்றுகளினாலே கருமாடம் என்னும் சொல் உண்டென்பதும் அதன் பொருள் மாடிவீடு என்பதும் நன்கு தெரிகின்றன. எனவே, நக்கீரர் தம்முடைய நெடுநல் வாடையில் கருவொடு பெயரிய இல் என்னும் தொடருக்கு அவர் கருதிய சொல் கருமாடம் அல்லது கருமாடி என்பது ஐயமறத் தெளிவாகத் தெரிகிறது. கருமாடம் என்னும் சொல் பிற்காலத்தில்

தமிழ்நாட்டில் வழக்கொழிந்துவிட்டபடியால், மிகப் பிற்காலத்தவரான நச்சினார்க்கினியர், இச்சொல்லுக்குக் கர்ப்பக்கிருகம் என்று தவறான, பொருத்தமற்ற உரையை எழுதிவிட்டார் என்பது நன்கு தெரிகிறது.

பழந்தமிழகத்தில் வழங்கிவந்த கருமாடம் அல்லது கருமாடி என்னுஞ் சொல் பிற்காலத்தில் மறைந்துவிட்டாலும், திராவிட இனமொழியாகிய கன்னடத்தில் இச்சொல் இலக்கிய நூல்களில் இன்றும் நின்று நிலவுகின்றது.

கருமாடி என்னுஞ் சொல் தமிழ்நாட்டில் இலக்கிய வழக்கில் மறைந்து போனாலும் இச்சொல் பேச்சு வழக்கில் நெடுங்காலம் வழங்கி வந்திருக்கிறது. பேச்சு வழக்கில் மட்டும் இருந்தபடியால் இச்சொல் சிதைந்து வழங்கிற்று. கருமாடி என்பது பேச்சு வழக்கில் கருமாறி என்று திரிந்து விட்டது. சில ஊர்களில் கருமாறியம்மன் என்னும் பெயருள்ள காளி (கொற்றவை) கோயில்கள் உள்ளன. கருமாடியம்மன் என்பதே கருமாறியம்மன் என்று திரிந்து வழங்குகிறது என்பது தெளிவு. பெரிய மாடமாக அஃதாவது பெரிய கோயிலாக அமைந்த ஆலயத்தில் எழுந்தருளியுள்ள அம்மன் என்பது இதன் கருத்து. அல்லது, கருமாடமாகிய அரண்மனையில் அமைந்த அம்மன் கோயில் என்பது இதன் கருத்தாகும். கருமாடி என்னுஞ் சொல் கருமாறி என்று பிற்காலத்தில் திரிந்துவிட்டது என்பதை அறிகிறோம்.

காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மன் கோயில் குளக்கரையின் மேல் ஒரு கருமாடி உண்டு. அது மூன்று நிலையுள்ள மாடக் கோயில். அக்கருமாடியில் இப்போது நின்றான் இருந்தான் கிடந்தான் என்னும் பெயருள்ள மூன்று திருமால் திருவுருவங்கள் எழுந்தருளியுள்ளன. முற்காலத்தில் இந்தக் கருமாடியில் மூன்று புத்த உருவங்கள் (நின்றான் இருந்தான் கிடந்தான் என்னும் அமைப்பில்) இருந்தன என்று புராணங்களினால் அறிகிறோம். இந்தக் கருமாடி, பிற்காலத்தில் கருமாறி என்று திரிந்து வழங்கப்பட்டது. இடைக்காலத்தில், உற்சவகாலத்தில், இந்தக் கருமாடியின் மேல்தளத்தி லிருந்து குளத்தில் குதிப்பது ஒரு காட்சியாக நடைபெற்றது. அக்காட்சியை மக்கள் திரண்டு வந்து கண்டனர். அதற்குக் கருமாறிப் பாய்ச்சல் என்பது பெயர். கருமாடிப் பாய்ச்சல் என்பது தான் கருமாறிப் பாய்ச்சல் என்று தவறாக வழங்கப்பட்டது.

14 அல்லது 15ஆம் நூற்றாண்டில் இருந்தவரான காளமேகப் புலவர் கருமாறிப் பாய்ச்சலைக் கூறுகிறார். அவர் காலத்தில் காஞ்சிபுரத்தில் இருந்த ஆறு சிறப்புச் செய்திகளை அவர் கூறுகிறார். அவர் கூறிய செய்யுள் இது:

"அப்பா குமரகோட்டக் கீரை, செவிலிமேட்
டுப் பாகற்காய், பருத்திக்குளநீர் - செப்புவா
சற் காற்றுக், கம்பத்தடியில் தவம், கருமா
றிப் பாய்ச்சல் யார்க்கும் இனிது" (தனிப்பாடல்)

காளமேகப் புலவர் காலத்தில் காஞ்சிபுரத்துக் குமர கோட்டத்துக் கொல்லையில் விளைந்த கீரையும் செவிலிமேட்டுக் கொல்லையில் விளைந்த பாகற்காயும் சுவையாக இருந்தனவாம். இப்போதும் மண்வளம் குன்றாமல் அவை சுவையாக இருக்கின்றனவா என்பது தெரியவில்லை. பருத்திக்குளம் இப்போது பாழடைந்துள்ளது. ஆகையால் அதன் நீர் இனிமையாக இருக்க முடியாது. செப்புவாசல் என்பது செப்பினால் செய்யப்பட்ட கோபுரவாயில். அங்குச் சென்று தங்கினால் காற்று இனிமையாக வீசிற்றாம். அந்தச் செப்பு வாசல் இப்போது இல்லை. கம்பத்து அடியில் தவம் என்பது திரு வேகம்பத்தில் உமையம்மையார் தவம் செய்தார் என்னும் புராணக்கதை. இந்தக் காட்சியை இன்றும் ஏகாம்பர ஈசுவரர் கோயிலில் காணலாம். கருமாறிப்பாய்ச்சல் என்பது, காமாட்சியம்மன் குளக்கரைமேல் உள்ள கரு மாடி என்னும் மாடக்கோவிலின் உச்சியிலிருந்து குளத்தில் குதித்துப் பாய் வது. கருமாடிப் பாய்ச்சல் என்பது காளமேகப் புலவர் காலத்தில் கருமாறிப் பாய்ச்சல் என்று வழங்கப்பட்டது.

கருமாடிப் பாய்ச்சலைக் கருமாறிப் பாய்ச்சல் என்று நாலாயிரத் திவ்வியப் பிரபந்த வியாக்கியானமும் கூறுகிறது. கருமாடி என்னும் சொல் வழக்கு கி.பி.14,15 ஆம் நூற்றாண்டுகளில் மாறுபட்டுக் கருமாறி என்று வழங்கியதை இதனால் அறிகிறோம்.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால் மறைந்துபோன ஒரு சொல்லையறியப் பெற்றோரும். 'கருவொடு பெயரிய இல்' என்று நெடுநல்வாடையில் நக்கீரர் கூறியது. நச்சினார்க்கினியர் தம்முடைய உரையில் கூறியதுபோலக் கர்ப்பக்கிருகம் அன்று என்பதும் அதன் பொருள் கருமாடி என்பதும் அறிந் தோம். கருமாடி என்பது அரண்மனையின் மாடிவீடு என்றும் அறிந்தோம். அன்றியும், கோயில் கட்டட வகைகளில் ஒன்றான மாடக்கோயிலையும் கருமாடி என்று வழங்கினார்கள் என்பதையும் கண்டோம். மிக மிகப் பிற்காலத்தில் கருமாடி என்பது கருமாறி என்று திரிந்து வழங்கியதையும் கண்டோம்.

## தோகை

இனி, தோகை என்னுஞ் சொல்லைப்பற்றி ஆராய்வோம். தோகை என்னுஞ் சொல் மிக மிகப் பழைமையானது. இக் காலத்தில் வழக்கிழந்து போன இந்தச் சொல் பழைய இலக்கியங்களிலும் சங்கச் செய்யுட்களிலும் காணப்படுகிறது. தோகை என்னும் சொல்லுக்கு மயில் என்றும் மயிற்பீலி (மயிலின்வால்) என்றும் பொருள் உண்டு. இப்பொருள்களில் இந்தச் சொல் சங்க இலக்கியங்களில் வழங்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாகச் சில வற்றைக் காட்டுவாம்.

'குடுமி நெற்றி நெடுமாத் தோகை காமர் கலவம் பரப்பி' (அகம்.194), 'காமர் பீலி ஆய் மயில் தோகை' (அகம். 378) 'தோகை மாட்சிய மடந்தை' (ஐங்குறு. குறுஞ்சி மஞ்ஞைப் பத்து.3) 'எரிமருள் வேங்கை இருந்த தோகை இழையணி மடந்தையிற் றோன்றும்' (ஷை 4) 'விரிந்த வேங்கைப் பெருஞ் சினைத் தோகை பூக்கொய் மகளிரிற் றோன்றும்' (ஷை 7.) 'கொடிச்சி கூந்தல் போலத் தோகை அஞ்சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பு' (ஷை 10.) 'அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை பூக்கொய் மகளிரில் தோன்றும்' (குறும். 26.) 'கறங்கிசை வெரீஇப் பறந்த தோகை அணங்குடை வரைப்பகம் பொலிய வந்திறுக்கும்' (அகம். 266). 'பறைக்கட் பீலித் தோகைக் காலின் துளுநாடு' (அகம். 15) 'அணிநிற இரும்பொறை மீமிசை மணிநிற உருவின தோகையு முடைத்தே' (ஐங்குறு. முல்லை. புறவணிபத்து.1.)

குறமகளிர் தினைப்புனத்தைக் காவல் காத்தனர். தினைக்கதிர் முற்றினபோது ஆடவர் வந்து கதிரை அறுத்தார்கள். அப்போது காவல் காத்த குறமகளிரும் தோகையும் (மயிலும்) கிளியும் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டனர் என்று பெருங்கதை கூறுகிறது. 'பொன்னேர் சிறுதினை விளைந்த புனந்தோறும் சாயலுங் கிளவியும் தம்மொடு நிகர்த்த தோகையும் கிளியும் தொக்கவை அகல' (இலாவாண காண்டம், மாசன மகிழ்ந்தது, 115-118). மேலும் அந்நூல் 'தோகையும் கிளியும் துன்னல் செல்லா' என்று கூறுகிறது. (உஞ்சைக் காண்டம், பாலை நிலங் கடந்தது. 45) 'தூவி மஞ்ஞை தோகை விரித் தகவ' (உஞ்சைக் காண்டம், ஊர் தீயிட்டது. 194).

மயிற் பறவைக்குத் தோகை என்னும் பெயர் வழங்கியதைக் கண்டோம். மயிலின் வாலுக்கும் தோகை என்று பெயர் வழங்கியதையுங்

கண்டோம். நாயின் வாலுக்கும் தோகை என்று பெயர் வழங்கியுள்ளது. நாயின் வாலைத் தோகை என்று பரணர் கூறுகிறார். 'வலஞ் சுரித் தோகை ஞமலி மகிழும்' என்று (அகம் 122) அவர் இச்சொல்லை வழங்கியுள்ளார். வலமாக வாலைக் குழைக்கும் நாய் குரைக்கிறது என்பது இதன்பொருள். இதில் நாயின் வாலைத் தோகை என்று கூறியுள்ளது காண்க. நாயின் வாலைத் தோகை என்று கூறியுள்ளபடியால், ஏனைய விலங்குகளின் வாலையும் தோகை என்று அக்காலத்தில் வழங்கினார்கள் போலும். பழங்கன்னட மொழியில் விலங்குகளின் வாலைத் தோகை என்று வழங்கி வந்தனர். கன்னட மொழியில் தோகெ என்றால் வால் என்பது பொருள். மிகப் பழங் காலத்தில் தோகை என்னுஞ் சொல் விலங்குகளின் வாலுக்குப் பெயராக வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. பிறகு, தோகை என்னுஞ் சொல் சிறப்பாக மயிலின் வாலைக் குறிக்க வழங்கப்பட்டது. பிறகு ஆகு பெயராய் மயில் பறவையைக் குறிக்கும் சொல்லாக வழங்கப்பட்டது என்பது தெரிகின்றது.

விலங்குகளின் வாலுக்கும் மயிலின் வாலுக்கும் பெயராக வழங்கி வந்த தோகை என்னுஞ்சொல், முற்றாத நெற்கதிருக்கும் பெயராக வழங்கி வந்துள்ளது.

> **"வளவயல்**
> **அழல் நுதி யன்ன தோகை யீன்ற**
> **கழனி நெல்லின் கவைமுதல் அலங்கல்"** - அகம். 13

என்று பெருந்தலைச் சாத்தனார் கூறுகிறார். பெருங்கதை என்னும் நூலை இயற்றிய கொங்குவேளும் தம்முடைய நூலில் இச்சொல்லை இப்பொருளில் வழங்கியுள்ளார். எருமை ஒன்று கதிர்விட்ட நெல் வயலில் புகுந்து சென்றதைக் கூறுகிற இடத்தில் இச்சொல்லை ஆள்கிறார். 'தோகைச் செந்நெல் சவட்டி' என்பது அவர் வாசகம். (மகத காண்டம், மகத நாடு புக்கது, 18)

எனவே தோகை என்னுஞ் சொல்லுக்கு விலங்குகளின் வால், மயிலின் வால், முற்றாத நெற்கதிர் என்னும் பொருள்கள் உள்ளன என்பதை அறிகிறோம்.

திராவிட இனத்தைச் சேர்ந்த துளுமொழியில் சோகெ என்றும் ஸோகெ என்றும் ஒரு சொல் வழங்குகிறது. இது தோகை என்னுஞ் சொல்லின் திரிபு.

பனை தென்னை கமுகு ஈந்து முதலான புறக்காழ் மரங்களின் ஓலைகளுக்குப் பெயராகத் துளு மொழியில் சோகெ என்னுஞ் சொல் வழங்கப்படுகிறது. எனவே தமிழ் கன்னடம் துளு முதலான திராவிட இன மொழிகளில் தோகை என்னும் சொல் வழங்கப்பட்டன என்பதும் இச்சொல்லின் பொருள் விலங்குகளின் வால், மயிலின் வால், முற்றாத நெற்கதிர், பழுக்காத ஓலை என்பதும் தெரிகின்றன.

**தூவி**

தூவி என்னும் இன்னொரு பழந்தமிழ்ச் சொல்லை ஆராய்வோம். பறவைகளின் இறகுக்குப் பெயராகத் தூவி என்னுஞ் சொல் வழங்கப்பட்டது. பருந்தின் உதிர்ந்த இறகை (தூவியை) அம்பின் பின் புறத்தில் கட்டுவது வழக்கம்.

> **"முது பாறு**
> **இறகு புடைத்திற்ற பறைப்புன் தூவி**
> **செங்கணை செறித்த வன்கண் ஆடவர்" - நற்றிணை. 329**

என்ற மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் கூறுகிறார். அன்னப் பறவையின் இறகும் தூவி எனப்பட்டது. 'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்' என்று திருக்குறள் கூறுவது காண்க அன்னப் பறவையின் தூவியினால் தலையணைகள் அமைக்கப்பட்டன. அன்னத் தூவியின் தலையணைமேல் ஒருவர் சாய்ந்திருந்ததைப் பெருங்கதை கூறுகிறது.

> **"வாவிப் புள்ளின் தூவி விம்மிட**
> **அணைமிசை யசைந்த அம்மென் சிறுபுறம்."**

(உஞ்சைக் காண்டம். வென்றி யெய்தியது 135-136( (வாவிப்புள் - அன்னப் பறவை.)

மயிலினுடைய இறகும தூவி என்று கூறப்பட்டது. 'தோகைத் தூவித் தொடைத்தார் மழவர்' (அகம். 249) 'தூவி மஞ்ஞை தோகைவிரித் தகவ' (பெருங்கதை. உஞ்சைக் காண்டம், ஊர் தீயிட்டது 194). இந்தச் சான்றுகளைக் கொண்டு பறவைகளின் இறகுக்குத் 'தூவி' என்னும் பெயர் வழங்கப் பட்டதை யறிகிறோம். எருதின் வால் குஞ்சத்தைத் 'தூவி' என்று

திருநாவுக்கரசர் கூறுகிறார். சிவபெருமான் நீண்ட வாலை (தூவியையுடைய எருதை ஊர்தியாகக் கொண்டுள்ளார் என்று அவர் கூறுகிறார்.

**"நீறேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி**
**ஏறேறும் பெருமானை என்மனத்தே வைத்தேனே"**

**- திருவேகம்பம் - 5.**

என்று பாடியுள்ளது காண்க. 'நெடுந்தூவி ஏறு' என்று இவர் கூறியது நீண்ட வாலின் நுனியில் உள்ள மயிர்கொத்தை உணர்த்துகிறது. இதனால் அடர்ந்த குச்சு மயிருக்குத் தூவி என்னும் பெயர் வழங்கப்பட்டதையறியலாம்.

**தூகி**

விவிலிய வேதத்தின் பழைய ஏற்பாட்டில் கூறப்படுகிற சாலமோன் என்னும் அரசன் கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். அவ்வரசன் தன்னுடைய நாவாய்களைக் கடல் வழியாக அனுப்பிப் பல பண்டங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தான் என்றும் அப்பண்டங்களில் பொன், வெள்ளி, யானைத் தந்தம், குரங்குகள், மயில்கள் முதலிய பொருள் களும் இருந்தன என்றும் விவிலிய நூல் கூறுகிறது. ஈபுரு மொழியில் எழுதப் பட்டுள்ள அந்த நூலில் மயில் தூகி என்று கூறப்படுகிறது. தோகை என்னும் தமிழ்ச் சொல்லே ஈபுரு மொழியில் தூகி என்றாயிற்று என்று டாக்டர் கால்டு வெல் ஐயர் தாம் எழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலில் (1915 ஆம் ஆண்டுப்பதிப்பு பக்கம் 89 - 91) முதன்முதலாகக் கண்டு எழுதியுள்ளார். தோகை என்னும் தமிழ்ச்சொல் அல்லது திராவிட மொழிச்சொல் ஈபுரு மொழியில் தூகி என்றாயிற்று என்று அவர் கூறியது சாலப் பொருத்தமாகும். தோகை என்பது மயிலின் பெயர் என்பதை மேலே கண்டோம்.

ஒருவேளை, தூவி என்னுந் தமிழ் சொல்லே ஈபுரு மொழியில் தூகி என்றாயிற்று என்றுங் கருதலாமோ? மயிலின் இறகுக்கும் தூவி என்னும் பெயர் வழங்கிற்று என்பதைக் கண்டோம். 'தோகைத் தூவித் தொடைத்தார் மழவர்' என்றும் 'தூவி மஞ்ஞை தோகைவிரித் தகவ' என்றும் மயிலின் தோகை தூவி என்று கூறப்பட்டதை மேலே கண்டோம். எனவே தூவி என்னுஞ் சொல் ஈபுரு மொழியில் தூகி என்றாயிற்று என்றுங் கருதலாம்.

*தோகையே தூகி என்றாயிற்று என்றாலும் தூவியே தோகையாயிற்று என்றாலும் இரண்டும் ஒன்றே. ஏனென்றால் தோகையும் தூவியும் தமிழ்ச் சொற்கள், அல்லது திராவிட இனமொழிச் சொற்கள். ஆகவே ஈபுரு மொழி விவிலியம் கூறுகிற தூகி தமிழ்நாட்டிலிருந்து அல்லது திராவிட நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருள் என்பதில் ஐயமில்லை.*

***- செந்தமிழ்ச் செல்வி - சிலம்பு 46.***

# *14. "தொறு" என்னும் சொல்லின் வரலாறு*

**துரு. தொறு**

*தொறு என்னும் சொல் சங்க இலக்கியங்களிலும் இடைக்கால இலக்கியங்களிலும் வழங்கி வந்தது. பிற்காலத்தில் இந்தச் சொல் வழக்கிழந்து போயிற்று. தொறு என்னும் சொல்லின் பழைய உருவம் துரு என்பது. துரு என்னுஞ் சொல் துருவை என்றும் வழங்கப்பட்டது. துரு அல்லது தொரு என்னும் சொற்களின் பொருள் பசு, எருது, மாடு என்பது. பிற்காலத்தில் இச்சொற்கள் செம்மறி ஆடு என்னும் பொருளிலும் வழங்கப்பட்டன. இச் சொற்கள் தமிழ் இலக்கியத்தில் எவ்வாறு பயின்றுள்ளன என்பதைப் பார்ப்போம்.*

***"நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்***
***தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்***
***போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரம்."***

***(அகம். 35:8-10)***

*(துரூஉ - துரு = செம்மறியாடு.)*

***"துருவின் அன்ன புன்தலை மகார்."***

***(மலைபடுகடாம். வரி. 217)***

*(செம்மறியாட்டினை ஒத்த புற்கென்ற தலையினையுடைய பிள்ளைகள் என்பது பொருள்.)*

***"தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்***
***கல்லென் கடத்திடைக் கடலின் இரைக்கும்***
***பல்யாட்டின் நிரை."***

***(மலைபடுகடாம். வரி. 414 - 416)***

*(தகர் = ஆட்டுக்கிடாய். துருவை = செம்மறியாடு. வெள்ளை = வெள்ளாடு).*

***"துராய் துற்றிய துருவை."***

***(பொருநர் ஆற்றுப்படை. அடி. 103)***

*(துருவை - துரு = செம்மறியாடு)*

***"இருவகைத் தொறு" (பெருங்கதை, உஞ்சைக்காண்டம், விழாக்கொண்டது. அடி. 215)***

*(இருவகைத் தொறு = ஆடு. மாடு என்னும் இரண்டு வகையான தொறு.)*

*இடைக்குலத் தலைவனாகிய நந்தகோபன் "தொறுவை ஆளும் தோன்றல்" என்று கூறப்படுகிறான். (சீவக சிந்தாமணி, கோவிந்தையார் - 66). இதில் பசுக்களும் எருதுகளும் தொறு என்று கூறப்பட்டன.*

***"நலத்தகை தொறு" என்பது சீவக சிந்தாமணி (கோவிந்தையார் - 69)***

***"உருவத் துருவின் நாள்மேய லாரும்.....மலைச்சுரம்"***

***(நற்றிணை. 192:4-5)***

*இதில் மலைச்சாரல்களில் மேயும் ஆடுமாடுகள் துரு என்று கூறப்பட்டன.*

**நிகண்டுகளில் "துரு, தொறு"**

*பிங்கல நிகண்டு இச்சொற்களைக் கூறுகிறது. ஆட்டின் பொதுப் பெயர் துருவை என்றும், செம்மறியாட்டின் பெயர் துருவை என்றும், துருவாட்டின் பெயர் துருவை என்றும் கூறுகிறது. "தொழுவும் ஆனிரையும் தொகுதியும் தொறுவெனல்" என்றும் கூறுகிறது. (மாப்பெயர் வகை. 169,170,171).*

*வீரமாமுனிவர் செய்த சதுரகராதியிலும் இச்சொற்கள் காணப்படு கின்றன. துருவை = செம்மறியாடு. தொழு = பசுக்கூட்டம் தொறு = பசுக் கூட்டம். தொறுவு = பசுக்கூட்டம் என்று கூறுகிறது: (சதுரகராதி Public Instruction Press, 1860)*

சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளை எழுதிய இலக்கியச் சொல் லகராதியிலும் இச்சொற்கள் காணப்படுகின்றன. துருவாடு = செம்மறியாடு. துருவு = செம்மறியாடு. துருவை = செம்மறியாடு. துரூஉ = செம்மறியாடு. தொறு = பசு நிரை, கூட்டம்.

இதனால் துரு, தொறு என்னும் சொற்கள் தமிழ் மொழியில் பழங்காலத்தில் வழங்கி வந்தன என்பது தெரிகின்றது.

**தொறுவிலிருந்து தோன்றிய சொற்கள்**

துரு. தொறு என்னுஞ் சொற்கள் ஆடுமாடுகளைக் குறிக்கும் சொற்கள் என்பதைக் கண்டோம். இனி, தொறு என்னுஞ் சொல்லிலிருந்து வேறு சில சொற்கள் தோன்றி வழங்கி வந்தன என்பதைக் காட்டுவோம். தொறுவர் என்பது இடையரைச் சுட்டுஞ் சொல். தொறுத்தியர் என்பது இடைச்சியரைச் சுட்டுஞ் சொல். ஆடுமாடுகளை வளர்ப்பதையே தொழிலாகக் கொண்ட வராகையினால் இடையர் தொறுவர். தொறுத்தியர் என்று பெயர் பெற்றனர். (இச்சொற்களைச் சீவக சிந்தாமணி கோவிந்தையார் இலம்பகம் 82- ஆம் செய்யுளில் காண்க.)

தொறுவர் = இடையர். தொறுவியர் = இடைச்சிகள் (அகராதி). தொறுத்தி = இடைச்சி. தொறுவர் = இடையர். முக்கியச்சொல் அகராதி)

தொறு என்னுஞ் சொல்லிலிருந்து தொழு தொழுவம் என்னுஞ் சொற்களும் தோன்றி வழங்கிவந்தன. (தொறு என்பதிலுள்ள அகரம் முகார மாக மாறியது). ''தொழுவிடை ஏறு'' என்று அதிகாரம் கூறுகிறது. (எடுத்துக் காட்டு: ஆய்ச்சியர் குரவை, 4) மாட்டுக்கொட்டிலில் உள்ள எருது என்பது இதன் பொருள்.

தொழுவுடை வரைப்பு'' என்று பெரும்பாணாற்றுப்படை (அடி கூறுகிறது. மாட்டுத் தொழுவங்களையுடைய ஊர்கள் என்பதன் இதன் பொருள்.

**கன்னடத்தில் ''துரு''**

துரு என்னுஞ் சொல் தமிழில் வழங்கியதுபோலவே. தமிழுடன் நெருங்கிய தொடர்புடைய பழங் கன்னடத்திலும் வழங்கி வந்தது. அதில்

பிற்காலத்தில் இச்சொல் வழக்கொழிந்து விட்டதுபோலவே கன்னடத்திலும் இச்சொல் பிற்காலத்தில் வழக்கொழிந்து போயிற்று. துரு என்பதற்குப் பழங் கன்னடத் தில் பசு, எருது என்பது பொருள். துரு என்னுஞ் சொல் வடிவாகத் துருகார, துரு என்னும் சொற்களும் பழங் கன்னடத்தில் வழங்கிவந்தன. இச்சொற் களின் பொருள் இடையன், இடையர் என்பது, தமிழ் வழங்கிய தொறுவர் என்னும் சொல்லுடன் துருகார, துருவளஎனும் சொற்களை ஒப்பிட்டுக் காண்க.

## ஐரோப்பிய மொழிகளில் "துரு"

ஐரோப்பாக் கண்டத்தில் கிரேக்க நாட்டிலும் இத்தாலி தேசத்திலும் முன்பு பேசப்பட்டுப் பிற்காலத்தில் பேச்சு வழக்கு ஒழிந்து உள்ள கிரேக்கம், இலத்தின் மொழிகளிலும் துரு என்னுஞ் சொல் வழங்கிவந்தது. தவ்ரஸ் *(Touros)* என்ற கிரேக்க மொழியிலிருந்து, தவ்ருஸ் *(Tourus)* என்று இலத்தின் மொழியிலும் இச்சொல் வழங்கப்பட்டது. இச்சொற்களின் பொருள் எருது என்று வழங்கியது.

ஐரோப்பாவில் பேசப்படுகிற செக்கு *(Czech)* பாஷையிலும் துரு என்னும் சொல் துர் *(Tur)* என்று வழங்கப்படுகிறது. பழைய ஜர்மனி (மேல் ஜர்மனி) பாஷையில் இச்சொல் *(Stior)* என்றும், புதிய ஜர்மனி (மேல் ஜர்மனி) பாஷையில் இச்சொல் *(Stier)* என்றும் வழங்கப்பட்டது.[1]

## செமிட்டிக் பாஷைகளில் "துரு"

செமிட்டிக் பாஷைகளிலும் துரு என்னும் சொல் பசு அல்லது எருது என்னும் பொருளில் வழங்கப்பட்டது. யூப்ரட்டிஸ் தைகிரிஸ் ஆறுகள் பாய்கிற நாட்டில் முற்காலத்தில் வழங்கிவந்த அஸிரிய பாஷையில் இச்சொல் வழங்கிற்று.

## சமஸ்கிருத மொழியில் "துரு"

வடமொழி எனப்படுகிற சமஸ்கிருத பாஷையில் எருது என்னும் பொருளில் துரு என்னும் சொல் இலக்கியச் சொல்லாக வழங்கப்படவில்லை. ஆரியபட்டர், வராக மிகிரர் என்னும் ஆசிரியர்கள் வான சாத்திரத்தைக்

---

*1. Ancient histroy of Western Asia, India and Creele by Fedrich Hrzmy. Translated of Poohazkn, p. 145.*

கிரேக்க பாஷையிலிருந்து மொழிபெயர்த்த போது, அவர்கள் கிரேக்க மொழிச் சொற்கள் பலவற்றை அப்படி அப்படியே எடுத்துத் தங்கள் மொழி பெயர்ப்பில் சேர்த்துக்கொண்டார்கள். அவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட்ட கிரேக்க மொழிச் சொற்களில் ''தவ்ரஸ்'' என்பதும் ஒன்று. தவ்ரஸ் என்னும் கிரேக்க மொழிச் சொல்லைத் தாவுரி என்று சமஸ்கிருதத்தில் எழுதியுள்ளனர். வான சாத்திரத்தில் மட்டும். இராசிகளைக் குறிக்கிற இடத்தில், தவ்ரஸ், என்பதை தாவுரி என்று வழங்கினார்களே தவிர, சமஸ்கிருத இலக்கியங்களில் தாவுரி என்னும் சொல் வேறெங்கும் வழங்கப்படவில்லை. கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் தாவுரி என்னும் சொல் சமஸ்கிருத வான சாத்திரத்தில் இடம்பெற்றது.

### ''துரு'' என்னும் சொல்லின் தோற்றம்

தமிழ், கன்னடம், கிரேக்கம், இலத்தின், செக்கு, ஜர்மனி, அஸீரியம் முதலிய பாஷைகளில் ''துரு'' என்னும் சொல் வழங்கி வந்ததைக் கூறினோம். இந்தச் சொல் ஆதியில் எந்தப் பாஷையில் தோன்றிற்று என்பதைப் பார்ப்போம்.

சிறிய ஆசியா (ஆசியா மைனர்) என்னும் நாட்டின் வடபகுதியில் தவ்ருஸ் மலைகள் இருக்கின்றன. செமிட்டிக் பாஷைக்காரர் இந்த மலைகளுக்கு இப்பெயரை இட்டார்கள். செமிட்டிக் பாஷையில் தவ்ருஸ் என்றால் எருது என்பது பொருள். இந்த மலைகளில் எருதுகள் அதிகமாக இருந்தபடியால் இந்த மலைகளுக்குத் தவ்ருஸ் மலைகள் என்று பெயரிட்டனர். இந்தப் பெயரே பிற்காலத்தில் ஏனைய பாஷைகளிலும் வழங்கப்பட்டது. எனவே தவ்ருஸ் என்னும் சொல்லின் மூல பாஷை செமிட்டிக் பாஷை என்பது தெரிகின்றது.

தவ்ரஸ் மலையைச் சார்ந்த இடங்களில் வாழ்ந்துவந்த ஹிட்டைட் (Hittites) மக்கள் புயல்காற்றுத் தெய்வத்தையும் அந்தத் தெய்வத்தின் ஊர்தியாகிய எருதையும் வணங்கினார்கள். தவ்ருஸ் மலைகளிலே ஆங்காங்கே எருதுகளுக்குச் சிறுசிறு கோவில்கள் அமைந் திருந்தன. இங்கிருந்துதான் எருது வழிபாட்டு வழக்கம் வேறுநாடுகளுக்குச் சென்றது என்பர். எகிப்து, பாபிலோனியம், கிரேக்கம் முதலிய நாடுகளுக்கு எருது வழிபாடு இங்கிருந்து சென்றது. இங்கிருந்துதான் எருது வழிபாடு இந்தியாவுக்கு வந்ததோ? சிவபெருமானுடைய ஊர்தி எருது. ரிஷப (எருது)

உருவம் இல்லாத சிவன் கோவில்கள் உண்டோ? (இது நிற்க.) தவ்ருஸ் என்னும் சொல்லைத் தொடர்வோம்.

செமிட்டிக் பாஷைச் சொல்லாகிய தவ்ருஸ் என்னுஞ் சொல் மற்றப் பாஷைகளில் சென்று வழங்கிற்று என்பது தவறாகாது. கிரேக்கம் உரோமகம் முதலிய ஐரோப்பிய நாட்டினர் பழங்காலத்தில் சின்ன ஆசியா நாடுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அந்தத் தொடர்பின் வழியாக இந்தச் சொல் ஐரோப்பிய மொழிகளில் கலந்திருக்கவேண்டும்.

**தமிழில் எங்கிருந்து வந்தது?**

சிறிய ஆசியாவில் வழங்கிய செமிட்டிக் பாஷைச் சொல்லாகிய தவ்ருஸ் என்பது சிறிய ஆசியாவுக்கு வெகு தூரத்தில் உள்ள தமிழ் மொழியில் எப்படி வந்து சேர்ந்தது? தமிழர் அக்காலத்தில் சிறிய ஆசியாவுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனரா? அந்த வாணிகத் தொடர்பு காரணமாக இச்சொல் தமிழில் வந்து புகுந்ததா என்னும் கேள்விக்கு விடை என்ன? இதுபற்றி நமக்கு இப்போது ஒன்றும் தெரியவில்லை.

ஆனால், இப்போது நமக்குக் கிடைத்திருக்கிற வரலாற்றை ஆதாரமாகக்கொண்டு ஆராய்ந்து பார்த்தால், இந்தச் சொல் கிரேக்க பாஷையிலிருந்து தமிழருக்குக் கிடைத்திருக்கவேண்டும் என்று ஐயமில்லாமல் கூறலாம். கி.மு. முதல் நூற்றாண்டு தொடங்கி கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையில் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டு காலம் யவனருக்கும் தமிழருக்கும் நெருங்கிய நேரடியான வாணிகத்தொடர்பு இருந்துவந்தது. யவனர் (கிரேக்கர் - ரோமகர்) நாவாய்களில் தமிழகத்துக்கு வந்து வாணிகம் செய்ததற்குப் பலசான்றுகள் உள்ளன. சங்கச் செய்யுள்களிலும் பெரிப்ளஸ் முதலிய கிரேக்க மொழி நூல்களிலும் யவன - தமிழ் வாணிகம் கூறப்படுகின்றது. யவன நாணயங்கள் (காசுகள்) தமிழகத்தில் பலவிடங்களில் ஏராளமாகக் கிடைந்திருப்பது யவன - தமிழ் வாணிகம் இருந்தது வலியுறுத்துகின்றது. புதுச்சேரிக்கு அடுத்த அரிக்கமேடு என்னும் கடற்கரையூரில் பழம்பொருள் ஆராய்ச்சியினர் அகழ்ந்தெடுத்துக் கண்ட யவனப் பண்டகசாலையும் இதனை மேலும் வலிவு பெறச்செய்கிறது.[2]

---

*2.'Arikamedu: An Indo-Roman Trading - station on the East Coast of India' 'Ancient India' No.2 1946, p. 17 - 124.*

கிரேக்கராகிய யவனர் தமிழ்நாட்டுத் துறைமுகப்பட்டினங்களில் தங்கி யிருந்ததும். அவர்கள் தமிழரசரின் சேவகராக அமர்ந்திருந்ததும் சங்ககாலத்து நூல்களினால் அறிகிறோம். யவன - தமிழ் வாணிகத்தொடர்பு காரணமாகச் சில கிரேக்கமொழிச் சொற்கள் தமிழிலும் சில தமிழ்சொற்கள் கிரேக்க மொழியிலும் கலந்தன.

அவ்வாறு தமிழில் வந்து கலந்த கிரேக்கச் சொற்களில் துரு என்பதும் ஒன்று. தவ்ரஸ் என்னும் கிரேக்கமொழிச் சொல் தமிழில் துரு என்று வழங்கிப் பின்னர் துருவை என்றாயிற்று. பிறகு அச்சொல் தொறு என்று வழங்கிற்று என்று கொள்வது தவ்றாகாது.

மத்திகை, கருங்கை, நாவாய், (மரக்) கலம், கன்னல் முதலிய கிரேக்கமொழிச் சொற்கள் தமிழில் சங்க காலத்திலேயே கலந்துவிட்டது போலவே. துரு என்னும் சொல்லும் அக்காலத்திலே கிரேக்க மொழியி லிருந்து தமிழில் கலந்திருக்கவேண்டும் என்று தெரிகின்றது. இச்சொல் கி.பி. முதல் நூற்றாண்டிலே தமிழில் கலந்திருக்கவேண்டும் என்பது, சங்க இலக்கியங்களிலே இச்சொல் பயிலப்பட்டிருப்பதுகொண்டு அறியப் படுகிறது.

தொல்காப்பியம் மரபியலில் பறவை விலங்குகளின் பெயர்களைக் கூறுகிற இடத்தில் துரு, தொறு என்னும் சொற்கள் காணப்படாத படியால், தொல்காப்பியர் காலத்தில் இச்சொற்கள் தமிழில் வழங்கப்படவில்லை என்பதும், பிற்காலத்திலேதான் வந்து சேர்ந்தன என்பதும் தெரிகின்றன.

இதுகாறும் ஆராய்ந்ததிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன வென்றால், ஆசியா மைனர் நாட்டில் வழங்கிய செமிட்டிக் மொழிச் சொல்லாகிய தவ்ருஸ் என்னும் சொல் கிரேக்க மொழியில் சென்று, பின்னர் கிரேக்க மொழியிலிருந்தும் கி.பி. முதல் நூற்றாண்டில் தமிழ் மொழியில் புகுந்தது என்பதே.

**"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு."** (355)

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (423)

- திருக்குறள்.

குறிப்பு: தமிழில் தொறு என்னும் இடைச் சொல் ஒன்று உண்டு. "குன்று தொறாடாலும்" திருமுருகாற்றுப்படை (217 அடி.) இந்தத் தமிழ்த் தொறுவும் நமது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட கிரேக்கமொழித் தொறுவும் வெவ்வேறு சொற்கள் என்பதை அறியவேண்டும்.

தொல்காப்பியத்தில் ஆளப்படுகிற ஓரை என்னும் சொல்லைச் சீலர் ஹோரா என்னும் கிரேக்கமொழிச் சொல் என்று கூறுவர். ஓரை என்னும் தமிழ்ச்சொல் வேறு. ஹோரா (ஓரை) என்னும் கிரேக்கச்சொல் வேறு. அதுபற்றி இங்கு ஆராய்ச்சி இல்லை.

**இரண்டாவது உலகத்தமிழ்க்கருத்தரங்கு நிகழ்ச்சிகள்,**
**மூன்றாம் தொகுதி - 1971**

# 15. "மெய்" என்னும் சொல் ஆராய்ச்சி

மெய் என்னும் சொல்லுக்கு உண்மை, உடம்பு என்னும் இரண்டு பொருள்கள் உண்டு. உடல், உடம்பு என்னும் பொருள் உள்ள மெய் என்னும் சொல்லைப் பற்றி இங்கு ஆராய்வோம் இச்சொல் இப்பொருளில் தமிழ் மொழியில் மட்டும் அல்லாமல், கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய திராவிட இன மொழிகளில் பண்டைக் காலத்தில் வழங்கிவந்தது. மெய் என்னும் சொல்லிலிருந்து தோன்றிய வேறு சில சொற்களும் வழங்கிவந்தன. இக் காலத்தில் இச்சொல் பேச்சுவழக்கில் பெரிதும் மறைந்துவிட்டது. பழைய இலக்கியங்களில் மட்டும் காணப்படுகிறது. இப்போது மெய் என்னும் சொல் மறைந்து அதன் இடத்தில் உடல், உடம்பு என்னும் சொற்கள் வழங்கப் படுகின்றன.

அரசனுக்குத் தீங்கு நேராதபடி அவனைக்காவல் புரிந்த வீரர்களுக்கு மெய்க்காவலர் என்னும் பெயர் இருந்தது. மெய்யைக் (உடம்பை) காவல் புரிந்ததால் இவர்களுக்கு இப்பெயர் ஏற்பட்டது. மலையாள மொழியிலும் மெய்க்காவல் என்னும் சொல் வழக்கில் உண்டு கன்னட மொழியில் மைகாவலு என்று வழங்குகிறது. மை என்பது மெய் என்பதன் திரிபு.

தன்னைத்தானே மறந்திருக்கும் நிலையைத் தமிழில் மெய்ம் மறத்தல் என்று கூறுவர். மலையாளிகள் மெய்மறக்க என்று மொழிவர். கன்னட மொழியினர் மைமறெ என்று வழங்குகின்றனர்.

மெய் என்னும் சொல் மலையாள மொழியில் மெயி, மை, மெ என்று திரிந்து வழங்குவது உண்டு மெய் என்னும் சொல்லிலிருந்து தோன்றிய சில சொற்கள் மலையாளத்தில் வழங்குகின்றன. அவை மெய்த்தொழில், மெய்ப்பிடித்தம், மெய்மேல்வரிக, மெய்யுறுதி, மெய்யாக்கம், மெய்யழகு முதலியன.

மெய்த்தொழில். என்பது உடற்பயிற்சி என்னும் பொருள் உடையது. மெய்ப்பிடித்தம் என்பது, உடம்பைத் தேய்த்துப் பிடித்தல் என்று பொருளுள்ளது. நோயாளியின் உடம்பில் மருந்து எண்ணெயைப் பூசித் தேய்த்துப் பிடித்துவிடுவதற்கு இச்சொல் வழங்குகிறது.

மெய்மேல் வரிக என்பது மெய்மேல் வருதல் என்னும் பொருள் உள்ளது (வரிக-வருதல்). உடம்பில் தெய்வம் ஏறி ஆடுவதை மருளாடுதல் என்று தமிழில் கூறுகிறோம் அல்லவா? தமிழர் மருளாடுதல் என்று கூறவதை மலையாளிகள் ''மெய்மேல்வரிக'' என்று கூறுகின்றனர். மருளாடுதல் என்பதை விட மெய் மேல் வருதல் என்பது பொருள் நிரைந்ததாக உள்ளது.

மெய்யுறுதி என்னுஞ்சொல் சாவு. இறப்பு என்னும் பொருள் உள்ளது. பிறந்தவை எல்லாம் இறப்பது (உடல் அழிவது) உறுதி என்னும் உண்மையை மெய்யுறுதி என்னும் சொல் நினைவுறுத்துவதுபோல் அமைந்திருக்கிறது. உயிர் எழுத்தின் உதவி இல்லாமல் தானே இயங்காத எழுத்தைத் தமிழர் மெய்யெழுத்து என்று பெயரிட்டு வழங்கினார்கள் என்பதை நினைவு கொள்வோம்.

மெய்யாக்கம் என்றால் உடல் உரம் என்பதுபொருள். மெய்யழகு என்பது உடலழகு என்னும் பொருள் உள்ளது.

மெய்யாரம், மையாரம், மெய்யாபரணம் என்னும் சொற்களும் மலையாள மொழியில் உண்டு இவற்றிற்கு நகை என்பது பொருள் மெய்யில் (உடம்பில்) அணியப்படுவதால் இப்பெயர் பெற்றன. மெய்யேறுக என்னும் சொல்லும் மலையாளத்தில் உண்டு. இதன் பொருள் ஆளைத் தாக்குதல், ஆளை அடித்தல் என்பது.

கன்னட மொழியில் மெய் என்னும் சொல் மை என்று திரிந்து வழங்கு கிறது என்று கூறினேன். மை(மெய்) என்னும் சொல்லிலிருந்து தோன்றிய சில சொற்கள் கன்னட மொழியிலும் உண்டு. மைகட என்பது ஒரு கன்னடச் சொல். இதற்குக் கைம்மாற்றுக் கடன் என்பது பொருள், மைகட என்பது தமிழில் மெய்க்கடன் என்றாகும். கன்னடத்தில் வழங்குகிற மைகட என்பதுபோலவே, மலையாளத்திலும் மெய்க்கடம் என்று ஒரு சொல் உண்டு. (கடம் - கடன்) மெய்யையே (உடம்பையே) ஈடாகக்கருதி கொடுக்கும் கடன் என்பது இதன் பொருளாக இருக்கக் கூடும்.

கன்னட மொழியில் மைகரெ என்னும் சொல் ஒன்று உண்டு (மை - மெய் கரெ - கரத்தல், மறைத்தல்). இதற்குத் தலைமறைவாக இருத்தல், ஒளிந்து இடுதல், மறைத்துவாழ்தல் என்றும் பொருள் உண்டு. இது பொருள் பொதிந்த அழகான சொல்.

கட்டமைந்த உடம்புள்ளவர்களைப் பார்த்து உடல் கட்டுள்ளவர் என்று கூறுகிறோம். இதற்குக் கன்னடத்தில் மைகட்டு (மெய் கட்டு) என்று கூறுவர்.

இந்திரனுக்கு உடம்பெல்லாம் கண் உண்டு என்று புராணக்கதை கூறுகிறது. கண்ணாயிரம் என்று பெயர் தமிழில் உண்டு. கன்னடத்தார் இந்திரனுக்கு மைகண்ண (மெய்கண்ணன் - உடம்பில் கண்ணையுடையவன்) என்று பெயர் இட்டுள்ளனர்.

மைகூடு (மெய்கூடுதல்). மையிளி (மெய் இழிதல்) என்னும் சொற் களும் கன்னடத்தில் உண்டு. உடல் பருத்தல், உடல் மெலிதல் என்னும் பொருளை உடையவை இச்சொற்கள்.

மைநெற என்னும் சொல் பொருள் நிறைந்த கன்னடச் சொல். பெண்கள் வயதடைவதை இச்சொல் சுட்டுகிறது. மைநெறெ என்பது மெய்நிறை என்பதாகும். உடல் நிறைதல் என்பது இதன் பொருள். பெண்கள் உடல் நிறைந்து முழுவளர்ச்சியடைவதைக் குறிக்கிறது இந்த அழகான பொருள் பொதித்த சொல். ஆண்களும் முழுவளர்ச்சியடைந்து மெய்நிறைகிறார்கள். ஆனால், ஆண்களின் முழுவளர்ச்சி, பெண்களின் முழு வளர்ச்சிபோல, வெளிப்படையாகத் தெரிவதில்லை. பெண்களுக்கு மட்டுமே உடல் வளர்ச்சி வெளிப்படையாகத் தெரிகிறது. ஆகவே, பெண்கள் முழு வளர்ச்சியடைந்து மணப்பருவம் அடைந்தார்கள் என்பதை மை நெறெ (மெய்நிறை) என்னும் சொல் நன்றாகக் குறிப்பிடுகிறது.

மூத்திரம் என்னும் சொல்லைத்தமிழில் இப்போது வழங்குகிறோம். சிறு நீர் என்றும் கூறுகிறார்கள். மூத்திரம் என்பது வடமொழி. கன்னடத்தில் மைநீரு என்று ஒரு சொல் உண்டு. மெய்நீர் என்பதன் திரிபு மைநீரு என்பது இதை முன்னீரு என்றும் கன்னடத்தில் வழங்குகிறார்கள். சிறுநீர், மூத்திரம் என்னும் பொருளுடைய மைநீரு(மெய்ந்நீர்), முன்னீரு என்பன நல்ல திராவிடச்சொற்கள். முன்னீர் என்பது மைநீரு என்பதன் திரிபு. (முந்நீர் என்று கடலுக்குத்தமிழில் ஒரு பெயர் உண்டு. கன்னடத்திலும் கடல் என்னும் பொருளில் முந்னீர் என்னும் சொல் வழங்குகிறது.) ஆனால், சிறுநீர், மூத் திரம் என்னும் பொருளில் முன்னீரு என்று வழங்குகிற கன்னடச்சொல், உண்மையிலே மைநீரு(மெய்ந்நீர்) என்னும் சொல்லின் திரிபென்று தோன்றுகிறது.

**தமிழ்ப்பொழில் - துணர் 36**

## 16. "பாவாடை"

சில திங்களுக்கு முன்பு நண்பர்களோடு சிதம்பரம் சென்றிருந்தேன். தாண்டவப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருச்சிற்றம்பலக் கோயில் அமைப்பு மற்றக் கோயில் அமைப்பைவிட மாறுபட்டது. தில்லைச் சிற்றம் பலக் கட்டட அமைப்பு மகாபலிபுரத்து "பீமன் இரதம்" என்னும் கட்டட அமைப்பைப் போன்றது. அதாவது நீண்ட சதுரமான மண்டபமும், படகைக் கவிழ்த்து வைத்ததுபோன்ற விமானமும் (கூரையும்) உடையது. இப்படிப் பட்ட கட்டடங்களுக்குச் சாலாகார விமானம் என்பது பெயர். தில்லைச் சிற்றம்பலத்தின் மற்றொரு சிறப்பு என்னவென்றால், இது ஆதி காலத்தில் இருந்ததுபோலவே இப்போதும் மரத்தினால் அமைந்திருப்பதே. பண்டைக் காலத்தில் நமது நாட்டில் மரத்தினாலும் கோயில்களை அமைத்தார்கள். இப்போது நமது நாட்டில் மரத்தினால் அமைத்த கோயில் கட்டடங்கள் மிகச்சில உள்ளன; அவற்றுள் தில்லைச் சிற்றம்பலமும் ஒன்று.

தில்லைச் சிற்றம்பலத்துக்கு அருகில் உள்ள இன்னொரு அம்பலமும், பண்டைக் காலத்தில் மரத்தினால் அமைந்திருந்தது. அது பிற்காலத்தில் கருங்கல்லினால் கற்றளியாகக் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கருங்கல் கட்டட அமைப்பை உற்றுநோக்கினால், இது, பழைய மரக்கட்டட அமைப்பைப் பின்பற்றியே கட்டப்பட்டிருக்கிறது என்று புலனாகும்.

நண்பர்களுடன் இந்தக் கட்டட அமைப்புகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, சிதம்பர வாசி ஒருவர், ''பாவாடை உற்சவம் நடக்கப் போகிறது. பார்த்துவிட்டுப் போகலாமே'' என்று கூறினார். பாவாடை என்றால், சிறுமிகள் உடுத்துகிற உடை அல்லவா? ஆகையால் பாவாடை உற்சவம் என்றால் தில்லைச் சிவகாம சுந்தரிக்குப்பட்டுப் பாவாடை உடுத்து வார்கள் போலும் என்று எண்ணினேன். திருப்பாவாடைச் சிறப்பு நடைபெற நெடுநேரம் ஆகும் எனத் தெரிந்த படியால் நாங்கள் வெளிவந்து விட்டோம். அப்போது கோவிலில், சில ஆட்கள், பஞ்சாமிர்தம் போன்ற பழங்கள் நிறைந்த ஒரு பெரிய மரத்தொட்டியைச் சுமந்து கொண்டு போனதைக் கண்டோம். திருப்பாவாடை சிறப்புக்காக பஞ்சாமிர்தம் போகிறது என்று எண்ணினோம்.

திருப்பாவாடைச் சிறப்பு என்று கேட்டது முதல் என்னுடைய மனதில் ஒரு ஐயம் குடிகொண்டது. அந்த ஐயம் நெடுநாள் தொடர்ந்து நின்றது. திருப் பாவாடைச் சிறப்பு என்று இந்தக் கோயிலில்தானே கேள்விப்படுகிறோம். மற்றக் கோயில்களில் இந்தப் பெயரைக் கேள்விப்படவில்லையே. திருப் பாவாடை என்றால் என்ன? அது பாவாடையைக் குறிக்கிறதா; அல்லது வேறு ஏதேனும் அர்த்தம் உண்டா? என் மனம் நெடுநாள் சிந்தித்துக் கொண்டி ருந்தது. நாட்கள் சென்றன.

ஒருநாள் எதையோ ஆராய்வதற்காகத் தென்இந்திய சாசனப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அப்போது திருப்பாவாடைச் சிறப்பு என்னும் சொற்றொடரைக் கண்டேன். கண்டதும், முன்னமே மனத்தில் தங்கியிருந்த ஐயம் மேலேழும்பிற்று. அந்தச் சாசனத்தைப் படித்தேன். அது தில்லை நடராசர் கோயிலில் இருக்கும் சாசனந்தான். சகல புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ அவனியாளப் பிறந்தாரான கோப்பெருஞ் சிங்கதேவற்கு யாண்டு ஆறாவதில் அந்தச் சாசனம் எழுதப்பட்டது. இச்சாசனத்தில் சில செய்திகள் கூறப்படுகின்றன. அவற்றுடன் ''திருப்பாவாடைப் புறம் திரு நாமத்துக் காணியாகவும்'' என்றும், ''நிலம் அறுமாவரையும் திருப் பாவாடைப் புறத் திருநாமத்துக் காணியும் தில்லைநாயகன் பெரும் பண்டாரத் துக்கு முதலாகப் போனகப் பழநெல்லு அளக்கவும்'' *(S.I.I. Vol. XII No. 149)* என்றும் எழுதப்பட்டிருந்தது. இதிலிருந்து அந்தக் காலத்திலேயே திருப் பாவாடைச் சிறப்புக்காக நிலம் தானம் செய்யப்பட்டிருந்தது என்பதை யறிந்தேன்.

அதே கோயிலில் இருக்கிற இன்னொரு சாசனம், திருப்பாவாடைக் காகக் கொடுக்கப்பட்ட நிலத்தைக் குறிப்பிடுகிறது (S.I.I. Vol. XII No. 154). இன்னொரு சாசனமும் அதே நிலத்தைக் குறிக்கிறது (S.I.I. Vol. XII No. 172). ஆனால் இந்தச் சாசனம் திருப்பாவாடை என்று கூறாமல் திருப் பாவடை என்று கூறுகிறது. இதைக் கண்டபிறகு எனக்கு ஒரு ஐயம் ஏற் பட்டது. அதாவது, பாவாடையா? அல்லது பாவடையா? இதில் எது சரியான வாசகம் என்னும் ஐயம் ஏற்பட்டது. பாவாடை என்றால் சிறுமிகள் உடுத்தும் ஆடை. பாவடை என்றால் பொருள் என்ன? பாவடை என்பது பிசகாக எழுதப்பட்ட வாசகமாக இருக்குமோ?

ஷை கோயிலில் உள்ள இன்னொரு சாசனம் (S.I.I. Vol. XII No.171) இவ்வாறு கூறுகிறது. "திருத்தைப்பூசத் திருநாளிலே திருப்பாவாடைச் சிறப்பாக அமுதுபடிக்கு ஊர் இளங்காலாலே பதின் கலனுக்குப் போனகப் பழவரிசியும் இருகல மணிப்பருப்பும் நாலு நிறை சர்க்கரையும் நூறு தேங்காயும் பத்துப் பலாக்காயும் இச்.... தொறும் இருநூறு வழுதிலைக்காயும் குலோத்துங்கச் சோழத் திருமடைப் பள்ளி பண்டாரத்திலே முதலிடவும் கயிலாய தேவன் திருப்பாவாடைப் புறம் என்று திருமாளிகையிலே கல் வெட்டிவித்து" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதிலிருந்து தெரிகிறது என்ன வென்றால், அரிசி, பருப்பு, சர்க்கரை, தேங்காய், பலாப்பழம் முதலிய வற்றைக்கொண்டு சர்க்கரைப் பொங்கல் போன்ற திருவமுது செய்வதற்கு நிலம் தானம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், திருப்பாவாடைக் காகப் பட்டு ஆடை வாங்குவதுபற்றி இதில் ஒன்றும் குறிப்பிடவில்லை.

இந்தச் சாசனத்தைப் படித்தபோது, நான் அன்று சிதம்பரக் கோயிலிலே பெரிய மரத்தொட்டியில் கண்ட பஞ்சாமிர்தம் போன்ற பொருள், இந்தச் சாசனத்தில் கூறப்படுகிற சர்க்கரைப் பொங்கல் போன்றதோ என்ற எண்ணம் உண்டாயிற்று. சிவகாம சுந்தரிக்குத் திருப்பாவாடைச் சிறப்புச் செய்து சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்வது வழக்கம்போலும் என்று கருது கிறேன். ஆனால், திட்டமாக ஒன்றும் விளங்கவில்லை மற்றும் சில திங்கள் கழிந்தன.

ஒருநாள், சென்னை திருவல்லிக்கேணி பைக்ராப்டு ரோடு வழியாகக் கடற்கரைக்குப் போய்க் கொண்டிருந்தேன். நடைபாதையில் (பிளாட்பாரத் தில்), பழைய புத்தகங்களை விற்பனைக்காக வைத்திருந்தார்கள். சற்று நின்று

அந்தப் பழைய புத்தகங்களை நோக்கினேன். அவற்றில், ''யாழ் வல்லோனாகிய நாரத முனிக்குச் சிவபெருமான் உரைத்த ஸ்ரீரங்க மகத்துவம்'' என்னும் புத்தகம் என் பார்வையில் பட்டது. அது 1878-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட குஜிலிக் கடைப் பதிப்பு. புராணக் கதைகளில் நம்பிக்கை இல்லாவிட்டாலும், அவற்றிலும் நூற்றுக்கு ஒன்று ஏதேனும் புதிய செய்திகள் கிடைக்குமாகையால், இத்தகைய நூல்களை நான் படிப்பது உண்டு. ஆகவே, சிறு விலை கொடுத்து இந்தப் புத்தகத்தை வாங்கினேன்.

கடற்கரைக்குச் சென்று மணலில் அமர்ந்த பிறகு இந்த ஸ்ரீரங்க மகத்துவத்தைப் பிரித்து அதன் ஏடுகளைப் புரட்டினேன். அப்போது ஸ்ரீரங்க நாதருக்கு என்னென்ன உணவு வகைகளைப் படைத்தார்கள் என்று கூறும் பகுதி கண்ணில் பட்டது. மனதிற்குள்ளே படித்தேன்.

''.....பொங்கல், சர்க்கரைப் பொங்கல், அக்கார வடிசில், ததியோதனம், புளியவரை, எள்ளவரை, மிளகவரை, கடுகவரை, தருவி சாதம் என்று சொல்லப்பட்ட முப்பத்திரண்டுவகைப் பொங்கலும், தோசை, வடை, அப்பம், எள்ளுருண்டை, அதிரசம், மனோகரம், சுகியம், தேன்குழல், கோதுமை ரொட்டி, யானையடி யப்பம் முதலான கச்சாய வர்க்கங்களும்...துய்ய நெய், புத்துருக்கு நெய், கற்கண்டு, சீனி சர்க்கரை முதலானதுகளும் சொரிந்து கமகமவென்று பரிமளிக்கும்படி திருப்பாவடையும் செய்து....''

இதைப்படித்த உடனே புதியதோர் ஊக்கம் உண்டாயிற்று. காரணம் என்ன என்றால் திருப்பாவடை என்னும் சொல்லைக் கண்டதனால்தான் மறுபடியும் அதைப் படித்தேன். ''துய்ய நெய், புத்துருக்கு நெய், கற்கண்டு, சீனி சர்க்கரை முதலானதுகளும் சொரிந்து கமகம வென்று பரிமளிக்கும்படி திருப்பாவடையும் செய்து'' என்று எழுதப்பட்டிருந்தது.

பேச்சு வழக்கில் ''திருப்பாவாடை'' என்று சொல்லப்படுகிறது. கல்வெட்டுச் சாசனத்திலும் ''திருப்பாவாடை'' என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டிருக்கிறேன். ஒரு சாசனத்தில் மட்டும் ''திருப்பாவடை'' என்று எழுதியிருந்ததையும் கண்டேன். அதனால் திருப்பாவாடை என்பது சரியான சொல்லா திருப்பாவடை என்பது சரியான சொல்லா என்னும் ஐயமும் ஏற்பட்டிருந்தது. பாவடை என்பதற்குப் பொருள் இல்லை. பாவாடை

என்பதுதான் சரியான சொல் என்னு எண்ணியிருந்த எனக்கு இந்த ஸ்ரீரங்க மகத்துவத்தில் திருப்பாவடை என்று எழுதியிருப்பதும், திருப்பாவடை என்பது துய்ய நெய், புத்துருக்கு நெய், கற்கண்டு, சீனி சர்க்கரை முதலியவை களைச் சொரிந்து கமகமவென்று வாசனை வீசுகிற இனிப்பான தின்பண்டத் திற்குப் பெயர் என்பதும் தெரிந்தது. ஆகவே, திருப்பாவாடைச் சிறப்பு என்றால், பட்டுப் பாவாடை உடுத்தும் உற்சவம் அல்ல; திருப்பாவடை என்னும் இனிப்பு-பலகாரம்; இந்த இனிப்புப் பலகாரம் தில்லை நடராசப் பெருமானுக்கும் திருவரங்கம் அரங்கநாதருக்கும் தொன்றுதொட்டு நிவேதனம் செய்யப்பட்டது என்பதைச் சந்தேகம் இல்லாமல் தெரிந்து கொண்டேன். திருப்பாவாடை என்பது தவறான சொல் என்றும் திருப் பாவடை என்பதே சரியான சொல் என்றும் உணர்ந்தேன்.

ஆனால், பாவடை என்று ஏன் பெயர் வந்தது? பாவடை என்றால் பொருள் என்ன? என்னும் ஆராய்ச்சியில் புகுந்தேன். திருப்பாவடை என்பது இனிப்புப் பண்டம். அது சர்க்கரைப் பொங்கல் அல்ல; சர்க்கரைப் பொங்கலை விட விசேஷமானது. இது செய்வதற்கு ''பதின்கலம் போனகப் பழய அரிசியும், இருகலம் மணிப்பருப்பும், நாலு நிறைய சர்க்கரையும் நூறு தேங்காயும், பத்துப் பலாப்பழமும்'' வேண்டியருந்ததைச் சிதம்பரக் கோயில் சாசனத்தில் கண்டேன். மேலும் திருபாவாடைக்கு 'துய்ய நெய், புத்துருக்கு நெய், கற்கண்டு, சீனி சர்க்கரை முதலியவைகளும், அதில் சேர்க்கப்பட்டது என்று ஸ்ரீரங்க மகத்துவம் கூறுகிறது. இதற்குத் திருப்பாவடை என்பது பெயர். ஏன் பாவடை? பாவடை என்றால் என்ன? அதை எப்படிப் பிரிப்பது? பாவு + அடை = பாவடை. ஒகோ பாகடையாயிருக்குமோ? பாகு + அடை = பாகடைசரிதான். பாகடை என்பதுதான் பாவடை என்று திரிந்திருக்க வேண்டும். பிறகு பாவடை என்பது பாவாடையாயிருக்கும் என்று எனக்குள் முடிவு செய்தேன்.

வெல்லம், சர்க்கரை, கற்கண்டு இவற்றை நெய்யுடன் கலந்து சேர்த்துப் பாகு காய்ச்சினால் மிக இனிமையாகவும் கமகமவென்று பரிமளிக்கவும் செய்யும். நெய்யுடன் சர்க்கரையைக் கலந்து பாகு காய்ச்சி அதனுடன் வறுத்த கடலைப் பருப்புமாவைக் கலந்து பாகு செய்கிறார்கள் அல்லவா? இந்த இனிப்புப் பொருளை மைசூர் பாக்கு என்று தவறாகப் பெயர் வழங்கு கிறார்கள் அல்லவா? அதிரசம் செய்வதற்கும் வெல்லப்பாகு கிளறு

கிறார்களே அதுபோல, புத்துருக்கு நெய்யுடன் கற்கண்டு பொடியைக் கலந்து பாகு காய்ச்சி, துய்ய நெய்யுடன் சர்க்கரையைக் கலந்து பாகு காய்ச்சி வைத்துக் கொண்டு, பழைய அரிசியுடன் மணிப்பருப்பையும், சர்க்கரையையும் கலந்து பலாப்பழத்தைத் துண்டு துண்டாக நறுக்கிப் போட்டுச் சர்க்கரைப் பொங்கல் செய்து முந்திரிப் பருப்பும் திராக்ஷையும் இட்டு நெய்விட்டுக் கிளறி, இதனுடன் முன்பு காய்ச்சி வைத்த கற்கண்டு பாகையும் சர்க்கரையும் கலந்து பாகடை செய்தால் அதற்குப் பாகடை என்று பெயர் சூட்டாமல் வேறு என்ன பெயர் சூட்டுவது!

இவ்வாறு இனிப்புப் பாகுகளையும் ருசியுள்ள சுவைப் பொருள்களையும் அடைத்து (கலந்து) செய்யப்பட்ட பாகடை அதன் பெயருக்கேற்ப மிக இனியசுவையுள்ள சிற்றுண்டியாகத்தான் இருக்கும். இந்தப் பாகடை என்னும் பெயர் பேச்சு வழக்கில் பாவடையாகிக் காலப்போக்கில் பாவடை, பாவாடையாகத் திரிந்து மனத்தில் பல ஐயங்களை உண்டாக்கி இவ்வளவு நீண்ட ஆராய்ச்சிக்கு இடங் கொடுத்துவிட்டது. இந்தச் சிறு சொல், இத்தனைநாள் மூளைக்கு வேலை கொடுத்தது.

பாகடை, பாவடை, பாவாடை! இத்தனை நாட்களாக என் மூளைக்கு வேலை கொடுத்து பாவாடைக்குள் ஒளிந்த பாகடையே! நீ நெடுங்காலம் வாழ்க. தில்லைச் சிற்றம்பலத்திலும் திருவரங்கம் பெரிய கோயிலிலும் மாத்திரம் அல்லாமல், தைப் பொங்கல் பண்டிகையில் எல்லா வீடுகளிலும் நீ வளர்க! நன்கு பொலிந்து வளர்க!

**மாணவர் மன்றம் வெள்ளிவிழா மலர் 1957**

# 17. கந்தியார்

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய சீவக சிந்தாமணி புலத்துறை முற்றிய பேரறிஞர்களால் போற்றப்படும் சீரிய நூல் என்பது தமிழுலகம் அறிந்ததொன்றே. பல்லோராலும் பாராட்டப்படும் இச் சிந்தாமணியில் 445 பாடல்கள் இடைச் செருகலாகப் பிற்காலத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. புதிதாகப் புகுத்தப்பட்ட இடைச்செருகற் பாக்கள், நூலாசிரியராகிய திருத்தக்க தேவரின் நடையினின்று வேறுபிரிக்கக் கூடாதனவாய் இரண்டறக் கலந்து தோன்றும் சிறப்பு வாய்ந்தனவாக விருத்தலின், இன்ன பாக்கள்தாம் இடைச்செருகல்

இன்னபாக்கள்தாம் பண்டைய முதல்பாக்கள் என்று பிரித்தறியக் கூடாதன வாய் இருக்கின்றன. இவ்வளவு திறமையுடன் இடைச்செருகற்பாக்களை இயற்றி நுழைத்தவர் கந்தியார் என்னும் பெரியார் என்று சொல்லுகிறார்கள். இந்தக் கந்தியாரைப்பற்றி யாதொரு செய்தியும் தெரியவில்லை. ஆகவே, இந்தக் கந்தியார் என்பவர் யார்? எந்தச் சமயத்தவர்? ஆண்பாலரா, பெண் பாலரா? என்பனவற்றை ஆராய்வோம்.

கந்தியார் என்பது ஆர் விகுதிபெற்ற கந்தி என்னும் சொல். இது கௌந்தி என்னும் சொல்லின் திரிபு என்று தோற்றுகிறது. அன்றியும் கௌந்தி அல்லது கந்தி என்பது சமணரின் பெண்துறவிகளுக்குப் பெயர் என்றும் தெரிகிறது. நிகண்டு நூல்கள் இதனை வலியுறுத்துகின்றன.

"நந்திய பிண்டிவாமன் நன்னெறி வழாது நோற்பாள்
கந்தியே அவ்வை அம்மை கன்னியே கௌந்தி என்ப"

(சூடாமணி நிகண்டு - 2-வது: மக்கட்பெயர்த் தொகுதி)

இதனால் கந்தி, கௌந்தி என்னும் சொற்களும் அவ்வை, அம்மை, கன்னி என்னும் சொற்களும் அருகக்கடவுளைத் தொழும் அருந்தவப் பெண் பெயர் என்பது தெரிகிறது.

இனி, சூடாமணி நிகண்டிற்கும் முற்பட்ட பிங்கல நிகண்டும் இதையே கூறுகிறது:

"பைம்மையும் கௌந்தியும் அருந்தவப் பெண்பெயர்"

(பிங்கலம் - ரு-வது: ஆடவர் வகை.)

இதற்கும் முற்பட்ட சேந்தன் திவாகரமும் இதனையே வற்புறுத்துகிறது:

"பைம்மையும் கௌந்தியும் அருந்தவப் பெண்பெயர்"

(திவாகரம் மக்கட்பெயர்த் தொகுதி)

சூடாமணி நிகண்டிலும், ஏனைய பிங்கலம், திவாகரம் என்னும் நிகண்டுகளிலும் இச்சொல்லைப் பற்றிக் காணப்படும் வேற்றுமை என்னவென்றால், முற்கூறப்பட்ட சூடாமணி நிகண்டில் கந்தி, கௌந்தி என்னும் இரண்டு சொற்கள் கூறப்படுகின்றன; கூறப்பட்ட பிங்கலம்

திவாகரங்கள் கௌந்தி என்னும் ஒரு சொல்லைமட்டும் கூறுகின்றன; கந்தி என்னும் சொல்லைக் கூறவில்லை இதனால் நாம் அறியக்கிடப்பது என்ன வென்றால் கௌந்தி என்னும் சொல் முற்காலத்தில் வழங்கி வந்தது என்பதும், பிற்காலத்து அச்சொல் கந்தி என்று மருவி வழங்கப்பட்டது என்பதுமேயாம். சிலப்பதிகாரக் காப்பியத்திலும் கௌந்தியடிகள் என்னும் சமண சமயத்துறவியாகிய ஓர் அம்மையாரைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது இங்கு நினைவு கூரற்பாலது. அந்தக் காப்பியத்தில் கௌந்தியடிகள் என்று கூறி யிருப்பதும் கந்தி என்று ஓரிடத்தும் கூறாதிருப்பதும் கருதத்தக்கது. எனவே, கௌந்தி என்னும் சொல்லிலிருந்து தான் கந்தி என்னும் சொல் பிற்காலத்தில் மருவி வழங்கப்பட்டதென்று அறியக்கிடக்கின்றது. நிற்க.

கௌந்தி, கந்தி என்னும் சொற்கள் சமணசமயப் பெண்பாற்றுறவி களுக்கு மட்டுந்தான் பொருந்துமோ? ஏனைய சமயப் பெண்பாற்றுறவி களுக்குப் பொருந்தாதோ?

இந்த வினாவுக்கு விடை என்னவென்றால், இப்பெயர்கள் சமண சமயத்துப் பெண்பாற்றுறவிகளுக்கு மட்டுந்தான் பொருந்துமேயன்றி, ஏனைய சமயப் பெண்பாற்றுறவிகளுக்குப் பொருந்தாது என்பதே. ஏனென்றால், இந்துமதத்தைச் சேர்ந்த சைவ வைணவ சமயங்களில் பெண் பாற்றுறவிகள் இல்லை. ஆனால், பௌத்த சமயத்தில் பெண்பாற்றுறவிகள் உண்டு. தமிழ் நாட்டிலும், பண்டைக்காலத்தில் பௌத்த மதம் செல்வாக்குப் பெற்றிருந்தபோது, பௌத்த சமயப் பெண்பாற்றுறவிகள் இருந்தார்கள் என்று மணிமேகலை என்னும் காவியத்தினால் அறிகிறோம். எனினும், அவர் களுக்குப் பிக்குணிகள் (பிக்ஷுணிகள்) என்ற பெயர் வழங்கப்பட்டிருந்ததே யன்றி கௌந்தி அல்லது கந்தி என்னும் பெயர்கள் வழங்கப்படவில்லை.

**"நந்திய பிண்டிவாமன் நன்னெறிவழாது நோற்பாள்**
**கந்தியே அவ்வை அம்மை கன்னியே கௌந்தி என்ப"**

என்று, சூடாமணி நிகண்டில் அவ்வை, அம்மை, கன்னி என்னும் சொற்களும் சமண சமயப் பெண்பால் துறவிகளைக் குறிக்கும் என்று கூறியிருப்பதை ஒப்புக்கொள்வதற்கில்லை. ஏனென்றால், சங்க காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் இருந்த அவ்வையார்கள் சமயசமயத்தைச் சேர்ந்த வர்கள் அல்லர். வயது முதிர்ந்த பெண்பாலர் எந்தச் சமயத்தவராயிருந்தாலும் அவர்கள் அவ்வையார் என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டு

வந்தனர். அதுபோலவே, அம்மை, கன்னி என்னும் சொற்களும் பொதுவாக எல்லாப் பெண்பாலரையும் குறிக்கும் சொற்கள். ஆகையால், அவ்வை, அம்மை, கன்னி என்னும் சொற்களையும் சமணசமயப் பெண்பால் துறவிகளுக்குப் பெயராகச் சொல்லியிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால், கௌந்தி அல்லது கந்தி என்னும் சொற்கள் சமண சமயத்தில் துறவுபூண்ட பெண்பாலரைக் குறிக்கும் என்பதை அறிந்தோம். எனவே, சீவக சிந்தாமணியில் இடைச்செருகற் பாக்களை இயற்றி நுழைத்த கந்தியார் என்பவர் சமணசமயத்தவர் என்றும், பெண்பாலார் என்றும் அங்கை நெல்லிக்கனியென விளங்குகின்றது. இவரது வரலாறு வேறொன்றும் தெரியாதபடியால், இவரது காலத்தை ஆராய்ச்சி செய்து முடிவுசொல்ல இயலவில்லை. இது நிற்க.

''பைம்மையும் கௌந்தியும் அருந்தவப் பெண்பெயர்'' என்னும் திவாகரம், பிங்கலந்தைச் சூத்திரங்களில் பைம்மை என்னும் சொல்லும் துறவுபூண்ட பெண்பாற் பெயரென்று கூறப்பட்டிருக்கின்றது. கணவனை இழந்து தாபதநிலையடைந்த பெண்கள் மறுமைப் பயனை நோக்கி நோற்கும் நோன்பிற்குக் கைம்மைநோன்பு என்று தமிழ் நூல்கள் கூறுவது போல, மணம் செய்துகொள்ளாமலே துறவுபூண்ட பெண்பாலார் மறுமைப் பயனைக் குறியாக நோற்கும் நோன்பிற்குப் பைம்மை நோன்பு என்று பண்டைக்காலத்தில் வழங்கி வந்திருக்கக்கூடுமோ என்று எண்ண இடமுண்டாகிறது. அதாவது கைம்மை, பைம்மை என்னும் சொற்கள் உண்டாவதற்கு ஏதோ காரணம் இருந்திருக்கவேண்டும். இதைப் பற்றி ஆராய்ந்து முடிவுசொல்வது கற்றறிந்த அறிஞர்களின் கடனாகும்.

**செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு.16**

# 18. அத்திரி

அத்திரி என்னும் பெயரைப் பார்த்தவுடன், வேத காலத்து இருடியைப் பற்றிக் கூறப்போவதாக நினைக்காதீர்கள். அத்திரி என்றால் கோவேறு கழுதை என்பது பொருள். கோவேறு கழுதையைப் பற்றித்தான் இக்கட்டுரையில் ஆராயப்போகிறேன். சங்க நூல்களிலே அத்திரியை (கோவேறு கழுதையைப்) பற்றிக் கூறப்பட்டுள்ளன.

கோவேறு கழுதை, குதிரையைப் போலவே இயற்கையில் இந்திய நாட்டுக்குரியது அன்று. வெளிநாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு இறக்குமதியான விலங்கு. உலகத்திலே தொடக்க காலத்தில், எல்லா விலங்குகளும் எல்லா நாட்டிலேயும் உண்டாகவில்லை. சிற்சில விலங்குகள் சிற்சில இடங்களிலேதான் தோன்றின. பிறகு, மனிதன் நாகரிகம் பெற்று நாடுவிட்டு நாடு சென்ற காலத்தில் இந்த விலங்குகளும் வெவ்வேறு நாடுகளுக்குக் கொண்டுபோகப்பட்டன. எடுத்துக்காட்டாகக் கூறுவோம். ஐரோப்பாக் கண்டத்தில் தொடக்க காலத்திலே, குதிரை இல்லை. இந்த விலங்கு பிற்காலத்தில் நடு ஆசியாவிலிருந்து அங்குக் கொண்டுபோகப்பட்டது. அதுபோலவே, இந்தியாவில் தொடக்க காலத்திலே குதிரையும் பசுவும் இல்லை; எருமை இருந்தது. பிற்காலத்தில் குதிரையும் பசுவும் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டன. அமெரிக்காக்கண்டத்தில், ஐரோப்பியர் போவதற்கு முன்பு பைசன் என்னும் எருமையும், லாமா என்னும் ஒருவகை ஆடும் தவிர, ஏனைய குதிரை, பசு, நாய் முதலியவை இல்லை. இவை பிற்காலத்தில் ஐரோப்பாவிலிருந்து அங்குக் கொண்டுபோகப்பட்டன. ஆத்திரேலியா கண்டத்தைக் கண்டுபிடித்த காலத்திலே, அங்குக் கங்காரு என்னும் விலங்கைத் தவிர ஏனைய விலங்குகள் கிடையா. பிற்காலத்தில் ஆடுமாடுகள், குதிரை, குழிமுயல் முதலியவை அங்கு கொண்டுபோகப் பட்டன. இப்போது அங்கு ஆடுமாடுகள் மிகுதியாக உள்ளன. இவ்வாறே மரம் செடி கொடிகளும் மனிதரால் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குக் கொண்டுபோகப்பட்டுப் பயிரிடப்படுகின்றன. இவற்றை விரிவாக ஆராய்வது ஈண்டுக் கருத்தின்மையால், இதனை விடுத்து, எடுத்துக்கொண்ட பொருளை ஆராய்வாம்.

அத்திரி என்னும் கோவேறு கழுதை, குதிரையைப் போலவே வெளி நாட்டு விலங்கு. இது இந்தியாவிற்கும் அதன் ஒரு பகுதியாகிய தமிழ் நாட்டிற்கும் வெளி நாட்டாரால் கொண்டுவரப்பட்டது. வெளிநாட்டவர் இதை ஊர்தியாகக் கொண்டு இதன்மீது அமர்ந்து உலாப்போந்து வந்ததுபோலவே, தமிழ் நாட்டவரும் சங்க காலத்திலே இதனை ஊர்தியாகக் கொண்டிருந்தனர் என்பது சங்க நூல்களில் இருந்து அறியப்படுகிறது.

கோவேறு கழுதை, பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்த கலப்பு விலங்கு என்பர். முதன் முதல் இந்தக் கலப்பு விலங்கை உண்டு பண்ணியவர் சின்ன ஆசியா நாட்டைச் சேர்ந்த மிசியா (*Mysia*) நாட்டினர்

என்று கூறப்படுகிறது. மிசியா நாட்டினர், இலீய நாட்டு (troy) அரசனான பிரிய மன்னனுக்குக் கோவேறு கழுதைகளைக் கையுறையாக வழங்கினார்களென்றும், அந்த மன்னன் கோவேறு கழுதைகளைப் பூட்டிய தேரில் ஏறி உலாச் சென்றான் என்றும், ஐரோப்பாக் கண்டத்தின் முதல் காவியமாகிய 'இலீயத்' காவியத்தினால் (Iliad) அறிகிறோம். கோவேறு கழுதை உடல் உரமும் உழைக்குந் தன்மையும் உள்ளது. இது ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு மணி நேரத்துக்குமேல் தூங்குவதில்லையாம். பண்டைக்காலத்தில், யவனர்கள் (கிரேக்கரும் உரோமரும்) இதைக்கொண்டு வண்டியிழுக்கவும் பொதி சுமக்கவும் பயன்படுத்தி வந்தார்கள். இப்போது, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் கோவேறு கழுதைகள் உண்டாக்கப் படுகின்றன.

இக்காலத்தில் தமிழர் கோவேறு கழுதையைப் பயன்படுத்துவதில்லை. சங்க காலத்திலே, அதாவது கி.பி. 300-க்கு முற்பட்ட காலத்திலே, அரசரும், சிற்றரசரும், செல்வர்களும், கோவேறு கழுதையைப் பெருமையுடன் பயன்படுத்திவந்தார்கள். இதில் ஊர்ந்து செல்வது பெருமையுடைய நாகரிகச் செயலாக அக்காலத்தவர் கருதிவந்தார்கள். செல்வர்களும் சிற்றரசரும் பேரரசரும் இதனை மதித்துப் போற்றியபடியால்தான் இதற்குக் கோவேறு கழுதை என்னும் பெயர் வந்தது. அதாவது அரசர் ஊர்தியாகக்கொள்ளும் கழுதை என்பது பொருள். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் இதனை இராசவாகனமாகிய அத்திரி என்று கூறியிருப்பதும் ஈண்டுக் கருதத்தக்கது.

**"தேரும் யானையுங் குதிரையும் பிறவும்**
**ஊர்ந்தன ரியங்கலும் உரிய ரென்ப"**

என்பது தொல்காப்பியம் (பொருளதிகாரம்: பொருளியல் 18-ஆம் சூத்திரம்.) தலைமகனாகிய காதலன் தலைவியாகிய தன் காதலியைக் காணச் செல்லும்போது தேர், யானை, குதிரை முதலிய ஊர்திகளில் ஏறிச் செல்வதும் உண்டு எனக் கூறுவது இச்சூத்திரம். இச்சூத்திரத்தில் 'பிறவும்,' என்னும் சொல்லுக்கு உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர், "பிறவாவன கோவேறு கழுதையும் சிவிகையும் முதலியனவாம்" என்று விளக்கம் கூறுகிறார்.

சிலப்பதிகாரக் காவியத் தலைவனாகிய கோவலன், செல்வனாகிய மாசாத்துவான் என்பவனுடைய அருமந்த மகன். மாசாத்துவான், சோழ

மன்னனுக்கு அடுத்தபடியாக மதிக்கப்படும் பெருஞ்செல்வம் வாய்ந்தவன். இச்செல்வனுடைய ஒரே மகனும் அக்காலத்து நாகரிக முறைப்படி சிறப்பாக வாழ்ந்தவனுமாகிய கோவலன், எல்லோரும் மதிக்கும்படியாக ஏறிச் சென்ற ஊர்தி அத்திரி எனப்படும் கோவேறு கழுதையே. பெருஞ்செல்வத்தில் திளைத்து வளர்ந்த நாகரிகக் காளையாகிய கோவலன், புகார் நகரத்து நாகரிக நங்கையாகிய மாதவியுடன் இந்திர விழாவின் முடிவில் கடலாடச் சென்றபோது, தன் செல்வத்தின் வளப்பத்தையும் நாகரிகத்தின் சிறப்பையும் ஊரார்கண்டு வியக்கும்படி அத்திரி ஏறிச் சென்றான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இதை விளக்கும் போதுதான், மேலே காட்டியபடி அடியார்க்கு நல்லார், ''இராசவாகனமாகிய அத்திரி'' என்று உரை எழுதியிருக்கிறார்.

''நெடுவேள் மார்பில் ஆரம்போல்'' என்னும் தொடக்கத்தையுடைய அகப்பாட்டு (கஉ0) நக்கீரர் பாடியது. அதில்,

**''கழிச்சுறா வெறிந்த புட்டா ளத்திரி**
**நெடுநீ ரிருங்கழிப் பரிமெலிந் தசைஇ**
**வல்வில் லிளையரோ டெல்லிச் செல்லாது**
**சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ?''**

என வரும் அடிகளால், தலைமகன் அத்திரியூர்ந்துசென்று தலை மகளைக் கண்டசெய்தி கூறப்படுகிறது.

சேந்தன் கண்ணனார் பாடிய அகம் 350 - ஆம் பாட்டில்,

**''கொடுநுக நுழைந்த கணைக்க லத்திரி**
**வடிமணி நெடுந்தேர் பூண வேலா**
**தேந்தெழின் மழைக்க ணிவள்குறை யாகச்**
**சேர்ந்தனை சென்மோ பெருநர்ச் சேர்ப்ப''**

என வரும் அடிகளால், கோவேறு கழுதை பூட்டிய தேர் ஊர்ந்து தலைமகன் தலைமகளைக் காணச் சென்ற செய்தி அறியப்படுகின்றது.

நற்றிணையில் உலோச்சனார் பாடிய 278 - ஆம் செய்யுளில்,

**''கழிச்சே றாடிய கணைக்கா லத்திரி**
**குளம்பினும் சேயிறா வொடுங்கின''**

என வரும் அடிகளினால், தலை மகன் அத்திரியூர்ந்து சென்ற செய்தி கூறப்படுகிறது.

பரிபாடலில் (10 - ஆம் பாடல்: வையை) வையையாற்றின் புதுப்புனல் ஆடக் கூட்டங் கூட்டமாகச் சென்ற நகரமக்களுட்சிலர், வண்டிகளிலும், பல்லக்குகளிலும் கோவேறு கழுதைகளிலும் ஏறிச்சென்ற செய்தி கூறப்படுகிறது. அப்பகுதி இது:

**"அகவரும் பாண்டியும் அத்திரியும் ஆய்மாச்**
**சகடமுந் தண்டார் சிகையும் பண்ணி**
**வகை வகை யூழுழ் கதழ்புழுழ்த் தேறி"**

பரிபாடல் 22-ஆம் பாடலிலும், வையையாற்றில் புதுப்புனல் ஆடச் சென்ற நகர மாந்தரிற் சிலர் குதிரை யானை, கோவேறு கழுதைகளையூர்ந்து சென்று வையைக் கரையில் உள்ள சோலையில் தங்கினர் என்று கூறப்படுகிறது:-

**"செறிவினைப் பொலிந்த செம்பூங் கண்ணியர்**
**நீரமை வெட்சி யிகழ்பனை கோதையர்**
**தாரார் முடியர் தகைகெழு மார்பினர்**
**மாவுங் களிறு மணியணி வேசரி**
**காவு நிறையக் கரைநெரி பீண்டி."**

இதில் வேசரி என்று கோவேறு கழுதையின் இன்னொரு பெயர் கூறப் பட்டுள்ளது. இதுகாறும் ஆராய்ந்தவற்றால், சங்ககாலத்திலே அத்திரி சிறப்பாகப் போற்றப்பட்ட செய்தி அறியப்படுகிறது. தமிழ்நாட்டில் மட்டுமன்று; வடஇந்தியாவிலும், பண்டைக்காலத்தில் அத்திரியாகிய கோவேறுகழுதையை ஊர்தியாகப் பயன்படுத்தினர். அவர்கள் அத்திரியை அச்வதரி என்று அழைத்தனர் எனத் தெரியவருகிறது.

இதை முடிக்குமுன், வேத அகராதியில் கோவேறு கழுதையைப் பற்றிக் கூறியுள்ளதைக் காட்டுவோம். வேத அகராதி என்பது கிறித்துவரின் விவிலிய வேதத்தைப்பற்றிய அகராதி. இது பவர் ஐயர் என்று வழங்கப்படும் என்ரி பவர் என்பவர் எழுதியது. 1841-இல் அச்சிடப்பட்டது. இந்நூலில் இவ்வாறு கூறப்படுகிறது:-

"**கோவேறு கழுதை**:- இது குதிரையுங் கழுதையுஞ் சேர்ந்து பிறக்கிற படியினாலே இந்த இரண்டினுடைய வடிவு முதலிய குணங்களுடைய தாயிருக்கும். இது மிகவும் பெலனும் வீரமும் விரைவு முள்ளது. பாரமான சுமைகளைச் சுமந்து கொண்டு எந்த மலைகளின் மேலும் ஏறிப்போகும். எபிரேயர் அநேகங் கோவேறு கழுதைகளை வைத்திருந்தார்கள். தாவீதும் அவனுடைய குமாரர்களும் கோவேறு கழுதைகளின் மேல் ஏறிக்கொண்டு போய்வந்தார்கள்."

**செந்தமிழ்ச் செல்வி - சிலம்பு.22**

## 19. கருமாறு பாய்ச்சல்

நாற்பது அடி உயரத்திலிருந்து குளத்து நீரில் குதிப்பது ஆண்பிள்ளை களுக்கு வீரச் செயல்தான். ஆனால், இரண்டு கூர்மையான கழுமரங்களை நீரில் நட்டுவைத்து அவைகளின் மத்தியில் உயரத்திலிருந்து குதிக்க வேண்டும் என்று சொன்னால், எப்படிப்பட்ட தைரியசாலியும் பின்னடை வான் என்பதில் ஐயமில்லை. அதற்கும் அஞ்சாமல் கழுமரங்களின் நடுவில் குதிக்க யாரேனும் துணிந்துவந்தாலும், நடுவில் குதிக்காமல் இடது பக்கமோ விலகிக் குதித்தால் அவருடைய கதி என்னவாகும்! கழுவில் குத்துண்டு வேதனைப் பட்டு இறக்க வேண்டியதுதான். பண்டைக் காலத்தில் கொலைத் தண்டனை அடைந்தவர்களைக் கழுமரத்தில் ஏற்றிச் சித்திரவதை செய்தார்கள் என்பதை நாம் அறிவோம். குளத்து நீரில் இரண்டு கூர்மையான கழுமரங் களை நட்டு, அவற்றின் நடுவே நாற்பது அடி உயரத்திலிருந்து குதிப்பது வீரத்தனமான விளையாட்டு என்றாலும் அவ்விளையாட்டு வினையாகவும் முடியுமே.

ஆண்மகன் குதிப்பது இருக்கட்டும். ஒரு பெண்மகள் அவ்வாறு குதிப்பது என்றால் அது எவ்வளவு துணிச்சலான செயல்! நாற்பது அடி உயரம்: கூர்மையான இரும்புக் கழுமரம்: இவற்றின் நடுவிலே அவ்வளவு உயரத்திலிருந்து ஒரு பெண் குதிப்பது! ஓ! நினைக்கும் போதே உடல் நடுங்குகிறது. மயிர்க் கூச்சிடுகிறது. அதிலும் பூரண கர்ப்பமுள்ள ஒரு பெண் உயரத்திலிருந்து கழுமரங்களின் இடையிலே குதிப்பது என்றால் அதைப் பற்றி என்ன நினைப்பது! இது நம்பக் கூடியதாக இல்லை. இது வெறும் கற்பனைக் கதை என்று நீங்கள் நினைக்கிறீர்கள். கற்பனை அல்ல, கதையும்

அல்ல. உண்மைச் செய்தியே. சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டிலே நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சி. ஆணும் பெண்ணுமாக ஆயிரக்கான மக்கள் குளத்தைச் சூழ்ந்து நின்று கொண்டு வேடிக்கைப்பார்க்க, பூரணக் கர்ப்பமுள்ள பெண் ஒருத்தி நாற்பதடி உயரத்திலிருந்து கழுமரங்களுக்கு மத்தியில் குதித்தது உண்மைச் செய்தியே.

ஆம்: இந்த நிகழ்ச்சி தமிழ் நாட்டிலே ஒரு கோயிலிலே ஆண்டுதோறும் நடைபெற்றது உண்மையே. இந்தப் "புண்ணியகரமான" நிகழ்ச்சி மதத்தின் பேரால் நமது நாட்டிலே நிகழ்ந்து வந்தது. இதற்குக் கருமாறிப் பாச்சல் என்பது பெயர்.

கருமாறிப் பாய்ச்சல் என்றால் பொருள் என்ன? கருமாறிப் பாய்ச்சல் என்று ஏன் பெயர் வந்தது?

பூரணக் கர்ப்பம் உள்ள ஒரு பெண்மணி மிக உயரமான இடத்திலிருந்து குதித்து நீரில் கழுமரங்களுக்கு மத்தியில் குதிப்பாள். குதித்த உடன் அந்த அதிர்ச்சியினால் வயிற்றிலிருக்கும் கரு (குழந்தை) வெளிப்பட்டுக் கரையேறுமாம்! ஆனால் அந்தப் பெண்மணி உயிர் நீங்கி "மோட்சம்" அடைவாள்! ஆகவே கருமாறிப் பாய்ச்சல் என்று இதற்கு பெயருண்டாயிற்று. இந்த அற்புதமான. "புண்ணியக் காட்சி"யைக் காண்கிற மக்கள் பூதம் பேய் பிசாசுகளின் துன்பம் இல்லாமல் வாழ்வார்களாம்! இவ்விதமாக ஒரு நம்பிக்கை இருந்தது அக்காலத்தில்.

இந்தக் கருமாறிப் பாய்ச்சல் எங்கே நிகழ்ந்தது என்று கேட்கிறீர்களா? நமது புகழ்பெற்ற பாரத நாட்டிலே, ஏழு புண்ணிய நகரங்களில் ஒன்றான காஞ்சீபுரத்திலே, காமாட்சியம்மன் கோவிலிலே இந்த அற்புதமான நிகழ்ச்சி நடந்தது. இந்தக் கருமாறிப்பாய்ச்சலைத் தரிசித்துப் "புண்ணியம்" பெறுவதற்காக ஏராளமான மக்கள் கூட்டங் கூட்டமாகக் கூடுவது வழக்கம்.

காஞ்சீபுரத்துக் காமாட்சியம்மன் கோயிலில் திருக்குளமும் அக் குளக்கரையைச் சார்ந்து மூன்று நிலையுள்ள கட்டடமும் இன்றும் இருக்கின்றன. இந்த மூன்று அடுக்குக் கட்டிடத்தில். இப்போதுநின்றான், இருந்தான், கிடந்தான் என்று பெயருள்ள மூன்று பெருமாள் கோயில் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கட்டடத்தின் மேல்மாடியிலிருந்து தான் பூரண கர்ப்பமுள்ள ஒரு பெண்மகள் குளத்தில் குதித்தாள். இக் குளத்தைச் சூழ்ந்து நின்று

கொண்டு பக்த கோடிகள் இத் "தெய்விகப் புண்ணிய காட்சி"யைத் தரிசித்தார்கள்.

நல்லகாலமாக இந்தக் கருமாறிப் பாய்ச்சல் பல ஆண்டுகளுக்கு முன்னே நின்றுவிட்டது. இப்போது அச்செய்தி முழுவதும் மறைந்து மறக்கப் பட்டு விட்டது. இலக்கியங்களை ஆராய்ந்தால் மட்டும் இச் செய்தி நன்கு விளங்கும் தனிப் பாடல் திரட்டில் உள்ள காளமேகப் புலவரின் தனிச் செய்யுளும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் வியாக்கியனமும், காமாட்சி லீலாப் பிரபாவம் என்னும் நூலும் கருமாறிப்பாய்ச்சலை கூறு கின்றன. இந்தச் சான்றுகளையும் செய்யுள்களையும் மேற்கோள் காட்டி ஆராய்ச்சி செய்ய நான் இப்போது முற்படவில்லை. ஆராய்ச்சியில் இறங்கி னால் வாசகர்களுக்குத் தலைவலி ஏற்படும் அல்லவா? ஆனால், கருமாறிப் பாய்ச்சல் என்னும் நிகழ்ச்சி, ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு சமயத்தின் பேரால் காஞ்சீபுரத்துக் கோயில் ஒன்றில் நிகழ்ந்த நிகழ்ச்சி என்பது மறுக்க முடியாத உண்மை முற் காலத்தில் நிகழ்ந்து இக்காலத்தில் மறைந்து போன பல பழக்க வழக்கங்களில் கருமாறிப்பாய்ச்சலும் ஒன்று.

***முழுமதி பொங்கல் மலர் - 1961***

# 20. "நிகண்டனார், கலைக்கோட்டுத் தண்டனார்." - (ஓர் ஆராய்ச்சி)

"நிகண்டனார் கலைக்கோட்டுத் தண்டனார்" என்பவர் கடைச்சங்க காலத்திருந்த ஒரு புலவர். இவர் இயற்றிய செய்யுள் நற்றிணையில் 382-ம் பாட்டாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. நற்றிணையை அச்சிற்பதிப்பித்த திரு வாளர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்கள், "பாடினோர் வரலாறு" என்னும் தலைப்பின்கீழ் எழுதியுள்ள வரலாற்றில் இந்தப் புலவரைப்பற்றிக் கீழ்வருமாறு எழுதியிருக்கிறார்கள்.

"மான்கொம்பை நிமிர்த்திக் கைக்கோலாகக் கொண்டமையால் இவர் கலைக்கோட்டுத் தண்டனெனப்பட்டார். இவரது இயற்பெயர் புலப்பட வில்லை. நிகண்டன் என்ற அடைமொழியால் இவர் தமிழில் நிகண்டொன்று செய்தாரென்று தெரிகிறது; அதுவே கலைக்கோட்டு தண்டெனப்படுவது. இதனை இடுகுறிப்பெயரனக்கொண்டார் களவியலுரைகாரரும் நன்னூல் விருத்தியுரைகாரரும் (சூத் - 49). அஃது இதுகாறும் வெளிவந்திலது"

இங்கு நாம் ஆராயத்தொடங்குவது ''நிகண்டனார்'' என்பதுபற்றியே, மேலே காட்டப்பட்டபடி, திரு.அ. நாராயணசாமி ஐயர் அவர்கள், இப்புலவர் நிகண்டு ஒன்று செய்தமையால் இவருக்கு நிகண்டனார் என்று பெயர் சூட்டப்பட்டது என்று எழுதுகிறார்கள். களவியலுரைகாரரும், ''செய்தானாற் பெயர்பெற்றன அகத்தியம், தொல்காப்பியமென இவை; செய்வித்தானாற் பெயர்பெற்றன சாதவாகனம், இளந்திரையம் என இவை; இடுகுறியாற் பெயர்பெற்றன நிகண்டு, நூல், கலைக்கோட்டுத்தண்டு என இவை'' என்று எழுதியிருக்கிறார். இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், ''கலைக் கோட்டுத்தண்டு'' ஒருநூல் என்பது களவியல் உரையாசிரியர் கருத்து என்பதே. திரு. நாராயணசாமி ஐயர் அவர்கள் ''நிகண்டனார் கலைக்கோட்டுத் தண்டனார்'' என்னும் பெயரில் உள்ள ''நிகண்டனார்'' என்னும் அடை மொழியைக்கொண்டு களவியலுரைகாரர் குறிப்பிட்ட ''கலைக் கோட்டுத் தண்டு'' என்னும் நூல் நிகண்டு நூல், என்று முடிவு கட்டியிருக்கின்றார்கள். இனி, நன்னூல் விருத்தியுரைகாரராகிய சங்கரநமச்சிவாயரும், நூற்பெயர் வகையைக்குறிக்கும் நன்னூல் 49-ம் சூத்திரத்திற்கு எழுதிய உரையில் ''இடுகுறியாற் பெயர்பெற்றன; நிகண்டு, கலைக்கோட்டுத்தண்டு முதலா யின'' என்று களவியலுரைகாரர் கருத்தையே தழுவி எழுதியிருக்கிறார்.

எனவே, களவியலுரைகாரரும், நன்னூல் விருத்தியுரைகாரரும் ''கலைக்கோட்டுத்தண்டு'' என்னும் ஒரு நூல் உளது என்றும், அந்நூற்பெயர் இடுகுறிப்பெயர் என்றும் கூறியுள்ளார். திரு. நாராயணசாமி ஐயரவர்கள், ஷ்டி இரண்டு உரையாசிரியர்களும் குறிப்பிட்ட ''கலைக்கோட்டுத்தண்டு'' என்னும் நூல், நற்றிணையில் உள்ள 382-ம் பாட்டின் ஆசிரியராகிய கலைக்கோட்டுத்தண்டனார் என்பவரால் இயற்றப்பட்டதென்றும், ''நிகண்ட னார்'' என்னும் அடைமொழியைக் கொண்டு, கலைக்கோட்டுத்தண்டு என்னும் நூல் நிகண்டு நூலாக இருக்கவேண்டும் என்றும் எழுதியுள்ளார்கள்.

இதில் சில ஐயங்கள் தோன்றுகின்றன. நிகண்டு நூல் செய்தவரை ''நிகண்டனார்'' என்று குறிப்பிட்டிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. அவர் நிகண்டு நூல் செய்திருந்தால் ''நிகண்டாசிரியர்'' என்றே கூறியிருப் பார்கள்; ''நிகண்டனார்'' என்று இருப்பதில் ''நிகண்டனார்'' என்னும் சொல்லுக்கு வேறுபொருள் இருக்கவேண்டும். அப்பொருள் யாது? அதனை ஆராய்வோம்.

சமணரில் ''நிகண்டவாதிகள்'' என்போர் ஒரு பிரிவினராவர். பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டில் சமணர்கள் இருந்திருக்கிறார்கள். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மணிமேகலையில், உ௭-வது ''சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட காதையில்'', மணிமேகலை என்பவள் நிகண்டவாதியிடம் சென்று அவருடைய சமயக்கொள்கை யாது என வினவுகிறாள்.

**''நிகண்டவாதியை நீயுரை; நின்னால்**
**புகழுந் தலைவன்யார்? நூற்பொருள் யாவை?**
**அப்பொரு ணிகழ்வுங் கட்டும் வீடும்**
**மெய்ப்பட விளம்பென........''** (167-170)

என்று வரும் மணிமேகலையடிகளால் நிகண்டவாதிகள் தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் இருந்தது நன்கு விளங்குகிறது. எனவே ''நிகண்டனார் கலைக்கோட்டுத் தண்டனார்'' என்னும் பெயருக்குச் ''சமணமதத்தைச் சேர்ந்த நிகண்டவாதி கலைக் கோட்டுத்தண்டனார்'' என்று பொருள் கொள்வதுதான் பொருத்தமுடையது என்று தோன்றுகிறது. நிகண்டு நூல் செய்திருந்தாரா னால், மேலே குறிப்பிட்டபடி, ''நிகண்டாசிரியர்'' என்று கூறியிருப்பார்களே யன்றி ''நிகண்டனார்'' என்று சொல்லியிருக்கமாட்டார்கள்.

அன்றியும், ''கலைக்கோட்டுத்தண்டு'' என்னும் நிகண்டு நூல் கடைச் சங்ககாலத்தில் இயற்றப்பட்டிருந்தால், அதனைப் பிற்காலத்து நூல்களாகிய திவாகரம், பிங்கலம், சூடாமணி நிகண்டு முதலிய நூல்களில் குறிப்பிட்டிருப் பார்களன்றோ? அவ்வாறு குறிப்பிடாததுபற்றி அவர் நிகண்டு செய்ததாகக் கொள்வதற்கில்லை. எனவே, ''நிகண்டனார்' என்னும் சொல்லுக்கு ''நிகண்டு நூல் இயற்றியவர்'' என்று பொருள் கொள்வதைவிட ''நிகண்டவாதி'' என்று பொருள் கொள்வதுதான் ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் பொருத்தமாகத் தோன்றுகிறது.

**''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.''**

என்னும் பொய்யா மொழியைப் பின்பற்றி பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தால் உண்மைப் பொருள் விளங்கும்.

# 21. கன்னடமும் தமிழும்

தமிழ் இனத்தைச் சேர்ந்த திராவிட மொழிகளிலே கன்னட மொழியும் ஒன்றாகும். தமிழுக்கு அடுத்தபடியாக மிகப் பழைய இலக்கியங்களைக் கொண்டுள்ள திராவிடமொழி கன்னடமே. முன் ஒரு காலத்திலே, மிகப் பழைய காலத்திலே கன்னடதேசத்தில் தமிழ்மொழி வழங்கிவந்தது. மொழிமட்டுமன்று, தமிழருடைய நாகரிகமும் பண்பாடும் பண்டைக்காலத்திலே கன்னடநாட்டிலே வழங்கிவந்தன. இச் செய்திகளைக் கன்னடத்தில் உள்ள பழைய இலக்கியங்களிலும் பழைய கல்வெட்டுச் சாசனங்களிலும் காணலாம்.

முன் ஒரு காலத்திலே தமிழ்மொழி வழங்கிவந்த கன்னட நாட்டிலே, தமிழ்மொழி திரிந்து உருமாறத் தொடங்கிற்று. தமிழ்மொழி திரிந்தது மட்டுமல்லாமல், வடமொழிச் சொற்களும் அதிகமாகக் கலக்கத் தொடங்கின. இதனால், அந்நாட்டில் வழங்கிவந்த தமிழ், கன்னடமொழியாக மாறிவிட்டது. கன்னட மொழியாக மாறியபிறகு அது இலக்கணம் இல்லாமல் இருந்தது. பிறகு இலக்கணம் எழுதத் தொடங்கினார்கள். முதன்முதல் கன்னட மொழிக்கு இலக்கணம் எழுதியவர்கள், அந்த இலக்கணத்தை வடமொழியிலேயே எழுதினார்கள்!

திராவிட மொழியின் சிறப்பெழுத்துக்களில் ழகரமும் ஒன்றாகும். ழகரம் ஒருகாலத்தில் எல்லாத் திராவிடமொழிகளிலும் வழங்கப்பட்டது. தெலுங்கு மொழியில் வழங்கிவந்த ழகரம் மிகப் பழைய காலத்திலே மறைந்துவிட்டது. கன்னட மொழியில் வழங்கிய ழகரம் சிறிது காலத்துக்கு முன்னர் மறைந்துவிட்டது. மலையாள மொழியிலும் தமிழ்மொழியிலும் ழகரம் இன்னும் வழங்கிவருகிறது.

தமிழுக்கு அடுத்தபடியாகப் பழைய இலக்கிய வளம் உடைய திராவிடமொழி கன்னடம் ஆகும். தமிழர், தாய் மொழியாகிய தமிழை நன்கு கற்றபின்னர்க் கன்னட மொழியையும் கற்பது நன்மை பயக்கும். ஏனென்றால், பல தூய தமிழ் சொற்கள் இன்றும் கன்னடத்தில் வழங்கப்படுகின்றன. அது மட்டுமல்ல, மறைந்துபோன பல தமிழ்ச்சொற்களைக் கன்னட மொழியில்

காணலாம். ஆகவே, தமிழர் கன்னட மொழியைக் கற்பது மிகவும் பயனுள்ளதாகும்.

கன்னட மொழியில் உள்ள வடமொழிச்சொற்களை நீக்கிவிட்டால், மிகுந்துள்ளவை தூய தமிழ்ச்சொற்களும். சிதைந்து உருமாறிய தமிழ்ச் சொற்களுமாக இருப்பதைக் காணலாம்.

தமிழில் பகரத்தை முதலாக உடைய சொற்கள் பழைய கன்னட மொழியிலும் பகரத்தை முதலாக உடைய சொற்களாக வழங்கிவந்தன. பிற் காலத்திலே, அதாவது புதிய கன்னடத்திலே பகரத்தை முதலாக உடைய சொற்கள் ஹகரமாக மாறின. ஹலாயுதர் என்பவர் வடமொழியிலே 'அபிதானரத் நமாலா' என்னும் நிகண்டு நூலை எழுதியிருக்கிறார். அந்த நிகண்டு நூலுக்கு நாகவர்மா என்னும் கன்னட பண்டிதர் கன்னட மொழியில் உரை(டீகை) எழுதியிருக்கிறார். இவர் எழுதிய உரையிலே பழைய கன்னடச் சொற்கள் பல காணப்படுகின்றன. தமிழ்ச்சொற்களின் உருவமாக இருந்த பழைய கன்னடச் சொற்கள், பிற் காலத்திலே புதிய கன்னடத்தில் எவ்வாறு உருமாறிவிட்டன என்பதைக் கீழே காட்டுவோம். முதலில், பகரத்தை முதலாகக் கொண்டிருந்த பழங்கன்னடச் சொற்கள் புதிய கன்னடத்தில் ஹகர முதலாகத் திரிந்து விட்டதைக் காட்டுவோம்.

| தமிழ் | பழங்கன்னடம் | புதுக்கன்னடம் |
|---|---|---|
| பசு | பசு | ஹசு |
| புகை | பொகெ | ஹொகெ |
| பகை | பகெ | ஹகெ |
| பால் | பால் | ஹாலு |
| பொன் | பொன் | ஹொன் |
| பெண்ணாய் | பெண்ணாய் | ஹெண்ணாய் |
| பொழுது | பொழ்து | ஹொத்து |
| பாடு(பாட்டு) | பாடு | ஹாடு |
| பல் | பல்லு | ஹல்லு |
| பிணம் | பெணம் | ஹெணம் |
| பெருமை | பெர்மெ | ஹெம்மெ |
| புண் | புண் | ஹுண்ணு |
| புழு | புழு | ஹுளு |

| | | |
|---|---|---|
| பாம்பு | பாவு | ஹாவு |
| புரை (= பாம்புத் தோல்) | பெரெ | ஹெரெ |
| பூ | பூ | ஹூ |
| பணை(கிளை) | பணெ | ஹணெ |
| பிடி | பிடி | ஹிடி |
| பீலி | பீலி | ஹீலி |
| பக்கி(=பறவை) | பக்கி | ஹக்கி |
| பித்தளை | பித்தளெ | ஹித்தளெ |

மேலும், கன்னடத்தில் பகரம் ஹகரமாகத்திரிந்து வழங்கும் சொற்களைக் காட்டுவோம்:-

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| பகல் | ஹகலு |
| பகை | ஹகெ |
| பச்சென்று | ஹச்சனெ |
| பச்சை | ஹச்செ |
| பட்டி | ஹட்டி |
| பட்டு | ஹட்டெ |
| படகு | ஹடகு |
| படை | ஹடெ |
| பணம் | ஹண |
| பருத்தி | ஹத்தி |
| பத்து | ஹத்து |
| பனை | ஹனெ |
| பந்தி | ஹம்தி |
| பந்தல் | ஹந்தர |
| பன்றி | ஹந்தி |
| பற | ஹற |
| பலகை | ஹலகெ |
| பசி | ஹசி |
| பழைய | ஹளெய |
| பெரிது | ஹிரிது |

| | |
|---|---|
| பொடி | ஹுடி |
| பூர்ணிமை (முழுநிலா) | ஹுண்ணிமெ |
| புற்று | ஹுத்து |
| புரி(கயிறு) | ஹுரி |
| பொரி | ஹுரி |
| புலி | ஹுலி |
| புளி | ஹுளி |
| பூட்டு | ஹூடு |
| பூசு | ஹூசு |
| பிணங்கு | ஹெண்கு |
| பிணை | ஹெணெ |
| பெற்றவர்(பெற்றோர்) | ஹெத்தரு |
| பெண்மக்கள் | ஹெம்மக்களு |
| பெருமழை | ஹெம்மளெ |
| பெயர் | ஹெஸரு |
| பேடி | ஹேடி |
| புகழ் | ஹொகளு |
| புகு | ஹொகு |
| பொங்கு | ஹொங்கு |
| பொட்டு (வெடித்தல்) | ஹொட்டு |
| புதர் | ஹொதரு |
| பொன்று(=கெடு) | ஹொந்து |
| பொன் | ஹொன்னு |
| புறத்தெ(வெளியே) | ஹொரகெ |
| பொறு | ஹொறு |
| புலம் | ஹொல |
| புலையன் | ஹொலெய |
| புலைச்சி | ஹொலதி |
| போ | ஹோகு |
| போத்து(ஆண் ஆடு) | ஹோத |
| போராடு | ஹோராடு |
| போல | ஹோலிகெ |

தமிழிலே ன்று என்னும் ஒலி கன்னடத்தில் ந்து என்றாகிறது, உதாரணமாக:

| | |
|---|---|
| ஒன்று | ஒந்து |
| மன்று | மந்து |
| பொன்று(=கெடுதல்) | ஹொந்து |
| குன்று(=குறைதல்) | குந்து |
| கன்று | கந்து |
| பன்றி | ஹந்தி |
| இன்றைக்கு | இந்திகெ |
| இன்றிலிருந்து | இந்திநிந்த |
| இன்று | இந்து |
| என்று | எந்து |
| கொன்றை | கொந்தெ |
| கொன்றார்கள் | கொந்தரு |

இப்போது வழங்கும் கன்னட மொழியில் ழகரம் வழங்குவதில்லை. ழகரத்திற்குப் பதிலாக ளகரம் வழங்கப்படுகிறது பழைய காலத்தில் வழங்கிய பழங்கன்னட மொழியில் ழகரம் வழங்கப்பட்டது. ஹலாயுதர் இயற்றிய அபிதான ரத்நமாலா என்னும் நிகண்டிற்கு நாகவர்மா என்பவர் எழுதிய உரையில் பழங்கன்னட மொழியில் ழகரம் வழங்கிய சொற்களைக் காட்டியிருக்கிறார். அவற்றில் சில வருமாறு:-

பழது = பழையது, மழெ = மழை, வாழெ = வாழை, தாழெ = தாழை, கோழி = கோழி, தேழ் = தேள், கூழ் = கூழ் (உணவு), கௌங்குழ் = அக்குள், புழு = புழு, அழ்கெ = அழுகை, நீரழ்கெ = நீர்வேட்கை, தொழுத்தின மகம் = வேலைக்காரியின் மகள், பழெவாது = ஐதிகம், பழையவழக்கம்.

நாகவர்மா, மற்றும் பல சொற்களை (ழகர எழுத்துள்ள சொற்களைக்) கூறுகிறார். அவற்றின் பொருள் விளங்கவில்லை. அறிஞர் நுணுகி ஆராய்ந்து பொருள் கண்டுபிடிப்பார்களாக. அவர் கூறிய சொற்கள் வருமாறு:-

மரத போழல், மரதபீழல், உரமிழி, ஜேனநோழம், உமித, ஸ்நேஹமாழ் வவநம், இழியலிக்குவுது, போழிகெ, பழியிகெ, ஸுழெ, புழ், பெழவம், அகழ்தெயநீர், நெகழு, அகழதுது, பழிகம், கிழல்பட்டுது, போழிஸுஹ, முகுழெமுகுழெ, பழிஸலுஹ, குழிதெவறு, முய்யம் முகுழ்ச்சுவுத, பிழ்துது, கிவுழ்ச்சுவுது, உழியதுது, அழிகண்ணு, இதிரேழ்வுது, லேஸுமாழ்வுது, எழிச்த்திரப்புது, நெகழ்கெ.

புதிய கன்னடமொழி பழைய ழகரத்தை மாற்றி அதற்குப் பதிலாக ளகரத்தை வழங்குகிறது. அவ்வாறு வழங்கும் சில சொற்கள் வருமாறு:-

அளிவு = அழிவு, அளு = அழு, அளுகு = அழுகு. ஆள ஆளெ = ஆழம், ஆள்வாரு = ஆழ்வார்கள், இளி = குழி, இறங்கு - தாழ்வு, ஈளு, எளெ = இழு, உழு = உழு, எளெ = இழை, ஊளிகெ = ஊழியன், ஏளு = ஏழு, ஏளு = எழு, எழுந்திரு, எளிஸு = எழுப்பு.

கீழ்க்கண்ட கன்னட சொற்களில் பகரம் ஹகரமாகவும் ழகரம் ளகரமாகவும் திரிந்துள்ளன:-

ஹளது = பழையது, ஹளதி = பழுப்பு, ஹளமெ = பழைமை, ஹளி = பழி, ஹாளு = பாழ், ஹுள,ஹுளு = புழு, ஹொளெ = புழை, ஆறு, ஹொகளு = புகழ், ஹளெகன்னட = பழைய கன்னடம்.

தமிழ்மொழியை நன்கு கற்றுத்தேர்ந்தவர் கன்னட மொழியையும் நன்கு கற்று ஆராய்ச்சி செய்வார்களானால், இதுபோன்ற பல செய்திகளை அறியக்கூடும். அன்றியும் தமிழில் வழக்கொழிந்த பல தூயதமிழ்ச் சொற்களைக் கன்னட மொழியில் காணலாம். உதாரணமாகத் திங்கள், தகர் என்னும் சொற்கள் தமிழ் இலக்கியங்களிலே வழங்கப்படுகின்றன. இவை இப்போது மாதம் என்றும் ஆடு என்றும் தமிழில் வழங்கப்படுகின்றன. இச் சொற்கள் கன்னட மொழியில் திங்களு என்றும் டகரு என்றும் தினசரி வழக்காக (பேச்சு வழக்கா) வழங்கப்படுகின்றன. திராவிட மொழி ஆராய்ச்சி செய்கிறவர்களுக்குக் கன்னட மொழி பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழர் முதலில் தாய் மொழியாகிய தமிழை நன்கு கற்றுப் பின்னர் கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலிய திராவிட இனமொழிகளைக் கற்று ஆராய்ச்சி செய்து தமிழை வளம்படுத்துவார்களாக.

**செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு 28**

# 22. மலையாள மொழி

(கேரள பாணினீயம், பாஷா பூஷணம், விருத்த மஞ்சரி முதலான நூல்களை மலையாள மொழியில் இயற்றிய ஏ.ஆர். ராஜராஜவர்மா, எம்.எ., எம்.ஆர்.எ.எஸ்., கோயில்தம்புரான் அவர்கள் எழுதிய "பாஷாஸ்வரூபம்" என்னும் கட்டுரையின் மொழிபெயர்ப்பு)

மனிதர்களுள் சாதிப்பிரிவுகள் காணப்படுவதுபோல, பாஷைகளிலும் பிரிவுகள் உண்டு. நாம் மலையாளிகள் என்னும் பிரிவைச் சேர்ந்தவர் களல்லவா? நம்முடைய மொழி திராவிட வகுப்பைச் சேர்ந்தது. இந்தத் திராவிட வகுப்பில் மலையாளத்தைத் தவிர, தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு என்னும் நான்கு பிரிவுகள் உண்டு. இவைகள் எல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. தமிழ்மொழி முதல் தமக்கையும், மலையாளம் கடைசித் தங்கையும் ஆகும். பண்டைக்காலத்தில் மலையாள மொழியானது பெரிய தமக்கையான தமிழ்மொழியின் பாதுகாப்பில் இருந்தது. அக்காலத்து தமிழ் எழுத்துக்களல்லாமல், தனக்கென சொந்த எழுத்துக்கள் மலையாளமொழிக்கு இருந்ததில்லை. நெடுங்காலத்துக்குப் பிறகு, வட்டெழுத்தென்றும் கோலெழுத்தென்றும் பெயருள்ளவையும் தமிழினின்று அதிக மாறுபாடில்லா தவையுமான எழுத்துக்கள் மலையாள மொழிக்கு உண்டாயிருந்தன. மலையாள மொழிகுழந்தைப் பருவத்திலிருந்த அக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் இப்பொழுது இல்லையென்றே சொல்ல வேண்டும். வைதிகத் தொடர்பான சில பாட்டுக்கள் மாத்திரம் அங்கும் இங்கும் காணப்படுகின்றன. பின்னர், குழந்தைப் பருவம் கழிந்தபிறகும், மலையாள மொழியைப் பாதுகாக்கும் பொறுப்பு தமிழ்மொழிக்கேயிருந்தபடியால், மலையாள மொழி தனித்து நின்று இயங்கமுடியவில்லை. நடை உடை பாவனை பழக்க வழக்கங்கள் எல்லாம் தமிழ்மக்களுக்கிருந்ததுபோலவே மலையாளப் பெண்ணுக்கும் இருந்தது. பாட்டுக்கள் முதலிய செய்திகளும் தமிழ்ப் பாட்டனைப் பின்பற்றியே மலையாளத்தில் இயற்றப்பட்டன. பாவாணர்கள் தங்களுக்கு வேண்டிய சொற்றொடர்களையும் கருத்துக்களையும் தமிழி லிருந்தே எடுத்துக் கையாண்டார்கள். குழந்தைப் பருவம் நீங்கி வாலிபப் பருவம் அடைந்த பிற்காலத்தில் இயற்றப்பட்ட சில நூல்கள் இப்போதும் வழக்காற்றில் உள்ளன. இந்த மலையாளத்தைப் "பழைய மலையாளம்" என்னலாம். முன் சொன்ன குழந்தைப் பருவத்து மலையாளத்தை "ஆதி மலையாளம்" என்று கூறலாம். "ராமசரிதம்" என்னும் நூல் பழைய மலையாள காலத்தின் தொடக்கத்தில் இயற்றப்பட்டதும், "கண்ணஸ்ஸ ராமாயணம்" என்னும் நூல் அக்காலத்தின் கடைப்பகுதியில் இயற்றப் பட்டதும் ஆகும்.

கண்ணஸ்ஸப் பணிக்கருக்குப் பிறகுள்ள மலையாளந்தான் இப்போதைய மலையாளம். இப்போதும் இதை நாம் பேசிவருகிறபடியால், இந்த மலையாளத்துக்கு வேறுபெயர் கூறவேண்டியதில்லை. இப்போதைய

மலையாளம், பண்டைக்கால நிலையிலிருந்து பெரிதும் மாறுபட்டுள்ளது. இதற்குச் சாசனம், சமஸ்கிருதத்தின் கூட்டுறவு ஆகும். பழைய மலையாளம் வழக்காற்றிலிருந்த காலத்திலேயே ஆரியராகிய நம்பூதிரிமார் கேரளநாட்டில் வந்து வாழ்ந்திருந்தார்கள்; என்றாலும் நாட்டு மொழியை அவர் போற்றவில்லை. காலப்போக்கில், சமஸ்கிருதம் பேசியிருந்த நம்பூதிரிகளும், பழைய மலையாளம் பேசி வந்த கேரள நாட்டு மக்களும் தம்மில் ஒருவரோடொருவர் கலந்து உறவாடத்தொடங்கிய பிறகு, இருதிறத்தாரு டைய மொழிகளும் கலந்து உண்டாகிய ஒரு கலப்புப் பாஷையாகும் இப்போதைய மலையாள மொழி.. மலையாள மொழி வயதடைகிறவரை யில், அதாவது குழந்தைப் பருவத்திலும் வாலிபப் பருவத்திலும் தமிழ் மொழியின் பாதுகாப்பிலும், தொடர்பிலும் இருந்ததென்று சொன்னோ மல்லவா? அதன் பிறகுதான் அது சமஸ்கிருதத்தின் சம்பந்தத்தைப் பெற்றது. சம்பந்தம் என்றால் உண்மையான சம்பந்தந்தான். அதாவது மணமகளுக்கும் மணமகனுக்கும் உள்ள தொடர்புதான். (மலையாள மொழியில் சம்பந்தம் என்றால் திருமணம் என்பது பொருள்) அன்று முதல் மலையாள மொழி, பெரிய தமக்கையாகிய தமிழின் பாதுகாப்பிலிருந்து விலகிப்போய்விட்டது. என்ன வேண்டும் என்றாலும் கணவனை (சமஸ்கிரதத்திலிருந்து) கேட்டுவாங்கிக் கொள்வதே யல்லாமல். ''தரவாட்டி''லிருந்து (உடன் பிறந்த தமிழிலிருந்து) வாங்குகிற வழக்கம் இல்லாமற் போய்விட்டது. சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள், விருத்தம் முதலிய பாட்டுக்கள் என்பன வற்றை மட்டுமல்ல; எழுத்துக்களையுங்கூட சமஸ்கிருதத்திலிருந்தே பெற்றுக் கொண்டது. சமஸ்கிருதத்திலிருந்து எழுத்துக்களைப் பெற்றுக்கொண்ட பிறகு, தமிழரைக் குறித்து ''அக்ஷரவியக்தி இல்லாதவர்'' என்று ஏளனம் செய்யவும் தொடங்கி விட்டது. சமஸ்கிருதத்தின் செல்வாக்கு இவ்வளவு அதிகமாக முதிர்ந்து விட்டதென்றாலும், தொடர்பு (சம்பந்தம்) மருமக்கள்தாய முறையாகையால், கோத்திரத்தை மாற்றிக்கொள்வதற்கு முடியவில்லை. மலையாள மொழி இன்றும் திராவிட கோத்திரத்தில் தான் இருக்கிறது. வேண்டாதவைகளும், வேண்டியவைகளுமான அநேக சொற்களைச் சமஸ் கிருதத்திலிருந்து எடுத்துக்கொண்டபோதிலும், விருத்தம் அலங்காரம் முத லான ஆடம்பரங்களையெல்லாம் சமஸ்கிருதத்திலிருந்து வாங்கிக் கொண்ட போதிலும், மலையாளமொழியில் இலக்கணத்தை இன்றுவரையில் சமஸ் கிருத முறைப்படி அமைத்துக்கொள்ளமுடியவில்லை. அன்வயக்கிரமம், வேற்றுமைத் தொடர்புகள் (வியக்தி சம்பந்தம்).. விசேஷண விசேஷ்யங்க

ளின் நிலை, ரூப பேதம் இவையெல்லாம் தமிழ் இலக்கணத்தை யொட்டித் தான் மலையாளத் திலும் காணப்படுகின்றன. சுருக்கமாகச் சொல்வதென்றால், தமிழ் இலக்கணத்திலே கூறப்பட்டுள்ள இலக்கண விதிகளை, இன்னின்ன பாகத்தில் இன்னின்ன விதமாகச் சிறிது மாறுதல் செய்துவிட்டால், அதுவாக இருக்கும் மலையாள மொழியின் இலக்கணநூல் என்று சொல்வது அமையும். இதை எப்பொழுதும் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இனி, தேச வேறுபாட்டினால் மலையாள மொழியில் சில வேறு பாடுகள் (நாட்டுவழக்கு) உண்டு. ஆனால், அந்த வேறுபாடுகள் பேச்சளவில் உள்ள நாடோடிப்பாஷையையன்றி, இலக்கியங்களை அதிகமாய்ப் பற்றமாட்டா. (க) வடக்கன் மலையாளம் (வடமலையாளம்) (உ) தெக்கன் மலையாளம் (தென்மலையாளம், (ந) மத்திய மலையாளம் (நடு மலை யாளம்) எனத் தேசத்தின் மூன்று பகுதிகளைக்கொண்டு இந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது அவர்களின் சுவையைப் பொறுத்ததாகலின், ஒரு நாட்டு வழக்கு இன்னொரு நாட்டு வழக்கைப் பார்க்கிலும் சிறந்ததென்று சொல்வதற்கில்லை என்றாலும், மத்திய நாட்டு மலையாளந் தான் சிறந்ததென்பது பண்டைக்கால முதல் அனைவருக்கும் ஒப்ப முடிந்த கருத்து. இதற்குக் காரணந்தேடத் தொலைதூரம் போகவேண்டியதில்லை. தென் மலையாளம் தமிழின் செல்வாக்கினாலும், வடமலையாளம் கன்னடத்தின் செல்வாக்கினாலும் மாறிப்போயிருக்கின்றன. வேறு மொழிகளின் தொடர்பின்மையால் மத்தியமலையாளம் அதிகத் தூய்மையுடையதாகும். இந்த மத்திய மலையாளந்தான் எல்லாத் தேசத்தவர்களாலும் முக்கியமாகக் கையாளப்படுகிறது. எனினும், அந்தந்த நாட்டில் வழக்காற்றிலுள்ள விசேஷச் சொற்களும் (திசைச் சொற்கள்) சிறுபான்மை உபயோகப்படுத்தப் படுகின்றன. பேர்பெற்ற குஞ்சன் நம்பியார் தம் மொழியின் தூய்மையைப் பற்றி அதிகமாகக் கருத்துவைக்கவில்லை. அவருடைய நூல்களில் தேசியப் பிரயோகங்கள் (திசைச்சொற்கள்) அதிகம் உண்டு.

(குறிப்பு:- தமிழராகிய நாம் மலையாள மொழியைத் தமிழின் புதல்வி என்று சொல்லுகிறோம். அதாவது, தமிழ் மொழியிலிருந்து மலையாளம் உண்டாயிற்று என்று கூறுகிறோம். ஆனால், இந்தக் கட்டுரையின் ஆசிரியர் மலையாள மொழியைத் தமிழின் தங்கையாகச் சொல்லுகிறார். எல்லா மலையாளிகளும் இவ்வாறு தான் தமிழையும் மலையாளத்தையும் சகோதரிகள் என்று சொல்வர்.)

**செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு - 16**

# 23. தொல்காப்பிய "ஆராய்ச்சிக்"காரர்கள்

தொல்காப்பியத்தைப் பற்றியும் தொல்காப்பியரைப் பற்றியும் சிலர் ஆராய்ந்து எழுதியுள்ளனர். இவர்களில் சிலர், தொல்காப்பியம் பிற்காலத்து நூல், அதாவது கி.பி. 400-க்குப் பிறகு எழுதப்பட்ட நூல் என்றும், தொல் காப்பியத்தில் கூறப்படும் கருத்துக்கள் சில வடமொழி நூல்களில் இருந்து எடுக்கப்பட்டவை என்றும், கற்பு முறையைத் தமிழர்களுக்குக் கற்பித்தவர் ஆரியப் பார்ப்பனர் என்றும் இந்த "ஆராய்ச்சிக்"காரர்கள் எழுதியுள்ளனர். யானைகண்ட பிறவிக் குருடர்கள், யானை முறம் போல இருக்கிறது என்றும், யானை உரல்போல இருக்கிறதென்றும், யானை உலக்கைபோல இருக்கிற தென்றும், யானை துடைப்பம் போல இருக்கிறதென்றும் கூறினதுபோல, இந்த "ஆராய்ச்சிக் குருடர்களும்" உண்மையறியாமல் தங்கள் மனம் போல எழுதியுள்ளனர். இவர்கள் கூறுவதற்குத் தக்க விடை கூறி உண்மையை நிலைநாட்டவேண்டுவது கற்றறிந்தவரின் கடமை அல்லவா முதலில் இந்த "ஆராய்ச்சிக்" காரர்கள் தொல்காப்பியத்தைப் பற்றிக் கூறுவதைப் பார்ப்போம்.

கே.ஜி. சங்கர் என்பவர் 1924இல் "சங்கநூல்களில் மௌரியர்" என்னும் கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் இவர் கூறும் கருத்தின் சுருக்கம்:

"அகநானூறு 251 ஆம் செய்யுளில், தமிழ்நாட்டு மோகூர் மன்னனுக்கு எதிராகப் போர் செய்ய வந்த கோசருக்கு உதவியாக மௌரியர் வந்தனர் என்று கூறப்படுகிறது. இந்த மௌரியர் அல்லது மோரியர் என்பவர், கி.மு. 324 முதல் கி.மு. 187 வரையில் மகதநாட்டை அரசாண்ட பழைய மௌரியர் அல்லர்; கொங்கண நாட்டை அரசாண்ட "திரைகூடகர்" என்னும் அரசர் காலத்திற்குப் பிறகு அரசாண்ட மௌரியர் ஆவர். இவர்கள் கி.பி. 6,7,8 - ஆம் நூற்றாண்டுகளில் கொங்கண நாட்டை அரசாண்டார்கள். இந்த மௌரி யர் கொங்கண நாட்டுக்குக் கி.பி. 494 இல் வந்தார்கள். ஆகவே, மௌரி யரைக் கூறுகிற இந்தச் சங்கச் செய்யுள் கி.பி. 500க்குப் பிறகு எழுதப்பட்ட தாதல் வேண்டும். ஆகவே சங்க நூல்களும் கி.பி. 500க்குப் பிறகு எழுதப் பட்டவை. தொல்காப்பியம் சங்க நூல்களுக்கு முற்பட்டகாலத்தில் எழுதப்

பட்டதாதலால் அது கி.பி. 400க்குப் பிறகு எழுதப்பட்டிருக்க வேண்டும். ஹோரா என்னும் கிரேக்கச் சொல் தொல்காப்பியத்தில் ஓரை என்று கூறப்படுகிறது. கி.பி. 378 இல் இருந்த Paulus Alexandrinus என்பவர் எழுதிய கிரேக்க வான சாஸ்திர நூலில் இருந்து இந்தச் சொல்லைத் தொல்காப்பியர் பெற்றிருக்கவேண்டும். ஆகவே, தொல்காப்பியம் கி.பி. 400க்குப் பிறகு எழுதப்பட்ட நூல்." இதுதான் கே.ஜி. சங்கர் என்பவர் எழுதியிருப்பதன் சுருக்கம். *(The Moriyars of the Sangam Works by K.G. Sankar. PP. 664 - 667.Journal of the Royal Amatic Society 1924.)*

1956இல் வெளிவந்த "தமிழ்மொழி தமிழ் இலக்கியவரலாறு" என்னும் ஆங்கில நூலில் திரு. ச. வையாபுரிப் பிள்ளை அவர்களும் தொல்காப்பிய நூலின் காலத்தைப்பற்றி ஆராய்கின்றார். சங்க நூல்களில் மௌரியர் என்னும் அரசர் கூறப்படுவதைக் குறிப்பிட்டு, இந்த மௌரியர் சரித்திரத்தில் கூறப்படும் மௌரியர் அல்லர் என்று ஐயம் கொள்கிறார். (பக்கம் 12)

மேலும் வையாபுரிப் பிள்ளை கீழ்க்கண்டபடியும் எழுதி உள்ளார்:- மனுதர்ம சாஸ்திரத்தில் கூறப்படுகிற சமுதாயத்தைப் பற்றிய சில செய்திகளைத் தொல்காப்பியர் தமது தொல்காப்பிய நூலில் எழுதியிருக்கிறார். இதனால் தொல்காப்பியர் கி.பி. 200-க்குப் பிற்பட்டவர் என்பதைத் தெரிவிக்கிறது. கௌடல்யர் தமது அர்த்த சாஸ்திரத்திலே எழுதியிருக்கிற 32 உத்திகளைத் தொல்காப்பியர் எடுத்துத் தொல்காப்பிய நூலில் எழுதியுள்ளார். வடமொழியில் உள்ள பரத நாட்டிய சாஸ்திரத்திலிருந்தும், வாத்சாயனரின் காமசூத்திரத்திலிருந்தும் சிலவற்றை எடுத்துக்கொண்டார். எட்டு மெய்ப்பாடுகளையும், தசாவஸ்தைகளையும் முக்கியமாகக் குறிப்பிடலாம். இவையெல்லாம், தொல்காப்பியம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு எழுதப் பட்டது என்பதைக் காட்டுகின்றன. ஆகவே, தொல்காப்பியர் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு என்று சொல்லலாம். வச்சிர நந்தி நிறுவிய பேர்போன திராவிட சங்கம் கி.பி. 470இல் நிறுவப்பட்டது என்பதும் இதற்குச் சாதகமாக இருக்கின்றது. இந்தத் தமிழ்ச் சங்கத்தில் எழுதப்பட்ட முதல் நூல் தொல் காப்பியமாக இருக்கலாம். தொல்காப்பியம் ஓரை என்னும் (வடமொழியில் ஹோரா) என்னும் கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்துகிறது. கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் வடமொழியாளர் தாம் எழுதிய சோதிட சாஸ்திர நூல்களில், ஹோரா என்னும் கிரேக்கச் சொல்லைக் கடனாகப் பெற்றுக் கொண்டு எழுதினார்கள். வடமொழியாளர் உபயோகப்படுத்திய ஹோரா என்னும்

சொல்லைத் தொல்காப்பியர் ஓரை என்று பயன்படுத்தியுள்ளார். எனவே, தொல்காப்பியம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல். (பக்கம் 14).

மேலும் பிள்ளையவர்கள் எழுதியுள்ளார்:- "தொல்காப்பியர் காலம் விவாதத்திற்குரியது. ஆனால், தொல்காப்பியர் கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பதற்கு உறுதியான சான்றுகள் உள்ளன" (பக்கம் 65 - *History of Tamil Language and Literature by prof. S. Vaiyapuri Pillai. 1956*).

வையாபுரிப்பிள்ளை இன்னொரு கட்டுரையில், தொல்காப்பியர் கி.மு. 150க்குப் பிற்பட்ட காலத்தவர் என்று எழுதியுள்ளார். தொல்காப்பியர் பதஞ்சலியின் சூத்திரங்களைக் கையாளுகிறார் என்றும் ஆகவே பதஞ்சலியின் காலமாகிய கி.பி. 150-க்குப் பிற்பட்டவர் தொல்காப்பியர் என்றும் எழுதுகிறார். (*Tolkappiyar and Patanjali by Rao Sahib S. Vaiyapuri Pillai.PP. 134-138. Dr. C. Kunhan Raja Presentation Volume. Madras - 1946*).

மேலும் வையாபுரிப்பிள்ளை, தமது இலக்கியதீபம் என்னும் நூலில் (பக்கம் 131-144), தொல்காப்பியர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்பதை எழுதியுள்ளார்.

இனி, மு. இராகவையங்கார் அவர்கள்,

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப"**

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்குப் பொருள் கூறியபோது, தமிழர் களுக்குக் கற்பு தெரியாது என்றும், ஆரியப் பார்ப்பனர் வந்து, மணம் செய்து கொண்டு கற்புடன் வாழும் முறையைக் கற்றுக்கொடுத்தார்கள் என்றும் எழுதி யிருக்கிறார். (தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி. மு. இராகவை யங்கார்).

இந்த ஐயங்கார் எழுதிய இதே செய்தியை இன்னோர் ஐயரும் எழுதியுள்ளார். பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி என்பவர் தாம் எழுதிய தொல் காப்பிய ஆங்கில உரையில் இதனை எழுதியிருக்கிறார். தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே ஆரியப் பார்ப்பனர் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தனர் என்றும், அந்தப் பார்ப்பனர் கற்பு முறை தெரியாத தமிழர்களுக்குக் கற்பு

முறையைக் கற்றுக் கொடுத்தார்கள் என்றும் எழுதியிருக்கிறார். (பக்கம் 92- *Tolkappiyam. Porul Atikaram by P.S. Subramaniya Sastri. The Kuppusawami Sastri research Institute, Mylapore, Madras 1949).*

இவ்வாறு ஐயங்காரும் ஐயரும், ஆரியப் பார்ப்பனர் தமிழர்களுக்குக் கற்பு முறையைத் கற்றுக்கொடுத்தார்கள் என்று தொல்காப்பியர் கூறியுள்ள தாக எழுதியுள்ளனர்.

இந்தச் சுப்பிரமணிய சாஸ்திரி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருத ஆசிரியர். இவர் 1946ஆம் ஆண்டில், திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்திலே, "தமிழுக்கும் சமஸ்கிருதத்திற்கும் உள்ள தொடர்பு பற்றிய ஆராய்ச்சி" என்னும் தலைப்பில் சொற்பொழிவுகள் செய்தார். அச் சொற் பொழிவுகள் புத்தகமாக அச்சிடப்பட்டுள்ளன. அதில் தொல்காப்பியத்தைப் பற்றியும் தொல்காப்பியரைப் பற்றியும் கூறியுள்ளார். இதிலும், பார்ப்பனர் தமிழருக்குக் கற்பைக் கற்றுக்கொடுத்தனர் என்று எழுதியுள்ளார். அன்றியும், சமஸ்கிருத இலக்கணத்திலிருந்தும், தர்ம சாஸ்திரம், காமசூத்திரம், கௌடல்லியர் அர்த்த சாஸ்திரம் முதலிய வடமொழி நூல்களில் இருந்தும் சில கருத்துக்களைத் தொல்காப்பியர் எடுத்துத் தொல்காப்பியத்தில் எழுதி யுள்ளார் என்று இவர் எழுதியுள்ளார். இந்நூலில் இவர் கூறியுள்ளவற்றை எழுதினால் இடம் பெருகும் என்று அவற்றையெல்லாம் இங்கு எழுத வில்லை வேண்டுவோர் அந்நூலில் காண்க. *(An enquiry into the Relationship of Sanskrit and Tamil, by Vidyaratna P.S. Subramaniya Sastri. Travancore University Publications English No.2. University of Travancore 1946. Price Rs. 2-4-0)*

இவ்வாறு தொல்காப்பியர் காலத்தைப் பற்றியும் தொல்காப்பிய நூலைப்பற்றியும் இவர்கள், யானைகண்ட பிறவிக் குருடரைப் போல, "ஆராய்ச்சி"களை எழுதியிருப்பதை அறிஞர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? "பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே மெய் போலும்மே" என்பதற்கிணங்க, மெய்போலத் தோன்றுகின்ற இந்தப் பொய் யுரைகளை உண்மை என்று ஏற்றுக்கொள்வது அறிஞர்களுக்கு அழகாமோ? மேற்போக்காகப் பார்க்கிறவர்களுக்குப் பரம உண்மை போலவும், அசைக்க முடியாத ஆராய்ச்சி போலவும் காணப்படுகிற இந்தப் பொய்க்கூற்றுக்களைப் பிட்டுப்பிட்டுக் காட்டி, அலசி அலசிக்காட்டி உண்மையை நிலைநாட்ட

வேண்டுவது கற்றறிந்தோர் கடமையல்லவா? பாவாணர்களும் கவிவாணர் களும், வித்துவான்களும், புலவர்களும், டாக்டர்களும் புரொபசர்களும் இப் பொய்க்கூற்றுகளுக்குத் தக்க விடை எழுதி உலகத்துக்கு உண்மையைக் காட்டுவார்கள் என்று நம்புகிறோம்.[1]

செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு 36

# 24. தமிழ் - அகம்

## அகப்பொருள் - விளக்கம்

மிகப் பழங்காலத்திலேயே இலக்கியத்தை அகம், புறம் என்று பழந்தமிழ்ச் சான்றோர் வகைப்படுத்தினர். அவற்றுள் அகப்பொருளுக்குச் சிறப்புமிக்க முதலிடத்தை அவர்கள் கொடுத்தனர். இவ்வுலகில் ஆணும் பெண்ணும் அன்புடன் கூடிக்கலந்து, இன்புடன் இல்லற வாழ்க்கை நடத்து வதையே, அகம் என்று நம்முடைய முன்னோர்கள் போற்றினர். இக்காதல் வாழ்க்கையை அகப்பொருள் இலக்கண நூலார் அன்பின் ஐந்திணை என்பர். இப்பொருள் பற்றிய இலக்கியங்களைப் பண்டைத் தமிழ்ப்புலவர் மிகுதியாக இயற்றியுள்ளனர். தலைவன் தலைவியரின் (காதலன் காதலியரின்) வாழ்க்கையில் நிகழ்கின்ற காதற் செயல்களையும், எழுகின்ற உணர்வுகளை யும் தம் கற்பனைத் திறனில் குழைத்து, சிறு சிறு சொல்லோவியங்களாகத் தொன்மைத் தமிழ்ப்புலவர்கள் தீட்டியுள்ளனர். பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியம், அகப் பொருள் இலக்கணத்தைச் சிறப்பாக எடுத்தியம்பு கிறது. அதற்குப் பிறகு, அகப்பொருள் இலக்கண நூல்கள் சில இயற்றப் பட்டுள்ளன.

அகப்பொருள்துறைச் செய்யுட்களைப் பாடுவதைச் சங்க காலத்துப் புலவர்கள் பெருமையாகக் கருதினர் எனலாம். இதனால், அகப்பொருள் செய்யுட்கள் பழந்தமிழ் இலக்கியத்தில் பெரும்பகுதியாக உள்ளன. அப் பழஞ் செய்யுட்களைத் தொகுத்து அகநானூறு, நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு, ஐங்குறு நூறு, கலித்தொகை என்று புலவர்கள் போற்றிவந்தனர். அந்நூல்கள், நமக்குப் பழம்பேர் இலக்கியச் செல்வங்

---

1. இதிற்காணும் மாறுபாடுகளைச் சான்றுகளுடன் விளக்கிக் கட்டுரையாசிரியர் தொடர்ந்தெழுதுவர்.

- ஆசிரியர்.

களாகக் கிடைத்திருக்கின்றன. தமிழ் மக்களின் காதல் உணர்வுகளையும், எண்ணங்களையும், செய்திகளையும் கலைநயந்தோன்ற எடுத்துரைக்கும் இப்பாடல்கள் யாவும் ஏறத்தாழக் கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரையில் இயற்றப்பட்டனவாகும்.

## தமிழ் - அகப்பொருள்

தமிழ் என்னும் பெயர், சிறப்பாக அகப்பொருள் இலக்கியத்தைச் சுட்டும் மரபு, நெடுங்காலமாக நம்மிடையே இருந்து வருகிறது. தமிழ் என்பதற்குத் தமிழ்மொழி என்றும், இனிமை என்றும், அழகு என்றும் பொருள் உண்டு. இம்மூவகைப் பொதுப் பொருளோடு, தமிழ் என்னும் சொல்லிற்கு அகப்பொருள் என்னும் சிறப்புப்பொருளும் வழங்கிவருகிறது. சங்க காலத்தில் மட்டுமன்றி, பிற்காலத்திலும் அகப்பொருள் செய்யுளுக்குத் தமிழ் என்னும் பெயர் வழங்கியமைக்குத் தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் பல உள்ளன.

## ஆரியவரசன் தமிழ் பயின்ற வரலாறு

கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஆரிய அரசன் பிரகத்தன் (பிருகத்தத்தன்), தமிழில் அகப்பொருள் செய்யுட்களின் சிறப்பை அறிந்து, அதைப்பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள விரும்பினான். அவன் முதலில் தமிழ்மொழியைப் பயின்றான்; பின்னர் அகப்பொருள் துறையையும் அவன் கற்றான். அவனுக்கு அகப்பொருளைக் கற்பித்தவர், அக்காலத்திய புலவர்களுள் சீர்த்திமிக்கவரான கபிலர் குறிஞ்சிப்பாட்டை (பெருங் குறிஞ்சியை)ப் பாடினார். அச்செய்யுளின் அடிக்குறிப்பு, 'ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குப் பாடியது' என்று தெரிவிக்கிறது. இத்தொடர்மொழியில் உள்ள தமிழ் என்னும் சொல் அகப்பொருளையே சுட்டுகிறது. குறிஞ்சிப்பாட்டு, தமிழ் எழுத்திலக்கணத்தையோ சொல்லிணக்கணத்தையோ கூறவில்லை; அகப்பொருள் இலக்கணத்தின் ஒரு துறையை விளக்கும் இலக்கியமாக விளங்குகிறது. [1]

1 ஆரிய அரசன் பிரகத்தன் தமிழ் கற்பதற்குக் கபிலர் தமிழ் இலக்கணம் எழுதினார் என்று சிலர் கருதுகின்றனர் *(V.R.R. Dikshitar: Studies in Tamil Literature and History p. 28).* அதை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது. தமிழ் என்னும் சொல்லுக்கு, அகப்பொருள் என்னும் பொருளும் உண்டு என்பதை அறியாததால் தவறாகப் பொருள் கொண்டார்போலும்.

அகப்பொருளைக் கற்ற பிரகத்தன், தானும் அகப்பொருள் செய்யுட்களைப் பாடினான் எனக்கூறலாம். அவற்றுள் ஒன்று குறுந்தொகையில் 184 ஆம் செய்யுளாக இடம் பெற்றிருக்கிறது. அச்செய்யுளின் அடிக்குறிப்பு, 'ஆரியவரசன் யாழ்ப் பிரமதத்தன் பாடியது' என்று கூறுகிறது. அகப்பொருளைக் 'கந்தருவ முறை' என்றும், 'யாழோர் முறை'[2] என்றும் கூறுவதுண்டு. யாழோர் முறையைக் கற்றபடியால் - அகப்பொருளைக் கற்றமையால் - இவன் 'யாழ்ப் பிரமதத்தன்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றான் என்று நாம் கருதலாம்.[3]

## முருகன் சுவைத்த தமிழின்பம்

திருப்பரங்குன்றத்து முருகனைப் பரிபாடலின் ஒன்பதாம் செய்யுள் போற்றிப் புகழ்கிறது. இச்செய்யுள் முருகனுடைய அகப்பொருள் வாழ்க்கையைக் கூறுகிறது.

> **காதற் காமம் காமத்துச் சிறந்தது** (பரி. 9:14)

என்று குன்றம்பூதனார் காதற் காமத்தின் சிறப்பை எடுத்துரைக்கிறார். மேலும், அவர், அகப்பொருளையே 'தமிழ்' என்று போற்றுகிறார்:

> **தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய் வந்திலார்**
> **கொள்ளார் இக்குன்று பயன்.** (பரி. 9:25 - 26)

இதற்கு உரையெழுதிய பரிமேலழகர்,

> **இப்புணர்ச்சியை வேண்டுகின்ற**
> **பொருளிலக்கணத்தையுடைய தமிழை ஆராயாத தலைவர்**
> **(காதலர்) களவொழுக்கத்தைக் கொள்ள மாட்டார்கள்....**
> **இனி அக்களவிற் புணர்ச்சியை யுடைமையான் வள்ளி**
> **சிறந்த வாறும், அத்தமிழை ஆய்ந்தமையான் முருகன்**
> **சிறந்தவாறும் கூறு கின்றார்கள்.**[4]

---

2. யாழோர் - கந்தருவர்

3. பிரகத்தன், பிரமத்ததன் என்னும் பெயர்கள் ஒருவனையே குறிப்பனவாகும்.

4. பரிபாடல் 9, பரிமேலழகர் உரை, பக். 99

என்று விளக்கம் தந்துள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும். இங்குச் சுட்டப்படும் 'தமிழ்' என்னும் சொல், அகப்பொருளை உணர்த்துவதாகப் பொருள் கொள்ளப்பட்டிருப்பது இங்கு நினைவுகூர்தற்குரியது.

**செந்தமிழின் சிறப்பு**

பதினெண் கீழ்க்கணக்குள் ஐந்திணை ஐம்பது என்பது ஓர் அகப் பொருள் நூலாகும். இதை மாறன் பொறையனார் இயற்றியுள்ளார். இந்நூலும் அகப்பொருளைத் தமிழ் என்றே கூறுகிறது:

**ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதாதார்**
**செந்தமிழ் சேரா தவர்.**

**(ஐந்திணை - ஐம்பது சிறப். பா.)**

இச்செய்யுளுள் 'செந்தமிழ்' என்னும் சொல், அகப்பொருளையே சிறப்பாக உணர்த்துகிறது.

**இறையனார் கண்ட தமிழ்**

இறையனார் அகப்பொருள் உரையும், தமிழ் என்னும் சொல்லால் அகப்பொருளைச் சுட்டுகிறது. உரைப்பாயிரத்தின் தொடக்கத்திலுள்ள

**இனி நுதலிய (இறையனார் அகப்பொருள் சொன்ன)**
**பொருள் என்பது, நூற்பொருளைச் சொல்லுதலென்பது. இந்**
**நூல் என்னுதலிற்றோ வெனின் தமிழ் நுதலிய தென்பது** [5]

என்னும் பகுதியில், தமிழ் என்னும் சொல், அகப்பொருளையே சுட்டுவதைக் காணலாம். இவ்வுரையின் மற்றோர் இடத்திலும்,

**இனி நூல் நுதலியதூஉம் உரைக்கற்பாற்று. அது**
**பாயிரத்துள்ளே உரைத்தாம்; தமிழ் நுதலிய தென்பது** [6]

என்னும் குறிப்பு காணப்படுகிறது.

5. இறையனார் அகப்பொருள் உரையுடன், கழகம், சென்னை, 1969; பக். 14

6. ஷை. பக். 85

**மாணிக்கவாசகர் போற்றிய தமிழ்**

கூடல் மாநகரில் சங்கப் புலவர்கள் ஆய்ந்த தீந்தமிழைக் குறிக்கும் இடத்து, மாணிக்கவாசகப் பெருமான் தமிழ் என்னும் சொல்லை, 'அகப் பொருள்' என்னும் பொருளில் பயன்படுத்தியுள்ளார்:

**சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்**
**பலத்துமென் சிந்தையுள்ளும்**
**உறைவா னுயர்மதிற் கூடலின்**
**ஆய்ந்தஒண் தீந்தமிழின்**
**துறைவாய் நுழைந்தனையோ வன்றி**
**ஏழிசை சூழல் புக்கோ**
**இறைவா தடவரைத் தோட்கென்கொ**
**லாம் புகுந் தெய்தியதே**

என்னும் திருக்கோவையார் பாடல் (20), இக்கருத்தை அரண் செய்கிறது.

**சீவகன் ஆய்ந்த தென்தமிழ் மெய்ப்பொருள்**

இடைக் காலத் தமிழகத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களும், 'அகப்பொருள்' என்னும் பொருளில், தமிழ் என்னும் சொல்லைப் பயன் படுத்தியுள்ளனர். திருத்தக்க தேவர், தம்முடைய காப்பியத்தில், இச் சொல்லை, இப்பொருளில் கையாண்டுள்ளார். பதுமையும் சீவகனும் காதல் கொண்டனர். பிறர் அறியாதவகையில், அவர்கள் களவொழுக்கத்தில் ஈடு பட்டனர். சீவகன், பதுமையைச் சந்திக்கப் பூஞ்சோலைக்குச் சென்றான். இச் செய்தியைச் சொல்லுமிடத்து, 'தமிழ்' என்னும் சொல்லை,

**தேவர் பண்ணிய தீந்தொடை இன்சுவை**
**மேவர் தென்தமிழ் மெய்ப்பொரு ளாதலின்**
**கோவத் தன்னமென் சீறடிக் கொம்பனாள்**
**பூவர் சோலை புகுவலென் றெண்ணினான்**

**(சீவக சிந். பதுமை. 163)**

என்று தேவர் வழங்கியுள்ளார்.

இப்பாடலில் இடம் பெற்றுள்ள, 'மேவர் தென்தமிழ்' என்னும் தொடருக்கு, 'நாடக வழக்கும், உலகியல் வழக்கும் பொருந்துதல்வரும்

அகப்பொருளில்"[7] என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தந்துள்ளமையும் இங்குக் கருதற்பாலது.

### தமிழியல் வழக்கு

யாப்பருங்கலம் ஒழிபியலில், 'மாலைமாற்றே சக்கரஞ் சுழிகுளம்' என்று தொடங்கும் சூத்திரத்தின் விருத்தியுரையில் எட்டு வகையான மணங்கள் சுட்டப்படுகின்றன. அப்பகுதியில் களவொழுக்கத்தினை விளக்கு வதற்கு, அவிநயனார் இயற்றிய செய்யுள் ஒன்று மேற்கோளாகக் காட்டப் பட்டிருக்கிறது. அச்செய்யுளின்,

**"முன்செய் வினையது மறையா வுண்மையின்**
**ஒத்த இருவரும் உள்ளக நெகிழ்ந்து**
......... .......... ........
**மெய்யுறு வகையு முள்ளல்ல துடம்புறப் படாத்**
**தமிழியல் வழக்க மெனத்**
**தன்னன்பு மிகை பெருகிய**
**களவெனப் படுவது கந்தருவ மணமே[8]"**

என்னும் பகுதியில், 'தமிழியல்' என்னும் சொல் அகப்பொருளைச் சுட்டு வதைக் காணலாம்.

### தமிழ் நெறி

'தமிழ் நெறி விளக்கம்' என்னும் அகப்பொருள் இலக்கண நூல் ஒன்று உளது. அந்நூலுள், 'அன்பின் ஐந்திணை' ஒழுக்கம், தமிழ் நெறி என்று போற்றுப்படுவதும் இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகும்.

மேற்கண்ட சான்றுகள், அகப்பொருளைத் தமிழ் என்னும் சொல்லால் சுட்டும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்துவருவதைத் தெளிவுறுத்துகின்றன.

**தமிழியல் - 3- 1973**

---

7. சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், உ.வே. சா. பதிப்பு: சென்னை, 1969: பக். 675

8. யாப்பருங்கல் விருத்தியுரை, S. பவானந்தம் பிள்ளை பதிப்பு, சென்னை, 1816: பக்.535.

# 25. தமிழ் - அகப்பொருள்

(தமிழ் என்னும் சொல் அகப்பொருள் என்னும் பொருளில் இடைக்காலத்தே வழங்கியிருந்ததென்ற கருத்திற்கு அரணாகப் பல நூல் களிலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டிவிளக்குகின்றார் இதன் ஆசிரியர்.)

சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் எழுதி வெளியிட்ட "இறையனார் அகப்பொருள் ஆராய்ச்சி" என்னும் நூலில், தமிழ் என்னும் சொல்லுக்கு அகப்பொருள் என்னும் பொருளும் உண்டு என்பதை விளக்கியுள்ளேன். அதில், பரிபாடல், ஐந்திணை ஐம்பது, யாப்பருங்கல உரை முதலிய நூல்களி லிருந்து மேற்கோள் காட்டி, தமிழ் என்னும் சொல்லுக்கு அகப்பொருள் என்னும் பொருள் உண்டு என்பதை விளக்கினேன். பெரிய புராணம், சிந்தா மணி, பாண்டிக்கோவை, திருக்கோவையார், நாலாயிரப் பிரபந்த வியாக்கி யானம் முதலிய நூல்களிலும் தமிழ் என்னும் சொல்லை அகப்பொருள் என்னும் கருத்தில் வழங்கியிருப்பதை ஈண்டு எடுத்துக்காட்ட விரும்பு கிறேன். சங்க காலத்திற்குப் பிறகாலத்தில் இச்சொல் இப்பொருளில் வழங்கப் பட்டு இக்காலத்தில் முழுவதும் மறக்கப்பட்டிருப்பது தமிழ் ஆராய்ச்சியாளர் கருதவேண்டிய தொன்றாகும்.

**"வண்டுறை வார்பொழில் சூழ்நறை யாற்றுமன் ஓட**
**வைவேல்**
**கொண்டுறை நீக்கிய தென்னவன் கூடற் கொழுந்தமிழின்**
**ஒண்டுறை மேல்உள்ளம் ஓடியதோ? அன்றி**
**யுற்றதுண்டோ?**
**தண்டுறை வா! சிந்தை வாடியென் னாங்கொல்**
**தளர்கின்றதே"**

என்னும் இப்பாண்டிக் கோவைச் செய்யுள், இறையனார் அகப்பொருள் 3-ஆவது சூத்திர உரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இதில், தமிழின் ஒண்துறை என்று கூறப்படுவது, துறைகளை உறுப்பாகவுடைய அகப் பொருள் என்று பொருள்படுவது காண்க. இயற்றமிழ் என்ற பொருள்

கொள்ளலாகாதோ எனில், இயற்றிமிழுக்குத் துறை இல்லையாதலால், அகப்பொருள் என்பதே ஈண்டு நேரிய பொருள் என்பது தோன்றுகிறது.

*II*

**சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும்என்**
**சிந்தையுள்ளும்**
**உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் டீந்தமிழின்**
**துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ**
**இறைவா! தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந்**
**தெய்தியதே**

என்பது திருக்கோவையார். இதில் ஒண்தீந்தமிழின் துறை என்பது அகப் பொருள் எனப் பொருள்படுவது காண்க. இதற்கு உரை எழுதிய பேராசிரி யரும், "கூடலின் கண் ஆராய்ந்த ஒள்ளிய இனிய தமிழின் துறைகளிடத்து நுழைந்தாயோ?" என்று எழுதுகிறார். மேலும் விளக்கம் கூறுகிறார். "தமிழின் துறைகளாவன: ஈண்டு அகமும் புறமுமாகிய பொருட்கூறு" என்று இவ்விளக்கவுரையில், பொருளதிகாரத் தொடர்புபற்றிப் புறப்பொருளையும் குறிக்கிறாரெனினும் ஈண்டு இடம் நோக்கி அகப்பொருளை மட்டும் கொள்ளவேண்டும். என்னை? இறைவன் கூடலில் ஆராய்ந்தது அகப் பொருளன்றிப் புறப்பொருளன்றே. இறையனார் அகப்பொருள் அகப் பொருளை மட்டுந்தானே கூறுகின்றது. எனவே, இங்குத் தமிழ் என்பது அகப் பொருள் என அறியப்படுகிறது.

*III*

**"மறையாளர் திருக்கடவூர் வந்துதித்து வண்தமிழின்**
**துறையான பயன்தெரிந்து சொல்விளங்கிப்**
**பொருள்மறையக்**
**குறையாத தமிழ்க்கோவை தம்பெயராற் குலவும்வகை**
**முறையாலே தொகுத்தமைத்து மூவேந்தர் பால்பயில்வார்"**

என்பது பெரிய புராணச் செய்யுள். காரி நாயனார், தமது பெயரால் காரிக்கோவை என்னும் அகப்பொருள் நூல் ஒன்றை இயற்றி மூவேந்தரிட மும் சென்று அதனைப் படித்துக்காட்டிப் பொருள் பெற்றுத் தொண்டு புரிந்து

வந்தார் என்று இச்செய்யுள் கூறுகிறது. இச்செய்யுளில் அகப்பொருளைத் ''தமிழின் துறை'' என்று சேக்கிழார் கூறியிருப்பது காண்க.

*IV*

**''தேவர் பண்ணிய தீந்தொடை இன்சுவை**
**மேவர் தென்றமிழ் மெய்ப்பொரு ளாதலிற்**
**கோவத் தன்னமென் சீறடிக் கொம்பனாள்**
**பூவர் சோலை புகுவலென் றெண்ணினான்''**

என்பது சிந்தாமணியில் பதுமையார் இலம்பகச் செய்யுள், இதிலும், தமிழ் என்னும் சொல் அகப்பொருள் என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது காண்க. இதற்கு உரை எழுதிய நச்சினார்கினியரும் இப்பொருளையே கூறு கிறார். அது வருமாறு: ''யாழையுடைய கந்தருவர் பண்ணிய இனிய மணம் தமிழிற் பொருள்; அதுவும் நமக்கா மாதலிற் கொம்பனாள் நிற்கின்ற பூவை யுடைய சோலையிலே யானும் சென்று இயற்கைப் புணர்ச்சி புகுவேன் என்றெண்ணினான்.'' மேலும், மேவருதமிழ் என்பதை இவ்வாறு விளக்கு கிறார்: ''மேவருதமிழ் - நாடக வழக்கும் உலகியல் வழக்கும் பொருந்துதல் வரும் அகப்பொருள்.

**''கலைபுறஞ் சூழ்ந்த வல்குல் கார்மயில் சாயலாளும்**
**மலைபுறங் கண்ட மார்பின் வாங்குவில் தடக்கையானும்**
**இலைபுறங் கண்ட கண்ணி இன்தமிழ் இயற்கை இன்பம்**
**நிலைபெற நெயியிற் றுய்த்தார் நீகர்தமக் கிலாதநீரார்.''**

இது சிந்தாமணியில் சுரமஞ்சரியா ரிலம்பகச் செய்யுள். இச் செய்யுளிலும் அகப்பொருள் தமிழ் என்று கூறப்படுகிறது. இதற்கு நச்சினார்க்கினியர் இவ்வாறு உரை எழுதுகிறார்:- ''மயிற்சாயலாளும், பச்சிலையை இடத்தே யுடைத்தாகிய கண்ணியையுடைய மலைதோற்ற மார்பினையுடைய தடக்கையானுமாகிய தமக்கொப்பில்லாத நீரார் இனிய தமிழ் கூறிய இயற்கைப் புணர்ச்சியாகிய இன்பம் நிலைபெறும்படி முறைமையின் துய்த்தாரென்க.'' ''இது சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப்படுதலின், உலகியல் வழக்கான காந்தருவமாம்.'' காந்தருவம் என்பது அகப்பொருள்.

*V*

***''என்னீர்மை கண்டிரங்கி இதுதகா தென்னாத***
***என்னில முகில் வண்ணர்க்(கு) என்சொல்லி யான்***
***சொல்லுகேனோ?''***

என்பது நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி: (முதற்பத்து. 4-ஆம் திருவாய்மொழி. 4- ஆம் பாட்டு.) இதற்கு உரை எதிய வியாக்கியான கருத்தர்களும் அகப்பொருளைத் தமிழ் என்று கூறியுள்ளனர் அது வருமாறு:- ''என்னீர்மை கண்டிரங்கி = என் நீர்மையுண்டு; என் ஸ்வபாவம், என் மார்த்வம். கண்டிரங்கி இது தகாதென்னாத = இத்தைக் கண்டு தயை பண்ணி 'நாம் பிரியுமது தகாது என்னாதே போகட்டுப் போனவர்க்கு பட்டரை ஒரு தமிழன், 'கேட்டிரங்கி' என்னாதே 'கண்டிரங்கி' என்னப்பெறுமோ?' என்ன, 'அணைத்த கை நெகிழ்த்தவளவிலே வெளுத்தபடி கண்டால் பிரியத் தகாதென்றிருக்க வேண்டாவோ? இப்படிக் கூடுமோ? என்னில் - 'புல்லி' இத்யாதி, 'காதலர் தொடுவுழி' இத்யாதி, உனக்கு இத்தமிழ் போகாதோ என்றார்.

**- நம்பிள்ளை ஈடு முப்பத்தாறாயிரப்படி.**

இந்த வியாக்கியானத்திற்கு, சீயர் அரும்பத உரை இவ்வாறு விளக்கம் கூறுகிறது:- 'நாயக ஸந்நிதியில் வைவர்ண்யங் கூடமையாலே கேட்டிரங்கி யென்ன வேண்டாவோ? என்றபடி என்னப்பெறுமோ என்றது - அத்யுக்தி யன்றோ? என்றபடி. நாயக ஸந்நிதியிலும் வைவர்ண்ய முண்டாகையாலே கண்டிரங்கி என்னப்பெறு மென்று பரிஹரிக்கிறார் - அணைத்தகை இத்யாதி. வேண்டாவோ என்ற அநந்தரம் 'என்கிறாள் காண், என்று அருளிச் செய்தார் காண் என்று ஸேஷம். இப்படிக் கூடுமோ? என்னில் என்றது புல்லி இத்யாதி. 'புல்லிக் கிடந்தேன் புடை பெயர்ந்தேன் அவ்வளவில், அள்ளிக்கொள்வற்றே பசப்பு'. முன்னொரு ஞான்று காதலரைப் புல்லிக் கிடந்தேன். புடை - அல்பம். பெயர்ந்தேன் - விஸ்லேஷித்தேன். அவ்வளவில் - அப்புடை பெயர்ந்த வளவிலே. பசப்பு - வைவர்ண்யம். அள்ளிக்கொள்வற்று - கபளீகரித்தது. இது வள்ளுவன் குறள். 'காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழிப் பயத்தலானேன்' என்று சங்கத்தார் செய்யுள். காதலன் - நாயகன். தொடுவுழித் தொடுவுழி - தொட்ட தொட்ட இடம். நீங்கி - பயத்தல் நீங்கி. விடுவுழி விடுவுழி - விட்டவிட்ட விடமெல்லாம். பயத்தலானேன் -

வைவர்ண்யத்தை யுடையாளோன் என்றபடி. இவ்விரண்டையு மெடுத்து 'உனக்கு இத்தமிழ் போகாதோ?' என்றாரென்றபடி.''

இவ்வியாக்கியானங்களில் நம்பிள்ளையும், சீயரும் அகப்பொருளைத் தமிழ் என்று கூறுவது நோக்குக.

எனவே, இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றால், தமிழ் என்னும் சொல்லுக்கு அகப்பொருள் அல்லது காதல் என்னும் பொருளும் உண்டு என்பது விளங்குகிறது. இப்பொருளில் இச்சொல் சங்க காலத்துக்குப் பிற்பட்ட இலக்கியங்களில் வழங்கப்படுகிறது என்பது கருதத்தக்கது.

**செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு 22**

# 26. வெண்பா நூற்கள்

இந்திய மக்கள் யாவரும் இது காலைத் தத்தம் தாய் மொழியைப் போற்றத் துவக்கி விட்டார்கள். தாய் மொழி வளர்ச்சியுறுவதாலேயே ஒவ்வொரு தேசமும் உயர் நிலையடைகின்றது என்னும் உண்மையை இப்பொழுது மக்கள் யாவரும் நன்குணர்ந்து கொண்டார்கள். வடக்கே வங்க நாடும், தெற்கே கேரள நாடும் பாஷை வளர்ச்சியில் இப்பொழுது முனைந்து நிற்கின்றன. தமிழ் நாட்டு மக்களுந் தாய் மொழி வளர்ச்சியில் மனஞ் செலுத்தியிருப்பது தமிழ் நாட்டின் நற்காலமே. ஆண் மக்களும் பெண் மக்களும் ஒருங்கே தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கியிருக்கிறார்கள். மாணவ மாணவிகளைப் பலவாற்றானும் ஊக்கப்படுத்த வேண்டியது பண்டிதர்களின் இன்றியமையாக் கடமையாகும். நிற்க.

தமிழ் மொழியில் அந்தாதி, கலம்பகம்,சதகம், பிள்ளைத் தமிழ் நிகண்டு, புராணம் முதலிய பற்பல வகையான பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் பற்பல நூற்கள் பற்பல புலவர்களால் இயற்றப் பட்டுள்ளன. தமிழ் கற்கும் மாணவர்கள் தத்தம் விருப்பத்துக்கியந்தவாறு, சிலர் புராணங்களையும், சிலர் கலம்பகங்களையும், சிலர் பிள்ளைத் தமிழ்களையும், சிலர் வேறு நூல்களையும் வாசிக்கப் பிரியபடுபவர்கள். அவ்விதம் பிரியப்படுபவர்கள், தாங்கள் படிக்க விரும்பும் பகுதியில் இன்னின்ன நூற்கள் உள்ளன என்று அறியவேண்டுவது அவசியம். அங்ஙனம் அறிந்தாலன்றோ அவற்றை எல்லாம் வாசித்து அத்துறையில்

வல்லவராதல் கூடும்? ஆதலின், அறிஞர்கள் முன்வந்து இந்த இந்தப் பகுதியில் இந்த இந்த நூற்கள் உள்ளன என்று வெளிப்படுத்த வேண்டுகிறேன். இனி,

மாணவர்களில் சிலர் வெண்பா நூற்களை மாத்திரம் ஆராய்வதில் விருப்பமுள்ளவர்களாயிருத்தல் கூடும். அத்தகைய மாணவர்களுக்கு உதவியாயிருக்கும் பொருட்டு, வெண்பாயாப்பினால் இயற்றப் பட்ட நூற்களை ஈண்டு எழுதுவான் முன் வந்தேன். இரட்டை மணிமாலை, நான் மணிமாலை, மும்மணிககோவை முதலிய பகுதிகளின் இடை இடையே காணப்படும் வெண்பாக்களையும் தனிப்பாடற்றிரட்டில் காணப்படும் வெண் பாக்களையும் தனிப் பாடற்றிரட்டில் காணப்படுங் கணக்கற்ற வெண்பாக் களையுந் தவிர்த்து, முழுவதும் வெண்பாயாப்பிலேயே இயற்றப்பட்ட தனி நூற்களைமட்டும் ஈண்டு குறிப்பிடுகின்றேன். நூற்பெயரும் இயற்றியவர் பெயரும் வருமாறு:-

**அத்வைத வெண்பா - சிவப்பிரகாசர்**
**அரிச்சந்திர வெண்பா - செ. தணிகைராய முதலியார்**
**அறுபது வருட வெண்பா - இடைக்காடர்**
**ஆத்திசூடி வெண்பா - இராமபாரதி**
**இரங்கேச வெண்பா-**
*** இராமாயண வெண்பா - குரவை இராமநுஜ தாசர்**
**இராமாயண வெண்பா-சங்கத்தார்**
**இராமாயண வெண்பா - சதாவதானம் சுப்பிரமணிய ஐயர்**
**கலைசைச் சிலேடை வெண்பா - சுப்பிரமணிய சுவாமிகள்**
**குசேல வெண்பா-**
**குடந்தை வெண்பா - முருகேச பண்டிதர்**
**கோவல வெண்பா - ஸ்ரீ நிவாஸாசாரியார்**
**சாவித்திரி வெண்பா - சாமிநாத முதலியார்**
**சிங்கைச் சிலேடை வெண்பா - நமச்சிவாயக் கவிராயர்**
**சிவ சிவ வெண்பா - சென்னமல்லையர்**
**சோமேசர் முதுமொழி வெண்பா - சிவஞான சுவாமிகள்**
*** திருக்குறள் உண்மை வெண்பா -**
***திருக்குறள் திருத்தொண்டர் இணைப்பு வெண்பா -**
**- தொட்டிக்கலைசை வெண்பா - சுப்பிரமணிய தேசிகர்**

நல்லைவெண்பா - சேனாதிராச முதலியார்
நளவெண்பா - புகழேந்திப்புலவர்
நீதிநூல் - ஔவையார்
நெல்லைச்சிலேடை வெண்பா - வெ.பா. சுப்பிரமணிய முதலியார்
பகவற்கீதை வெண்பா - திருநயம் எஸ். முத்துசாமி முதலியார்
பகவற்கீதை வெண்பா - வாதிகேசரி ஸ்ரீ அழகிய மணவாள ஜீயர்
பஞ்சகால வெண்பா - தெ. நாராயண ஐயர்
பாரத வெண்பா - பெருந்தேவனார்
புலியூர் வெண்பா - மாரிமுத்துப் புலவர்
மதுரைச் சிலேடை வெண்பா - மு.ரா. கந்தசாமிக் கவிராயர்
மயிலணிச்சிலேடை வெண்பா - முருகேச பண்டிதர்
முருகேச வெண்பா -
வினாவெண்பா - உமாபதி சிவாசாரியர்

* * *

அருணைச்சிலேடை வெண்பாமாலை - சிந்நயச் செட்டியார்
தணிகைச்சிலேடை வெண்பாமாலை - கந்தப்பையர்
புறப்பொருள் வெண்பாமாலை - ஐயன் ஆரிதனார்
✱அரிச்சந்திர சரிதை -
இன்னிசை இருநூறு - சோழவந்தான் அ. சண்முகம் பிள்ளையவர்கள்
✱ கைந்நிலை - புல்லங்காடனார்
சிவஞான விளக்கம் -
சிவபோகசாரம் -
நல்வழி - ஔவையார்
நன்னெறி - சிவப்பிரகாச சுவாமிகள்
நீதிநெறி விளக்கம் - ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
மூதுரை (வாக்குண்டாம்) - ஔவையார்
முத்தொள்ளாயிரம் - சங்கப்புலவர்.

ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் அருளிச்செய்த
திருவாசகத்தில் உள்ளவை:-
திரு வெண்பா -
பண்டாய நான்மறை - திருத்தசாங்கம்
- பதினோறாந் திருமுறையிலுள்ள
வெண்பாக்கள்:-
அற்புதத் திருவந்தாதி - காரைக்காலம்மையார்
க்ஷேத்திரத் திருவெண்பா - ஐயடிகள் காடவர்கோன்
கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி - நக்கீரர்
திருவீங்கோய்மலை எழுபது - நக்கீரர்
கார் எட்டு - நக்கீரர்

சிவபெருமான் திருவந்தாதி - பரணதேவர்
நாலாயிரப் பிரபந்தத்தில் உள்ள வெண்பாக்கள்:-
முதல் திருவந்தாதி - பொய்கையாழ்வார்
இரண்டாந் திருவந்தாதி - பூதத்தாழ்வார்
மூன்றாந் திருவந்தாதி - பேயாழ்வார்
நான்காந் திருவந்தாதி - திருமழிசைப்பிரான்
பெரிய திருவந்தாதி - நம்மாழ்வார்

* * *

அருணகிரி யந்தாதி - குகை நமச்சிவாயதேவர்
திருக்கருவை வெண்பா வந்தாதி - அதிவீரராம பாண்டியர்
திருவேங்கடமாலை - பிள்ளைப் பெருமாளையங்கார்
நூற்றொட்டுத் திருப்பதியந்தாதி - பிள்ளைப்
பெருமாளையங்கார்
பந்தன் அந்தாதி - ஔவையார்
உபதேச ரத்தினமாலை - ஸ்ரீமணவாளமாமுனி
திருவாய்மொழி நூற்றந்தாதி - ஸ்ரீமணவாளமாமுனி
ஞானசாரம் - அருளாளப் பெருமாளெம் பெருமானார்
அறநெறிச்சாரம் - முனைப்பாடியார்
பதார்த்தகுண சிந்தாமணி - (வைத்தியம்) சித்தர்

இவை யன்றியும் பதினென் கீழ்க்கணக்கைச் சேர்ந்த பதினெட்டு நூற்களும் வெண்பாக்களே. இவை வெண்பாவின் இனமாகிய குறள்

வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா முதலிய யாப்புகளால் இயற்றப்பட்டவை. இவற்றின் பெயரும் ஆசிரியர் பெயரும் வருமாறு:-

நாலடியார் - சமணமுனிவர்
நான்மணிக்கடிகை - விளம்பிநாகனார்
இனியவை நாற்பது - பூதஞ்சேந்தனார்
இன்னா நாற்பது - கபிலர்
கார் நாற்பது - கண்ணங் கூத்தனார்
களவழி நாற்பது - பொய்கையார்
ஐந்திணை ஐம்பது - மாறன் பொறையனார்
திணைமொழி ஐம்பது - கண்ணஞ் சேந்தனார்
ஐந்திணை எழுபது - மூவாதியார்
திணைமாலை நூற்றைம்பது - கணிமேதாவியார்
திருக்குறள்(முப்பால்) - திருவள்ளுவ நாயனார்
திரிகடுகம் - நல்லாதனார்
ஆசாரக் கோவை - பெருவாயின் முள்ளியார்
பழமொழி - மூன்றுறையரையனார்
சிறுபஞ்ச மூலம் - காரியாசான்
இன்னிலை - பொய்கையார்
முதுமொழிக் காஞ்சி -
ஏலாதி - கணிமேதாவியார்

இக்குறியிடப்பட்டவை அச்சிடப்படாதவை. சங்கத்தார் இயற்றிய இராமாயண வெண்பா இப்போது கிடையாது. அரிச்சந்திர சரிதை யென்பது தொன்மையான நூல், கவிச்சுவையுடைய தென்றும் தெரிகிறது. அச்சிடப் படாத இந்நூற்களையறிவித்த தமிழ்ப் பண்டிதர் திரு. துரைசாமி ஐயர் அவர் களுக்கு எமது வந்தனம். இந்நூற்களை அச்சுவாகன மேற்றிப் பலருக்கும் பயன்படச் செய்வது தமிழ்க் கழகங்களின் கடமையாகும்.

இங்கு குறிப்பிடாத வேறு வெண்பா நூற்களுளவேல், அன்பர்கள் "லக்ஷிமி" பத்திரிகையில் வெளியிடுமாறு வேண்டுகின்றேன்.

கலிவெண்பா யாப்பில் அமைந்த நூற்கள் தமிழில் ஏராளமாக வுள்ளன வாதலால் அவற்றின் பெயரைத் தனியே தொகுத்தெழுதுவாம்.

**இலட்சுமி - 1924 - டிசம்பர்**

# 27. வசந்த குசுமாகர மாத்திரை

*(நெடுநாளைக்குமுன் இப்பாட்டை ஓர் ஓலைச்சுவடியிற் கண்டேன். தாளில் படிஎடுத்தெழுதினேன். அதில் இம்மருந்து செய்யும்முறையும், நோய்களும், அனுபானமும் காணப்படுகின்றன. மருத்துவ அன்பர்கள் கையாண்டு மக்களுக்கு நலம் செய்வார்களாக.)*

**கலி வெண்பா**

*அத்திமுக வைங்கரனை அடிபணிந்து தெண்டனிட்டுப்*
*பத்தியுடன் அர்ச்சித்துப் பாங்குடனே - சித்தி*
*வசந்தகுசு மாகர மாத்திரையின் மாமுறையை*
*இசைந்த உலாவான் இயம்பினேன் - உசந்தநல்ல*
*அக்கரா காரம் அதிமதுரம் கோஷ்டமுடன்*
*தக்கவெண் காரந் தனிலவங்கம் - மிக்ககுணத்*
*திப்பிலியும் இந்தத் தினுசுக்குக் கால்பலமாய்ச்*
*செப்பமுடன் ஒன்றாகச் சேர்த்திட்டு - ஒப்பமிடும்*
*அன்பான (சாதி)லிங்கம் அரைப்பலமுந் தான்வாங்கி*
*இன்பமாங் குங்குமப்பூ இன்னங்கேள் - கொம்பனையே!*
*பச்சைக் கருப்பூரம் பாங்குளகோ ரோசனமும்*
*கச்ச விராகனெடை காணவிட்டு - இச்சையுடன்*
*சொன்னசரக் கெல்லாம் சுபமாகத் தான்சேர்த்து*
*நன்னிகலுவத்தில் நாடவிட்டு - மின்னலொளி*
*வஞ்சிமுலைப் பாலில் வளர்மூ ணரைச்சாமம்*
*இஞ்சிரசந் தன்னில்இரண் டீர்சாமம் - சஞ்சமுடன்*
*நன்றாக வேயரைத்து நல்லசிறு பயறளவு*
*குன்றாமல் மாத்திரையாய்க் கொண்டுருட்டி - நன்றாக*
*எண்குறிப்பும் பார்த்து இயல்பான சாத்தியமாய்*
*திண்குறிப்பைக் கண்டால் திறம்பேசும் - நன்குறிப்பாம்*
*நாட்டுத்தேன் இஞ்சிரசம் நங்கைமுலைப் பாலதனால்*
*கூட்டிக் குழப்பியுட் கொண்டக்கால் - வாட்டமிடும்*
*பித்தசுரம் வாதசுரம் பேரான சேத்துமசுரம்*

***சத்திசன்னி தோசம் தலைவலியும் - முத்தியிடும்***
***கையசதி காலசதி கடுமுறைப்பு முப்பிசமும்***
***மெய்கடுப்பும் இத்தனையும் ஏகுமே - மைகுழலே***
***பத்தியத்துக் கேற்ற பதார்த்தவகை யின்னதென்று***
***சித்தமுடன் செப்புகிறேன் சீராய்க்கேள் - முத்தியிடாக்***
***கத்தரிக்காய்ப் பிஞ்சு கனுமுருங்கோ......***
***உத்த பொரிச்சாறும் ஒக்குமே - முத்தியிட்ட***
***வல்ல பிணிமாறி வாழ்ந்திருப்பார் தாரணியில்***
***வல்லவனாய் மெய்யில் வலுவுண்டாம் - தொல்லுகில்***
***வானுலகத் தன்வந்திரி வாகடத்தின் நூன்முறையால்***
***மானிடர்க்குச் சொன்னேன் மகிழ்ந்து.***

*செந்தமிழ்ச்செல்வி சிலம்பு - 25*

## 28. கிறீன் வைத்தியர்

### *(Dr. Samuel Fisk Green)*

*அமெரிக்கன் மிஷன் என்னும் கிறிஸ்தவச்சங்கம் 1816-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது. இந்த அமெரிக்கன் மிஷன் சங்கத்தார் உயர்தரக் கல்வியையும் சையன்ஸ் என்னும் சாத்திரங்களையும் கற்பித்தற் காக 1823-ல் வட்டுக் கோட்டை என்னும் இடத்தில் "செமினாரி" யொன்றை ஏற்படுத்தினார்கள். இந்தச் செமினாரி அக்காலத்தில் சர்வகலா சாலைக் கொப்பாகச் சிறப்புற்று விளங்கிற்று. உயர்தரக் கல்வியைக் கற்பித்த இந்தச் செமினாரியின் விசேஷம் என்னவென்றால். இதில் தமிழ், சமஸ்கிருதம், கிரேக்கு, எபிரேய பாஷைகளும், நில அளவை சாஸ்திரம், வான சாஸ்திரம், மாலுமி சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களும் கற்பிக்கப்பட்டமை ஒருபுற மிருக்க, இதில் வாசித்த பிள்ளைகளுக்கு உணவு முதலியவை இலவசமாகக் கொடுக்கப்பட்டதும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்பட்டதுமேயாகும். இந்தக் கலாசாலை, அக்காலத்தில் ஆசியாகண்டத்திலே யிருந்த கலாசாலைகளில் தலை சிறந்து விளங்கிற்று. இவ்விதம், அமெரிக்கன் மிஷன் சங்கம் தமிழிலங்கையில் அக்காலத்திற் செய்துவந்த தொண்டு போற்றப்பாலது.*

*இந்த அமெரிக்கன் மிஷன் சார்பாக கிறீன் வைத்தியர் (Dr.S.F. Green) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மானிப்பாய் என்னுமிடத்தில் ஒரு*

வைத்தியசாலையை 1847-ல் நிறுவி நோயாளர்களுக்குச் சிகிச்சைகள் செய்து வந்தார். அஃதன்றியும் அநேக மாணவருக்கு மேல்நாட்டு முறைப்படி வைத்திய சாஸ்திரத்தைக் கற்பித்துவந்தார். அமெரிக்கமிஷன் சங்கத்தார் எல்லாக்கல்வியையும் சாஸ்திரங்களையும் தேசபாஷையில் கற்பிக்க வேண்டும் என்னும் உயர்ந்த கருத்துள்ளவர்களாயிருந்தார்கள். அக் கொள்கையைப் பின்பற்றி கிறீன் வைத்தியரும் வைத்திய சம்பந்தமான சாஸ்திரங்களையெல்லாம் அறிஞர் பலரின் உதவிகொண்டு தமிழில் மொழிபெயர்த்து எழுதினார். வைத்திய சம்பந்தமான ''சையன்ஸ்'' நூல்களை முதல்முதல் தமிழில் வெளிப்படுத்தியவர் இவர்தாம். இதன் பொருட்டுத் தமிழுலகம் இவருக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

1856-ல் கிறீன் வைத்தியர் வைத்திய நூல் ஒன்றைத் தமிழில் எழுதி அதனை அச்சிடும் செலவை அரசாங்கத்தாரை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டார். அரசாங்கத்தார், அந்த நூலை ஆங்கிலமொழியில் எழுதினால் தமது செலவில் அச்சிடுவதாகத் தெரிவித்தார்கள். அமெரிக்க மிஷன் சங்கத்தின் நோக்கம் எல்லா சையன்ஸ்களையும் சாத்திரங்களையும் தேசபாஷையில் எழுதப்படவேண்டும் என்பதாகையால் கிறீன் வைத்தியர் அந்த வைத்திய நூலை ஆங்கிலத்தில் எழுதமறுத்துவிட்டார். ஆகையால், அரசாங்கத்தார் அந்த நூலை அச்சிடுவதற்குப் பொருளுதவிசெய்ய முடியாதென்று சொல்லி விட்டார்கள்.

கிறீன் வைத்தியர் தமிழ்மொழியில் இயற்றிய வைத்தி சம்பந்தமான நூல்கள்:-

அங்காதிபாதம் (*Human Anatomy*). சுகரணவாதம், உற் பாலனம். இம் மூன்று நூல்களும் ஒரே புத்தகமாக 1872-ல் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்டன. கெமிஸ்தம் (*Chemistry*) ''இது வெல்சு பண்டிதர் இங்கிலீஷில் இயற்றிய நூலிலிருந்து. பாஷாந்தரமாக்கலில் த.பி. சப்மன் வைத்தியனுடைய உதவியையும் பரிபாஷையாக்கலில் ர. சுவாமி நாதன் வைத்தியனுடைய உதவியையும் கொண்டு சமுவல். பி.கிறீன் வைத்தியரால் மொழிபெயர்க்கப்பட்டது. யாழ்ப்பாணம் அமெரிக்க இலங்கை மிஷனுக்காக நாகர்கோவில் லண்டன் மிஷன் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது: 1875''

*Vocabularies of Malaria Medicate and Pharmacy.*

இந்த நூல் 1875-ல் நாகர்கோவில் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது. இதனையும் கிறீன் வைத்தியர் தமிழில் எழுதி வெளியிட்டார் இந்நூலையான் பார்த்ததில்லை. ஆகையால் இதன் தமிழ்ப்பெயர் இன்ன தென்று தெரியவில்லை.

கிறீன் வைத்தியர் வைத்திய சம்பந்தமாக, மேலைத் தேசத்துச் சிகிச்சை முறைப்படி ஒன்பது நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டார் என்று தெரிகிறது. அவற்றில் மேற்சொன்ன ஐந்து நூல்கள் இப்போது அருமையாகச் சிற்சிலரிடத்தில் கிடைக்கும். ஏனைய நான்கு நூல்களின் பெயர்தானும் தெரியவில்லை. அந் நூல்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியது தமிழ் மொழி முன்னேற்றத்தில் கருத்துடையவர்களின் கடமையாகும். அன்றியும் கிறீன் வைத்தியர் எழுதி வெளியிட்ட அந்த ஒன்பது நூல்களும் மீண்டும் அச்சிடப்படவேண்டும். இத்தகைய வேலையை, சென்னை மாகாணத் தமிழர் சங்கம் போன்ற பெரிய சங்கங்கள் செய்ய மேற்கொள்ள வேண்டும்.

இவையன்றியும், இலங்கையிலிருந்த அமெரிக்கன் மிஷன் சங்கத் தாரின் சார்பாக வீசகணிதம், நியாயசாஸ்திரம் (தர்க்க நூல்), வானசாத்திரம் முதலிய நூல்களும் தமிழில் பல ஆண்டுகளுக்குமுன் அச்சிடப்பட்டன. அந்த நூல்களும் இப்போது கிடைப்பது அருமை.

**செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு 15**

# 29. முதுமையைத் தடுத்தல் அல்லது எப்பொழுதும் வாலிபம்

நூதனமான சாஸ்திர (*Science*) ஆராய்ச்சிகள் அறிஞர்களால் நடை பெற்று வருகின்றன அவ்வாராய்ச்சியின் பயனாக நூதன விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஜனமூகத்துக்கு நன்மை விளைவிக்கப்படுகிறது.

இவ்வித சாஸ்திர ஆராய்ச்சிகளில், மனித தேகத்தைப் பற்றிய ஆராய்ச்சி மிகவும் வியப்பைத் தரக்கூடியது. (*Professor Voronoff*) என்பவர் மனிதனுக்குச் சாக்காடு வரவேண்டிய அவசியமில்லை என்றும், எப்பொழுது சாகாமலே உயிர்வாழமுடியும் என்றும் சொல்லுகிறார். அதற்காக அவர் ஆராய்ச்சி செய்தும் வருகிறார்.

அவர் பைத்தியக்காரர் என்றும் சாக்காட்டை ஒருவராலும் தடுக்க முடியாது என்று வாசகர்கள் நினைக்கலாம். கிழத்தனத்தை ஒட்டி மறுபடியும் வாலிபத்தையடையச்செய்கிற அவர், சாக்காட்டைத் தடுக்கக் கூடும் என்று சொன்னார் அதை பயித்தியக்காரத்தனம் என்று சொல்லமுடியாது.

அவர் கிழத்தனத்தை ஒட்டி மறுபடியும் வாலிபத்தை உண்டாக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது. மிகவும் கிழத்தனம் அடைந்து, தலை குனிந்து நடக்கமுடியாமல் தள்ளாடிய ஒரு கிழ ஆட்டுக்கிடாவைக் கொண்டு வந்து 1918 ம் ஆண்டு ஆப்பரேஷன் செய்தார். அதாவது, மனிதர் மிருகம் முதலிய பிராணிகளின் தேகத்தில் கிளேண்ட்ஸ் (Glands) என்னும் உறுப்புக்கள் இருக்கின்றன. மேற் சொன்ன கிழ ஆட்டுக்கு அவ்வித உறுப்புக்களை ஆப்பரேஷன் செய்து எடுத்துவிட்டு, வாலிப வயதுடைய இன்னொரு ஆட்டின் உறுப்பை (Glands) எடுத்து கிழ ஆட்டுக்கு வைத்தார். பிறகு அந்த கிழ ஆடு யாவரும் அதிசயப்படும்படியாக விபத்தையடைந்துவிட்டது. கிழத்தனம் மேலிட்டு நடக்க முடியாமல் தலைகுனிந்து இன்றைக்கோ நாளைக்கோ என்று சாகக்கிடந்த அந்த ஆடு, தலை நிமிர்ந்து சுறு சுறுப்பாக நடக்கவும் வாலிப ஆட்டைப்போலவும் ஆய்விட்டது அன்றியும், வாலிப ஆட்டைப்போலவே காம இச்சையும் அதற்கு உண்டாய் விட்டது. சில ஆட்டுக்குட்டிகளுக்குத் தகப்பனாக ஆய்விட்டது.

இந்த ஆராய்ச்சியைச் செய்கையில் செய்துக்காட்டி சித்தியடைந்த அப்பெரியார், மனிதன் எப்பொழுதும் இளமையோடு இருக்கமுடியும் என்பதை உலகம் அறியச்செய்ததோடு, மனிதன் என்றும் சாகாமல் இருக்கலாம் என்னும் நம்பிக்கையுடையவராயிருக்கிறார். முதுமையை ஒழிக்கவழி கண்டுபிடித்த இவர் சாக்காட்டை ஒழிக்கவும் ஒரு நூதனவழி கண்டுபிடிக்கவும் கூடும். இவரால் கண்டுபிடிக்க முடியாமற் போனாலும் இன்னொருவராவது கண்டுபிடிக்க முடியும்.

ஆமாம்! அது சரிதான், கிழ ஆட்டுக்கு வாலிபத்தனத்தையுண்டாக்கி சித்திபெற்றது உண்மைதான், கிழ மனிதனை இளங்குமரனாக்கிச் சித்தியடைந்தார்களா?

அதையும் செய்து பார்த்தாய்விட்டது. இளமையை எப்போதும் நிலைத்திருக்கச்செய்யலாம் என்றும் வயோதிகம் வரவொட்டாமல் தடுக்கலாம் என்றும் இனி நிச்சயமாய் நம்பலாம்.

எழுபது, வயது சென்ற ஒரு மனிதனை, (*Glands*) சிகிச்சையின் மூல மாய் இளங்குமரனாகச் செய்து சித்தியடைந்துவிட்ட செய்தி மிகுந்த ஆச்சரியமே!

எழுபது வயது சென்ற ஒருமனிதன், கிளாண்ட் சிகிச்சைசெய்து அதன் பலாபலனைத் தெரிந்து கொள்ள முன்வந்தான். இதற்குமுன் மிருகங்களுக்குத் தான் இந்த சிகிச்சை செய்து வெற்றியடைந்தார்கள். ஆனால், இதுவரையில் மனிதருக்கு இச்சிகிச்சை செய்தது கிடையாது. மேற்சொன்ன எழுபது வயதுள்ள கிழவன், துணிவாக முன்வந்து ஷை சிகிச்சை செய்து கொள்ள சம்மதித்தான். ஆராய்ச்சியாளர்கள், அதற்குச்சம்மதித்து, அக்கிழவனுடைய உறுப்புகளில் சிலவற்றை ஆப்பரேஷன் செய்து எடுத்துவிட்டு, அதற்குப் பதில் குரங்குகளின் உறுப்புக்களை அவன் உடம்பில் வைத்து விட்டார்கள்.

இந்த ஆப்பரேஷன் முடிந்தபிறகு, என்ன ஆச்சரியம்! அக்கிழவன் குமரனாய்விட்டான். அவன் உடம்பில் கிழத்தனம் காணப்படவில்லை! சுருங்கி வரண்டு போன அவனுடைய தோலும் தசைகளும் வளர்ச்சியடைந்து ஒரு வாலிபனுடைய உடம்பு போல் ஆய்விட்டது. தடிபிடித்துத் தள்ளாடி தலைகுனிந்து தரையைப் பார்த்து நடந்த அக்கிழவன், இந்த ஆப்பரேஷ னுக்குப் பிறகு, தலைநிமிர்ந்து சுறுசுறுப்பாக வாலிபனைப் போல் நடக்கத் தொடங்கினான். தெளிவற்ற அவனுடைய கண்கள் பிரகாசமாகத் தெரிந்தன. உடம்பில் புதிதாக மயிர்களும் முளைக்க ஆரம்பித்தன, அம்மட்டுமோ! சிற்றின்பத்தையனுபவிக்கும் வல்லமையும் அவனுக்கு வந்துவிட்டது! இரண்டாமுறை அவன் முழுவாலிபத்தையடைந்து விட்டான்.

எழுபது வயதுக்குப்பின் மீண்டும் வாலிபத்தன்மையடைந்த அக் கிழவன் (அவனைக்கிழவன் என்று சொல்வதா, குமரன் என்று சொல்வதா?) சுமார் ஒன்றரை வருஷங்கள் வரையில் சிற்றின்பத்தை அனுபவித்து வரும்நாளில், தீடீரென்று ஒருநாள் இறந்துவிட்டான்!

அவன் ஏன் இறந்தான்? நுட்பபுத்தியும் ஆராய்ச்சி மிகுதியும் உடைய அறிவாளிகள் அவன் இறந்த காரணத்தை ஆராய்ந்து இம்முடிவுக்கு வந்தார்கள். அதாவது:-

அக்கிழவனுக்கு, கிழத்தனம் போய் வாலிபம் வந்துவிட்டதன் பயனாய் சிற்றின்பம் துய்க்கும் வல்லமை உண்டாய்விட்டது. அதனால்,

அவன் மட்டுமின்றி பெண்சுகத்திலேயே ஈடுபட்டிருந்தான். ஆப்பரேஷன் மூலமாய் வாலிபத்தையடைந்த போதிலும், அவனுடைய வயோதிகத் தன்மையினால் அவனுடைய இருதயம் முதலிய உள் உறுப்புகள் சோர் வடைந்திருந்தன. இதை உணராமல் அவன் சிற்றின்பத்தில் அதிகமாக ஈடுபட்டமையால் அவன் இறந்து போனான். அவன் சிற்றின்பத்தில் அதிக மாக பலத்தைப் போக்காமல் ஜாக்கிரதையாக இருந்தால் இன்னும் பல வருஷங்கள் அவன் பிழைத்திருக்க முடியும் என்று அவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

பகுத்தறிவின் வல்லமையைப்பாருங்கள்! பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்ததன் பலனாக "கடவுள் செயல்" என்று நம்பப்படுகிற வயோதிகம் கிழத்தனத்தை விலக்கவும், வாலிபத்தை எப்பொழுதும் நிலைத் திருக்கச் செய்யவும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி நன்றாய் முற்றுப் பெற்றுவிட்டதாகச் சொல்வதற்கில்லை. ஆனால் காலக்கிரமத்தில் முற்றுப் பெற்றுவிடும் என்பது உறுதி. வாலிபத்தையுண்டாக்கும் வித்தை சில வருஷங் களுக்கு முன்புதான் கண்டுபிடிக்கப்பட்டது. இன்னும் சில ஆண்டுகளுக்குள் இந்த வித்தை முழுவெற்றியடைந்துவிடும். அப்போது ரூபாயைக் கொடுத்து மோட்டார் வண்டி வாங்குவதுபோல, பணமுள்ளவர் பணத்தைக் கொடுத்து இளமையை வாங்கலாம். வாலிபம் ஒரு வியாபாரச்சரக்காக வரும்காலம் தூரத்தில் இல்லை.

எல்லாம் விதி,வினை, கடவுள் செயல் என்று சொல்லிக்கொண்டு சாஸ்திரங்களையும் புராணங்களையும் மந்திரங்களையும் கட்டிக்கொண்டு அழுதுகொண்டிருந்தால் இவ்வித ஆராய்ச்சிகள் வெளிப்பட முடியுமா என்று கேட்கின்றேன். எதையும் பகுத்தறிந்து, ஆராய்ந்தறிந்து உண்மையைக் காண்பதே அறிவினால் அடையக்கூடிய பயன். பெரியோர் வாக்கு, சாஸ்திர சம்மதம், புராணம் சொல்லுகிறது என்று சொல்லிக் கொண்டு, பகுத்தறிவை உபயோகப்படுத்தி உண்மையைக் காணாமல் இருப்பது கேவலம் மிருகத்தனமாகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டு பல விதத்திலும் ஆச்சரியப்படத்தக்கது. எத்தனையோ நூதன ஆராய்ச்சிகள் இந்நூற்றாண்டில் வெளிப்பட்டிருக் கின்றன. அவற்றில், கிழத்தனத்தைத் தடுத்து வாலிபத்தை உண்டாக்குவதும் ஒன்று. என்னே மனிதனுடைய பகுத்தறிவின் வல்லமை!

*குடியரசு 24.10.32*

# 30. 55 - வயதில் குழந்தை பெறுதல்

நியூஸ் - ஆப்-தி-ஒர்ல்ட் (News of the World) என்னும் பத்திரிகையின் சொந்தக்காரர்கள் அதிக வயது சென்றபின்னர் பிள்ளைபெறும் ஸ்திரீகளுக்கு 25 பவுன் இனாம் அளிப்பதாக விளம்பரம் செய்திருந்தார்கள். இந்த வெகுமதியைப் பெறுவதற்காக, கீழ்க்கண்ட அதிக வயது சென்ற தாய்மார்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அவர்களின் விபரம் வருமாறு:-

மிஸஸ் மேரி ஹிக்கின்ஸ். (நெ 13 லாவிட்ஸ்லேன். பிளார்னிதெரு, கார்க் ஸிடி. ஐரிஷ்பிரீஸ்டேட்) இந்த அம்மையாருக்கு 56-வயது ஆகிறது. இவர் தமது 55-வயது வயதில், அதாவது 1931- மார்ச் மீ 17உ இரவு ஒரு குழந்தையைப் பெற்றார். அக்குழந்தைக்கு பாட்ரிஷியா காத்லீன் ஹிக்கின்ஸ் என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

ஸெளதாமட்டன் நகரத்திலிருக்கும் மிஸஸ் எலிஸெபத் பியர்ஸ் என்னும் அம்மாள் தமது 54-வயதில் தமது கடைசி பிள்ளையைப் பெற்றதாகக் கூறுகிறார்.

டெர்பிக்கு அடுத்த ஆலண்டன் என்னும் இடத்தில் வசிக்கும் மிஸஸ் சிம்ஸ் என்னும் பெயருள்ள அம்மையார், தமது 54-வது வயதில் கென்னத் சிம்ஸ் என்னும் பெயருள்ள குழந்தையை ஈன்றதாகத் தெரிவித்திருக்கிறார்.

மிஸ்டர் எ.ஈ.கூச் என்பவர், தமது 53 வயதுள்ள மாமியார் ஒரு பெண் குழந்தையைப் பெற்றதாகத் தெரிவிக்கிறார்.

இவ்விதம் 53,54,55 வயதில் கூட பிள்ளை பெறுகிற ஸ்திரீகள் மேல் நாடுகளில் இருக்கிறார்கள். நமது நாட்டிலோ என்றால், 5 வயதில் கலியாணம் செய்து 10 வயதில் பிள்ளை பெற்று 20 வயதில் கிழவியாகிற பெண்களுக்குக் குறைவுகிடையாது. இந்த லக்ஷணத்தில், குறுகிய நோக்கமுள்ள சில வைதீகர்கள் சாரதா சட்டத்தை எதிர்ப்பதும், பாலிய விவாகத்தை ஆதரிப்பது மாயிருக்கிறார்கள்! மேல்நாடு மேல்நோக்கிச் செல்லுகிறது; கீழ்நாடு கீழ்நோக்கிப் போகிறது. இந்துமதமும், புரோகிதர் ஆதிக்கமும், வைதீகர்களின் மூடத்தனமும் உள்ள வரையில் நமது நாட்டிற்குக் கதி மோட்சமில்லை. நல்ல காலமாக இராமசாமியாரின் சுயமரியாதை இயக்கம் தோன்றி பகுத்தறிவைப் பரப்பி ஒழித்து வருகிறது. சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த

தொண்டர்களின் உழைப்பிலும், குடி அரசு பத்திரிகையின் போதனை களினாலும் குறுகிய நோக்கங்களும், மூடத்தனங்களும், அஞ்ஞான புத்தியும், வைதீகக் கொடுமைகளும் நாளுக்குநாள் குறைந்து வருகின்றன. ஆறு, ஏழு வருஷங்களுக்குள்ளாக, சுயமரியாதை இயக்கத்தினால் நமது நாட்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை நோக்கும் போது, இன்னும் கால் நூற்றாண்டுக் குள்ளாக நமதுநாடு ஐப்பான், துருக்கிதேசங்களுக்குச் சமமாக முன்னேற்ற மடைந்துவிடும் என்று தைரியமாக நினைக்க இடமுண்டு. நமது நாட்டைக் கெடுப்பதெல்லாம், மூடபழக்கவழக்கங்களும், மூடநம்பிக்கைகளும், இவைகளுக்கு ஆதாரமாயிருக்கும் மதங்களும் சாஸ்திரங்களுமே. பகுத் தறிவைப் பரவச் செய்தால், மதங்களும், சாஸ்திரங்களும் மூடத்தனங்களு ம், முட்டாள் நம்பிக்கையும் தரமாகவே ஒழிந்துவிடும்.

நமது நாட்டில் பொதுவாகப் பெண்களுக்குச் சிறுவயதிலேயே கலியாணம் செய்து விடுகிறபடியால் அப்பெண்கள் சிறுவயதிலேயே குழந்தைகளைப் பெறுகிறார்கள். ஆகவே சீக்கிரமாக அப்பெண்களுக்குக் கிழத்தனம் வந்துவிடுகிறது. அதன் பலனாக ஆயுசும் குறைகிறது. பெண்கள் முதிர்ச்சியடைந்த பிறகு அதாவது தேகவளர்ச்சி முற்றுப்பெற்ற பிறகு கலியாணம் செய்தால் அப்பெண்கள் நல்ல பலமுள்ள குழந்தைகளைப் பெறுவார்கள். அன்றியும் அவர்களுக்குச் சீக்கிரத்தில் பலமும் குறையாது. மனிததேகம் 20 அல்லது 22 வயது வரையில் வளர்ச்சியடைகிறது. அந்த வயதுக்குமேல் தேகவளர்ச்சி நின்றுவிடும். தேக வளர்ச்சி முடிந்த பிறகு கலியாணம் செய்வதுதான் உத்தமம். நமது தேசம் உஷ்ணபிரதேசமாகையால் பெண்கள் 12 முதல் 15 வயதுக்குள் பக்குவம் அடைகிறார்கள். அதாவது பிரவிடையடைகிறார்கள் ஆனால், இந்தக் காரணத்தைக் கொண்டு அப் பெண்களின் தேகஉறுப்புகள் முழுவளர்ச்சியடைந்து விட்டதாகக் கருதக் கூடாது. பெண்கள் பிரவிடையான பிறகும், 20 வயது வரையில் அவர்கள் தேகம் வளர்ச்சியடைகிறது. இதை உணராமல் பெண்கள் 12 வயதிலேயே புஷ்பவதிகளாய் விட்ட காரணத்தைக்கொண்டு உடனே கலியாணம் செய்துவிடுவது முட்டாள் தனமாகும்.

உலக சிருஷ்டியைப் பார்க்கும் போது சீக்கிரமாக வளர்ச்சியடைகிற பிராணிகள் சீக்கிரமாகவே இறந்துவிடுகின்றன. நாள் சென்று முதிர்ச்சி யடைகிற பிராணிகள் நெடுநாள் உயிர் வாழ்கின்றன. உதாரணமாக ஆடு நாய் போன்ற பிராணிகள் சீக்கிரத்தில் குட்டிகளை ஈன்று சீக்கிரமாக இறந்துவிடு

கின்றன. நெடுநாள் வளாகிற யானை, குதிரை முதலிய பிராணிகள் நெடு நாளைக்குப் பிறகு குட்டிகளை ஈன்று நெடுநாள் உயிரோடு இருக்கின்றன.

மனிதர்களிலும், சிறுவயதிலேயே கலியாணம் செய்தால் இளமை யிலேயே பிள்ளைகளைப் பெற்று சீக்கிரமாகவே வாலிபத்தனத்தை இழந்து விடுகிறார்கள். உடனே கிழத்தனமும் பல வீனமும் நோய்களும் கடைசியாய் சீக்கிரமாகவே சாக்காடும் மேலிடுகிறது. நமது நாட்டில் சிறுவயதிலேயே பெண்களுக்குக் கலியாணம் செய்துவிடுகிற படியால்தான் 50 வயதுக்கு மேல் பிள்ளை பெறுகிற ஸ்திரீகள் நமது நாட்டில் கிடையாது.

- குடியரசு - 9.10.1932

# 31. ஆசார சீர்திருத்தம்

பண்டைக் காலத்தொட்டு ஒரு சமுதாயத்தில் பரம்பரையாக ஒழுகி வரும் பழக்க வழக்கங்கள் ஆசாரம் என்று சொல்லப்படும். இந்த ஆசாரங்கள் அல்லது பழக்க வழக்கங்கள், தேசத்திற்குத் தேசம், ஜாதிக்கு ஜாதி காலத் திற்குக் காலம் வெவ்வேறாகவும் ஒன்றுக்கொன்று முரணாகவும் காணப் படுகின்றன. ஒரு தேசத்தாரின் பழக்க வழக்கங்கள் பிறிதொரு தேசத்தாருக்கு இழிந்த ஒழுக்கமாகத் தோன்றுகிறது. ஒரு ஜாதிக்கு உகந்ததாகவுள்ள ஆசாரம் பிறி தொரு ஜாதிக்காரருக்கு முரண்படத் தோன்றும். எடுத்துக் காட்டாகச் சில ஆசாரங்களைச் சொல்வோம். இந்துக்களுள் உயர்ந்த ஜாதியாருள் கைம் பெண்கள் மறுமணம் புரிவது அநாசாரமாகக் கருதப்பட்டு வருகிறது. முகமதியர், ஐரோப்பியர் முதலியவர்களுள் கைம்பெண் மறுமணம் புரிவது, உகந்ததோர் ஆசாரமாகக் கருதப்படுகிறது. இந்துக்களுள் ஒருவன், தனக்கு ஒரு மனைவி இருக்கும் போதே, வேறு பல மனைவியரை (விருப்ப மிருந்தால்) மணஞ்செய்து கொள்வது ஏற்புடைய வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால், கிறிஸ்தவர்களுக்குள் ஒருவன் தன் மனைவி, உயிருடன் இருக்கும்போது, வேறு மனைவியை மணந்து கொள்வது அநாசாரமாகக் கருதப்படுகிறது. ஐரோப்பியருள் ஆணும் பெண்ணும் கை குலுக்குவது ஆசாரமாக இருந்து வரினும், இந்துக்களுள் அவ்விதம் செய்வது அநாசார மாகக் கருதப்படுகிறது. இங்ஙனம் பற்பல பழக்க வழக்கங்கள், பற்பல சாதியாராலும் பற்பல தேசத்தாராலும் ஒழுகப்பட்டு வருகின்றன.

தொன்றுதொட்டுப் பரம்பரையாக நடைபெற்று வருகிற இப் பழக்க வழக்கங்களில் பல, சமூகத்திற்கு நன்மை தரத்தக்கனவாயிருக்கின்றன. என்றாலும், அவற்றில், சிற்சில ஆசாரங்கள் (பழக்க வழக்கங்கள்) தீமை பயப்பனவாகவும் உள்ளன. அதாவது, நமது மூதாதைகளால் கையாளப்பட்ட சில பழக்க வழக்கங்கள், அக்காலத்தில் அவர்களுக்கு நன்மை பயந்தனவா யிருந்தாலும், கால வேறுபாட்டால் இக்காலத்தில் நமக்குத் தீமை புரிவனவா யிருக்கின்றன அல்லது தீமைகளுக்குந் துன்பகங்களுக்கும் முதற் காரணமா யிருக்கின்றன. துன்பங்களுக்குந் தீமைகளுக்குங் காரணமாயுள்ள அவ்வழக் கங்களை நாம் விட்டுவிட வேண்டும். அல்லது, அவற்றைச் சீர்திருத்தி நன்மை பயக்கக் கடவனவாக அமைத்துக் கொள்ளவேண்டும். இதுதான் அறிவாகும்; நாகரிகமுமாகும்.

ஒவ்வொரு ஜாதியாருக்கும், தேசத்தாருக்கும் சீர்திருத்தங்கள் அவசிய மாகும். சீர்திருத்தந்தான் மக்கள் வாழ்க்கையை உயர்த்தும் ஏணி. சீர்திருத்தங் காரணமாகப் பல தேசங்கள் முதன்மை பெற்று நாகரிக மடைந்து உன்னத நிலையில் நிற்கின்றதை, நாம் நமது கண் முன்பாக இப்பொழுது காண் கின்றோம். இந்தியா தேசம், நம் தாய் நாடு, இத்தகைய உன்னத நிலையை அடைய வேண்டுமானால், இந்திய மக்களுள் சீர் திருத்தங்கள் அவசியம் செய்ய வேண்டும். தற்காலத்துக்குப் பொருந்தாத பல ஆசாரங்கள் (பழக்க வழக்கங்கள்) நம்மவர்களின் வழக்கத்தில் இருந்து வருகின்றன. அவை நம்மவர் உயர்ந்த வாழ்க்கையை நடாத்துதற்குப் பெருந் தடைகளாக உள்ளன. நமக்கு இதுகாலை ஆசார சீர்திருத்தங்கள் எவ்வளவு இன்றியமையாதன என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

ஆசார சீர்திருத்த மென்றால் எல்லா ஆசாரங்களையும் அடியோடு ஒழித்துவிட்டுப் புதுப் புது ஆசாரங்களைக் (பழக்க வழக்கங்களை) கைக் கொள்வது அன்று. தீமைகளுக்குக் காரணமாயுள்ள பழைய ஆசாரங்களை (வழக்கங்களை) ஒழித்துவிட்டு, அல்லது சீர்திருத்திக்கொண்டு பழைமையாக உள்ள நல்ல ஆசாரங்களைக் கைவிடாமல் மேற்கொண்டொழுகுவதுதான் ஆசார சீர்திருத்தமாகும். ஆசார சீர்திருத்தங்களினால் மக்கள் வாழ்க்கை சிறப்படையும் என்பது மாத்திரமல்ல, அதுவே சுய ராஜ்ஜியத்திற்கும் அடிப் படையாக விருக்கிறது. இக்காலத்து, நமது நாட்டில் பல அரசியல் கட்சி யாரும், சுயராஜ்ஜியத்தைப் பெறும் நோக்கத்துடன் பற்பல அரசியல் சீர்திருத்தங்கள் கேட்கிறார்கள். நமது நாட்டிற்கு அரசியல் சீர்திருத்தங்கள் எவ்வளவு அவசியமாக விருக்கின்றனவோ, அவ்வளவு அவசியமாக

(அதைவிட அதிகமாகவே) ஆசார சீர்திருத்தங்களும் இது காலை நமக்கு வேண்டியதாயிருக்கின்றன. தீண்டாமை ஒழிப்பது, தீண்டப்படாதவர்களை ஆலயங்களுக்குள் செல்ல அநுமதிப்பது, தீண்டப்படாத மக்களுக்குப் பொதுச் சாலைகளிலும், குளங்களிலும், வேறு நிலையங்களிலும், உரிமை கொடுப்பது முதலிய சீர்திருத்தங்கள் கிராமாந்தரங்களிலும் நடைபெற்றா லன்றோ, நமது நாடு உண்மையான சுயராஜ்ய நாடாக விளங்கும்?

ஆசார சீர்திருத்தங்களில் ஒரு சிலவற்றை இங்குக் கவனிப்போம். பெண் மக்களைப் பற்றிய சீர்திருத்தம் இது காலை மிகவும் அவசியமாகும். சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசும்போது, முக்கியமாய்ப் பெண் மக்களின் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசும்போது, அதை எதிர்த்து நின்று பல திக்குகளி லிருந்தும் கூக்குரல்கள் எழுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் பெண் கல்வியைப் பற்றிச் சீர்திருத்தக்காரர்கள் பேசியபோது பெண் கல்வி கூடாது என்று சொல்லிப் பற்பல மூலைகளிலிருந்து கூக்குரல்கள் உண்டாயின. பெண் மக்கள் கல்வி கற்பதனால் ஜாதி கெட்டுவிடும். பெண் மக்கள் கெட்டுப் போய் விடுவார்கள். தேசத்திற்கே நாசமுண்டாகும் என்று பழைய பாட்டிமார்களும், போலி வைதீகர்களும், சீர்திருத்த விரோதிகளும் பெருங் கூச்சிலிட்டு ஊரைக் கலக்கினார்கள். இவ்வளவு எதிர்ப்புகளுக்கும் தோல்வியுறாமல் ''பெண் கல்வி'' என்னும் சீர்திருத்தம் நல்ல காலமாக இப்போது வேரூன்றி விட்டது. இப்போது பெண் கல்வியை வெறுப்பவராவது, எதிர்ப்பவராவது இல்லை என்றே சொல்லலாம்.

''பெண் கல்வி'' விஷயத்தில் இவ்வளவு கூக்குரலிட்டவர்கள், பெண் மக்களுள் கைம்பெண்களாக விருப்பவர்கள் 'மறு மணம் புரிந்து கொள்ள லாம்' என்னும் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசினாலும் எழுதினாலும் சீர்திருத்த விரோதிகளும் 'பழமை பழமை' என்று சொல்லும் பாட்டிமார்களும் போலி வைதீகர்களும் எவ்வாறு நிந்தித்துச் சபிப்பார்களென்று நமக்குத் தெரியும். வானம் இடிந்து விழுந்துவிட்டது போல அவர்கள் கதறுவார்கள். ஆனால், உண்மை அறிவாளிகள் இச் சீர்திருத்த விரோதிகளின் நிந்தனைக்கும் செவி கொடுக்கக் கூடாது. அற்ப சொற்ப விஷயங்களுக்கெல்லாம் நமது நாட்டில் பெருங் கூச்சல் கிளம்புவதும், விடா முயற்சியுள்ள முற்போக்கான மனிதர் அச் சீர்திருத்தங்களைச் செய்து காண்பித்த பிறகு கூச்சலிட்டவர்கள் கூக்குரலொழிந்து, தாங்களும் அச் சீர்திருத்தத்தின்படி ஒழுகி வருவதும் நமது நாட்டின் முக்கியமாகத் (தமிழ் நாட்டின்) இயற்கையாக விருக்கிறது.

இவ்வளவு ஏன்? சில வருஷங்களுக்கு முன் நமது நாட்டுச் சிறுவர்கள் தலை மயிரை மேற்குத் தேச முறைப்படி ''கிராப்'' செய்து கொள்ளத் தொடங்கிய போது ஆசாரம் கெட்டுவிட்டதென்றும் மதம் கெட்டுவிட்டதென்றும், சாதி கெட்டுவிட்டதென்றும் பலர் பேசினார்கள்; தூற்றினார்கள். இப்பொழுதோ ''கிராப்'' வழக்கம் சாதாரணமாகப் போய்விட்டது. முன் தூற்றியவர்கள் இப்பொழுது வாயடங்கி வாளா கிடக்கின்றனர். சில வருஷங்களுக்கு முன் ஆங்கில கலாசாலையில் படிக்கும் பிராமணச் சிறுவன் கலாசாலையிலிருந்து வந்தவுடன் வீட்டிற்குள் செல்ல விடப்பட்டானல்லன். அவன் சட்டைகளையும் புத்தகங்களையும் வாசலிலே வைத்துவிட்டுக் குளித்துச் சுத்திசெய்து கொண்ட பிறகு தான், வீட்டிற்குள் நுழைய வேண்டியிருந்தது. ஆனால், அந்த வழக்கம் இப்பொழுது எங்கே போய்விட்டது? இப்பொழுது பிராமணச் சிறுவர்கள் ஆங்கில கலாசாலைகளிலிருந்து மாத்திரமல்ல வேறு பல இடங் களுக்குச் சென்றிருந்து வீட்டுக்குத் திரும்பியவுடன் தாராளமாக உள்ளே நுழைகிறார்கள். சொற்ப ஆண்டுகளுக்கு முன் இருந்த ஆசாரம் (வழக்கம்) இப்பொழுது மாறுபட்டு விடவில்லையா? ஆகவே காலத்திற்குத் தக்கவாறு ஒழுக்கங்கள் (ஆசாரங்கள்) மாறு படுவதினால் யாதொரு இழுக்கும் உண்டாகாது. ஆனால் எந்தச் சீர்திருத்தமானாலும் முதன் முதலில் எதிர்க்கப் பட்டுத் தான், பின்னர் நிறைவேறும், நமது நாட்டின் போக்கு அவ்விதமானது. ஆகவே, கைம்பெண்களின் மறு மணத்தைப் பற்றிப் பேசும்போதும், கூக்குரலும் வசை மொழிகளும் முதன்முதல் அதிகமாகப் புறப்படும். அவற்றையெல்லாம் சீர்திருத்தக்காரர்கள் பொருட்படுத்தக் கூடாது.

நமது நாட்டில், ஆண்மக்களை விடப் பெண் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். மற்ற தேசத்தோடு நமது தேசத்தையும் நோக்கும்போது நம் தேசத்தில் கைம் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதிலும் மிகுந்த வருத்தந் தரத்தக்கது என்னவென்றால் நமது நாட்டில் இளங் கைம்பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதே. இவற்றிற் கெல்லாம் காரணம் நமது பழைய ஆசாரங்களேயாகும். கைம்பெண்களுக்கு மறுமணம் செய்யக் கூடாது என்னும் ஆசாரம் (வழக்கம்) நமது நாட்டில் ஏராளமான கைம் பெண்களைப் பரிதாப நிலைமையில் வைத்திருக்கிறது. பாலிய விவாகம் என்னும் கொடிய வழக்கம் (இந்த ஆசாரம் பிராமணர்களில் அதிகம்) நமது நாட்டில் இளங் கைம் பெண்களை ஏராளமாக உற்பத்தி செய்து வருகின்றது.

ஆண்மகன் ஒருவன் தன் மனைவி இறந்துவிட்டால் (ஏன், உயிருடன் இருக்கும்போது கூட) மற்றொருவளை மணம் புரிந்து கொள்ளலாம்; ஆனால் பெண்மகள் தன் கணவன் இறந்துவிட்ட பிறகு, அவள் எவ்வளவு இளமை வயதுடையவளா யிருந்தாலுங்கூட, மறுபடியும் மணம் புரிந்துகொள்ளக் கூடாதாம்! மனைவியை இழந்த ஆண்மகன் செய்வதுபோலக் கணவனை இழந்த பெண் மகள் ஏன் மறுமணம் புரிந்து கொள்ளக்கூடாது என்பதுதான் விளங்கவில்லை. ஐம்புலனை அடக்கிக் கொள்ளும் வல்லமை ஆண் மக்களுக்கு இல்லையா? அல்லது பெண் மக்களுக்கு மாத்திரம் அத்தகைய சக்தி அதிகமாக விருக்கிறதா? புலனை அடக்கும் வன்மை ஆண்மகனுக் கில்லையானால், பெண் மக்களுக்கும் புலனை அடக்குல் இயலாத தொன்றாகும்.

ஆகவே, இளங் கைம் பெண்களுக்கு மறுமணம் புரிவது அவசியமான சீர்திருத்தமாகும். இச் சீர்திருத்தத்தைப் பற்றிச் சொன்னால் சீறி விழுவோரும், வசை புராணம் படிப்போரும், நிந்திப்போரும் நாற்புறத்திலும் சூழ்ந்து கொள்கிறார்கள். இளங் கைம் பெண்களுக்கு மறுமணம் புரியாதிருப்பதின் தீமைகளை அவர்கள் சற்றும் சிந்திப்பதில்லை. கைம் பெண்கள் மறுமணம் புரியும் வழக்கம்(ஆசாரம்) நமது நாட்டில் இல்லாதபடியால், அவர்களில் எத்தனை பேர் மறை முகமாகக் கூடா ஒழுக்கங் கொண்டு காலங்கழிக் கின்றனர். எத்தனை பேர் அக் கூடாவொழுக்கம் வெளிப்பட்டது காரணமாக சுற்றத்தாரையும், பெற்றோரையும் விட்டுச் செல்லாமல் தற்கொலை புரிந் திருக்கின்றனர்; எவ்வளவு சிசுக் கொலைகள் நடந்திருக்கின்றன; அக் கொலை காரணமாக எத்தனை கைம்பெண்கள் தீவாந்திர தண்டனை அடைந்திருக் கின்றனர்; இவற்றையெல்லாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். நாள் தோறும் ஆயிரக் கணக்கான குற்றங்கள் கைம் பெண்களால் நடைபெறு கின்றன. இவ்விதம் எழுதுவதனால், நமது நாட்டிலுள்ள எல்லாக் கைம் பெண்களும் இவ்விதம் செய்கிறார்கள் என்பதல்ல. பெரும்பான்மையாக இளங் கைம் பெண்களால் நடைபெறுகின்றன என்பதேயாகும். இத்தகைய குற்றங்கள் நடைபெறவில்லை என்று யாவரேனும் மறுத்துரைக்க முடியாது. பெரும்பாலும் இக் குற்றங்கள் யாவும் புறத் தெரியாமல் மறையுண்டிருக் கின்றன; அல்லது மறைக்கப்படுகின்றன. தப்பித் தவறி இரண்டொரு குற்றங்கள் வெளிப்பட்டுப் பத்திரிகைகளில் வெளி வருகின்றன. இதைக் கொண்டு அத்தகைய குற்றங்கள் உலகத்தில் நடைபெற வில்லை என்று நினைப்பது தவறாகும். சீர்திருத்த விஷயத்தில் தலையிட்டு உழைக்கும்

சீர்திருத்தக்காரர்கள் இதனை நன்கறிவார்கள். இப்படிச் சொல்வது கைம் பெண்களின் மீது வீண்பழி சுமத்துவதாகச் சிலர் நினைப்பார்கள். அத்தகைய நண்பர்களைக் கைம்பெண் மக்களால் மேற்சொல்லப்பட்ட குற்றங்கள் செய்யப்படாமலிருக்கின்றனவா, என்று தங்கள் நோக்கத்தைச் செலுத்தி அனுபவ வாயிலாக அறியும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால், இத்தகைய குற்றங்களுக்கு நமது ஏழைக் கைம் பெண்கள் காரணமல்ல. நமது பழைய ஆசாரங்களே காரணமாயிருக்கின்றன. இளங் கைம் பெண்கள் மறுமணம் புரியக்கூடாது என்றும் ஆசாரம் (வழக்கம்) நமக்குள் இருப்பதனால்தான் மேற்சொல்லப்பட்ட குற்றங் குறைகள் நேரிடு கின்றன. நமது ஏழைக் கைம் பெண்களைத் தற்கொலை, அவமானம், சாதிப் பிரஷ்டம், சிசுஹத்தி, ஜெயில் வாசம், சிறுமை, நிந்தனை இவைகளுக் கெல்லாம் உள்ளாகும்படி செய்கிற கைம்மை நோன்பை அதாவது கைம் பெண்கள் கலியாணம் செய்து கொள்ளக்கூடாது என்னும் வழக்கத்தை நாம் ஏன் சீர்திருத்திக் கொள்ளக்கூடாது? குற்றங்குறைகளும், அவமானங்களும் இன்றும் என்றும் நமது நாட்டில் நடைபெற வேண்டுமா? கைம்மை நிலையை அழித்துக் கைம் பெண்கள் மறுமணம் புரியும் வழக்கத்தை யுண்டாக்கிக் குற்றங்குறைகள் நேரிடாதபடி சீர்திருத்துவது அநாசாரமாகுமா? இழி வாகுமா? தேசம் பாழாய் போய்விடுமா? சீர்திருத்த விரோதிகள் இவற்றை எல்லாம் ஏன் ஆழ்ந்து யோசிப்பதில்லை.

வயது சென்ற கைம் பெண்களையும், மறு மணம் புரிய விருப்பமற்ற கைம்பெண்களையும் கட்டாயப்படுத்திக் கலியாணம் செய்து வைக்க வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. இக் கைம் பெண்களால் மேற் சொல்லப்பட்ட குற்ற குறைகள் உண்டாவதுமில்லை. மணஞ் செய்து கொள்ள விரும்பும் இளங் கைம்பெண்களைப் பற்றித்தான் இங்கு நாம் பேசுவ தெல்லாம். இவ்விளங் கைம்பெண்களுக்கு ஏன் அச்சுதந்தரத்தைக் கொடுக்கக் கூடாது? ஏன் அவ்வழக்கத்தையுண்டாக்கி வைக்கக்கூடாது? அவ்விதம் செய்வது அவர்களை யாதொரு குற்றத்திற்கும், அபவாதத்திற்கும் நிந்தைக் கும், இடந் தராதபடி நல்வழியில், மாசற்ற வாழ்க்கையில் புழுத்துவதாகு மன்றோ? பெரிய பெரிய தேசாபிமானிகளும், அறிவாளிகளும் ஆழ்ந்து யோசித்துக் கைம்பெண்களுக்கும் மணம்புரிவதவசியம் என்னும் முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்களின் முயற்சியால் இதுபோது கைம்பெண் மறுமணம் நடைபெறாமலில்லை. ஆனால் அவ்விதம் அபூர்வமாக

நடைபெறும் கைம்பெண் கலியாணங்கள் செல்வந்தர் குடும்பங்களிலே தான் நடைபெறு வதாகத் தெரிகிறது. பொதுமக்களிடையில் இச் சீர்திருத்தம் நாளுக்கு நாள் பரவவேண்டும் என்பதே எமது கருத்தாகும். இச்சீர்திருத்தத்தி னால் பல நன்மைகள் உண்டாவது திண்ணம். கூடா வொழுக்கங்களும், கொலைகளும் ஒழிவதோடல்லாமல் மக்கள் வாழ்க்கையில் ஓர் உயர்வு உண்டாகும். அம்மட்டுமல்ல, இச்சீர்திருத்தத்தை மேற்கொள்வதினால் சுயராஜ்யப் படிகளில் ஒன்றைக் கடந்தவர்களாவோம்.

மனைவியை யிழந்து தபுதார நிலையடைந்த ஒருவன் இரண்டாந்தரம் மணம் புரியும்போது, கணவனை யிழந்து தாபத நிலையுடைய ஒரு கைம் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்வது நன்று. இவ்விதம் செய்வதனால், நமது நாட்டில் உள்ள விதவைகளின் எண்ணிக்கை குறையும். இங்ஙன மன்றி, இரண்டாந்தரம் மணம் புரியும் ஒருவன், தன் வயதுக்கேற்ற ஒருவளை மணம் புரியாமல் இளங் கன்னிகைகளை மணந்து கொள்வது, கைம் பெண் மக்கள் தொகை அதிகமாவதற்குக் காரணமாயிருக்கின்றது. இளங் கைம் பெண்கள் நமது நாட்டில் அதிகமாயிருப்பதற்கு மற்றொரு காரணம் பால்ய விவாகம் என்னும் கொடிய அநாகரிக வழக்கமாகும். இது பிராணமர்களுக்குள் அதிக மாக உண்டு. இவ்வழக்கம் முகமதியர் காலத்தில் உண்டானதாகச் சொல்லு கிறார்கள். தமிழரசர் காலத்தில் இல்லாமல், மகமதியர் காலத்தில் தோன்றிய இந்த பால்ய விவாகம் என்னும் ஆசாரம் ஆங்கில அரசாட்சியில் ஏன் இருக்க வேண்டும்? இவ் வழக்கத்தின் பலனாக பால்ய விதவைகள் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை களும் தேக பலமற்றுப் போய்விடுகிறார்கள். பொதுவாக நோக்குமிடத்து இவ்வழக்கம் தேசத்தின் பலஹீனத்துக்கே காரணமாக இருக்கிறது. அப்படி யிருந்தும் இக்கொடிய வழக்கத்தை நம்மவர் பொன்னே போல் போற்றுவது எவ்வளவு அறியாமை?

மேற்சொன்ன கைம்பெண் மறுமணம் புரிதல், பால்ய விவாகத்தை ஒழித்தல் என்னும் இரண்டு சீர்திருத்தங்களையும் மேற்கொண்டு ஒழுகுவார் களானால், பெண் மக்கள் வாழ்க்கை மாசற்று விளங்குவதோடு தேசம் முன் னேற்றமடைந்து உயர்நிலையடையும் என்பதில் ஒரு சிறிதும் ஐய மில்லை.

நமது நாட்டில் சுயராஜ்யக் கூச்சல்களும், பேச்சுக்களும் அதிகமாயிருக் கின்றன. ஆனால், சுயராஜ்யத்திற்கு அடிப்படையான சீர்திருத்தங்களைப் பேசுவோர் மிகச் சொற்பமாக இருக்கிறார்கள். பேச்சளவில் நிற்காமல்

சீர்திருத்தங்களைச் செய்கையளவில் பயன் படுத்தினாலன்றி பயன் என்? இந்திய தேசம் சுயராஜ்யம் பெறுவதற்கு முன் சீர்திருத்த வேலைகள் மும்முரமாக நடைபெற வேண்டும். சீர்திருத்தங்களின்றி, மக்கள் சுயராஜ்யம் பெற முடியாது. முக்கியமாக இந்துக்களின் பழக்க வழக்கங்கள் மிகுந்த ஊழலாகயிருக்கின்றன. அவையாவும் சீர்திருத்தப்படாத வரையில் இந்துக்களுக்கு ஒரு நாளும் சுயராஜ்யம்கிட்டாது.

**இலட்சுமி - ஆகஸ்ட் 1926**

# 32. தூக்கம்

மனிதன் விலங்கு பறவை முதலிய எல்லாப் பிராணிகளும் உறங்குகின்றன. எல்லாப் பிராணிகளும் தமது வாழ்நாளில் நேர் பகுதியைத் தூக்கத்தில் செலவிடுகின்றன. உயிருள்ள பொருள்களில் உறங்காதன ஏதேனும் உளதோ? தூக்கம் - போதுமான அளவோடு தூங்கும் தூக்கம் - உடம்புக்கு நலத்தைத் தருகிறது. அளவு மீறி மூதேவித் தனமாகத் தூங்கும். சோம்பேறிகள் உடம்பின் நோய் கொண்டு அறிவு மழுங்கிச் சுறுசுறுப்பற்று எவ்விதத் தொழிலுக்கும் தகுதியற்றவராய் வறுமை என்னும் மீளாத் துன்பத் தில் ஆழ்ந்து வருந்துவர். இங்கு நாம் பேசுவது அத்தகைய மூதேவித்தனமான சோம்பேறிகளின் தூக்கத்தைப்பற்றியல்ல. சுறுசுறுப்பும் முயற்சியும் ஊக்கமும் உடல் நலமும் பெறத்தக்க மிதமான தூக்கத்தைப் பற்றித் தான் நாம் இங்கு எழுத முன் வந்தது.

பகல் முழுவதும் எல்லாப் பிராணிகளும், உயிர் வாழ்வதற்கு வேண்டிய பொருள்களைப் பெறும் பொருட்டு வேலை செய்து உழைக்கின்றன. அவ்விதம் உழைக்கும் போது மனம், கண், காது, கை, கால் முதலிய எல்லா உறுப்புகளும் அவயவங்களும் ஒன்றுபட்டு வேலை செய்கின்றன. அவ்விதம் தொழில் செய்து சோர்வடைந்த அவயவங்களுக்குச் சற்று ஓய்வும் ஆறுதலும் கொடுக்க வேண்டுவது அவசியமன்றோ? இன்றேல் அவை மேன் மேலும் சோர்ந்து உரம் குன்றி கடைசியில் பழுதுபட்டுப் போகுமல்லவா? இதனால் தான் எல்லா முணர்ந்த கடவுள் இயற்கையாகவே பகலையும் இரவையும் உண்டாக்கியிருக்கிறார். மனம் மெய்களால் வேலை செய்வதற்கு ஏற்றபடி பகலையும், வேலை செய்து அலுப்படைந்த மனமும் உடம்பும் ஓய்வு கொள்ளும்படி இரவையும் அமைத்திருக்கிறார். இம்முறைப்படியே

இயற்கையைப் பின்பற்றி உயிர் வாழும் விலங்குகள் அந்திமாலை நீங்கி இருள்பரவத் தொடங்கியதும் தத்தம் கூடு குகை முதலிய உறையுள் அடைந்து நன்றாய் உறங்கி நோயற்ற வாழ்வு வாழ்கின்றன. ஆறறிவுடைய மனிதர்களும் இவ்வாறே இயற்கை வழியில் ஒழுக வேண்டியதே முறைமை என்றாலும், நாகரிகம் பரவப் பரவ செயற்கை வழிகளில் சென்று காலங் கழித்து உடல் நலங்குன்றிப் பிணியடைந்து வருந்துகிறார்கள்.

தூக்கம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. தூக்கம் நீத்துக் கண் விழிப்பதனால் முக்கியமாக மூளையைப் பற்றிய நோய்கள் முதலில் தோன்றிப் பின்னர் வேறு பல பிணிகளும் தொடரும். 1879-ம் ஆண்டில் ஜெர்மனி தேசத்துப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று வந்த ஆறு மாணவர்கள், ஒரு வாரம் வரையில் இரவும் பகலும் தூங்காமல் கண் விழிக்க வேண்டுமென்று உறுதி செய்து கொண்டார்கள். ஆனால், அவர்களில் ஒருவராவது அந்த முயற்சியில் வெற்றி பெறவேயில்லை. அவர்களில் இருவர் மூளையைப் பற்றிய பிணி கொண்டு உயிர் துறந்தனர். அதே நோயினால் மூன்று பேர் படிப்பை விட வேண்டியவராயினர். பண்டைக் காலத்தில் நமது நாட்டில் பெருங்குற்றங்கள் இழைத்த குற்றவாளிகளின் கண் இருப்பைகளை அறுத்து விடுவது வழக்கமாம். இரப்பை அறுபட்ட குற்றவாளிகள் கண் மூடித் தூங்க முடியாமல் வருந்தி நோய் கொண்டு சில நாளைக்குள் இறந்து விடுவார்களாம். ஆகவே, நல்லறிவுடனும் தேக சுகத்துடனும் உயிர் வாழ்வதற்குத் தூக்கம் இன்றியமையாத தாகுமென்பது பெறப்படுகிறதன்றோ?

இரவில் கண் விழித்துப் பகலில் தூங்கக் கூடாதா? பட்டின வாசிகளில் பெரும்பான்மையோர் அவ்விதம் தான் செய்கிறார்கள். அவ்விதம் செய்வதும் நோய்க்கிடமாகும். அன்றியும், கடவுளால் உண்டாக்கப்பட்ட இயற்கையை அவமதிப்பதாகும். நோயாளிகள் தவிர உடல் நலமுடைய எவரும் பகலில் உறங்குதல் கூடாது. எல்லா விலங்குகளும் பறவைகளும் பகலில் உழைத்து இரவில் கண்ணுறங்குகின்றன. மனிதராகிய நாமும் அவ்விதம் செய்வது தான் இயற்கையாகும். ஒரு சில பறவை விலங்குகள் பகலில் உறங்கி இரவில் வேலை செய்கின்றனவேயென்றால், அவை கொடிய புலி, சிங்கம், கரடி, வௌவால், ஆந்தைகள்; ஆகையால் அவை இரவில் விழித்துப் பகலில் தூங்குகின்றன. நாமும் புலி, சிங்கம், வௌவால், ஆந்தைகளாக விருந்தால் பகலில் தூங்கி இரவில் விழிக்கலாம். அன்றியும் புலி, சிங்கம், ஆந்தை முதலிய இரா பிராணிகளுக்கு இருட்டில் நன்றாய்க் கண் தெரியும்;

பகலில் தெரியாது. ஆகவே, அவை பகலில் உறங்கி இரவில் கண் விழிக் கின்றன. நமக்கும், ஏனைய விலங்கு பறவைகளுக்கும் இரவில் கண் தெரியா தாகையால் இரவில் தூங்குவது தான் தகுதியாகும்.

சிறு குழந்தைகள் நெடும் பொழுது தூங்கினால் தான் உடம்பு செம்மை யாக வளர்ச்சியடையும். ஆகையால் குழந்தைகள் இரவிலும் பகலிலும் நெடும் பொழுது தூங்குகின்றன. பெரியவர்கள் பொதுவாக எட்டு மணி நேரம் தூங்கவேண்டுமென்றிருந்தாலும் அவரவர்கள் முயற்சி உழைப்பு இவை களுக்கு ஏற்றபடி அதற்கு அதிகமாகவோ குறைவாகவோ தூங்கலாம்.

முன்னிரவில் தூங்குவது நலமா? பின்னிரவில் உறங்குவது ஏற் புடைத்தா? ''வைகறைத் துயிலெழு'' என்பதும் ''காலம்பெற எழுந்திரு'' என்பதும் தமிழ் நாட்டுப் பழமொழிகள். இவை பின்னிரவில் நெடு நேரம் தூங்கக் கூடாது என்பதை குறிப்பிடுகின்றன. முன்னிரவில் தூங்கிப் பின்னிர வில் எழுந்திருப்பது தான் உடல் நலம் பேணும் முறை. "Lie with the lamb; Rise with the lark" ''ஆட்டுக் குட்டியுடன் படுத்து வானம்பாடி யுடன் எழுந் திரு'' என்பது ஆங்கிலப் பழமொழி. ஆட்டுக்குட்டி பொழுதுபட்டு இருள் தொடங்கும் பொழுதே உறங்கிவிடும். வானம்பாடி, வைகறைப் போதாகிய விடியற் காலத்தில் ஏனைய பறவைகள் எழுவதற்கு முன்னே விழித்தெழுந்து உயரப் பறந்து இன்னிசையுடன் பாடும். ஆகவே, இந்த ஆங்கிலப் பழ மொழியின் கருத்தும் முன்னிரவில் படுத்துறங்கிப் பின்னிரவில் விழித் தெழவேண்டும் என்பதாகும். அதோடு, நெடும்போது சோம்பல் கொண்டு தூங்கக் கூடாது என்பதையும் குறிப்பாக உணர்த்துகிறது. முன்னிரவில் ஒரு மணி நேரம் தூங்கும் தூக்கம் பின்னிரவில் இரண்டு மணி நேரம் தூங்கும் தூக்கத்திற்கு ஒப்பாகும். ஆகவே முன்னிரவில் படுத்துறங்குவது நன்று.

நகரங்களில் வாழும் மக்களிற் பலர் சினிமா படக்காட்சிகள், நாடகக் கொட்டகைகள், நடன சாலைகள் முதலியவைகளுக்குச் சென்றும் சிறு பான்மையோர் தொழில் முயற்சி சம்பந்தமாகவும் இராப்பொழுதில் நெடு நேரம் கண்விழித்து வருகிறார்கள். இவற்றோடு தேத்தண்ணீர் காபி முதலிய குடிவகைகளைக் குடித்து தம் புகையிலைத் தூளை மூக்கின் வழியாக மூளைக்குள் செலுத்தியும். இன்னும் சுருட்டு பீடி சிகரெட்டு முதலிய புகைக் குடிகளை உட்கொண்டும் தூக்கத்தைத் தடுத்து டிராமா சினிமா காட்சிகளைக் கண்டு களித்து இரவைத் தூங்காமல் கழித்து வருகிறார்கள். இவ்விதம் செய்வதால் இவர்களுக்கு உடல் நலம் குன்றி மூளையும் சுறு சுறுப்பற்றுக் கண்

பார்வை விரைவில் மங்கிக் கடைசியாக அஜீர்ணம், பசியின்மை, பித்த ரோகங்கள் முதலிய பிணிகளால் துன்பமடைகிறார்கள்.

ஆனால், நகரத்திற்கு அப்பாலுள்ள கிராம வாசிகள் பகல் முழுவதும் களைப்படையும்படி உழைத்து இரவு பட்டதும் முன்னிரவிலேயே படுத்து மெய்ம்மறந் துறங்கி உடலின் எல்லா அவயவங்களும் உறுப்புகளும் நல்ல சுகநிலையுடன் அமையப் பெற்று நகர வாசிகளைவிடப் பன்மடங்கு திடதேகத்தோடு இயற்கையழகுள்ளவர்களாய் வாழ்வதை நாம் ஒவ்வொருவரும் அறிந்தேயிருக்கிறோம்.

உறங்கும்போது எந்தப் புறமாகப் படுக்கவேண்டும்? வலப்புறமாகப் படுப்பதா? இடப்புறமாகப் படுப்பதா? அன்றி, முதுகு மேற்புறந் தோன்ற குப்புறப் படுத்துறங்கலாமா? அல்லது, மார்பு மேற்புறந் தோன்ற மல்லாந்து படுப்பது நன்றா? பறவை விலங்கு முதலியன உறங்கும்போது கால்களை மேலே தூக்கி மல்லாந்து படுத்துறங்குவதை நாம் கண்டதில்லை. அது இயற்கையுமல்ல. ஆகவே அவ்விதம் படுப்பது தவறு. அப்படிப் படுப்பதால் இரத்த ஓட்டம் சரியாக நடவாமல் இருதயத்தில் இரத்தம் தங்கும். குப்புறப் படுப்பதும் நன்றன்று. பெரியோர்களும் அவ்விதம் படுத்துறங்கக் கூடாது என்கிறார்கள். ஆனால், உடல் நூல் அறிந்த தமிழ் ஆயுள் வேதக்காரர் இடது பக்கமாகப் படுத்துறங்குவது நலம் என்கிறார்கள். ஆங்கில வைத்தியர்களோ என்றால் வலப்புறமாகத் திரும்பிப் படுப்பது நலம் என்கிறார்கள். அவர்கள் சொல்லும் காரணம் என்னவென்றால், மார்பின் இருபுறங்களிலும் அடை அடையாக அமைந்துள்ள நுரையீரல் இடப்புறம் இரண்டு அடையாகவும் வலப்புறம் மூன்று அடையாகவும் இருப்பதால் மூன்று அடையாக உள்ளது சற்று கனமாக விருக்குமாதலால் கனம் உள்ள பக்கமாகிய வலப்புறத்தைக் கீழே வைத்துப் படுப்பது தான் முறை என்று சொல்லுகிறார்கள். இருவகை வைத்தியர்களும் தக்க காரணங்களோடு சொல்லுவதால் நாம் இரண்டையும் ஏற்றுக்கொண்டு இடது புறமாக வேனும் வலது பக்கமாக வேனும் படுத்துறங்கலாம்.

எந்தப் புறம் தலைவைத்துப் படுப்பது? கிழக்கு மேற்குத் தெற்கு வடக்கு ஆகிய எத்திசைகளிலும் தலைவைத்துப் படுத் துறங்கலாமா? நம்மவர் வடதிசையில் மாத்திரம் தலைவைத்துப் படுக்கலாகாது என்பர். காரணம், வட திசையிலிருந்து மின்சாரம் போன்ற ஒருவித சக்தி பூமியின் வழியாய்ப் பாய்ந்தோடுகிறதென்றும் அச்சக்தி தலையின் வழியாய் உடலில்

பாய்ந்தால் தீமை பயக்கும் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால், ஆங்கில வைத்தியர் ஒருவர் வடப்புறம் தான் தலைவைத்துப் படுத்துறங்க வேண்டும் என்றும் அவ்வித செய்தால் வடப்புறத்திலிருந்து பூமி வழியாய்ப் பாய்ந் தோடும் மின்சார சக்தி உடம்பில் சென்று நன்மை பயக்கும் என்றும் சொல்லு கிறார். இவ்விரு திறத்தாரில் யார் சொல்வது உண்மை என்பதை உடல் நூல் அறிந்த மருத்து வரும் சையன்ஸ் என்னும் சாத்திர மறிந்த அறிஞரும் தான் ஆராய்ந்து முடிவு சொல்லவேண்டும்.

எந்த இடத்தில் படுத்துறங்குவது? தரையில் படுத்துத் தூங்கக் கூடாது. உடம்பின் சுகத்தைக் கெடுத்துத் தீமை பயக்கும் கரியமிலவாயு சுத்தவாயுவை விடக் கனமாக விருக்கிறபடியால், அது எப்பொழுதும் தரைமட்டத்தில் படிந் திருக்கும். ஆகையால் தரைமீது படுத்துறங்குவதால் சுத்தக் காற்றை உட் கொள்ள முடியாமல் நஞ்சுத் தன்மையுள்ள கரியமில வாயுவை உட்கொள்ள நேரிடும். சற்று உயரமாக உள்ள கட்டில் முதலியவைகளின் மேல் படுத் துறங்குவது நன்று. நச்சுக்காற்று வெளியே போகவும் சுத்தக் காற்று உள்ளே வரவும் தகுந்தபடி படுக்கையறையில் சாளரங்கள் அமைந்திருக்க வேண்டும். எத்தகைய குளிர்காலமாயிருந்தாலும் சாளரங்களையும் கதவுகளையும் நன்றாகத் திறந்து வைக்க வேண்டும். படுக்கையறையில் விளக்கு முதலிய நெருப்புகள் இருக்கக் கூடாது. ஏனென்றால் அவ்வறையிலுள்ள பிராண வாயு என்னும் சுத்தக் காற்று விளக்கு எரிவதால் குறைந்து விடும். மிகுந்த குளிருள்ள இரவில் கும்பிடு சட்டியில் தீ மூட்டி வைத்து அறையின் சாளரங்கள் கதவுகளையெல்லாம் இறுக மூடிவிட்டு அவ்வறையில் கண வனும் மனைவியும் படுத் துறங்கினார்களாம். அடுத்த நாள் காலையில் அவர் கள் எழுந்து வெளிவரவில்லை. கதவைத் திறந்து பார்த்த போது இருவரும் இறந்து கிடந்தனர். காரணம் என்னவென்றால் கும்பிடு சட்டியில் நெருப்பு எரிந்தபடியால் அவ்வறையிலிருந்த பிராணவாயு என்னும் சுத்தக்காற்று செல வாய்விட்டது. எனவே அவ்வறை முழுவதும் நச்சுக் காற்று நிறைந்துவிட்டது. வெளியிலிருந்த நல்ல காற்று உள்ளே வருவதற்கு இடமில்லாத படி கதவுகளும் சாளரங்களும் நன்றாய் மூடப்பட்டிருந்தன. ஆகவே, சுத்தக் காற்றில்லாமல் அவர்கள் நச்சுக் காற்றினால் உயிர் துறந்தார்கள். கதவுகளை மூடிவிட்டு விளக்குடன் அறையில் படுத்துறங்குவது நன்றன்று என்பது இதனால் நன்கு விளங்கும். மல்லிகை முதலான மலர்கள் நல்ல காற்றைக் கெடுத்து விடுமாதலால் அவற்றையும் படுக்கையறையில் வைத்துக்கொண்டு உறங்கலாகாது. சிலர் தூங்கும்போது கால் முதல் தலை வரையில் நெடுக

மூடிக்கொண்டு தூங்குகிறார்கள். அவ்விதம் முகத்தை மூடிக்கொண்டு தூங்குவது பிசகு. அவ்விதம் செய்வதால் நாம் வெளிவிடும் நச்சுக் காற்றையே மீண்டும் மீண்டும் சுவாசிக்க நேரிடும். அதனால் தேக சுகம் கெடும். ஆகவே, தூங்கும்போது முகம் மாத்திரம் எப்பொழுதும் திறந்தே யிருக்க வேண்டும்.

பசியோடிருக்கும்போதும் சாப்பிட்ட உடனும் படுத்து உறங்கக் கூடாது. பசியுடன் உறங்கினால் வேலை செய்து இளைத்துப்போன உறுப்புக் களுக்கு வேண்டிய அளவு புதிய இரத்தம் இல்லாமல் அந்த உறுப்புக்கள் வளர்ச்சியடையா. சாப்பிட்ட ஆகாரம் வயிற்றில் கனமாக இருக்க அத்துடன் படுத்துறங்குவதினால் சரியாக நித்திரை பிடியாது. அன்றியும் தீய கனவுகள் தோன்றும். இராக் காலத்தில் அதிகமாகச் சாப்பிடுவதும் கூடாது. இரவில் சாப் பிட்ட பிறகு சற்று தூரம் உலாவிய பின்னர் படுத்துறங்குவது நன்று. "*After dinner sit a while, after supper walk a mile* பகலில் சாப்பிட்டவுடன் சற்றுநேரம் உட்கார், இரவில் உண்ட உடன் ஒரு மைல் தூரம் நட" என்பது ஆங்கிலப் பழமொழி. ஆகவே, சற்று நேரம் உலாவின பிறகு இரவில் படுத் துறங்குவது நலம். சாப்பிட்ட உடன் கடினமாகப் படிப்பது கடினமாக யோசனை செய்வது முதலிய மனோ முயற்சிகளைச் செய்வதும் அத்துடன் படுத்துறங்குவதும் நன்றன்று. அப்படிச் செய்வதால் அஜீரணம், கலக்க மடைந்த தூக்கம், கொடிய கனவுகள் முதலியன உண்டாகும்.

தூங்குவதற்கு முன் சிறிது தூரம் நடந்து, உலாவின பின் சூடுள்ள வெந்நீரில் முழங்காலுக்குக் கீழுள்ள பாகத்தைச் சற்றுநேரம் வைத்திருந்து பிறகு படுக்கைக்குச் சென்றால் நன்றாகத் தூக்க பிடிக்கும். மேற்கண்ட விதமாய் வெந்நீரில் கால்களை வைத்தால் மூளையிலுள்ள இரத்த ஓட்டம் கீழிறங்கி உடம்பு முழுவதும் சமமான இரத்த ஓட்டத்தை உண்டாக்கி நன்றாகத் தூக்கம் பிடிக்கச் செய்கிறது.

கணவன், மனைவி, குழந்தைகள் முதலானோர் ஒரே படுக்கையில் ஒன்றாகப் படுத் துறங்குவது நன்றன்று. குழந்தை முதல் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான படுக்கைகள் இருக்க வேண்டும். முக்கியமாகச் சிறுவர்களை யும் குழந்தைகளையும் வயது முதிர்ந்த கிழவர் கிழவிகளின் பக்கத்தில் படுக்க வைப்பது மிகப் பெரியதோர் தவறாகும். ஏனென்றால், சிறுவர்களுக்கு இயற்கையாகவுள்ள ஆண்மை, அழகு பலம் முதலியவை அதாவது யௌ வன ஆரோக்கியம் அருகில் படுத்துறங்கும் வயது சென்று தளர்ந்த

தேகமுடைய கிழவர்களுக்குப் போய்விடுகிறது. வயது சென்ற கிழவர்கள் அழகு மிக்க இளம் பெண்களை மணந்து கொள்வதால் அவ்விளம் பெண் களின் ஆரோக்கியம் அழகு முதலியவைகளை அவ்விளம் பெண்கள் விரை வில் இழந்து விடுகிறார்கள். ஆகவே யௌவன - பல மிக்க இளஞ் சிறுவர் களைத் தேக பலமிழந்து கிழப்பருவம் வாய்ந்தவர்களுடனும் நோயாளி களுடனும் படுத்து உறங்க வைப்பது தீமை பயக்கும்.

மேற் சொல்லப்பட்ட முறைகளைக் கைக்கொண்டு ஒவ்வொருவரும் முன்னிரவில் படுத்துப் பின்னிரவில் விழித்தெழுவார்களானால், உடல் நலமும் அறிவுப் பெருக்கமும் சுறுசுறுப்பும் ஊக்கமும் உழைப்பும் உள்ளவர்களாய் இன்ப வாழ்வெய்துவார்களென்பது திண்ணம்.

**இலட்சுமி - பிப்ரவரி 1927**

# 33. ''சிருஷ்டி கர்த்தா''வுடன் யுத்தம்

### விதியும், வினையும் ஓடி ஒளிகின்றன

கடவுள், சிருஷ்டி கர்த்தா' அல்லது பிரம்மா உலகத்திலுள்ள உயிர் களைப் படைக்கிறார். ஜீவன்களுக்கும் அது செய்த கர்மத்துக்குத்தக்கபடி உண்டாக்குகிறார்; எல்லாம் பிரம்மா எழுதிய தலைஎழுத்தின் பிரகாரம் நடக்கிறது என்று மூடஜனங்கள் முட்டாள்தனமாக நம்பிவருகிறார்கள். ஒருவன் குருடனாய்ப் பிறப்பதும் இன்னொருவன் ஊமையாய்ப் பிறப்பதும் ஒருவன் குள்ளமாயிருப்பதும் இன்னொருவன் உயரமாய் வளர்வதும் பெண்ணாகப் பிறப்பதும் ஆணாகப் பிறப்பதும் ஒருவன் மூடனாகப் இருப்பதும் இன்னொருவன் புத்திசாலியாய் இருப்பதும், இன்னும் இதுபோன்ற விஷயங்களெல்லாம் அவரவர்களின் கர்மத்தின்படி தலைவிதிப் பிரகாரம் நடக்கிறது என்று சாதாரணமாகப் பண்டிதர் முதல் பாமரர் வரையில் எல்லா ஜனங்களும் நம்பி வருகிறார்கள். ஆனால், பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தால் விதி என்பதும் வினை என்பதும் கர்மம் என்பதும் எல்லாம் புரட்டுப் பேச்சு, முட்டாள்தனம், மூடநம்பிக்கை என்பது நன்கு விளங்கும்.

எப்படி என்றால் ''சிருஷ்டி கர்த்தா'' ஏற்படுத்திய தலைவிதியை மனிதன் பகுத்தறிவைக் கொண்டு விலக்கி விடுகிறான். அதாவது கடவுள் விதித்த விதியை மனிதன் மாற்றி விடுகிறான். கடவுள் தோற்றுப்போய் அவமானம் அடைகிறார். இதற்கு கீழ்க்கண்ட உதாரணங்களே போதுமானது.

''கடவுள்'' சிலரை ஊமையாகப் பிறக்கவேண்டும் என்று விதிக்கிறார் அந்த விதியின் பிரகாரமே, சில ஜனங்கள் ஊமையாய்ப் பிறந்து பேச

முடியாமல் தவிக்கிறார்கள் ஆனால், மனிதன் பகுத்தறிவைக் கொண்டு ஊமை பேசும்படிச் செய்துவிடுகிறான். ஊமைகளின் தொண்டையில் சில ஆப்ரேஷன்களைச் செய்து ஊமைகளைப் பேச வைத்திருக்கிறார்கள் சென்னை மயிலாப்பூரில் உள்ள செவிடர்கள் ஊமைகள் பாடசாலையில் *(Deaf and Dumb school)* சுமார் பத்து வயதுள்ள ஒரு ஊமைப் பெண்ணுக்கு சென்னை ஜனரல் ஆஸ்பத்திரியில் தொண்டையில் ஆப்ரேஷன் செய்தார்கள். ஆப்ரரேஷன் வெற்றிகரமாய் முடிந்து, இப்போது நன்றாய் பேசுகிறது.

அப்பெண்ணின் தலைவிதி அவளை ஊமையாய்ப் பிறக்க செய்தது. மனிதர்களின் பகுத்தறிவு அவளைப் பேசும்படி செய்துவிட்டது. இது சிருஷ்டி கர்த்தாவுக்கு தோல்வியும் அவமானமும் தானே?

இன்னொரு விஷயம் பாருங்கள் மனிதர்களிலும் மிருகங்களிலும் சிலர் சாதாரண உயரத்தைவிடக் குள்ளமாகவும் சிலர் அதிக உயரமாகவும் வளர்ந்திருக்கிறார்கள். இது ஏன் என்று கேட்டால், அவரவர்களின் தலைவிதி என்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத்திலும் கடவுள் ஏற்படுத்திய தலைவிதியை மனிதன் தன்பகுத்தறிவினால் வென்றுவிடுகிறான். எப்படி என்றால் அமெரிக்கா தேசத்தில் *(Sutherland Simpson)* என்று ஒரு ஆராய்ச்சிக்காரர் இருக்கிறார். அவர் தமது ஆராய்ச்சியைக் கொண்டு பிராணிகள் சாதாரணமாக வளர்கிற உயரத்தைக்குறைத்து விடுகிறார். அதாவது சில ஆட்டுக்குட்டிகளைக் கொண்டுவந்து அவற்றில் சில ஆட்டுக் குட்டிகளின் தொண்டையில் ஆப்பரேஷன் செய்தார். என்ன ஆப்பரேஷன் என்றால், தொண்டையில் உள்ள தைராய்ட்கிளேண்ட் *(Thyroid gland)* என்னும் உறுப்பை எடுத்துவிட்டார். அதன் பிறகு சிலவருஷங்கள் சென்றன. ஆப்பரேஷன் செய்யப்பட்ட ஆட்டுக்குட்டிகள் வளராமலே குள்ளமாக இருந்துவிட்டன. ஆப்பரேஷன் செய்யும்போது அந்தக்குட்டிகள் எவ்வளவு உயரம் இருந்தனவோ அவ்வளவு உயரமாகவே வளராமல் இருந்துவிட்டன. ஆப்பரேஷன் செய்யப்படாத ஆட்டுக்குட்டிகள் சாதாரணமாக வளர்ந்து விட்டன இவ்விதமாகவே நாய்க்குட்டிகளையும் ஆப்பரேஷன் செய்து சோதித்தப் பார்த்துவிட்டார்கள். இன்றும், மனிதனையும் சோதனை செய்தாகிவிட்டது. பத்தறை வயதுள்ள ஒருபையன். அந்தப்பையன் வயதுக்குதகுந்த உயரமில்லாமல், நறுக்கைப்பிடித்து மிகவும் குள்ளமாக இருந்தான் "தலைவிதி" அவனைக் குள்ளமாகப் பிறக்கச்செய்துவிட்டது. ஆனால், பகுத்தறிவுள்ள டாக்டர்கள் அவனை உயரமாகவளரச் செய்து விட்டார்கள். எப்படி என்றால், அப்பையனைக்கொண்டுவந்து கழுத்தில் தைராய்ட் *(Thyroid)* ஆப்பரேஷன் செய்தார்கள். அதன் பிறகு, அப்பையன்

அவன்வயதுக்குத் தகுந்த அளவு உயரமாக வளர்ந்துவிட்டான் அம்மட்டோடுநிற்கவில்லை அவனுக்குவயது ஆக ஆக பெயரிவனாக (உயரமாக) வளர்ந்து விட்டான்!

அவனைக் கடவுள் குள்ளமாக இருக்கவேண்டுமென்று விதித்த விதியை மனிதன் தனது பகுத்தறிவையும் ஆராய்ச்சியையும் கொண்டு உயரமாக வளரச்செய்துவிட்டான். இது, விதியை விதித்த கடவுளுக்குத் தோல்வியும் அவமானமும் அல்லவா என்று கேட்கிறேன்.

இன்னும் ஒரு உதாரணம் வேண்டுமா? சிலஜனங்கள் மிகவும் மட்டிகளாக, அதாவது நிர்மூடர்களாக (Idiot) இருக்கிறார்கள். அப்படிப் பட்ட வர்களுக்கு கொஞ்சங்கூட புத்திகிடையாது. எதைச் சொன்னாலும் அவர் களுக்கு விளங்குவதில்லை. இப்படிப்பட்டவர்களைப் பாமர ஜனங்கள் பார்த்து "இது இவர்கள் தலையெழுத்து. முன்பிறப்பில் செய்த வினை" என்று சொல்லுகிறார்கள். நிர்மூடர்களாகப் பிறக்கவேண்டும் என்று கடவுள் விதித்த விதியை மனிதன், தன் பகுத்தறிவைக் கொண்டு இப்போது தடுத்து விடுகிறான், எப்படி என்றால் கூறுவோம்.

ஜூலியன் ஹக்ஸ்லி (Julian Huxley) என்பவர் நிர்மூடனாக (Idiot) இருந்த ஒரு சிறுவனை கிளேண்ட் (Gland) ஆப்பரேஷன் செய்தார். அந்த ஆப்பரேஷனுக்குப் பிறகு அச்சிறுவன் புத்திசாலியாகி விட்டான். அவன் முகத்தில் புத்திசாலித்தனத்தை விளக்கும் தேஜசும் காணப்பட்டது. நீர்மூடனா யிருந்த அச்சிறுவன், ஆப்பரேஷனுக்குப்பிறகு, மற்றச்சிறுவர்களைப் போலவே புத்திசாலியாகிவிட்டான். இதுவும் சிருஷ்டிகர்த்தாவுக்குத் தோல்வியும் அவமானமும் அல்லவா என்று கேட்கிறேன்.

தலைவிதி என்பதும், கடவுள் அமைப்பு என்பதும், முன் முற்பகல் செய்த வினை என்பதும் இவை எல்லாம் முட்டாள்தனம் என்பது இதனால் விளங்கவில்லையா? இன்னும்சில உதாரணங்களைக் கூறுகிறேன் கேளுங்கள்.

சில பிராணிகள் காய்கனிகளை மாத்திரம் தின்று ஜீவிக்கின்றன. சில பிராணிகள் மாமிச உணவையே தின்று ஜீவிக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்று கேட்டால், "கடவுள் அவ்வாறு விதித்தார்." என்று சொல்லு கிறார்கள். ஆனால் மனிதன் தன் பகுத்தறிவைக் கொண்டு தாவர உணவை உண்ணும் பிராணிகளை மாமிச உணவு உண்ணும்படியாகவும், மாமிச உணவு உண்ணும் பிராணிகளைத்தாவர உணவு உண்ணும்படியாகவும் செய்து விடுகிறான் வியன்னா (Vienna) நகரத்தில் இவ்விதம் செய்கிறார்கள். எப்படியென்றால், புழு பூச்சிகளைக்கொன்று. தின்று ஜீவிக்கிற ஒருவகை

வண்டையும், தாவர உணவையே தின்று ஜீவிக்கிற இன்னொரு வகை வண்டையும் கொண்டு வந்து அவற்றின் தலையை அறுத்து மாற்றிவைத்து விட்டார்கள். அதாவது மாமிசம் உண்ணும் வண்டின் உடம்பிலும், தாவரத்தை உண்ணும் வண்டின் உடம்பிலும் பொருத்தி வைத்துவிட்டார்கள். சில நாள்கள் ஆனதும் மாற்றிவைக்கப்பட்ட தலைகள் அந்தந்த உடம்புகளில் ஒட்டிக் கொண்டன. அதன்பிறகு அந்த வண்டுகளின் சுபாவமும் மாறிவிட்டது. எப்படி என்றால் சாகபக்ஷணியாயிருந்த வண்டு மாமிச பக்ஷணியாக புழு பூச்சிகளைக் கொன்று தின்ன ஆரம்பித்துவிட்டது. மாமிச பக்ஷணியாயிருந்த வண்டு சாகபக்ஷணியாக மாறி இலை தழைகளை தின்ன ஆரம்பித்து விட்டது. பகுத்தறிவின் அற்புத சக்தியாலன்றோ இவ்விதம் செய்யப்பட்டது? இந்த விஷயத்திலும் கடவுள் விதித்த விதியை மனிதன் மாற்றிவிட்டானன்றோ?

இன்னும் உலகத்திலுள்ள பிராணிகளில் சில ஆணாகவும் சில பெண்ணாகவும் பிறக்கின்றன. ஆண்களின் சுபாவம் வேறாகவும் பெண் களின் சுபாவம் வேறாகவும் இருக்கின்றன. காரணம் கேட்டால் அது கடவுள் விதித்த விதி என்கிறார்கள். இந்த விதியையும்கூட மனிதன் மாற்றிவிடு கிறான். இதுவும் வியன்னா நகரத்திலேயே செய்யப்பட்டது. ஒரே இனத்தைச் சேர்ந்த ஆண் வண்டையும் பெண்வண்டையும் கொண்டு வந்து அவற்றின் தலைகளை அறுத்து மாற்றிவைத்துவிட்டார்கள். அதாவது ஆண் வண்டின் உடலிலும், பெண்வண்டின் தலையை ஆண்வண்டின் உடலிலும் பொருத்தி விட்டார்கள். சில நாளுக்குள் அத்தலைகள் அவ்வவ் உடல்களில் நன்றாய் ஒட்டிக்கொண்டன. அதன் பிறகு அவ்வண்டுகளில் காணப்பட்ட ஆச்சரியம் என்ன வென்றால், பெண்வண்டாக இருந்தது ஆண் வண்டின் சுபாவத்தை யடைந்து விட்டது. ஆண்மையோடு விளங்கிய வண்டு பெண் வண்டின் சுபாவத்தையடைந்து விட்டது.

இவ்விஷயத்திலும் சிருஷ்டிகர்த்தா தோல்வி யடைந்து விட்டாரன்றோ? இதனால், விதி என்பதும் வினை என்பதும் மூடநம்பிக்கை என்று விளங்கவில்லையா?

பகுத்தறிவைக்கொண்டு செய்யும் ஆராய்ச்சியின் பயனாக, எத்தனையோ ஆச்சரியகரமான விஷயங்களை யெல்லாம் மனிதன் செய்து முடிக்கிறான். சில ஜனங்கள் சோம்பேறிகளாகவும் சிலர் சுறுசுறுப்புள்ளவர் களாகவும், சிலர் மிக்க தைரியசாரிகளாகவும், சிலர் பேடிகளாகவும் இருக் கிறார்கள். கோழைகளைத் தைரியசாலிகளாகவும், சோம்பேரிகளைச் சுறு சுறுப்பாளர்களாகவும் செய்ய முடியும் என்று இப்போது ஆராய்ச்சியின்

மூலமாகக் கண்டறிந்திருக்கிறார்கள். இன்னும் எத்தகையோ உதாரணங்களை எழுதலாம். இடம் விரியும் என்றஞ்சி விடுகிறோம்.

ஆகவே, வேதம் புராணம், கடவுக் கோயில், விதி, வினை என்று சொல்லிக்கொண்டு நாளுக்கு நாள் முட்டாள்களாப்போகிற வழக்கத்தினை விட்டு, எந்த விஷயத்தையும் பகுத்தறிவு கொண்டு ஆராயும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

*குடியரசு - 16.10.1932*

# 34. பன்னிரண்டு சூரியர் (துவாதச ஆதித்தர்)

சைவ சமயத்துத் தெய்வங்களில் பன்னிரண்டு சூரியர்கள் உள்ளனர். சைவ சமய நூல்கள் பன்னிரண்டு சூரியர்களைக் கூறுகின்றன. அவர்களுடைய பெயர்களாவன. 1. வைகர்த்தர், 2. விவஸ்வதர், 3. மார்த்தாண்டர், 4. பாஸ்கரர், 5. இரவி, 6. உலோகப்பிரகாசர், 7. உலோக சாட்சி, 8. திரிவிக்ரமர், 9. ஆதித்தர், 10. சூரியர், 11. அம்கமாலி 12. திவாகரர் இவர்கள் ஒவ்வொருவரும் பன்னிரண்டு திசைகளில் இருக்கின்றனர்.

இவர்கள் உருவம் நின்றநிலையில் அமைக்கப்படும். இவர்கள் உருவங்களில் அமைதியும் கூறப்படுகின்றன. அந்த விபரங்கள் வருமாறு:

1. **வைகர்த்தர்**: இவர் ஒரு முகமும் இரண்டு கைகளும் உள்ளவர். இரண்டு கைகளிலும் பொற்றாமரைப் பூவை நாளத்தோடு பிடித்துத் தோளின்மேல் சார்த்தி வைத்திருப்பார். மஞ்சள் நிறஆடை அணிந்து பொன் அணிகள் அணிந்திருப்பார்.

2. **விவஸ்வதர்**: இவருக்கு இரண்டு முகங்களும் நான்கு கைகளும் உண்டு. மேல் இரண்டு கைகளில் தாமரைப் பூக்களை ஏந்தித் தோளின் மேல் சார்த்திக் கொண்டு கீழ் இரண்டு கைகளில் அபய முத்திரையும் வரத முத்திரையும் உள்ளவராக இருக்கிறார். சிவந்த நிறமான பவள நகைகளை அணிந்திருப்பார். பிங்கள நிற ஆடை, அல்லது பொறபட்டாடை அணிந்திருப்பார்.

3. **மார்த்தாண்டர்**: இவருக்கு மூன்று முகங்களும் ஆறு கைகளும் உண்டு. மேல் இரண்டு கைகளில் தாமரைப் பூக்கள். இரண்டு கைகளில்

ஜபமாலையும் கமண்டலமும் ஏந்தியிருப்பார். இரண்டு கைகளில் அபய வரத முத்திரைகள். முத்து மாலைகளை ஆபரணங்களாக அணிந்திருப்பார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 10 | 11 | 12 | |
| 9 | ஆதித்தர் | சூரியர் | அம்சுமாலி | திவாகரர் | |
| 8 | திரிவிக்ரமர் | | | வைகர்த்தர் | 1 |
| 7 | உலோக சாட்சி | | | விவஸ்வதர் | 2 |
| | உலோகப் பிரகாசர் | இரவி | பாஸ்கரர் | மார்த் தாண்டர் | 3 |
| | 6 | 5 | 4 | | |

4. **பாஸ்கரர்**: இவருக்கு இரண்டு முகங்களும் நான்கு கைகளும் உண்டு. இரண்டு கைகளில் தாமரைப் பூக்கள் ஏந்தியிருப்பார். மற்ற இரண்டு கைகளைக் கூப்பிச் சிவபெருமானைக் கும்பிடும் நிலையில் இருப்பார். சிவப்பு நிறமுள்ளவர். சிவந்த ஆடை அணிந்திருப்பார். நீலக்கற்கள் பதித்த நகைகளை அணிந்திருப்பார்.

5. **இரவி**: இவர் நான்கு முகங்களையும் எட்டுக் கைகளையும் உடையவர். கைகளில் ஜபமாலை கமண்டலம், சூலம், பாசம், அங்குசம், தாமரை, அபயவரத முத்திரைகள் இருக்கும். சிவந்தநிற ஆடை அணிந்து, பச்சைக்கல் (மரகதக் கல்) இழைத்த ஆபரணங்கள் அணிந்திருப்பார்.

6. **உலோகப் பிரகாசர்**: ஐந்து முகமும் பத்துக் கைகளும் உள்ளவர். இவர் நிறம் கறுப்பு. இரண்டு கைகளில் தாமரைப் பூக்கள். இரண்டு கைகளில்

சூலம் அங்குசம். மற்றும் இரண்டு கைகளில் தண்டு ஜபமாலை. இன்னும் இரண்டு கைகளில் அம்புவில். நீல நிறப்பட்டாடை உடுத்தி நீல நிறக்கற்கள் பதித்த நகைகளை அணிந்திருப்பார்.

7. **உலோக சாட்சி**: இவருக்கு ஒரு முகமும் இரண்டு கைகளும் உண்டு. இரண்டு கைகளையும் கூப்பிக் கும்பிடும் நிலையில் இருப்பார். வெள்ளை நிறமுள்ளவர். வெண்பட்டாடை அணிந்து இருப்பார் அல்லது வெள்ளைப் பருத்தி ஆடையைக் காஷாயம் (காவி) தோய்த்து அணிந்திருப்பார். உடம்பு முழுவதும் திருநீறு அணிந்திருப்பார்.

8. **திரிவிக்கிரமர்**: இவர் இரண்டு முகமும் நான்கு கைகளும் உள்ளவர். மேல் இரண்டு கைகளில் தாமரைப் பூக்களை ஏந்திக் கொண்டு கீழ் இரண்டு கைகளைக் கூப்பிக் கும்பிடும் நிலையில் இருப்பார். நீலக்கல் (கறுப்புக் கல்)பதித்த ஆபரணங்களை அணிந்து கறுப்பு (நீல)ப்பட்டு ஆடை அணிந்து கறுப்பு நிறம் உள்ளவராக இருப்பார்.

9. **ஆதித்தர்**: இவருக்கு ஒரு முகமும் இரண்டு கைகளும் உண்டு. கைகளில் செந்தாமரைப் பூக்கள் ஏந்தியிருப்பார். மாதுளம் பூப்போன்ற செந்நிறம் உள்ளவர். சிவப்புக் கல் பதித்த ஆபரணம் அணிந்து சிவந்த ஆடை அணிந்திருப்பார்.

10. **சூரியர்**: இவருக்கு ஒரு முகமும் எட்டு கைகளும் உள்ளன. இரண்டு கைகளில் தாமரைப் பூக்கள். மற்ற இரண்டு கைகளில் கண்டாமணியும் தூபகலசமும்: வேறு இரண்டு கைகளில் கமண்டலமும் ஜபமாலையும் மேலும் இரண்டு கைகளில் அபயவரத முத்திரைகள். பொன் நிறம், பொன் ஆபரணங்கள் அணிந்திருப்பார். பொன் நிறப்பட்டாடை உடுத்தியிருப்பார்.

11. **அம்சுமாலி**: இவருக்கு ஆறு முகங்கள் உண்டு. சிவந்த நிறம் உள்ளவர். பன்னிரண்டு கைகள், மேல் இரண்டு வல இடக் கைகளில் இரண்டு தாமரை மலர்களைப் பிடித்திருப்பார். வலப்புரம் பார்த்த நான்கு கைகளில் தோமரம், கத்தி, வாள், கேடயம் ஏந்தியிருப்பார். இடப்பக்கம் பார்த்த நான்கு கைகளில் பாசம், அங்குசம், வேல் வேதானம் ஏந்தியிருப்பார். மற்ற வல இடம் கைகளில் அபயவரத முத்திரையுள்ளன.

*12. **திவாகரர்**: இவருக்கு இரண்டு முகங்கள் உண்டு. நான்கு கைகள். இரண்டு வல இடக் கைகளில் இரண்டு தாமரைப் பூக்களைப் பிடித்திருப்பார். மற்ற இரண்டு இட வலக் கைகளில் வில்வம் ஏந்தியிருப்பார். மஞ்சள் நிறப்பட்டு அணிந்திருப்பார்.*

*சில கோவில்களில் பன்னிரண்டு சூரியருடைய உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலில் பன்னிரண்டு சூரியர்களின் கற்சிலைகள் இருந்தன. மண்ணில் புதைத்துகிடந்த அந்தக் கற்சிலைகள் அண்மைக் காலத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.*

***- கல்வெட்டு - இதழ் - 6 இராட்சச ஆண்டு***

## *35. சவச்சடங்கில் சீர்திருத்தம்*

*கணக்கற்ற சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. அச்சீர்திருத்தங்களில் சவச்சடங்கைப்பற்றிய சீர்திருத்தமும் ஒன்றாகும். சவச்சடங்கைப்பற்றிய சீர்திருத்தத்தில் ஒருவரும் கவனம் செலுத்தவில்லை. சவச்சடங்கைச் சீர்திருத்த வேண்டுமானால், பகுத்தறிவு சீர்திருத்தக்காரர் களாகிய சுயமரியாதை இயக்கத்தினரால் தான் முடியும். ஏனென்றால், வைதீகர்கள் சீர்திருத்தத்திற்கு உடன்படமாட்டார்கள்; பொது ஜனங்களோ என்றால், பழையவழக்கம் என்று சொல்லி பழமை பாராட்டுவார்கள்; அரசாங்கத்தாரோ என்றால் சமயசம்பந்தமான விஷயங்களில் தலையிட மாட்டோம் என்று சொல்லிவிடுவார்கள். ஆகவே, இந்தச்சீர்திருத்தப் பொறுப்பு சுயமரியாதை இயக்கத்தின்மேல் விழுகிறது. இனி கூடப்போகிற சுயமரியாதை மகாநாடுகளில் இவ்விஷயத்தைப்பற்றியும் யோசித்து யாதேனும் ஒரு முடிவுக்கு வரும்படி சுயமரியாதை இயக்கத் தோழர்களை வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.*

*இனி, சவச்சடங்குகளில் என்ன திருத்தம் செய்ய வேண்டும், ஏன் செய்யவேண்டும் என்பதைப் பற்றிக் கவனிப்போம்.*

*கிறிஸ்தவர்கள், முகம்மதியர்கள் முதலியவர்களைத்தவிர, இந்துக்கள் எல்லோரும் தங்கள் பிணங்களை முகத்தைத் திறந்தபடியே வீதிகளின்*

வழியாக சுடுகாட்டிற்குக் கொண்டு செல்கிறார்கள். இந்துக்களில் சில தரப்பார் தங்கள் பிணங்களை உட்கார வைத்து முகத்தைத்திறந்தபடி வீதிகளின் வழி யாகக் கொண்டு போகிறார்கள். இவ்விதப் பிணங்களை, தெருவில் போகிற ஜனங்கள் பார்க்கிறபோது ஒருவித அருவெறுப்பு உண்டாகிறது. பிணங் களின் விகாரமான முகத்தைப் பார்க்க யார்தான் ஆசைப்படுவார்கள்? பிணத்தின் சொந்தக்காரர்களுக்கு விகாரமாகத் தோன்றாது. ஆனால், மற்ற பொது மக்கள் பிணங்களின் முகத்தைத் தெருவில் காணும்போது அருவெறுப் படைகிறார்கள். அன்றியும் இறந்தவர்கள் தொத்து வியாதிகளினால் இறக்க லாம். அப்படிப்பட்டவர்களை, வீதிகளில் திறந்தபடியே எடுத்து போவது எவ் வளவு மோசமான காரியம் பாருங்கள்.

கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் பிணங்களைப் பெட்டிகளில் வைத்து, துணியினால் மூடிக் கொண்டுபோகிறார்கள். அதனால், இதனைப் பார்ப்பதற்கு வெறுப்புண்டாகிறதில்லை. ஆனால், ஒருவித மரியாதை நம்மையறியாமலே உண்டாகிறது. இந்துக்களின் பிணங்கள் தூரத்தில் வரும்போதே, வீதியில் போகிறவர்களுக்கு ஒருவித அருவெறுப்பு தோன்றுகிறது. அருவறுப்பைத்தருகிற பிணத்தைக் கண்ணில் காணாதபடி சந்து வழியாக நுழைந்து போய் விடுகிறோம். சென்னை போன்ற நகரங்களில் இந்த ''கண்ராவி''யை, அருவெறுக்கத்தக்க பிணங்களை தினந்தோறும் காணவேண்டியிருக்கிறது. இந்துக்களும், கிறிஸ்துவர் முகம்மதியர்களைப் போல் தங்கள் பிணங்களைப் பெட்டிகளில் அடக்கம் செய்து துணிகளினால் மூடிக்கொண்டுபோனால் எவ்வளவு மரியாதையாக இருக்கும் என்பதை வாசகர்கள் யோசித்துப்பார்த்தால் விளங்கும். ஆகவே, இதைப்பற்றிச் சுய மரியாதை மகாநாடுகள் கவனித்து யோசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிணங்களைத் தூக்கிக்கொண்டு வீதிகளின் வழியாய் போகும்போது, வாத்தியங்களை வாசித்துக்கொண்டு போகிறார்கள். அந்த வாத்தியங்களோ கேட்பதற்கு கர்ண கடூரமாக இருக்கின்றன. துக்ககரமான சடங்குகளில் எவ்விதமான வாத்தியங்களையும் விலக்கிவைப்பது சுயமரியாதைக்காரர் களின் கொள்கையாயிருக்குமானால் நலமாயிருக்கும் என்று தோன்றுகிறது. ஐரோப்பியர்களும் கிறிஸ்தவர்களும் பிணங்களைக் கொண்டு போகும் போது வாத்தியம் வாசிக்கிறார்களே; நாமும் வாத்தியம் வாசித்தால் என்னதவறு என்று சிலர் கேட்கலாம். கிறிஸ்தவர்கள் சவச்சடங்கில் வாத்தியம்

வாசிப்பதற்கும் நம்மவர் வாத்தியம் வாசிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. அதாவது, கிறிஸ்தவர்கள் சவச்சடங்கில் வாசிக்கும் ராகம் விசனகரமான ராகம்; கலியாணம் முதலிய சுபகாரியங்களில் வாசிக்கும் ராகம் சந்தோஷ கரமானதாயிருக்கும். ஆனால், நம்மவரின் சங்கு திருச்சின்னம், சேமக்கலம் முதலிய வாத்தியங்களை வாசிக்கும் ராகம் சாவிலும் வாழ்விலும் ஒரே ராகந்தானே? கலியாண காலத்தில் வாசிக்கும் மாதிரியாகத்தான் இழவு காலத்தில் வாத்தியம் வாசிக்கிறான். ஆகையால், சுபகாலங்களில் வாசிப் பதற்கு ஒரு ராகமும் அசுபகாலங்களில் வாசிப்பதற்கு வேறுவகை ராகமும் ஏற்படுகிறவரையில், சுயமரியாதைக்காரர்கள் துக்க கரமான சடங்குகளில் வாத்தியங்களை நிறுத்தி வைப்பது உத்தமம் என்று தோன்றுகிறது. அரிசி இடுதல், குடம் உடைத்தல் முதலிய மூடச்சடங்குகள் அனாவசியம் என்பது சொல்லாமலேயமையும்.

கடைசியாக, சுயமரியாதைக்காரர்களின் கொள்கை பிணங்களைக் கொளுத்துவதாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். ஏனெனில் பிணங்களைப் புதைப்பதால் அவை பூமிக்குள் அழுகி நைந்து போய் விடுகிறது. அப்போது, மழை பெய்தால், மழைத்தண்ணீர் பூமியில் ஊறி குளம், கிணறு, ஆறு முதலியவைகள் பக்கத்தில் இருந்தால் அவற்றுடன் கலக்கிறது. அவ்விதம் கலக்கும் போது, பிணத்துடன் ஊறிச் சுரக்கிற தண்ணீராகையால், அத்தண்ணீரை உபயோகிப்பவர்களுக்குப் பலவித நோய் கள் உண்டாகக் காரணமாயிருக்கிறது. ஆகையால், பிணங்களைப் புதைக் காமல் கொளுத்திவிடுவது நலம். பிணங்களைக்கொளுத்தினால், அதனால் உண்டாகும் புகைக் காற்றுடன் கலந்து ஜனங்களுக்குத் தீமையுண்டாக்கும் என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால், கொளுத்துவதனால் ஏற்படும் தீமையைவிட புதைப்பதனால் உண்டாகும் கெடுதி அதிகமாகையால் கொளுத்துவதே சிறந்த முறையென்று தோன்றுகிறது.

சவச்சடங்கு சம்பந்தமான இந்தச் சீர்திருத்தம் சீக்கிரமாகச் செய்யப்பட வேண்டிய ஒரு விஷயம். ஆகையால் அன்பர்கள் அனைவரும் தீரயோசிக்க வேண்டுகிறேன்.

குடியரசு - 6.12.1932

# 36. சென்னை நகரம் யாருக்கு உரியது?

*('சென்னை யாருக்குச் சொந்தம்' என்று கேட்கின்றனர் பலர். 'எமக்குச் சொந்தம்' என்று சில ஆந்திரர் கூறுகின்றனர். அது தவறு என்று காட்டுவது இக்கட்டுரை.)*

சென்னைமாநகரம் தொண்டைநாட்டில் உள்ளது. இந்நகரம் ஏற்பட்டுச் சுமார் 300 ஆண்டுகள் ஆகின்றன. இருபத்து நான்கு கோட்டங்களில் ஒன்றான புலியூர்க் கோட்டத்தில் சென்னை நகரம் அமைந்திருக்கிறது. இந்த நகரத்தைத் தெலுங்கர்களில் சிலர், தங்களுடையது என்று வரலாறு உணராமல், விபரம் அறியாமல் கூறுவது பொருத்தமற்ற, உண்மைக்கு மாறான செய்தியாகும்.

விசயநகர அரசு, முகம்மதியரால் தோல்வியுற்றுச் சிதைந்துபோயிற்று. சிதைந்துபோன விசயநகர அரசன் வழிவந்தவன் சந்திரகிரி அரசன். அக்காலத்தில் (17-ஆம் நூற்றாண்டில்) நாடெங்கும் கொள்ளையும் குழப்பமுமாக இருந்தபடியால், எந்தெந்த நாடு யார் யாருக்குரியதென்று சொல்லமுடியாமல், தடி எடுத்தவன் தண்டல்காரன் என்னும் நிலையில் இருந்தது. அந்தக் காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த டே என்னும் ஆங்கிலேயர் 1639-இல் சந்திரகிரி அரசனிடமிருந்து சென்னையில் கோட்டையுள்ள இடத்தை மாத்திரம் வாடகைக்கு வாங்கினார். அக்காலத்தில், சென்னை சந்திரகிரி அரசனுக்குச் சொந்தம் என்றே வைத்துக்கொண்டாலும், பிற்காலத்தில் அது வேற்றரசருக்கு உரியதாயிற்று என்னும் செய்தியை வரலாறு கூறுகிறது.

1646-இல் சந்திரகிரி அரசன், முகம்மதியரால் தாக்கப்பட்டுச் சந்திரகிரியைவிட்டு மைசூருக்கு ஓடி ஒளிந்தான். அவனுடைய அரசும், நாடும் முகம்மதியரால் பிடிக்கப்பட்டு முகம்மதியரின் ஆட்சிக்கு வந்துவிட்டன. அதாவது, கோல்கொண்டா அரசன் சந்திரகிரி அரசனைத் துரத்திவிட்டுச் சந்திரகிரி இராச்சியத்தைச் சென்னையுட்பட பிடித்துக்கொண்டான். ஆகவே, 1670-இல், கிழக்கிந்தியக் கம்பெனியார் தங்கள் செயின்ட் சார்ச் கோட்டையையும், சென்னை நகரத்தையும் கோல்கொண்டா அரசனிடம் இருந்து மீண்டும் வாடகைக்குப் பெற்றனர். இந்த வாடகை உடன்படிக்கைப்

படி, கோல்கொண்டா(முகம்மதிய) அரசனுக்குக் கம்பெனியார் ஆண்டு ஒன்றுக்கு 1200 வராகன் வாடகை கொடுக்க ஒப்புக்கொண்டனர். இந்த உடன்படிக்கையை முன்னின்று செய்துகொடுத்தவர் நவாப் நெக்கம் கான் (Nabob Neknam Khan) என்பவர்.

ஆகவே, வரலாறு அறியாத தெலுங்கரில் சிலர் ''மதராஸ் மனதே'' என்று கூச்சல் போடுவதில் ஏதேனும் பொருள் இருக்கிறதா? அறிவு இருக்கிறதா? 1692-இல் எழும்பூர், புரசைவாக்கம், தண்டையார்பேட்டை களை கம்பெனியார் முகம்மதியர் இடத்தில் இருந்து பெற்றுக்கொண்டு சென்னையுடன் சேர்த்தார்கள். அசித் கான் (Assid Khan), நவாப் கல்பிகார் கான் (Nabob Zulfikar Khan) ஆகிய இருவர்களிட மிருந்து இந்தப் பகுதி களை வாங்கினார்கள்.

நவாப்பின் சந்ததியார் இன்றும் (சென்னை நகரத்துக்கும் கர்நாடகத்துக் கும் சொந்தக்காரராக இருந்தபடியால்) பென்ஷன் பெற்று வருகிறார்கள். உண்மை இப்படியிருக்க, சுயநலம் கொண்ட இரண்டொரு ஆந்திரர் தந்நலம் கருதி, ''மதராஸ் மனதே'' என்று சொல்வது பொருளற்ற கேலிக் கூத்தாகும்.

இவர்கள் முகம்மதியர்களான கர்நாடக நவாபுகளைத் தெலுங்கர் என்று கருதுகிறார்களா? தெலுங்கரும் முகம்மதியரும் ஓர் இனம் தானா? சந்திரகிரி அரசர் வழிமுறையும் கர்னாடக நவாபு வழிமுறையும் ஒன்றுதான் என்று இவர்கள் ஒப்புக்கொள்வார்களா? அது உண்மையா?

'ஆசை வெட்கம் அறியாது' என்கிற பழமொழிப்படி வரலாற்றைப் புரட்டிப் பாராமல் வீண் புரளி செய்வது அறிவுடைமையாகாது.

இராசராசன் போன்ற சோழ அரசர்கள் ஆந்திரம் உட்படக் கலிங்க நாட்டை வென்று அரசாண்டார்கள். ஆகையால், இப்போது ஆந்திர நாடும், கலிங்க தேசமும் தமிழர்களுக்குரியன என்று கூறினால், அது எவ்வளவு நகைப்பிற்கிடமாக இருக்குமோ அப்படித்தான், தெலுங்கர் சென்னை தெலுங்கருக்குரியது என்று கூறுவதும் நகைப்பிற்கிடமாயிருக்கிறது.

செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு.23.

# 37. சாமிகள் இனி அவதாரம் செய்யுமா?

*சாமிகள் இனி அவதாரம் செய்யுமா? அல்லது, சாமிகள் அவதாரம் செய்ததாகச் சொல்வதை ஜனங்கள் இனியும் நம்புவார்களா?*

*யோக்கியமாகச் சம்பாதித்து வாழ முடியாமல் பொதுஜனங்களின் பொருளைக் கவர்ந்து பிழைக்கும் ஒரு கூட்டத்தாரின் சூழ்ச்சியும் கற்பனையும் ஆகும் அவதாரம் என்பது. இந்துக்களின் புராண இதிகாசங்களின் படி சாமிகள் செய்த அவதாரங்கள் கணக்கிலடங்கா. இந்த அவதாரங்களுக்கென ஏற்பட்ட புராணங்களும், கோயில்களும், திருவிழாக்களும், பணச்செலவுகளும் குருட்டு நம்பிக்கைகளும் கணக்கற்றவை. ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்கும் சூழ்ச்சிக்காரர்கள் அவ்வப்போது அவதாரங்களை உற்பத்தி செய்து கொண்டேயிருப்பார்கள். அவதாரங்களை இவர்கள் உற்பத்தி செய்வதன் நோக்கம் என்னவென்றால் தங்களுக்குச் செல்வாக்கு உண்டு பண்ணிக்கொள்ளவும் பாமர ஜனங்களின் பணமும் பொருளும் இலவசமாகத் தங்களுக்குக் கிடைக்கவுமேயாகும்.*

*பார்ப்பனருக்குச் செல்வாக்கையும், உயர்வையும் உண்டாக்கிப் பார்ப்பனரல்லாத மக்களுக்கு இழிவையும் தாழ்வையும் அடிமைத்தனத்தையும் உண்டாக்கும்படி செய்தவர்களையெல்லாம் அவதாரங்களாகச் செய்து விட்டார்கள். இந்த அவதாரங்கள் எல்லாம் பார்ப்பனரின் செல்வாக்கிற்கு, அல்லது உயர்வுக்கு, அல்லது வயிற்றுப் பிழைப்புக்குப் பாடுபட்டவை என்னும் உண்மையை அக்கதைகளைப் படித்துப்பார்த்தால் நன்கு விளங்கும்.*

*விஷ்ணுவின் ஒவ்வொரு அவதாரத்தையும் ஆராய்ந்து பார்த்தால் அது பார்ப்பனரின் உயர்வுக்கும் நன்மைக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் பாடுபட்டது என்பதும் அந்த அவதாரங்கள் பல இழிவான செய்கைகளைச் செய்து பார்ப்பன ஆதிக்கத்துக்குப் பாடுபட்டிருக்கின்றன என்பதும் நன்கு விளங்கும். சிவனார் பிராமணனாக வந்தார், தண்ணீர்பந்தல் வைத்தார் என்பனபோன்ற கதைகள் பார்ப்பனர் தங்களுக்கு உயர்வை உண்டாக்கிக் கொள்ளக் கட்டிவிடப்பட்ட கதைகள். பார்ப்பானுடைய மேன்மையை விளக்குவதற்கும், பார்ப்பானுடைய வயிற்றுப் பிழைப்புக்கு உதவி செய்வதற்கும் இந்த அவதாரங்கள் உதவிசெய்திருக்கின்றன.*

ஆதிகாலம் முதல் இந்த அவதாரப் புரட்டுப் பாமர மக்களை ஏமாற்றிக்கொண்டு வந்தது; வருகிறது. பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை வளர்க்கவும் பார்ப்பனருக்கு வயிற்று பிழைப்பை உண்டாக்கவும், யார் யாரெல்லாம் பாடுபட்டார்களோ அவர்களையெல்லாம் பார்ப்பனர்கள் அவதாரமாகச் செய்துவிட்டார்கள்.

புத்தரைக்கூடப் பார்ப்பனர்கள் விஷ்ணுவின் அவதாரம் என்று எழுதி வைத்துக்கொண்டார்கள். ஆனால், புத்தர் பார்ப்பனரின் ஆதிக்கத்துக் காகவோ அல்லது அவர்களின் வயிற்றுப் பிழைப்புக்காகவோ பாடுபட வில்லை. ஏன் அவரைப் பார்ப்பனர்கள் விஷ்ணுவின் அவதாரம் என்று சொன்னார்களென்றால், தங்களுக்குச் செல்வாக்கைத் தேடிக் கொள்வதற் காகவே. பௌத்த மதம் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில், பார்ப்பன மதம் (இந்து சமயம்) சாகுந் தருவாயிலிருந்தபோது, பார்ப்பனர்கள் புத்தரை விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்லிப் பாமர மக்களை ஏமாற்றியிரா விட்டால் இந்து மதம் அக்காலத்திலேயே அழிந்து போயிருந்திருக்கும். பார்ப்பனர்கள் தங்களுக்குச் செல்வாக்கை உண்டாக்கிக் கொள்ளப் புத்தரை விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்லிப் பாமரமக்களை ஏமாற்றித் தங்கள் ஆதிக்கத்தையும், செல்வாக்கையும் காப்பாற்றிக்கொண்டார்கள். இந்தியாவை முகம்மதியர் அரசாண்ட காலத்தில் பார்ப்பனர்கள் அல்லா உபநிஷத் என்று ஒரு புஸ்தகம் எழுதி இஸ்லாம் மதத்தையும் இந்து மதத்தில் சேர்க்கப் பார்த்தார்கள். ஏன்? முகமதியரையும் ஏமாற்றித் தங்களுக்குச் செல்வாக்கையும் வயிற்றுப்பிழைப்பையும் உண்டாக்கிக் கொள்வதற்காகத் தான். ஆனால் முகம்மதியர்கள் ஏமாறவில்லை.

பதினாராம் நூற்றாண்டில் முகம்மதியர்கள் ஸ்ரீரங்கம் கோவிலில் புகுந்து கோயிலை இடித்து ரங்கநாதருடைய ஐம்பொன் விக்கிரகத்தைத் தூக்கிக்கொண்டு போய்விட்டபோது பார்ப்பனர்கள் என்ன கதை கட்டி விட்டார்கள் தெரியுமா? ரங்கநாதர் துலுக்கப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டார். ஆகையால் துலுக்கன் வீட்டுக்குப் போயிருக்கிறாரென்று சொல்லித் துலுக்க நாய்ச்சியார் என்று ஒரு அம்மனை ஏற்படுத்தி நாய்ச்சியார் கோவில் என்னும் ஊரில் வருஷம் தோறும் உற்சவம் கொண்டாடுகிறார்கள். ரங்கநாதர் துலுக்கப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டார் என்றால் அவர் முதலில் சுன்னத்துச் செய்திருக்கவேண்டும். பிறகு துலுக்க நாய்ச்சியார்

வீட்டில் மாட்டுக்கறியும் புலால் சோறும் விருந்து சாப்பிட்டிருக்கவேண்டும். ஆனால் பார்ப்பனர்கள் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. ஆ! பார்ப்பனர்களின் கட்டுக்கதைகளும், பொய் புளுகுகளும் குப்புறவிழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்னும் பேச்சுக்களும் விந்தையாகத்தானிருக் கின்றன. ரங்கநாதர் விக்ரகத்தை முகம்மதியர்கள் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று யோக்கியமாய் ஒப்புக் கொள்வதை விட்டு அவர் துலுக்கப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டார் என்றும் அவர் நாய்ச்சியார் கோவிலுக்குப் போகிறாரென்றும் பொய்புளுகவேண்டுமா? அதற்காக உற்சவம் செய்ய வேண்டுமா? வடிகட்டின முட்டாள்கள் இதை நம்புகிறார்களே!

பார்ப்பனர்களின் அவதாரப் புரட்டுக்கு ஒரு எல்லை இல்லை. இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அவர்கள் அவதாரங்களை உண்டாக்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். சிறிது காலத்திற்கு முன் பார்ப்பனக் கூட்டத்துக்கு நன்மை செய்துவந்த அன்னிபெசன்ட் அம்மையாரைப் பார்ப்பனக் கூட்டம் சரஸ்வதி அவதாரம் என்று சொல்லி ஊரெங்கும் வதந்தியைக் கிளப்பியது. ஒருபார்ப்பன ஜட்ஜின் மனைவி உள்படப் பல பார்ப்பன ஸ்தீரீகள் அன்னிபெஸன்ட் அம்மையாருக்குக் கற்பூர தீபாராதனை செய்து காலில் விழுந்து கும்பிட்டார்கள். ஆனால் நல்லகாலமாக இப்போது ஜனங்களுக்குப் பகுத்தறிவு உதயமாய் விட்டபடியால் சரஸ்வதி அவதாரப் புரட்டை இப்போது ஒருவரும் நம்புவதில்லை.

இன்னும் அன்னிபெஸன்ட் அம்மையாரின் ஏசுகிறிஸ்துவின் அவதாரப் புரட்டும் பலிக்காமல் போய்விட்டது. கிருஷ்ணமூர்த்தி என்னும் பார்பனச் சிறுவனைக் காட்டி அச்சிறுவன் ஏசுகிறிஸ்துவின் இரண்டாவது அவதாரம் என்று அந்த அம்மையார் சொன்னார்கள்; ஆனால் அந்த அவதாரத்தையும் ஜனங்கள் ஒப்புக் கொள்ளவில்லை. பின் அந்தக் கிருஷ்ண மூர்த்தியே உண்மையை வெளியிட்டார். அதாவது தாம் ஒரு மனிதன்தான் என்றும், தாம் அவதாரம் அல்லவென்றும் சொன்னாராம். ஒரு ''அவதாரம்'', தான் அவதாரம் அல்ல என்று சொன்னது இது தான் முதல் தடவை.

இந்த அவதாரங்களினால் ஏற்பட்ட கோவில்கள் எத்தனை? தேர் திருவிழாக்கள் எத்தனை? பணச் செலவுகளும் அயோக்கியத்தனங்களும் எவ்வளவு? முட்டாள்தனமும் மூடநம்பிக்கையும் எவ்வளவு? இவ்வளவும்

எதற்காக? ஒரு சிறு சோம்பேறிக் கூட்டத்தின் செல்வாக்கிற்கும் வயிற்றுப் பிழைப்பிற்காகவும்தானே?

இந்தப் புளுகுகளை எல்லாம் ஜனங்கள் நம்புவதற்கு இருப்பதாம் நூற்றாண்டு இடந்தரவில்லை அன்றியும், சுயமரியாதை இயக்கம் தூங்கு கிறவர்களையெல்லாம் விழிக்கச் செய்துவிட்டபடியால், இனி இந்தியாவில் சாமிகள் அவதாரம் செய்யப் பயப்படும் என்பது உறுதி.

எல்லாச் சாமிகளும் இந்தியாவில் தான் அவதாரம் செய்கின்றனவே தவிர மற்ற நாடுகளில் அவதாரம் செய்வதில்லை. இந்தியாவைப்போல அவதாரங்கள் பெருத்த தேசம் உலகத்திலே வேறெங்கும் கிடையாது. இதற்குக் காரணம்கேட்டால், இந்தியா புண்ணிய தேசம். ஆகையால் தான் சாமிகள் இந்தியாவில் அவதாரம் செய்கின்றன என்று சாமிகளின் ''பக்தர்கள்'' சொல்லுகிறார்கள். ஆனால், சுயமரியாதை இயக்கம் என்ன சொல்லுகிற தென்றால், அவதாரப்புரட்டை நம்புவதற்கு இந்தியாவில் ஜனங்கள் இருக்கிற படியால்தான் சாமிகள் இந்தியாவிலேயே அளவில்லாமல் அவதாரம் செய்துகொண்டிருக்கின்றன. மற்றத் தேச மக்கள் பகுத்தறிவுடையவர்கள் ஆகையால், சாமிகள் அந்தத்தேசங்களில் அவதாரம் செய்யப் பயப்படு கின்றன என்று சொல்லுகிறார்கள்.

ஆனால், இந்தியாவிலும் இப்பொழுது பகுத்தறிவுச் சூரியன் உதயமாகி இருப்பதால் ஜனங்கள் கொஞ்சங் கொஞ்சமாக விழித்துக் கொள்ளத் தலைப்படுகிறார்கள். ஆகவே, சாமிகள் இனி அவதாரம் செய்யுமா? சாமிகளுக்கும் ஆபத்து வந்துவிட்டபோது அவதாரத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டியதில்லை.

சுயநலக்கருத்துடன் தங்கள் செல்வாக்கிற்கும் வயிற்றுப் பிழைப்புக்கு மாக அவதாரப் புரட்டுக்களைச் சொல்லி ஒரு கூட்டத்தார் மற்றவர்களை ஏமாற்றுவது அயோக்கியத்தனம்; அவைகளை மற்றவர்கள் நம்புவது முட்டாள்தனம்.

**அவதாரப் புரட்டு அழிக;**
**பகுத்தறிவு வளர்க.**

**உண்மை-14.12.1970**

# 38. தமிழ் எழுத்தாளர் சங்க மாநாட்டுத் தலைமையுரை

### 1963 திசம்பர் 21, 22ஆம் நாட்களில் சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற 11-ஆவது தமிழ் எழுத்தாளர் மாநாடு

மதிப்புக்குரிய அமைச்சர் பெருமான் அவர்களே! வரவேற்புக் குழுத் தலைவர் அவர்களே! பாராட்டுப் பெறுகிற பேரறிஞர்களே! எழுத்தாளர் நண்பர்களே! அறிவும் ஆற்றலும் மிக்க பெரியோர்களே! தாய்மார்களே! அனைவருக்கும் அன்பு கண்லந்த வணக்கம்.

நூற்றுக்கு மேற்பட்ட வெவ்வேறு தாய்மொழிகள் பேசப்படுகிற நமது பாரத நாட்டிலே இலக்கிய வளமுடைய மிகப் பழமையான மொழிகள் இரண்டே இரண்டுதான் உள்ளன. அவ்விரண்டில் ஒன்று தன்னேரிலாத தமிழ்; மற்றொன்று வடமொழி எனப்படும் சமஸ்கிருதம். ஏனைய இந்திய மொழிகள் பிற்காலத்தவை; பழைய இலக்கிய வளம் உள்ளனவும் அல்ல. இந்த உண்மையை நான் புதிதாக இட்டுக் கட்டிச் சொல்லவில்லை. மொழிகளின் வரலாறுகளை ஆராய்ந்து பார்த்த உலகப் பேரறிஞர்கள் கூறும் உண்மை இது. எனவே, தமிழ் மொழி மிகப் பழமையானதும், சிறந்த இலக்கிய வளம் உடையதும், தனக்கெனத் தனிப் பண்பாடுடையதும் ஆன உயர்தனிச் செம்மொழி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இப்படி சொல்வதனாலே பழம் பெருமை பேசிக்கொண்டே காலத்தைக் கழிக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து அன்று. பழைய இலக்கியங் களைப் பெற்றிருப்பதனால் மட்டுமே தமிழ்ச் சமுதாயம் முன்னேறிவிட முடியாது. உலகச் சமுதாயத்தோடு தமிழர் இயைந்து வாழ வேண்டுமானால், மேன்மேலும் உயர்ந்து கொண்டே போக வேண்டுமானால், புதுப் புது இலக்கியங்களையும் காலத்துக்கேற்ப புத்தம் புதிய நூல்களையும் தமிழிலே படைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். பழைய இலக்கியங்களைப் போற்றிப் படிப்பதோடு அமையாமல், புதிய புதிய இக்கியங்களையும்

படித்தால்தான் மக்கள் சமூகம் அறிவு வளம் பெற்று மேன்மேலும் உயர்வடைய முடியும்.

சிலர், பழைய இலக்கியங்களை மட்டும் பாராட்டிப் படித்துக் கொண்டு புதிய இலக்கியங்களைப் படிக்காமலே இருந்து வருகிறார்கள். வேறு சிலர் புதிய இலக்கியங்களை மட்டும் பாராட்டிப் படித்துக் கொண்டு பழைய இலக்கியங்களைக் கண்ணெடுத்துப் பாராமல் இருந்து வருகிறார்கள். இந்த இருவகை நிலையும் மாறவேண்டும். பழைய இலக்கியங்களில் என்ன இருக்கிறது என்று வாய் கூசாமல் பேசுகிறவர்களும் இக்காலத்தில் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் பண்டைய இலக்கியங்களை படித்துப் புரிந்து கொள்ள முடியாதவர்கள்; பழைய இலக்கியங்களின் இனிமையை சுவைக்க முடியாதவர்கள். புதுமை இலக்கியங்கள், பிற்காலத்தில் பழமை இலக்கியங் களாகி விடுகின்றன அல்லவா? மனித சமூகத்தின் எதிர்கால வாழ்க்கை அவர்களுடைய இறந்தகால வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. பாட்டன் பாட்டிமார்களும், பேரன் பேத்திமார்களும் ஆழ்ந்த அன்பும் பற்றும் இருப்பதுபோலவே இலக்கிய உலகத்திலும் சென்றகால இலக்கியத் துக்கும், எதிர்கால இலக்கியத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை மறத்தல் ஆகாது. நல்ல இலக்கியங்களில் பழமை என்பதும் இல்லை, புதுமை என்பதும் இல்லை. அவை அன்றும் இன்றும் என்றும் புதுமையாகவே இருக்கின்றன திருக்குறள். சிந்தாமணி சிலப்பதிகாரம் கம்பராமாயணம் முதலான எத்தனையோ பழைய இலக்கியங்களில் புதுமைகள் இருந்து கொண்டேயிருக்கின்றன. பழைய இலக்கியங்களிலே சுவையில்லையா? அழகு இல்லையா? இன்பம் இல்லையா? சிற்பக் கலைகளையும் ஓவியக் கலைகளையும் இசைக் கலைகளையும் அவை பழமையுள்ளவை என்பது காரணமாக அறிஞர்கள் அவற்றை ஒதுக்கிவிடு கிறார்களா? இல்லையே! அது போலவே பழைய இலக்கியச் செல்வங்களையும் போற்ற வேண்டும். அவற்றில் உள்ள கலையின்பத்தையும் நுகர வேண்டும்.

எழுத்தாளர்களில் சிலர். ஒரு சிலர்தான் பேசுவது போல எழுத வேண்டும் என்று கூறுகிறார்கள். பேசுவது போல எழுத வேண்டும் என்பது நாடக நூல்களுக்குப் பொருந்தும். அந்தந்தப் பாத்திரங்கள் பேசுவது போல எழுதுவதுதான். நாடக நூல்களுக்குச் சிறப்பைத் தரும் ஆனால் நாடகநூல்

அல்லாத ஏனைய நூல்களை பேசுவது போல எழுதவேண்டும் என்றால் அது எவ்வாறு இயலும்? பேச்சுக்கள் பல வகை, அக்கிரகாரத்துப் பிராமணர் பேச்சு. சேரிகளில் வாழும் ஆதித் திராவிடர் பேச்சு குப்பங்களில் வாழும் மீனவர் பேச்சு நாட்டில் வாழும் குறவர் பேச்சு என்று இன்னும் பல விதமான பேச்சுக்கள் உண்டு. அல்லாமலும் நாடுகள், மாவட்டகளிலும் பேச்சுக்கள் வேறுபடுகின்றன. மரபு அறியாமல் பேசுகிற பேச்சுகளும் உண்டு. கனவு கண்டேன் என்பதைக் ''கனவு பார்த்தேன்'' என்றும் துணி தோய், துணியைக் கசக்கு என்பதைத் ''துணியைக் கழுவு' என்றும் கதவைத் திற என்பதைக் 'கதவை அவிழ்த்து விடு என்றும் ''அவன்கி கொடு'' நான்கி சொல்லு' என்றும் பேசுகிறவர்களும் உண்டு. இவையெல்லாம் பேச்சுத் தமிழ் தானே. இப்படியெல்லாம் பேசுவது போல எழுதினால் இலக்கியம் என்னவாகும். பேசுவது போல எழுதுவது என்பது புதிதாகத் தோன்றி வளர்ந்து கொண்டிருக் கிற புத்தம் புதிய பாஷைகளுக்கும் பொருந்துமேயல்லாமல். வளர்ச்சிபெற்ற இலக்கிய வளமுடைய பாஷைகளுக்குச் சிறிதும் பொருந்தாது. இலக்கிய வளமும், இலக்கண அமைதியும், தனக்கென்று ஒரு மரபும் அமைந்துள்ள பாஷைகளுக்கு அது சிறிதும் பொருந்தாது. இக்காலத்தில் தமிழுக்கென்று ஒரு தனிநடை இருந்துவருகிறது. திரிசொல் இல்லாமலும், கொச்சைச்சொல் இல்லாமலும் நல்ல இயற்றமிழ் நடை இன்று உருவடைந்திருக்கிறது. இந்த நடை, பல்வேறு மரபாகப் பேசுகிற எல்லோருக்கும் தெரியும்படி பொதுவாக அமைந்திருக்கிறது. உதாரணம் வேண்டுமானால், திரு.வி.க. அவர்களின் எழுத்து நடையைப் பாருங்கள்.

தமிழில் குவிந்துகிடக்கிற பழைய இலக்கியங்களைப் போற்ற வேண்டிய கடமை ஒருபுறமிருக்க, அதே சமயத்தில் புதிய புதிய இலக்கியங் களையும் உண்டாக்கிக் கொடுக்கவேண்டிய கடமையும் எழுத்தாளர்களுக்கு உண்டு. மக்களுக்குத் தேவையான, அவசியமான புத்தம் புதிய நல்ல இலக்கியங்கள் தோன்றவேண்டும். தமிழ் எழுத்தாளர்கள் (நூலாசிரியர்கள்) இந்தப் பணியைச் செய்துகொண்டு வருகிறார்கள். உயர்ந்த எண்ணங்களையும் நல்ல சிந்தனைகளையும் மேன்மையான பண்பாடு களையும் வளர்க்கக் கூடிய, நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குறிக்கோளாகக் கொண்டுள்ள நூல்களை எழுத்தாளர்கள் எழுதிக்கொண்டு வருகிறார்கள்.

பாரதநாடு சுதந்தரம் பெற்ற பிறகு பாரதநாட்டுப் பல மொழிகளிலும் குறிப்பாக வங்காளி, இந்தி, மராத்தி, குஜராத்தி மொழிகளில், பற்பல துறைகளிலும் புதிய புதிய நூல் வேகமாக வெளிவந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். முக்கியமாக நவீனங்களும், சிறுகதை நூல்களும், கவிதைகளும், காவியங்களும் புதுமை புதுமையாக வெளிவந்து கொண்டுள்ளன. விஞ்ஞான நூல்களும், கலைத்துறை நூல்களும், தொழில்துறை நூல்களும் வெளிவருகின்றன. இவையெல்லாம், பாரத நாட்டிலே புதிய உணர்ச்சியும் வேகமும் ஏற்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்கின்றன. தமிழ்! நாட்டிலும் அத்தகைய ஆர்வங் காணப்பட்டாலும், ஏனைய மொழிகளில் காணப்படுகிற அத்துணை வேகமும் விறுவிறுப்பும் இங்கு இல்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

நவீனங்களும் சிறுகதைகளும் செய்யுள்களும் தமிழ் மொழியில் கணிசமான அளவு வெளிவந்துள்ளன. சிறுவர் இலக்கியங்களும் வளர்ந்து வருகிறது. ஆனால் நாடக நூல்கள் போதுமான அளவு தமிழில் வெளிவரவில்லை. பாரதநாட்டு ஏனைய மொழிகளிலும் மேல்நாட்டு மொழிகளிலும் நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற நல்ல நாடக நூல்கள் வளர்ச்சியடைந்திருப்பது போல, தமிழ் மொழியில் இன்னும் வளர்ச்சியடையவில்லை. திரு. பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின் நாடக நூல்கள் இந்தக் குறையை ஒருவாறு நீக்குகின்றன என்றாலும், புதிய நல்ல நாடக நூல்கள் இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தத் துறையில் தமிழ் எழுத்தாளர்கள் கருத்தைச் செலுத்த வேண்டும்.

ஓரங்க நாடக நூல்களும் தமிழில் இப்போது தலைகாட்டுகின்றன. வானொலி நிகழ்ச்சிகளில் ஓரங்க நாடகங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறபடியால் இத்துறையில் பல புதிய நூல்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம். சரித்திர நாவல்கள் சரித்திரக் கதைகளுங்கூட தமிழில் வெளிவந்துள்ளன. அவற்றின் தரம் இன்னும் உயர வேண்டும். சரித்திர நிகழ்ச்சியை நன்கறியாதவர்கள் தவறான செய்திகளையும் சரித்திரம் என்று கருதிக்கொண்டு சரித்திர நவீனங்களையும் கதைகளையும் எழுதுகிறார்கள். சரித்திர நாவல்கள் சரித்திர ஆதாரங்களைக் கொண்ட அந்தந்தக் காலத்து நடையுடை பாவனைகளை அமைத்து எழுதப்படவேண்டும். இந்தத் துறையிலும் தரமான நூல்கள் வெளிவரவேண்டும்.

வாழ்க்கை வரலாறுகளும் தமிழில் குறைவுதான். மற்றப் பாரத மொழிகளில் 'ஆத்மகதா' என்னும் பெயரில் வாழ்க்கை வரலாறுகள் பல வெளிவந்துகொண்டிருக்கின்றன. தமிழ் எழுத்தாளர்கள் இத்துறையிலும் நூல்கள் இயற்றவேண்டும்.

அங்கத நூல்கள் தமிழிலும் மற்ற இந்திய மொழிகளிலும் இல்லையென்றே சொல்லவேண்டும். சமுதாயத்திலும் ஆட்சித்துறையிலும் காணப்படும் குறைபாடுகளையும் குற்றங்களையும் மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ மனம் புண்படாத துறையில் அங்கத நூல்களை எழுதுவது நாட்டுக்கு நல்ல தொண்டு செய்வதாகும். அரசாங்கத்தாரே தீய பழக்கங்களை ஒழிக்க முற்பட்டிருக்கிற இந்தக் காலத்தில் இத்தகைய நூல்களை எழுதுவது அரசாங்கத்தாருக்கு துணைபுரிவதாகும்.

அங்கதம் என்பது அபவாதங்களையும். அவமானப்படுத்துவதையும் கருத்தாகக் கொண்டது அல்ல. குற்றங் குறைபாடுகளைச் செம்மையான நல்ல முறையில் எடுத்துக்காட்டி (நாவல்களையும் சிறுகதைகளையும்) எழுதுவதாகும். அங்கதக் கவிதைகளையும் எழுதலாம். அங்கத நூல்கள் எழுதுவது நாட்டு மக்களுக்குப் புரியும் நல்ல தொண்டாகும்.

கலைக்களஞ்சியம் என்னும் சிறந்த நூலை (அதில் சில குறைபாடுகள் இருந்த போதிலும்). தமிழ் வளர்ச்சிக் கழகத்தார். மத்திய மாநில அரசாங்கத்தாரின் உதவி பெற்று எட்டுத் தொகுதிகளாகத் தொகுத்து வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சியையும் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். கலைக்களஞ்சிய அலுவலகம் நிரந்தரமான அமைப்பாக இருந்து இது போன்ற பணியைப் புரியவேண்டும் என்பது எமது விருப்பம். சிறுவர் கலைக்களங்சியம் ஒன்றையும் அவர்களே வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்திய சாகித்திய அக்காடமி என்னும் நிலையம் பதினான்கு இந்திய மொழிகளில் வெளிவருகிற சிறந்த நூல்களுக்கு ஆண்டு தோறும் 5000ரூபாய்ப் பரிசு வழங்கி பாரத நாட்டு எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தி வருவது பற்றி நம்முடைய மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். பரிசு பெறத்தகுந்த நல்ல நூல்கள் தமிழில் வெளிவந்துகூட சில சமயங்களில்

அவை அக்காடமியார் பார்வையில் படாமலும் பரிசு வழங்கப்படாமலும் இருப்பதைக் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்தக் குறையை அகடாமியின் மீது நாம் சுமத்த விரும்பவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள அது சம்மந்தப்பட்டவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம். அரசாங்கத்தார் நாடெங்கும் நூல் நிலையங்களை அமைத்திருப்பது மட்டும் அல்லாமல் அந்நூல் நிலையங்களில். நல்ல உபயோகமுள்ள நூல்களை வாங்க வைக்கப் பொருள் உதவியும் செய்து வருகிறார்கள். இந்த நல்ல காரியத்துக்காக அரசாங்கத்தாருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நூல் நிலையங்களில் பெரும்பாலனவற்றில் காணப்படுகிற குறைப்பாட்டையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். நல்ல முதல் தரமான நூல்கள் இந்நூல் நிலையங்களில் இடம்பெற வேண்டியிருக்க அதற்குமாறாக இரண்டாந்தர மூன்றாந்தர நூல்களே அதிகமாக இடம் பெற்றுள்ளன.

இதனால் நூல் நிலையங்கள் எந்த நோக்கத்தோடு நிறுவப்பட்டனவோ அந்த நல்ல நோக்கம் வீணாகிப் போகிறது. நூல் நிலையங்களுக்குப் புத்தகங்கள் வாங்குவது பற்றியும் புகார்கள் கூறப்படுவது 'பகிரங்க இரகசியம்' இந்தக் குறைப்பாடுகளை அரசாங்கத்தார் உடனடியாக நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பாரத நாடு பல பாஷைகள் பேசப்படுகிற பெரிய நாடு இப்பாஷைகளில் பதினான்கு மொழிகளை அரசாங்கத்தார் அங்கீகரித்திருக்கிறார்கள். மாகாணங்களும் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மொழி வேறுபாட்டினாலே நாட்டின் முன்னேற்றம் வேகமாகச் செல்லாமல் தடைப்படுகிறது. பாரத நாட்டின் ஒருமைப்பாட்டைப் பற்றியும் ஒற்றுமையயைப் பற்றியும் அரசாங்கத்தாரும் அடிக்கடி பேசி வருகிறார்கள். சுதந்திரம் பெற்ற பாரத நாட்டிலே ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதற்கு அதிக வாய்ப்புப் பெற்றவர்கள் எழுத்தாளர்கள் தான்.

பதினான்கு பாஷை எழுத்தாளர்களும் ஒன்றுகூடி. ஒருவருக்கொருவர் கலந்து பழகிப் பேசி ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்துகொண்டு நூல் எழுதி நாட்டுக்கு நன்மை புரிய வேண்டும். மத்திய அரசாங்கத்தார் அகில இந்திய

எழுத்தாளர்கள் மாநாட்டைக் காட்டி பாரதநாட்டின் வெவ்வேறு மொழி எழுத்தார்களையும் ஒருமித்துச் சேர்த்து பழக வாய்ப்பளித்துள்ளார்கள். இது எழுத்தாளர்களுக்கு மிகுந்த நன்மையைச் செய்து வருகிறது. இந்த அகில இந்திய எழுத்தாளர் மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடுகிறது. இதனை ஆண்டுக்கு ஒரு முறை கூடும்படி அமைக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறோம். முதலில் எழுத்தாளர்களுக் குள்ளே ஒருமைப்பாடும், ஒற்றுமையும் ஏற்பட வேண்டும். இதற்குக் குறைந்தது ஒரு ஆண்டுக்கு ஒரு முறையாவது அகில இந்திய எழுத்தாளர் மாநாடு கூடவேண்டும்.

நாட்டில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் உண்டாக்கக் கூடிய நூல்களை எழுத வேண்டுமானால், பாரத நாட்டுப் பல மொழி எழுத்தாளர் களும் பாரத நாட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டும். கிணற்றுத் தவளைகளைப் போல எழுத்தாளர்கள் இருந்தால் நாட்டின் வளப்பம் அவர்களுக்கு எப்படித் தெரியும்? எழுத்தாளர்கள் பாரத நாட்டைச் சுற்றிப் பார்த்து நாட்டின் நிலைமையையும் இயல்பையும் அறிந்து கொள்ள அரசாங்கத்தார் அவர் களுக்குப் பிரயாணச் செலவில் சலுகை காட்ட வேண்டும். வெளிநாடுகளிலே எழுத்தாளர்களுக்கு அந்தந்த நாட்டு அரசாங்கத்தார் இந்த உதவியைச் செய்து வருகிறார்கள். நமது பாரத நாட்டு அரசாங்கத்தாரும் பாரத நாட்டு எழுத்தாளர்களுக்குப் பிரயாணச் சலுகை உதவியைச் செய்துதர வேண்டும். பாடகர்கள், நாடகக் குழுவினர்களுக்கு இந்த வசதிகள் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டு வருகின்றன. நூல்களை எழுதும் எழுத்தாளர்களுக்கும் இந்த வசதிகளைச் செய்து கொடுக்குமாறு மத்திய மாநில அரசாட்சியாளரைக் கேட்டுக்கொள்கிறோம். அன்றியும், பாரத நாட்டு எழுத்தாளர்கள் குறைந்த செலவில் தங்குவதற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் தங்கும் இடங்களை அமைத்துக் கொடுத்து, எழுத்தாளர்களுக்கு உதவி புரியுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நம் எழுத்தாளர் சங்கம் ஏற்பட்டு இப்போது பதினோராண்டுகள் ஆகின்றன. பாரதநாட்டின் பல பாகங்களில் இருக்கும் எழுத்தாளர்கள் நமது சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்து வருகிறார்கள் எழுத்தாளர்களின் நலத்தைப் பாதுகாத்து எழுத்தாளர் சமூகத்தை உயரச் செய்வதே நமது சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். நமது சங்கம் எந்த அரசியல் கட்சிச்

சார்புடையதும் அல்ல. தனிப்பட்ட முறையில் எழுத்தாளர்கள் எந்தக் கட்சியையாவது சார்ந்திருக்கலாம். ஆனால், நமது சங்கத்தைப் பொறுத்த வரையில், அரசியல், மதம், சாதி, இனம் முதலிய எந்தச் சார்பும் இல்லை என்பதை வற்புறுத்திக் கூறுகிறோம்.

தமிழ் நாட்டில் இலக்கியத் துறையில் தொண்டாற்றிய சிறந்த தமிழறிஞர்களுக்கும், தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் பெயர்த்துத் தொண்டாற்றிய அறிஞர்களுக்கும் நமது சங்கம் கேடயங்களும் பதக்கங் களும் வழங்கிப் பாராட்டி வருகிறது. இது வரையில் அவ்விதப் பெரியார்கள் முப்பதுபேரைப் பாராட்டியுள்ளது. அதுபோலவே இன்று நான்கு அறிஞர் களைப் பாராட்ட இங்குக் கூடியுள்ளோம்.

பொருளாதார முட்டுப் பாட்டினால் துன்புறுகிற எழுத்தாளர் அங்கத்தினர்களுக்கு நமது சங்கம் மிகச் சிறு அளவு உதவி செய்து வருகிறது. அதற்கென்று மிகச் சிறு நிதியே இருப்பதனால், இது வரையில் ரூபா 3000 வரையில் சிறு சிறு தொகையாகச் சில எழுத்தாளர் அன்பர்களுக்கு உதவியுள்ளோம். சிறு தொகையாக இருந்த போதிலும், காலத்தினாற் செய்த அது அவர்களுக்குப் பேருதவியாகவே இருந்திருக்கிறது. இந்த நிதியை அதிகமாக்கி மேன்மேலும் தகுந்த அன்பர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது சங்கத்தின் ஆசை. இதற்காகக் காசுள்ளவர் காசுகொடுத்தும், நிதி யுள்ளவர் நிதி கொடுத்தும் உதவி புரியுமாறு நன்மனம் உள்ளவர்களை வேண்டிக் கொள்கிறோம்.

நமது சங்கத்தின் 'பாரதி' வெளியீடு இந்த ஆண்டில், பொருள் முட்டுப்பாட்டுக் காரணமாக வெளிவர வில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் 'பாரதி' ஆண்டு மலர் சிறந்த முறையில் வெளி வந்துள்ளது அடுத்த ஆண்டில் 'பாரதி' வெளியீடு தொடர்ந்து நடக்கு மென்று நம்புகிறோம்.

பதினோராண்டாகியும் நமது சங்கத்துக்கு ஒரு கட்டடம் இன்னும் அமையவில்லை. நமது சங்கத்துக்கு ஒரு கட்டடம் அமைந்தால், அதில் சங்கமும் புத்தகசாலையும் இருக்க வசதி ஏற்படுவதோடு, வெளியூர் அங்கத் தினர்கள் வந்து தங்குவதற்கும் உதவியாக இருக்கும். இந்தத் துறையிலும் முயற்சி செய்ய வேண்டியது சங்கத்தின் கடமையாகும்.

கடைசியாக ஒரு வேண்டுகோள். எழுத்தாளர் நண்பர்களே! நூலாசிரியர்களே! நமக்கு ஆற்றலையும் பலத்தையும் தரக்கூடியது நமது சங்கம். நமது சங்கத்தின் வளர்ச்சி எழுத்தாளரின் வளர்ச்சியாகும். ஒற்றுமையும் ஒருமைப்பாடும் இருந்தால் நாம் மேன்மையடையலாம். எழுத்தாளர்கள் அனைவரையும் நமது சங்கத்தில் அங்கத்தினரரகச் சேரும்படி கேட்டுக் கொள்கிறேன். கதைகள், கவிதைகள், நவீனங்கள் முதலிய எந்தவகையான நூல்களையும் எழுதியவர்கள் நமது சங்கத்தில் அங்கத்தினராகச் சேரத் தகுதியுள்ளவர்கள். ஆகவே, எழுத்தாளர்களே, நூலாசிரியர்களே! சேர வாருங்கள்!

**"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"**

என்னும் பாரதியின் திருவாக்கு வழிகாட்டுவதாக. வாழ்க எழுத்தாளர்! வாழ்க எழுத்தாளர் சங்கம்! வளர்க நல்ல இலக்கியங்கள்!

**- பாரதி மாநாட்டு மலர், தமிழ் எழுத்தாளர் சங்கம் 1964**

# 39. இயற்கைப் பொருணூற்

## கடலின் ஒரு சிறு துளி

### தாவரங்கள் இல்லாவிட்டால் பிராணிகள் உயிர் வாழ முடியுமா?

இவ்வுலகப் பரப்பில் காணப்படும் செடி கொடி முதலிய தாவரப் பொருள்களைப் பார்க்கிலும்! அங்கு மிங்கும் அசைந்து திரியும் உயிர்ப் பிராணிகள்தான் மக்களின் மனதைக் கவரும் தன்மை வாய்ந்துள்ளன. ஆகாயத்தில் அங்குமிங்கும் பறந்து செல்லும் ஒரு சிறு தும்பி அல்லது தண்ணீரில் நீந்தித் திரியும் ஒரு சிறு மீன் குஞ்சு ஆகிய இவை மக்கள் கருத்தினைக் கவர்வது போல, செயலற்று ஒரே இடத்தில் தங்கி நிற்கும் தாவரங்கள் நமது கருத்தினைக் கவர்வதில்லை. ஜீவ உலகத்தில், இயங்கி உயிர்வாழும் பிராணிகளைவிட நிலைத்து உயிர்வாழும் தாவரங்கள் மிகவும் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவை என்று 'உயிர்நூற் புலவர்களும்

உரைக்கிறார்கள். நிலைத்து வாழும் தாவரங்களுக்கும் இயங்கி வாழும் பிராணிகளுக்கும் ''உயிர்'' இருக்கிறதென்றாலும் இரண்டிற்கும் எத்துணையோ ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றதும் உண்மைதான். என்றாலும், மிகத் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த தாவரங்களில்லாவிட்டால் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த இயங்கி வாழும் உயிர்ப் பிராணிகள் உலகத்தில் உயிர் பிழைத்திருக்க முடியுமா என்பதே நாம் இங்கு வினாவும் வினாவாகும்.

தாவரப் பொருள்கள் இருப்பதினாலே தான் மிருகம் பறவை மனிதர் முதலிய இயங்கி வாழும் பிராணிகள் உலகத்தில் நிலை பெற்றிருக்கின்றன வென்றும் தாவர உலகம் இல்லாவிட்டால் ஏனைய இயங்கி வாழும் பிராணி உலகம் அழிந்து போய்விடுமென்றும் ஆராய்ச்சி வல்ல அறிவு சான்ற இயற்கைநூற் புலவர்கள் உரைக்கிறார்கள். இப்பொழுது கூட இவ்வுலகப் பரப்பிலுள்ள எல்லாத் தாவரங்களும் அழித்து மடிந்துவிடுவோமானால் அல்லது (அவற்றில் ஒரு சிறு செடி கூட இல்லாமல்) அழித்துவிடுவோமானால் மனிதர்களாகிய நாமும் ஏனைய பறவை விலங்கு முதலிய எல்லாப் பிராணிகளும் இறந்தொழிந்து விடுவோம். அதாவது, தாவர உலகம் இல்லாவிடில் இயங்கி வாழும் பிராணி உலகம் நிலை பெற்றிராது. உயிருள்ள பொருள்களில் மிகத் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த ஓரறிவுடைய செடி கொடிகளின் உதவியை நாடியே உயர்ந்த இனத்தைச் சேர்ந்த உயிர்ப் பிராணிகள் உலகத்தில் உயிர் 'வாழ்ந்து' வருகின்றனவென்றால் இது அதிசயப்படத் தக்கதே.

''என்னை! சிங்கம் புலிகளும் கழுகு பருந்துகளும் இன்னும் எத்தனையோ ஜீவராசிகள் எல்லாம் மாமிச உணவை உண்டு உயிர் வாழ்கின்றனவே. உலகத்தில் பெரும் பாலும் மனிதர் உண்டு வருவதும் மாமிச உணவாகவேயிருக்கிறது. அங்ஙனமாகத் தாவரங்களில்லாவிடில் உலகத்தில் உயிரே நிலைக்காது என்று சொல்வது பொருந்தாது.'' என்று சிலர் கேட்கக் கூடும். இக்கேள்விக்கு விடையிறுக்க வேண்டுமானால், தாவரங்களில்லாமல் எந்த உயிரும் உலகத்தில் நிலைத்திருக்க முடியாது என்பதையே மீண்டும் வற்புறுத்திச் சொல்ல வேண்டும். மனிதர்களில் பெரும்பான்மையோரும் அநேக பறவை மிருகங்களும் மாமிச ஆகாரத்தை யுண்டே உயிர் வாழ்கின்றன என்பது உண்மையே. இப்போது மாமிச ஆகாரத்தை யுண்டு உயிர்வாழும் பிராணிகள் மாத்திரமல்ல, உலகத்திலுள்ள இயங்கிவாழும்

ஜீவராசிகள் எல்லாம் இதுமுதல் மாமிச உணவையே உண்டு உயிர் வாழத்தொடங்கினாலும் கூட, தாவரங்கள் இல்லாவிடில் அவை உயிர் வாழ்ந்திருக்கவே முடியாது! அதாவது, எல்லா ஜீவராசிகளும் புலாலுண வையே உண்ணப் புகுந்தாலும் கூட அவைகளுக்கெல்லாம் மாமிசத்தை உதவும் தாய் தாவரங்களேயாகும். மாமிசம் எங்கிருந்து கிடைக்கிறது? ஆடு மாடு முதலிய பிராணிகளிடத்திலிருந்தே மாமிசத்தை பெற வேண்டியிருக் கிறது. ஆடு மாடுகளோ புற் பூண்டுகளையும் இலை தழைகளையும் உண்டு உடல் வளர்க்கின்றன. மாமிசத்தையுதவும் ஆடுமாடுகள் தாவரங்களையும் உண்டு உயிர்வாழ வேண்டியிருக்கின்றது அதாவது தாவரங்கள் தசையாக (மாமிசமாக) உருவடைந்து ஏனைய பிராணிகளுக்கு ஆகாரமாக உதவுகின்றன. இதனால்தான், மாமிசம் புசித்து வாழும் பிராணிகளும் தாவரங்களை யுண்டுவாழும் பிராணிகளும் செடி கொடியாகிய ஓரறிவு உயிர்களின் உதவியை நாடியே உயிர் வாழ்கின்றன வென்றும் தாவரம் இல்லாவிட்டால் உலகத்தில் அவை(பிராணிகள்) உயிர் வாழ முடியா தென்றும் தெள்ளெனத் தெளியும் வண்ணம் உயிர்நூற் புலவர்கள் உணர்த்துகிறார்கள்.

* * * * *

## பிற ஜீவப் பிராணிகளின் உதவியின்றித் தாவரங்கள் உயிர் வாழக் கூடுமா?

ஓரறிவுடைய தாவரங்களின் உதவியில்லாமல் ஏனைய உயர் வகுப்புப் பிராணிகள் உலகத்தில் நிலை பெற முடியாதென்பதை மேலே கண்டோம். ஆனால், ஏனைய உயர் வகுப்புப் பிராணிகளின் உதவியில்லாமலே தாவரங்கள் உலகத்தில் உயிர் பிழைத்திருக்க கூடுமா? என்ற கேள்விக்கு விடை என்ன? உலகத்தில் இயங்கித் திரிந்து வாழும் உயிர்ப் பிராணிகள் தோன்றுவதற்கு முன்னே, முதன் முதலாகத் தோன்றிய உயிருள்ள பொருள் செடி கொடி மரங்களாகிய தாவரப் பொருள்கள் தானென்றும், தாவரங்கள் தோன்றிய பிறகு தான் ஏனைய பிராணிகள் உலகத்தில் உதித்தனவென்றும், உலகத்தில் இயங்கும் பிராணிகள் எல்லாம் அழிந்துவிட்டாலும் கூடத்தாவர உலகம் அழியாமல் செழிப்புடன் வாழ்ந்திருக்குமென்றும் இயற்கைப் பொருணூலுணர்ந்த அறிவாளிகள் அறிவிக்கிறார்கள். அன்றியும், தாவரங்

களுக்கும் ஏனைய பிராணிகளுக்கும் இன்னொரு மாறுபாடு காணப்படுகின்றது. அதாவது மற்றப் பிராணிகளைப் போலவே தாவரங்களும் வாயுவை உட்கொள்கின்றன; உணவையும் ஏற்றுக் கொள்கின்றன. ஆயினும், தாவரங்கள் உண்ணும் உணவுக்கும் ஏனைய பிராணிகள் உண்ணும் உணவுக்கும் பெரிய தோர் வித்தியாசமுண்டு. அவ்வேறுபாடு என்னவெனில் தாவரங்கள் ''இயற்கை''ப் பொருளையே உணவாக உட்கொண்டு உயிர் வாழ்கின்றன; மற்றப் பிராணிகளோ தாவர உணவை (அல்லது தாவரங்களின் மூலமாய் தயாரிக்கப்பட்ட உணவுகளை) உண்டு உயிர் வாழ்கின்றன. அதாவது சுவாசிக்க நல்ல காற்றும் பருக நல்ல தண்ணீரும் உலகத்தில் வேண்டிய மட்டும் கிடைக்கின்றவாயினும் இவற்றை மாத்திரம் உட்கொண்டு பிராணிகளால் உயிர் வாழ முடிகிறதில்லை; காற்றையும் தண்ணீரையும் தவிர தாவரங்களால் தயாரிக்கப்பட்ட வேறே ஆதாரமும் அவைகளுக்கு வேண்டியிருக்கிறது. ஆனால், செடி கொடிகளாகிய தாவரங்களுக்கு இத்தகைய உணவு வேண்டியதில்லை. பூமியில் இயற்கையாக உள்ள தண்ணீர் வெளிச்சம் ஆகாயம் முதலிய இயற்கைப் பொருள்களைக் கொண்டே தாவரங்கள் உயிர் பிழைத்து வருகின்றன. அதாவது கடவுளால் கொடுக்கப்பட்ட பஞ்ச பூதங்களைக் கொண்டே தாவரங்கள் உயிர் பிழைத்து வருகின்றன. மற்றப் பிராணிகள் பஞ்ச பூதங்களைக் கொண்டு மாத்திரம் உயிர் வாழ மாட்டா. இதனால்தான், மிருகம் பறவை மனிதர் முதலிய எல்லாப் பிராணிகளும் அழிந்துவிட்டாலும்கூடத் தாவரங்கள் மாத்திரம் பூமியிலிருந்து தண்ணீரையும் ஆகாரத்தையும் உட்கொண்டு காற்றையும் வெளிச்சத்தையும் பெற்று அழியாமல் நிலைத்து நிற்கக் கூடும் என்று உயிர் நூற் புலவர் உரைக்கிறார்கள்.

* * * * *

## விதைகள் சுவாசிக்கின்றனவா?

உலகத்திலுள்ள உயிருள்ள பொருள்களெல்லாம் வாயுவை சுவாசிக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம். செடி கொடி மரங்களாகிய தாவரங்களின் வித்துக்களும் பறவைகளின் முட்டைகளும் கூடப் பிராண வாயுவை உட்கொண்டுதான் உயிருடன் நிலைத்திருக்கின்றன வென்று இயற்கைப் பொருணூற் புலவோர் புகழ்கின்றனர். முட்டைகளுக்கும் விதைகளுக்கும் ''உயிர்'' இருக்கிறதா? அவை உயிருள்ள பொருள்கள் தானா

என்று ஐயங் கொள்ள வேண்டாம். அவை உயிருள்ள பொருள்களே. அவைகளுக்கு ''உயிர்'' இல்லைவிட்டால் முட்டைகளினின்றும் செடிகள் முளைக்கமாட்டா. ஒரு முட்டையை எடுத்து அதன் ஓடு முழுமையும் மறையும்படி ''வார்னீஷ்'' என்னும் தைலத்தைப் பூசி விடுவோமானால், அந்த முட்டை யோட்டிலுள்ள கண்ணுக்குப் புலப்படாத நுண்மையான துவாரங்கள் அடையுண்டு போய் விட, அம்முட்டையானது ஆகாயத்திலுள்ள பிராண வாயுவை உட்கொள்ள முடியாமல் இறந்துவிடுகிறது. அது வாயுவை உட்கொள்ள முடியாமல் இறந்துவிட்டதென்பதை எவ்வாறு அறியலாம் என்றால் ''வார்னீஷ்'' பூசப் பெற்ற அந்த முட்டையை ''அவயம்'' வைத்துக் குஞ்சு பொறிக்கச் செய்வோமானால் அம்முட்டையிலிருந்து ஒரு போதும் குஞ்சு வெளிப்படுகிறதில்லை. ஆகவே அம்முட்டை இறந்து விட்டதென்று அறிந்து கொள்கிறோம். இவ்விதமே தான் வித்துக்களும், விதைகளை பூமியில் ஆழமாக நடக்கூடாதென்று உலகத்தில் சொல்வதையும் நாம் கேட்டிருக்கிறோம். ஆழமாக நடப்பட்ட வித்துக்கள் முளையாமல் அழுகிப் போய் விடுகிறதையும் நாம் கண்டிருக்கிறோம். காரணம் என்னவென்றால் ஆழமாக நடப்பட்ட விதைகள் பிராண வாயுவை உட்கொள்ள முடியாமல் இறந்து விடுகின்றன.

''மண்ணுள் மறைந்து வாழும் நாகப் பூச்சி முதலிய பிராணிகளும் வாயுவை சுவாசித்துத் தானா உயிர் வாழ்கின்றன?'' என்று சிலர் வினாவலாம். ஆம். மண்ணுள் மறைந்து வாழும் எல்லாப் பூச்சிகளும் காற்றைச் சுவாசித்துத் தான் பிழைத்திருக்கின்றன. மண்ணில் கலந்துள்ள குறைந்த அளவான பிராண வாயு அவை சுவாசித்து உயிர் வாழ்வதற்குப் போதுமானதாயிருக்கிறது.

### மீன்கள் நிலத்தில் வசிக்க முடியாத தேன்?

எல்லாப் பிராணிகளும் வாயுவை சுவாசித்துத் தான் உயிர் வாழ வேண்டும்; இல்லையானால் அவை இறந்துவிடும் என்று மேலே அறிந்தோம். தண்ணீரில் வாழும் மீன்களும் வாயுவைச் சுவாசித்துத் தான் உயிர் பிழைத்திருக்கின்றன. நீருடன் கலந்துள்ள ஆகாயத்தை நீரினின்று பிரித்தெடுத்து உட்கொண்டு அவை ஜீவிக்கின்றன. இவ்விதம் பிராண வாயுவையுட்கொண்டு உயிர் வாழும் மீன்கள் தண்ணீரை விட்டு வெளியே வருமானால் (சுவாசிப்பதற்கு வேண்டிய மட்டும் பிராண வாயு இருந்துங்கூட) அவை இறந்து விடுகின்றன. அவ்விதந்தானே, நிலத்தில் வாழும் பிராணிகள் தண்ணீரில் மூழ்கிவிட்டால் (சுவாசிப்பதற்கேற்ற பிராண வாயு தண்ணீருடன்

கலந்திருந்துங் கூட) அவை தண்ணீரில் சுவாசிக்க முடியாமல் இறந்துவிடு கின்றன என்றாலும் நீர் வாழும் மீன்களும் நிலம் வாழும் பிராணிகளும் சுவாசிக்கும் பொருள் பிராண வாயு தான். அப்பிராண வாயு நீருடனும் நீருக்கு வெளியிலும் வேண்டிய அளவு இருக்கிறதென்றாலும் அதே பிராண வாயுவை சுவாசிக்கும் மீன்கள் கரையிலும் தரை வாழ் பிராணிகள் தண்ணீரிலும் சுவாசித்து உயிர் வாழ முடியாமல் இறந்துவிடுகின்றனவே. இதன் காரணம் என்ன?

நிலத்தில் வாழும் பிராணிகள் பிராண வாயுவை உட்கொள்வதற்குச் "சுவாசப் பை" அல்லது "நுரையீரல்" என்னும் உறுப்பு கடவுளால் அளிக்கப் பட்டிருக்கிறது. இந்த நுரையீரலின் உதவியினால்தான் நிலம் வாழ் பிராணி கள் வாயுவை சுவாசித்து உயிர் வாழ்கின்றன. நீரில் வாழும் மீன்களுக்கோ வென்றால், நிலத்தில் வாழும் பிராணிகளுக்கிருப்பது போன்ற "சுவாசப்பை" இல்லை. ஆனால், நீருடன் கலந்திருக்கும் வாயுவை நீரிலிருந்து பிரித் தெடுத்து அந்த வாயுவையுட்கொண்டு அவை உயிர் வாழ வேண்டியிருக்கிற படியால், தண்ணீரிலிருந்து வாயுவைப் பிரித்தெடுப்பதற்கு ஏற்றதாயுள்ள (Gills) என்னும் உறுப்பு இவைகளுக்கு அமைந்திருக்கிறது. அதாவது, நிலத்தில் வாழும் பிராணிகள் நேரே வாயுவைச் சுவாசிக்கின்றன, நீர் வாழும் மீன்கள் வாயுவைத் தண்ணீரிலிருந்து பிரித்தெடுத்து சுவாசிக்கின்றன. எனவே, நிலம் வாழ் பிராணிகளுக்கு வாயுவை நீரினின்று பிரித்தெடுக்கும் உறுப்பு (Gills) இல்லை; எனவே நீர் வாழ் பிராணிகளுக்குக் காற்றை நேரே சுவாசிக்கும் "நுரையீரல்" என்னும் உறுப்பு இல்லை. ஆகவே, மீன்கள் வெளியே வந்தால் காற்றை நேரே சுவாசிக்க முடியாமல் இறந்து விடுகின்றன; நிலம் வாழ் பிராணிகள் தண்ணீரில் மூழ்கிவிட்டால் காற்றைத் தண்ணீரி லிருந்து பிரித்தெடுத்துச் சுவைக்க முடியாமல் இறந்து விடுகின்றன. மீன்களுக் குள்ள சுவாச உறுப்பு (Gills) நிலம் வாழும் பிராணிகளுக்கிருக்கு மானால் அவை தண்ணீருக்குள்ளும் சாகாமல் பிழைத்திருக்கக் கூடும். நிலம் வாழும் பிராணிகளுக்குள்ள நுரையீரல் நீர் வாழ் பிராணிகளுக்கிருக்கு மானால் அவை நிலத்திலும் (தண்ணீருக்கு வெளியே) உயிர் பிழைத்திருக்கும்.

**ஒலியும் ஒளியும்**

ஓசை அல்லது ஒலி என்பது ஆகாயத்தில் உண்டாகிற ஒருவித அலையாகும். வெளிச்சம் அல்லது ஒளி என்பது (ஈதர் என்று சொல்லப்படு

கிறதும் ஆகாயப் பரப்பு முழுவதிலும் பரந்துள்ளதுமான) ஒருவித நுண்ணிய அணுத்திரளில் உண்டாகும் அலையாகும். ஒரு குளத்தில் கல்லைப் போடுவோமானால் விழுந்த விடத்திலிருந்து அலைகள் தோன்றி நாற்புறமும் பரந்து செல்வதைக் கண்டிருக்கிறோம். இவ்விதம் நீரில் அலை உண்டாவது போலவே ஆகாயப் பரப்பில் ஒலி (ஓசை) அலைகள் உண்டாகின்றன. ஈதர் என்னும் ஆகாய நுண் அணுப்பரப்பில் ஒளி (வெளிச்சம்) அலைகள் உண்டாகின்றன. நாம் பேசும் போது, அல்லது கையைத் தட்டும் போது உண்டாகிற ஓசையானது ஆகாயத்தைத் தாக்க அவ்விடத்திலிருந்து ஒலி அலைகள் உண்டாகின்றன. அவ்விதம் உண்டான ஒலியலை நாற்புறமும் பரந்து சென்று அருகிலுள்ள மனிதரின் செவிக்குள் புகுந்து அதனுள்ளிருக்கும் நுண்ணிய ஜவ்வின் மேல் தாக்க, அவ்விதம் தாக்கிய ஒலியை "ஒலி நரம்புகள்" மூளைக்குத் தெரிவிக்க மூளையானது இன்ன ஓசை இன்ன விடத்தில் உண்டாயிற்றென்றும் அதன் பொருள் இன்னதென்றும் அறிந்து கொள்கிறது. இவ்விதமே தான் ஈதர் என்னும் நுண் அணுப்பரப்பில் ஒளி அலைகள் உண்டாகிக் கட் புலனில் தாக்க நாம் வெளிச்சத்தையுணர்கிறோம். இங்ஙனம் அந்தரத்தில் பிரயாணம் செய்யும் ஒலியலை ஒளியலைகளில் முன்னது மெதுவாகவும் பின்னது வெகு துரிதமாகவும் செல்கின்றது. அதாவது ஒலியலையானது மிக மெதுவாக (ஒரு நிமிஷத்தில் சில நூறு அடி தூரந்தான்) சஞ்சரிக்கிறது. ஒளியலையோ (ஒரு நிமிஷத்தில் 1800 மைல் தூரம்) மிக விரைவாகப் பிரயாணம் செய்கிறது.

ஒரு பீரங்கி சுட்டால் அதிலிருந்து ஒலியும் ஒளியும் ஒரே காலத்தில் உண்டாக்கின்றன. அச்சமயம், பீரங்கியின் அருகிலிருக்கும் ஒருவன் ஒரே சமயத்தில் ஒளியைக் காண்கிறான்; ஒலியைக் கேட்கிறான். ஆனால், வெகு தூரத்திலுள்ள ஒரு மனிதன் பீரங்கி வெடிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பனானால் முதலில் அவன் வெளிச்சம் உண்டாவதைக் காண்கிறான்; சில நிமிஷங்களுக்குப் பிறகு தான் வெடியோசையைக் கேட்கிறான். அருகிலிருந்த மனிதனுக்கு ஒரே நேரத்தில் வெடியும் (ஓசை) ஒளியும் (வெளிச்சமும், புலனாயிற்று; வெகு தூரத்திலிருந்தவனுக்கோ என்றால் முதலில் வெளிச்சம் காணப்பட்டுச் சில நிமிஷங்களுக்குப் பின்னர் வெடியோசையும் கேட்கிறது. காரணம் மேலே சொல்லியது தான். அதாவது ஒளியலைகள் வேகமாகச் செல்கின்றன; ஒலியலைகள் மிக மெதுவாகச் செல்கின்றன. இடிமின்னல் உண்டாகும் போதும் இதனைத் தெளிவாகக் காணலாம். வானத்தில் இரண்டு

மேகங்கள் உராய்ந்து கொள்ளும் போது ஆகாயத்திலுள்ள மின்சாரத்தின் இயக்கத்தினால் ஒளி அல்லது மின்னல் உண்டாகிறது. இப்படியுண்டாகும் மின்னலின் கூடவே உஷ்ணம் உண்டா கிறது. மின்னலுடன் தோன்றிய இந்த உஷ்ணம் அருகிலுள்ள வாயுவை அப்பால் தள்ளுகிறது. அப்படி அதி வேகத்தோடு தள்ளுண்ட பெரிய ஆகாய அலையைத் தான் நாம் இடி என்று சொல்லுகிறோம். ஆனாலும், ஒரே காலத்தில் ஆகாயத்தில் தோன்றும் இந்த இடி மின்னல்களை நாம் ஏக காலத்தில் உணர்ந்து கொள்ளுகிறதில்லை. முதலில் மின் ஒளியைக் காண்கிறோம்; அது கண்ட சில நிமிஷங்களுக்குப் பிறகு தான் இடியோசைக் கேட்கிறோம். எனவே, ஒளியலைகள் விரை வாகவும் ஒலியலைகள் மெதுவாகவும் ஆகாயத்தில் பிரயாணம் செய்கின்றன என்பதை இதனால் நன்குணரலாம்.

* * * * *

## எதிரொலி என்பதென்ன?

ஒலி அல்லது ஓசையானது ஆகாயத்தைத் தாக்கப்பட்ட விடத்திலி ருந்து ஒலியலைகள் உண்டாகின்றனவென்றும் அவ்வலைகள் நாற்புறமும் பரந்து செல்கின்றனவென்றும் அறிந்தோம். அவ்விதம் நாற்புறமும் பரந்து செல்லும் ஒலியலைகளைச் சில சமயங்களில் ஏதேனும் ஒரு பொருள் தடுத்து அவ்வலைகளை மறுபடியும் அது புறப்பட்டவிடத்திற்கேயனுப்புகிறது. அதாவது ஒரு சுவற்றின் மேல் எறியப்பட்ட ஒரு பந்தானது மீண்டும் எறியப்பட்ட விடத்திற்கே திரும்பி வருவது போல, ஒலியலைகள் தாம் செல்லும் வழியில் உள்ள ஏதேனும் பொருள்களின் மேல் மோதுண்டு அவை புறப்பட்ட விடத்தை நோக்கித் திரும்பி வருகின்றன. இவ்விதம், ஒலியலை திரும்பி வருவதைத் தாம் நாம் "எதிரொலி" என்று சொல்கிறோம். இவ்விதம் திரும்பிவரும் ஒலியலை சில சமயங்களில் சிதறுண்டு போய்க் கேட்பதற்கு அருவருப்பாயிருக்கும்; அல்லது பொருள் விளங்காதபடி சிதறுண்டு போகும். தாக்குண்டு திரும்பிவரும் ஒலியலைகள் சிதைவுபடாமல் முழு வுருவத்துடன் திரும்பி வருமானால் நாம் அவ்வெதிரொலியை மிக விளக்க மாகவும் தெளிவாகவும் கேட்கக்கூடும். எதிரொலி உண்டாகும் இடத்திற்கும் கேட்போர் இருக்கும் இடத்திற்கும் தக்கபடி தெளிவும் தெளிவின்மையும் ஏற்படும்.

# 40. கல்விச் செல்வம் வழங்கும் கொடைவள்ளல்

மனித வாழ்வுக்குச் சிறப்பும் மேன்மையும் அளிப்பவை பொருட் செல்வம் கல்விச் செல்வம் என்னும் இரண்டு செல்வங்கள்தானே. கல்விச் செல்வம் இல்லாம் வெறும் பொருட்செல்வம் மட்டும் இருந்தால் அஃது அவ் வளவு சிறப்பு தராது. மனித வாழ்க்கையை உயர்த்துவது கல்விச் செல்வம் என்றால் அது மிகையாகாது. நமது நாட்டிலே கல்வியைப் பெறுவதற்கு ஆசை கொண்டுள்ளவர் எண்ணிறந்தவர். ஆனால் வறுமையின் காரணத்தினாலோ வேறு காரணத்தினாலோ கல்வி கற்க வசதியில்லாமல் தவிக்கின்றனர். அன்னதானம் சொர்ணதானம் முதலிய தானங்களைவிடக் கல்விதானம் சிறந்ததாகும். இதனாலன்றோ 'எழுதறிவித்தவன் (கல்வி கற்பித்தவன்) இறைவன் ஆகும்' என்று கூறியுள்ளார்.

1918 ஆம் ஆண்டு முதல் சென்ற ஐம்பது ஆண்டுகளாகச் சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியிலே ஏழை எளியவருக்குக் கல்வியை இலவசமாக வழங்கிக்கொண்டு வருகிற ஒரு கல்வி வள்ளல் இருந்துவருகிறார்! இந்த வள்ளற் பெருமான் தொழிலாளர் வாழும் சூளையிலேயும் அதற்கு அடுத்த புரசைவாக்கத்திலேயும் உள்ள மக்களுக்கு இத்தனையாண்டுகளாக இடை விடாமல் கல்வித் தொண்டு செய்துகொண்டு வருகிறார். அவரிடம் கல்வி கற்றுத் தம் வாழ்க்கையில் முன்னேறிய தொழிலாளரும், ஏனை யோரும் ஆயிரக்கணக்கானவர் உள்ளனர். வறுமை காரணமாக வாழ்க்கைப் போரை நடத்திக்கொண்டு அல்லல் அடைந்த ஆயிரக்கணக்கான மக்கள், தங்களுக்கு ஓய்வு கிட்டிய மாலை நேரத்தில் இவரிடம் வந்து கல்விபயின்று அதன் காரணமாக வாழ்க்கையில் உயர்வு பெற்று நல்வாழ்வு பெற்றுள்ளனர்.

இரவுப் பாடசாலைகளை ஏற்படுத்தி தொழிலாளருக்கும் ஏனையோ ருக்கும் கல்வி புகட்டி அவர்களின் வாழ்க்கையை நல்வாழ்க்கையாக உயர்த்தி வருகிற இப்பெரியார் அன்பும், அமைதியும், அடக்கமும், பொறுமையும் உள்ளவர். இந்தக் கல்வி வள்ளல் யார்? இவர்தாம் எமது வணக்கத்திற்கும் பெருமதிப்புக்கும் உரிய பெரியார் திரு. மாசிலாமணி முதலியார். இவருடைய பெயர்மட்டும் மாசிலாமணியன்று; அவருடைய அன்புள்ளமும்

தூய மாசு இலா மணியாகவே விளங்குகிறது. இவருடன் பிறந்துள்ள அன்புள்ளமும் இன்சொல்லும் இவரிடம் பக்தியையும் நன்மதிப்பையும் கொள்ளச் செய்கின்றன. இவர் இன்றும் கல்விச் செல்வத்தை வழங்கிக் கொண்டேயிருக்கிறார். இறைக்க இறைக்கச் சுரக்கும் ஊற்றுப் போலக் கல்விச் செல்வமும் வழங்கக் குறையாத ஊற்றல்லவா? இவர் கல்விப்பொருளை வழங்கிக்கொண்டே வருகிறார். இதை நிறுத்த அவரால் முடியாது.

இவர் கல்வி வழங்கும் நிலையம் இரவல் கட்டடமே. புரசைவாக்கம் வைக்கோற்காரன் தெருவில் உள்ள கார்ப்பரேஷன் பாடசாலைக் கட்டடத்தில் இவர் கல்வி நிலையம் இருக்கிறது. இந்த நல்லவரிடத்தில் கல்வியைப்பெற மக்கள் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருக்கிறது.

இவரிடம் உள்ள அன்பு, அடக்கம், ஆர்வம், உண்மை, தன்னலமற்ற தன்மை, நேர்மையான உள்ளம், எளிய தோற்றம் இதையெல்லாம் நம்மை ஆட்கொள்கின்றன. இவரது மாணவனாகிய நான் இவரைக் காணும்போதும் எண்ணும்போதும் என்னையறியாமலே தலைவணங்குகிறது. கைகள் கூப்பி அஞ்சலி செய்கின்றன.

ஆம், ஐம்பது ஆண்டுகளாக இப் பெரியார் இடைவிடாமல் கல்வித் தொண்டு செய்துவருகிறார். காட்சிக்கெளியவராகிய இவர் மாட்சிமிக்க அருஞ் செயலினால் மிக மிகப் பெரியவர். இப்பெருமான் வாழ்க! வாழ்க!! வாழ்க!!! நெடுங்காலம் சிறந்து வாழ்க.

* * * * *

**சென்னை இளைஞர் கழக உயர்நிலைப் பள்ளி**
**பொன்விழா மலர் - 1968**

# 41. தமிழாசிரிய மாணவர் வழிமுறை விளக்கம்

**உயர்திரு. சிவஞான சுவாமிகள்**
**(கி.பி. 1785ல் சிவகதி)**

|

திருத்தணிகை. கச்சியப்ப முனிவர்
(கி.பி. 1790 சிவகதி)

|

திருத்தணிகை. கந்தப்பையர்

மகாவித்வான், உரையாசிரியர்
காஞ்சி, சபாபதி முதலியார்

அஷ்டாவதானம்
புரசை சபாபதி முதலியார்

சிதம்பரம் சபாபதி பிள்ளை,
பரசுராம் பிள்ளை

காஞ்சி கனகசபை
நாயகர்
(காஞ்சிப்புராண
வசனம்)
இயற்றியவர்.

வித்துவான் மயிலை
சண்முகம் பிள்ளை
(இலக்கியம் பயின்றார்)
(கி.பி. 1905 காலமானார்)

புராணிகர்
சுந்தரம் பிள்ளை *

புராணிகர்
வடிவேற் *
பிள்ளை
(சிதம்பரம்
சபாபதி
பிள்ளையின்
புதல்வர்)

ஆசிரியர் கா.ரா.
நமச்சிவாய
முதலியார்.

திருமயிலை,
சீனி. கோவிந்தராசன்,
(திருக்குறள் நாடகம்,
திருமயிலைநான்மணி
மாலை இயற்றினார்.)

## ஸ்ரீமத் மாதவச் சிவஞானசுவாமிகளைப்பற்றிய ஐயவினா.

ஸ்ரீமத். மாதவச் சிவஞான சுவாமிகள் தமிழ் மொழிக்கும் சைவசமயத்திற்கும் இயற்றியுள்ள அருந்தொண்டையறியாதார் யார்? அப்பெரியார் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவரென்பதும் கி.பி. 1785-ல் அந்தமிலின்பத்து அழிவில்வீடெய்தினர் என்பதும் உலகமறிந்த

குறிப்பு: இவ்விருவரும் அருட்பா இராமலிங்க சுவாமிகளின் உடன்பிறந்தார்கள்.

உண்மையேயாம். அப்பெரியாரைப்பற்றி எனக்கேற்பட்டுள்ள ஐயம் இதுவாகும். சுவாமிகள் சகம் 1647-ல் அதாவது கி.பி. 1725-ல் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் இயற்றி அரங்கேற்றியதாக அறியக்கிடக்கிறது. இதனை,

**"இலகுசக னிரெட்டு நூற்றுநாற் பத்தேழி**
**னிற்கரங் கும்ப மிருபத்**
**தேழிரே வதிவெள்ளி பூர்வபக் கத்துதிகை**
**யோர்கவுல வஞ்சுப் பிரம்**
**கலவியுறு சுபதினங் கன்னிலக் கினமதிற்**
**கலைசைப் பதிக்குள் வாழ்செங்**
**கழுநீர் விநாயகர்த மீதுபிள் ளைத்தமிழ்க்**
**கவிபாடி வானோ ருண**
**அலைமலி கடற்கடைந் தமிழ்தூட்டு மாலென்ன**
**வவனியிற் புலவர் செவியால்**
**ஆர்ந்திடத் துறைசைவாழ் சிவஞான தேசிக**
**னரங் கேற்றி னானால்**
**நலகுசண மணிகுவளை யணிபுயன் வீரப்ப**
**ணல்கு மகராச யோகன்**
**நங்கள் கேசவபூபன்........ சேய்சற்றமு**
**நன்மைதரு வாழ் வுறுகவே"**

என்னும் செய்யுளால் அறியலாம். (இந்து தியாலஜிகல் யந்திர சாலையில் விரோதி ஆண்டில் இடபமதியில், பாண்டித்துரைத் தேவர் விரும்பியபடி ஞானசம்பந்தம் பிள்ளை வெளியிட்ட "சிவஞான யோகிகள் அருளிச்செய்த பிரபந்தத்திரட்டு" என்னும் புத்தகத்தில் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழின் சிறப்புப் பாயிரம் காண்க.)

இச் செய்யுளின் கணக்குப்படி சகம் ஆண்டு 1647 - ஆகிறது. அதாவது கி.பி. 1725 - ஆகிறது. முனிவர் சிவநிலைபெற்றது நாம் மேலே கூறியபடி கி.பி. 1785 - ஆகும். இக் கணக்குப்படி கணிப்போமாயின் சுவாமிகள் பரிபூரணமடைவதற்கு அறுபது ஆண்டுக்கு முன்னர் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழை இயற்றினார் என்று ஏற்படுகிறது. அங்ஙனமாயின்,

சுவாமிகள் எண்பது ஆண்டு உயிர் வாழ்ந்தவராதல் வேண்டும். நாம் பெரியோர்களைக் கேட்டதில் சுவாமிகள் இளமையிலேயே அதாவது 40-அல்லது 45-வதுஆண்டில் இறைவனையடைந்ததாகக் கேள்விப்படுகிறோம். இச்செய்தி உண்மையாயிருக்குமானால் சுவாமிகள் கி.பி. 1740-ல் பிறந்தவராதல் வேண்டும். அங்ஙனமானால், சுவாமிகள் கி.பி. 1725-ல் எங்ஙனம் பிள்ளைத் தமிழ் பாடியிருத்தல் கூடும்? எனவே, சுவாமிகள் 45-ஆண்டுதான் உயிர் வாழ்ந்திருந்தனர் என்னும் பெரியோர் வழக்கு பொய்ம்மையுடைத்தா அன்றி எண்பது ஆண்டுக்குமேல் வாழ்ந்திருந்தனர் என்று கருதுவதா அல்லது ''இலகு சகனீரெட்டு'' என்னும் செய்யுளில் பாடபேதமிருக்கும் எனக் கொள்வதா அல்லது அப்பாட்டிற்கு வேறுவகையாகப் பொருள் கொள்ள வேண்டும்? என்னும் ஐயங்கள் எனக்குத் தோன்றியுள்ளன.

ஸ்ரீமத். சுவாமிகளின் மாணவர் பன்னிருவர் என அறிகிறோம். யாம் ஆராய்ந்து தொகுத்தவரையில் பதினொருவரே காணப்படுகின்றனர். பன்னிரண்டாவது மாணவர் இன்னாரென்பது இன்னும் எமக்குப் புலப்பட வில்லை. யாம் அறிந்த புதினொரு மாணவர் பெயரும் வருமாறு.

1.. திருத்தணிகை கச்சியப்ப முனிவர் (கி.பி.1790-ல் சிவகதியடைந் தனர்.) 2. இலக்கணம் சிதம்பரமுனிவர் 3. காஞ்சி. சிவசம்பு முனிவர். 4.தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர். 5. காஞ்சி. முத்துக்குமாரசுவாமி தேசிகர். 7. காஞ்சி. சரவணதேசிகர். 8. திருமுக்கூடல் சந்திரசேகரமுதலியார். 9. கடம்பர்கோயில் தானீகர் கலியாணசுந்தர உபாத்தியாயர். 10. காவந் தண்டலம் அடைக்கலங்காத்த முதலியார். 11. இராஜபாளையம் சங்கரமூர்த்திக் கவிராயர் (இவர், கன்னிவாடி ஜமீன்தார் மலையாண்டியப்ப நாயகரிடம் யானைக் கன்றும் வளநாடும் பரிசில் பெற்றவர்).

சுவாமிகள் 12-வது மாணவர் இன்னாரென்றும், அவர் இயற்றிய நூல் இவை என்றும் அறிந்து அன்பர்கள் செந்தமிழ்ச் செல்வி மூலம் அறிவிப்ப தோடு ''இலகுசக னீரெட்டு'' என்னும் செய்யுள் காரணமாக ஏற்பட்ட ஐயத்தையும் நீக்கும்படி வணக்கத்துடன் வேண்டிக்கொள்கிறேன்.

**செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு.6**

# 42. தமிழ் நூல்களில் மீன் வகை

தமிழ்நாடு கடலினை எல்லையாகக் கொண்டது. சேரநாடு, கேரளநாடு ஆவதற்கு முன்னே, அஃதாவது ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னே, மேல்கடலாகிய அரபிக்கடலும் தமிழ்நாட்டின் மேற்கு எல்லையாக அமைந்திருந்தது. ஆகவே கிழக்கிலும், மேற்கிலும், தெற்கிலும் பரந்த கடல்களை எல்லையாகக் கொண்ட தமிழ்நாட்டவருக்கு மீன்களைப்பற்றிய ஆராய்ச்சி இருந்திருக்க வேண்டியது இயற்கையே. கடல் அன்றியும், ஏரிகள், ஆறுகள், குளங்கள் முதலிய நீர்நிலைகளிலும் மீன் இனங்கள் வாழ்கின்றன.இயற்கை காட்சிகளில் இயல்பாகவே கருத்தைச் செலுத்தும் வழக்கமுள்ள தமிழ்ப் புலவர்கள், மீன்களைப் பற்றியும் தமது நூல்களில் கூறியிருப்பார்களன்றோ! அவர்கள் தமது இலக்கிய நூல்களிலே மீன்வகைகளைப்பற்றி என்ன கூறியுள்ளார்கள் என்பதை ஈண்டு ஆராய்வோம்.

மீன்வகைகளையும் அவற்றின் பெயர்களையும் மீன் பிடிக்கும் வலைஞர்களாகிய மீன் வாணிகர் தாம் அறிந்திருப்பாரெனக் கருத வேண்டாம்.தமிழ்ப்புலவர்களும் அவற்றை அறிந்திருந்தனர். நாட்டின் நீர்வளத்தைக் கூறும்போதெல்லாம் ஏதேனும் மீன் இனங்களைக் குறிப்பிடுவது புலவர்மரபு.அன்றியும் மாதரின் கண்களுக்கு உவமை கூறும்போதெல்லாம் சேல், கயல் என்னும் இருவகை மீன்களைக் குறிப்பிடுகிறார்கள். இறைவியின் திருநாமங்களில் ஒன்று அங்கயற்கண் அம்மை, (மீனாக்ஷி) என்பது. பழைய சங்கநூல்களிலும், பிற்காலத்துத் தேவாரம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய நூல்களிலும் இறால், சுறா, கயல், சேல், குரவை, மடவை முதலிய மீன்களின் பெயர்களைக் காண்கிறோம். ''பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பு,'' எனவரும் மதுரைக் காஞ்சியடியினாலே, பனைமீன் என்னும் ஒருவகை மீன் பெயரை அறிகிறோம்.

''கல்லுத் தலையின்கண் யாதொரு மீனுக்குண்டு, அம்மீன் கற்றலை எனவும் ------------------ சொல்லுவது, இரண்டு மொழியைத் தொகுத்தலால் இருமொழித்தொகை'' என்பது வீரசோழிய உரை. (சொல்லதிகாரம்) இதிலிருந்து கற்றலை என்னும் பெயருள்ள ஒருவகை மீன் உண்டென்று அறிகிறோம். இப்பெயர் உலக வழக்கில் கத்தலை என்று வழங்கப்படுகிறது.

பள்ளு என்னும் பெயருள்ள ஒருவகைப் பிரபந்த நூல்கள் பிற்காலத்திலே தமிழில் தோன்றி வளர்ந்தன. இந்நூல்கள் காலத்தினால் பிற்பட்டவை. இந்தப்பள்ளு நூல்களிலே நீர்வளத்தைக் கூறுகிற ஆற்றுச் சிறப்புக்கவிகளில் பலவகை மீன் வகைகள் கூறப்படுகின்றன. இவைகளிலிருந்து மீன்வகைகளின் பெயரை நன்கு அறிந்துகொள்ளலாம்.

மீன்களிலே, உவர்நீராகிய கடலில் உள்ள மீன்கள் என்றும், உவர்ப்பற்ற ஏரி, குளம், ஆறுகளாகிய நன்னீரிலுள்ள மீன்கள் என்றும் இருவகையுண்டு. வாளை, வரால், இரால் முதலிய மீன்கள் உவர்நீர், நன்னீர் என்னும் இருவகை நீரிலும் காணப்படுகின்றன. சில மீன்கள் உவர்நீரில் மட்டும் வாழ்வன. சில மீன்கள் நன்னீரில் மட்டும் வாழ்வன. இந்தப் பாகுபாட்டினைப் பள்ளு நூல்களில் காணமுடியாது. இந்நூல்களிலே, ஆற்றுச் சிறப்பைக் கூறுகிற போது, நன்னீரிலே வாழ்கிற மீன்களை மட்டும் கூறவேண்டியிருக்க கடல் மீன்களின் பெயர்களையும் சேர்த்துக் கூறப்படுகின்றன. இந்நூல் களிலே, கூறப்படுகிற மீன்வகைகளைக் காண்போம்.

முக்கூடற்பள்ளு என்னும் நூல், பொருநையாற்று வெள்ளத்தில் காணப்பட்டதாகக் கீழ்கண்ட மீன்வகைகளைக் கூறுகிறது.

**"உதைத்து விசைகொண் டெதிர்த்துக் கடலின்**
**உதரங் கீறி அதிரும் நீர்**
**உதய வரைக்கும் பொதிகை வரைக்கும்**
**ஒத்துப் போம்படி முற்றும் போய்**
**பதைத்து நெளியும் துதிக்கை மூக்கன்,**
**பண்ணைச்சாளை, எண்ணெய்மீன்,**
**பசலி, திருக்கை, கசலி, கெளுத்தி,**
**பண்ணாக்கும் பழம் பாசிமீன்**
**வதைக்கும் மகரம், குதிக்குஞ் சள்ளை,**
**மத்தி, உல்லம், பொத்தி மீன்,**
**மடந்தை, கடந்தை, சம்பான், நொறுக்கி,**
**மலங்கும், பஞ்சலை, கருங்கண்ணி,**
**புதைத்து மணலில் ஒதுக்கிக் கடலில்**
**போக்கி அழகர் கருணைபோல்**
**பொருநை யாறு பெருகி வார**
**புதுமை பாரும் பள்ளீரே."**

ஷெ பள்ளு சித்திரா நதியின் சிறப்பை இவ்வாறு கூறுகிறது.

"குற்றாலத் திரிகூட மால் வரை
யுற்றே மேகம் பொழிந்த நீர்
கூடிப் பொருநை நாடித் திருமுக்
கூடற்பதியை வலங்கொண்டே
வற்றா மடுவிற் பரவை, குரவை,
வாளை, கோளை, தேளி மீன்,
மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி,
மணலி, ஆரால், ஒராமீன்,
பற்றா அயிரை, கெண்டை, கெளிறு,
பருவராலும் அணையிலே
பாயக் காலிற் பாயக் குளத்திற்
பாய வயலிற் பாயவே,
சிற்றாரென்பது பெற்றாலும் ஒரு
சிறியவர் மன பெருமைபோல்
சித்ரா நன்னதி பெருகி வார
சித்திரம் பாரும் பள்ளீரே,"

இந்தப் பள்ளில் பஞ்சலை மீனும், கெண்டை மீனும் மாதர் கண்களுக்கு உவமை கூறப்படுகின்றன:

"பஞ்சலைமீன் கெண்டைகள் எனவே
அஞ்சனம் தோய் கண்கள் இரண்டும்"

என்பது அச்செய்யுள் அடி.

திருமலை முருகன்பள்ளு என்னும் நூலில் கீழ்க்கண்ட மீன் பெயர்கள் கூறப்படுகின்றன.

"சுறவு, மசரி, கொளுவை, யுளுவை,
சூடை, திருக்கை, விரிசிறா,
சூரை, மயிலை, பயிரை, மணலி,
பாரை, மகரம், முள்ளிறால்,
குறவை, முறல்வெங்கணை, கருங்கணி,
குறளி, செங்கணி, திமிங்கிலம்,

*கோளை, சாளை, தேளி, மூளி,*
*குதிப்புத் திமிலை, பஞ்சிலை,*
*பறவை, கெளிறு, மலங்கு கலவாய்,*
*பருத்தகாரை, ஆரல் மீன்,*
*பன்றி, வாளை, யாற்றுவாளை,*
*பரக்கும் ஐந்திணை நிரக்கவே*
*நறவு கமழும் குவளைக் குன்றுறை*
*நாயகன் மயில் வேகம் போல்*
*நடக்கும் அனும நன்னதிப்புனல்*
*முழக்கம் பாரும் பள்ளீரே''*

**பறாளை விநாயகர் பள்ளு** என்னும் நூல், இலங்கைத் தீவில் உள்ள பேர்போன பெரிய ஆறாகிய மாவலிகங்கை என்னும் ஆற்றின் சிறப்பைக் கூறும்போது கீழ்கண்ட மீன் வகைகளைக் கூறுகின்றது.

*''குறவை, வாளை, யுளுவை, மயிந்தன்*
*குப்புளாவுடன், திருக்கை மீன்,*
*கொழுத்த மடவை, தொகுத்த கிளி,*
*குமிளா, மாசினி, செங்கண்ணன்,*
*உறுகிழாத்தி, காலை, பாலை*
*ஓங்கு திரளி, வச்சிரம்,*
*முடகத்துடன், சூடை, செப்பலி*
*உற்ற நெடுவால் உடகம்,*
*பறவை, யுறவி, குளக்கன், தோகை,*
*பருந்து வாயன், மட்டிமீன்,*
*பாரக்கெண்டை, தடியன், சீலா,*
*பாரக்கத்தலை, யாரல் மீன்,*
*கறுவிக் கரையில் வாழைகள் ஒதுக்கிக்*
*கதித்துக் குதித்துப் பாயவே*
*கங்கையாறு பெருகிவார*
*காட்சி பாரும் பள்ளீரே.''*
*தாவு கெளிறு, வாரால், ஆரல்,*
*தகுவெள் ளாரல், தும்பையன்,*
*சாலுமாம் பழக்கெளிறு, சின்னத்*
*தாளங், கறுத்த கெளிற்று மீன்*

*வாவு கருங்கண் வாளை, பவள*
*வாளை, முக்கன் வாளை, கோ*
*வஞ்சி, கடியன், பொதியன், கெளிறு,*
*வவ்வால், வெள்ளை வவ்வால் மீன்,*
*ஒவினெடிய வாயன், மடவை,*
*யுரிய மணலைக், கூரலோ(டு),*
*ஓடும் பூனைக்கண் கெளிறு, வயலி*
*னுதிக்குங் காணி யாளனும்*
*"பூவின் றடத்தில் வயலில் பாயப்*
*புறத்துப் பாயப் பாயவே*
*பொருதுமா வலிகங்கை வார*
*புதுமை பாரும் பள்ளீரே"*
*"திருக்கை, புலியன் திருக்கை, யாரல்*
*திருக்கை, கள்ளத் திருக்கை மீன்,*
*சிவந்த திருக்கை, சட்டித் தலையன்,*
*சீறுந் திருக்கை, வெட்டியான்,*
*தருக்குங் குறிஞ்சித் திருக்கை, கருமை*
*தயங்கிறாலொடு, வெள்ளிறால்,*
*தண்டைச் சுறவு, மொய்முறல் கிளை*
*தக்கன் பாறைக், கல்லிறால்,*
*உருக்கமுடைய கெண்டைக், காரல்,*
*ஊர்த்த வெள்ளைவாற் றிருக்கைமீன்,*
*ஓலைவாலன், கருங்கண் ணாளன்*
*ஊரிற் பெரிய மீனெலாம்*
*"வருக்கமுடைய பூகராசியின்*
*மடைத்தலை தத்திப் பாயவே*
*மாவலி கங்கை பெருகிவார*
*வளமை பாரும் பள்ளீரே."*

கதிரைமலைப்பள்ளு என்னும் நூலிலும், திருக்கைக் கலியாணம் என்னும் நூலிலும் இதுபோலவே மீன்வகைகள் குறிக்கப்படுகின்றன. அவையும் ஏறக்குறைய மேற்கூறிய மீன்களின் பெயரையே கூறுகிறபடியால், அந்நூற் செய்யுள்களை ஈண்டுக் காட்டவில்லை. திருக்கைக் கலியாணம்

என்னும் சிறுநூல், திருக்கை என்னும் ஒருவகை மீனுக்குத் திருமணம் நடந்த போது, அத்திருமண ஊர்வலத்தில் கலந்துகொண்ட மீன்வகைகளை எல்லாம் குறிக்கின்றது.

மேலே காட்டிய பள்ளுப் பிரபந்தச் செய்யுள்களின் கருத்துப்படி, கீழ்க் கண்ட மீன்களின் பெயர்களை அறிகிறோம். அவை: பரவை, குரவை, உழுவை, அயிரை, கெண்டை, கெளிறு, வரால், திருக்கை, இறால், சுறா, மத்தி, உல்லம், மலங்கு, கலவாய், வாளை, வஞ்சிரம், மட்டி, கத்தலை, ஆரல் வவ்வால், அயிரை முதலியன. இவைமட்டுந்தான் எனக் கருதவேண்டா. செய்யுள்களில் கூறப்பட்ட இவை, மீன்வகைகளின் சில பொதுப்பெயர்களே. கடலிற்சென்று மீன்பிடிக்கும் தொழிலிற் பழகியவர்களைக் கேட்டபோது, அவர்கள் ஒவ்வொரு மீன்இனத்திலும் பல உட்பிரிவுகள் இருப்பதாகக் கூறுகிறார்கள். அவர்கள் கூறிய மீன்வகைகளையும் அவற்றின் உட்பிரிவு களையும் ஈண்டுக் குறிப்பிடுவது அமைவுடைத்து. அவையாவன:-

***இறால்***: இது இறவு எனவும் கூறப்படும்.

***"பச்சிற வெறிவயல் வெறிகமழ் காழிப்பதி"***

என்றார் சம்பந்தர். இதன் இனத்தைச் சேர்ந்தவை வருமாறு: போர் இறால், மோட்டிறால், நெட்டிறால், துள்ளிறால், சிங்க இறால், கல்இறால், பாசிறால், பேயிறால், வெள்ளிறால், சிவப்பிறால், வலிச்சிறால். இவை அமாவாசையில் தோல் உரிக்குமாம்.

***கெளுத்தி***: வகையைச் சேர்ந்தவை. (கெளுத்தி, கெழுத்தி என்றும் வழங்கும்) பொருகெழுத்தி, இறுங்கெழுத்தி, நெடுமாங்கெழுத்தி, கருங் கெழுத்தி, உண்டைக்கெழுத்தி, ஈசாங்கெழுத்தி, வெள்ளைக்கெழுத்தி.

***சுறா***: இது மகரம் என வழங்கப்படுகிறது. இதன் வகை: கொம்பன்சுறா, பால்சுறா, குரங்கன்சுறா, செஞ்சுறா, கோமராஸ்சுறா, கருமுளிசுறா முதலியன.

***கவலைமீன்***: கொடகவலை, செல்கவலை, ஓலைகவலை, தொணலைக்கவலை.

***உல்லம்***: "உள்ளதை விற்று உல்லத்தை உண்." என்று இம்மீனைப் பற்றி ஒரு பழமொழி வழங்குவதாகக் கூறுகிறார்கள். வஞ்சிரம், மாவுலாசி, கோல்மாவுலாசி, வெள்ளரா, படுலஞ்சிரம் முதலியவை இதன் இனத்தைச் சார்ந்தவையாம்.

**கோலா**: இதன் வகை: பருவகோலா, சப்பைக் கோலா, தாக்கோலா அல்லது பறவைக்கோலா (இது பறக்குமாம்), பாம்பன்கோலா, கரு வேல்கோலா, மயில்கோலா. இந்த மீன்களுக்கு வாயில் நீண்ட கொம்பு உண்டாம்.

வெளவால்மீன்: கறுப்பு வெளவால், வெள்ளை வெளவால், மோலாசு வெளவால்.

திருக்கைமீன்: இந்த மீன்களுக்கு வால் கயிறுபோல் நீண்டிருக்குகும். வாலில் முட்கள் உண்டு. இந்த வாலினால் அடித்தால், அடியுண்டவர் சதை பிய்ந்துவிடும். இதன் வகைகள்: பாஞ்சாலந்திருக்கை, புள்ளித்திருக்கை, குருவித்திருக்கை, மட்டைத்திருக்கை, செம்மந்திருக்கை, சக்கவாளத் திருக்கை, கொம்பன்திருக்கை, திமிலத்திருக்கை, (இதன் உடலில் மின்சார சக்தி உண்டு. ஆகவே, இதைத் தொட்டால், மின்சாரத்தைத் தொட்டால் இழுப் பதுபோல சிவுக்கென்று இழுக்கும்.) இந்த மீன் பெயரால், ''திருக்கைக் கலியாணம்'' என்னும் ஒரு சிறு நூல் உண்டு.

**வாளை**: இது கடலிலும் உண்டு; நன்னீர் உள்ள நீர்நிலைகளிலும் உண்டு. இதைப்பற்றித் தமிழ் இலக்கியங்களில் அடிக்கடி கூறப்படுவதைக் காண்கிறோம். தட்டையாய் நீண்டிருக்கும். ''வாளைமீன் உள்ளன் தலைப் படல்........ துஞ்சுமன் கண்டகனா,'' என்பது திரிகடுகம். நீர்நிலைகளில் சிறு மீன்களை உண்டு வாழ்கிற உள்ளன்பறவை (இது உள்ளான் என்றும் வழங்கப் பெறும்.) அதைவிட உருவத்தில் பெரிய வாளைமீனைப் பிடித்து உண்ண முடியாது என்பது இதன் கருத்து. இதன்வகை: சொட்டை வாளை, கருவாளை, பவளவாளை, மூக்கன்வாளை, பன்றிவாளை.

ஏனைய மீன்வகைகளின் உட்பிரிவுப் பெயர்களை, பட்டினவர் என்றும் பரதவர் என்றும் கூறப்படுகிற நெய்தல் நிலமக்களிடமிருந்து அறியலாம்.

சென்னையில், அரசாங்க மீன்காட்சிச்சாலை பேர்போனது. இத்தகைய மீன்காட்சிச்சாலை உலகத்திலே வேறெங்கும் கிடையாது என்று பெருமை யாகப் பேசப்படுவது. இந்தக் கண்காட்சிச்சாலை, சென்ற உலகயுத்தம் காரணமாக மூடப்பட்டிருக்கிறது. மீண்டும் அக் காட்சிச்சாலையை அரசியலார் திறப்பார்களானால், அங்குப் பலவித மீன்களையும் உயிரோடு நேரில் கண்டுகளிக்க வாய்ப்பாகும்.

நிற்க. மீன் இனங்களின் பெயர்களைத் தமிழ் இலக்கியங்களில் காண்பதுபோலவே, தாவர இனங்களின் பெயரையும் ஏராளமாகத் தமிழ் இலக்கியங்களிலும் தமிழ் சாசனங்களிலும் காண்கிறோம். அவற்றையும் ஆராய்வது தமிழர் கடமையாகும்.

*செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு. 23*

# 43. காலக் குறிப்பு

தமிழ்ப்புலவர் காலத்தையும் தமிழ் நூல்கள் இயற்றப்பட்ட காலத்தையும் ஆராய்ந்தறிய அவாக்கொண்டு சென்ற சில தினங்களாக ஆராய்ந்தேன். அதன் பலனாகச் சில காலக் குறிப்புகள் கிடைத்தன. கிடைத்தவரையில் அவற்றை இங்கு வெளியிடுகிறேன். ஏனைய குறிப்புகளைக் கிடைக்கும் போது வெளியிடுவேன். ஏனைய அன்பர்களும் தாங்கள் ஆராய்ந்தறிந்த காலக்குறிப்புகளை வெளியிடுவார்களாயின் அது தமிழ் மொழியின் சரித்திர ஆராய்ச்சிக்கு ஏற்ற துணையாக நிற்கும். நான் கண்ட இக்குறிப்பில் பிழையிருப்பின் தெரிவித்து உண்மையை வெளிப்படுத்துவது அறிவோர் கடனாம்.

சாலிவா கி.பி.

1175 1253 சிவஞானசித்தியாரை அருணந்தி சிவாசாரியர் அருளிச் செய்தார்.

1176 1254 இருபா இருபஃது மேற்படி சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது.

1177 1255 உண்மைவிளக்கம் மனவாசகங் கடந்தாரால் அருளிச் செய்யப்பட்டது.

1200 1278 உள்ளமுடையான் என்னும் நூலை திருக்கோட்டி நம்பி இயற்றினார்.

1228 1306 சிவப்பிரகாசம் உமாபதி சிவாசாரியரால் அருளிச் செய்யப்பட்டது.

1229 1307 திருவருட்பயன் மேற்படி யாரால் அருளிச் செய்யப்பட்டது.

1230 1308 வினா வெண்பா மேற்படி யாரால் அருளிச் செய்யப்பட்டது.

1231 1309 போற்றிப்பஃறொடை மேற்படி யாரால் அருளிச் செய்யப் பட்டது.

1232 1310 கொடிக்கவி மேற்படி யாரால் அருளிச்செய்யப்பட்டது.

1233 1311 நெஞ்சுவிடுதூது மேற்படி யாரால் அருளிச் செய்யப்பட்டது.

1234 1312 உண்மை நெறிவிளக்கம் மேற்படி யாரால் அருளிச் செய்யப்பட்டது.

1235 1313 சங்கற்பநிராகரணம் மேற்படி யாரால். அருளிச் செய்யப் பட்டது.

1446 1524 அரிச்சந்திர புராணம் வீரை, ஆசு கவிராயரால் இயற்றப் பட்டு திருப்புல்லாணிச் சக்கரதீர்த்தக்கரை மேன் மண்டபத்தில் மேற்படி யாரால் அரங்கேற்றப்பட்டது.

1469 1547 கமலாலய மகாத்மியம் சிதம்பரம் மறைஞான சம்பந்தரால் இயற்றப்பட்டது.

1514 1592 திருவாரூர்ப் புராணம் அளகை சம்பந்த முனிவர் இயற்றி அரங்கேற்றினார்.

1584 1661 (பிப்ரவரி - சுபகிருது தை) ஸ்ரீ தாயுமான ஸ்வாமிகள் சிவப் பேறடைந்தனர்.

1597 1675 சிவப்பிரகாசப் பெருந்திரட்டு சொரூபானந்த தேசிகரால் தொகுக்கப்பட்டது.

1602 1680 தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், சதுரகராதி, தமிழ் - இலத்தீன் அகராதி முதலிய நூல்களை இயற்றிய தைரிய நாதர் என்று பெயருள்ள (Constantin Beschi) என்னும் ஐரோப்பியர் இத்தாலி தேசத்தில் நவம்பர் 8-ல் பிறந்தார்.

1634 1712 இராம நாடகம், அசோமுகி நாடகம், சீகாழிப் புராணம், சீகாழிக்கோவை, அநுமார் பிள்ளைத் தமிழ் முதலிய நூற்களை இயற்றிய அருணாசலக்கவிராயர் பிறந்தார்.

1647 1725 செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் சிவஞான சுவாமி களால் இயற்றி அரங்கேற்றப்பட்டது.

1664 1742 தைரியநாதர் *(Constantine Beschi)* மணப்பாறை என்னும் ஊரில் இறந்தார்.

1690 1767 சுலோக பஞ்சகம், சிவதத்துவ விவேகம், காஞ்சிப் புராணத்தின் முற்பாகம் இவைகளைச் சிவஞான சுவாமிகள் மொழிபெயர்த்து அருளினார்.

1701 1779 அருணாசலக் கவிராயர் சீகாழியில் காலமானார்

1707 1785 (விசுவாவசு) சிவஞான சுவாமிகள் சிவகதி பெற்றனர்

1708 1786 உத்தர ராமாயணக் கீர்த்தனை, மருதூர் வெண்பா இயற்றிய அந்த பாரதி ஐயங்கார் பிறந்தார்.

1712 1790 கச்சியப்ப முனிவர் சிவகதி பெற்றனர் (சாதாரண ஆண்டு)

1746 1823 (சுபானு புரட்டாசி அக்டோபர் 5) திருவருட்பா இராமலிங்க சுவாமிகள் பிறந்தார்.

1745 1823 (சித்திரபானு மார்கழி 5) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தார்.

1748 1826 தாண்டவராய முதலியார் கதாமஞ்சரி இயற்றி வெளியிட்டார்

1748 1826 பஞ்சதந்திரக் கதையை மராட்டிய பாஷையிலிருந்து முதன் முதல் தாண்டவராய முதலியார் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

1750 1828 தாண்டவராய முதலியார் இலக்கண வினாவிடை இயற்றி வெளியிட்டார்.

1754 1832 செப்டம்பர் 12-ல் ராவ்பகதூர் தாமோதரம் பிள்ளையவர்கள் (தமிழ் நூல்களை முதன்முதல் அச்சிட்டு வெளிப்படுத்தினவர்) பிறந்தார்கள்.

1758 1836 மாம்பழக்கவிராயர் பிறந்தார்.

1767 1845 ஆத்துமப்போதப் பிரகாசிகை இயற்றிய யாழ்ப்பாணத்து நல்லூர் சாவணமுத்துப் புலவர் இறந்தார்.

1767 1845 தியாகராசலீலை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது.

1769 1847 நவம்பர் திருவேங்கட அநுபூதி இராமநுஜக் கவிராயரால் இயற்றி வெளிப்படுத்தப்பட்டது.

1770 1848 இலக்கணச்சுருக்கம் கவிராயரால் இயற்றி அச்சிடப்பட்டது.

1768 1846 அநந்தபாரதி ஐயங்கார் காலமானார்.

1769 1847 கொன்றைவேந்தன் உரை இராமாநுஜக் கவிராயரால் இயற்றி அச்சிடப்பட்டது.

1772 1850 மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் மாணவர் தேவராச பிள்ளையவர்களால் குசேலோபாக்கியானம் இயற்றப்பட்டு அரங்கேற்றப்பட்டது.

1850 வித்துவான் தாண்டவராய முதலியார் காலமானார்.

1782 1859-60 சீகாழிக்கோவையை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றி சீகாழி பிரமபுரேசர் திருக் கோயில் வலம்புரிமண்டபத்தில் அரங்கேற்றினார்.

1782 1860 சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை யவர்கள் பிறந்தனர்.

1793 1871 (பிரஜோற்பத்தி ஆனி) காஞ்சிபுரம் கோவை இராமசாமி நாயுடு காலமானார்.

1796 1874 (ஸ்ரீ முகதை) அருட்பா இராமலிங்க சுவாமிகள் ஐக்கிய மாயினர்.

1802 1879 (பிரமாதி கார்த்திகை 21) ஆறுமுக நாவலர்கள் காலமானார்.

1803 1881 வீரசோழியம் ராவ்பகதூர் தாமோதரம் பிள்ளையவர்களால் முதன்முதல் அச்சியற்றப்பட்டது.

1806 1884 மாம்பழக்கவிராயர் காலமானார்.

1809 1887 (ஆடி) கலித்தொகை மேற்படி பிள்ளையவர்களால் முதல்முதன் அச்சிடப்பட்டது.

1812 1889 (விரோதி) இலக்கணவிளக்கம் தாமோதரம் பிள்ளைய வர்களால் முதன்முதல் அச்சிடப்பட்டது.

1889 சூளாமணி மேற்படி யாரால் முதன்முதல் அச்சிடப்பட்டது.

1823 1900 (ஜனவரி 1) ராவ்பகதூர் தாமோதரம் பிள்ளையவர்கள் காலமானார்.

1828 1905 (குரோதி-தை) வித்துவான் மயிலை சண்முகம் பிள்ளையவர்கள் காலமானார்.

1818 1895 (மன்மத ஆவணி) திருமயிலை வித்துவான் வெள்ளியம்பல உபாத்தியாயர் காலமானார்.

1817 1894 வித்துவான் சுப்பராய செட்டியார் காலமானார்.

1845 1922 சித்தாந்தபோத ரத்தினாகரம் கா. ஆலால சுந்தரம் பிள்ளையவர்கள் காலமானார்.

1845 1922 சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் காலமாயினார்.

**- இலட்சுமி - செப்டம்பர் 1927**

# 44. ஓடத்தில் ஒருநாள்

**(இக் கட்டுரை ஆசிரியர் அகழ்வாய்வுத் துறையில் அரிய புலமையும், முற்போக்கு எண்ணங்களைப் பரப்புவதில் சீரிய நோக்கும் கொண்ட மூதறிஞர்.)**

இன்றைக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 31-3-34-ல், பகுத்தறிவு வாதிகளாகிய நண்பர்கள் சுமார் இருபது பேர் சேர்ந்து சென்னையிலிருந்து புறப்பட்டு, பக்கிங்காம் கால்வாய் வழியாக மகாபலிபுரத்திற்கு யாத்திரை சென்றோம். மகாபலிபுரத்தில் உள்ள சிற்பக் கலைகளைக் காண வேண்டும் என்பது அந்த யாத்திரையின் நோக்கம். இளவேனிற் காலத்தில், மாலை வேளையில் படகு ஏறிப் பயணம் செய்வது - அதுவும் நண்பர்களுடன் சேர்ந்து பயணம் செய்வது - மிக இன்பகரமானது. அந்த யாத்திரையின் போது தான், புரட்சி கவி என்றும், பார்திதாசன் என்றும் சிறப்புப் பெயர் பெற்றுள்ள தோழர் கனக சுப்புரத்தினம் அவர்களுடன் அறி முகம் ஆனேன். சாந்தமான இயல்பு; அமைதியும் இனிமையும் கலந்த பேச்சு, கவிதையில் திளைத்துக் கொண்டிருக்கும் உள்ளம், இவற்றையுடையவர் பாரதிதாசன். இன்பகரமாக மகாபலிபுர யாத்திரை எல்லோருடைய மனத்தை யும் கவர்ந்தது போலவே, தோழர் பாரதிதாசன் உள்ளத்தையும் கவர்ந்தது. எங்கள் மனத்தில், அந்த யாத்திரையின் நிகழ்ச்சி ஊமையன் கனவு போல வெளிப்படாமல்

இருந்தது. எங்களுக்கு கவிதைபாடும் ஆற்றல் இல்லாமை யினால். ஆனால், கவிதை புனையும் புலமைவாய்ந்த பாரதிதாசன் அவர்கள் அடுத்த நாளே அந்த யாத்திரையைப் பற்றிக் கவிதை ஒன்று பாடிவிட்டார்.

**சென்னையிலே ஒரு வாய்க்கால் - புதுச்**
**சேரி நகர் வரை நீளம்!**
**அன்னதில் தோணிகள் ஓடும் - எழில்**
**அன்னம் மிதப்பது போலே!**
**என்னருந் தோழரும் நானும் - ஒன்றில்**
**ஏறி அமர்ந்திட்ட பின்பு,**
**சென்னையை விட்டது தோணி - உடன்**
**தீவிரப் பட்டது வேகம்!**

படகு சென்று கொண்டிருக்க, மாலை நேரத்தில் அதன் மேற்புறத்தில் அமர்ந்து எத்தனையோ இயற்கைக் காட்சிகளைக் கண்டோம். அவற்றில் ஒன்று, நடுத்தர உயரம் உள்ள ஒரு பனைமரமும் ஓர் ஈச்சமரமும் இணை பிரியா நண்பர்கள் போல நெருங்கி நின்று கொண்டிருக்க, அவற்றின் இடையே அன்று பௌர்ணமி - முழு வட்டமுள்ள நிலா கடலிலிருந்து சிவந்த மேனியுடன் புறப்பட்டு மேலெழும்பி வந்தது. இக்காட்சியைக் கண்ட கவிஞர் உள்ளம் சும்மா இருக்குமா? பாருங்கள் பாரதிதாசன் கூறுவதை:

**வெட்ட வெளியினில் நாங்கள் - எதிர்**
**வெறொரு காட்சியும் கண்டோம்.**
**குட்டைப் பனைமரம் ஒன்று - எழிற்**
**கூந்தல் சரிந்த ஓர் ஈந்தும்**
**மட்டைக் கரங்கள் பிணைத்தே - இன்ப**
**வார்த்தைகள் பேசிடும் போது**
**கட்டுக் கடங்கா நகைப்பைப் - பனை**
**கல கல வென்று கொட்டும்.**

* * *

**எட்டிய மட்டும் கிழக்குத் - திசை**
**ஏற்றிய எங்கள் விழிக்கும்**
**பட்டது கொஞ்சம் வெளிச்சம் - அன்று**
**பௌர்ணமி என்பது கண்டோம்.**

* * *

**முத்துச் சுடர்முகம் ஏனோ - இன்று**
**முற்றும் சிவந்தது? சொல்வாய்?**
**இத்தனை கோபம், நிலாவே?-உனக்**
**கேற்றிய தார் என்று கேட்டோம்.**

எங்கள் மகாபலிபுர யாத்திரையைப் பற்றி வாசகர்களிடம் விவரித்துக் கூறி நேரம் போக்க வேண்டுமென்பது எனது கருத்தன்று. நான் சொல்ல வந்த செய்தியைக் கூறுகிறேன்.

தோழர் பாரதிதாசன் அவர்கள் அறிமுகமானது முதல், அவர் உள்ளத்திலிருந்து அவ்வப்போது வெளிப்படும் அவரது கவிதைகளைப் படித்து வந்தேன். அக்கவிதைகள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. எனது உள்ளத்தை மட்டும் அன்று; படித்த ஏனையோர் உள்ளங்களையும் கவர்ந்தன. கற்பவர் உள்ளத்தைக் கவரும் ஆற்றல் பாரதிதாசன் கவிதைகளுக்கு எப்படி உண்டாயிற்று? ஏன் எல்லோரும் இவர் பாடல்களை ஆர்வத்துடன் படிக்கிறார்கள்?

கவிதைக் கலையின் தத்துவத்தை உணர்ந்த மேல் நாட்டு அறிஞர் சிறந்த கவிதைகளுக்கு மூன்று சிறப்புகள் அமைந்து இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அந்த மூன்று சிறப்புகள் எவை எனில், உண்மை, இனிமை, அழகு என்பனவாம். கவிதையில் கூறப்படும் செய்தி மறுக்க முடியாத உண்மையைக் கொண்டிருக்க வேண்டும். வெறும் உண்மையை மட்டும் நிறைத்து வைத்துப் பாட்டுப் பாடிவிட்டால் போதாது. அதனோடு இனிமையும் அமைய வேண்டும். உண்மை இனிமை இரண்டும் இருந்தால் போதுமா? அக்கவிதையில் அழகும் அமைய வேண்டும். இந்த மூன்று இயல்புகளும் ஒருங்கே அமையப் பெற்றதுதான் சிறந்த கவிதையாகும் என்பது அறிஞர் கருத்து.

பாரதிதாசன் கவிதைகளில், உண்மை, இனிமை, அழகு இம்மூன்றும் அமைந்துள்ளன. அதனால்தான் அவரது கவிதைகள் படிப்போர் உள்ளத்திற்கும் இன்பம் அளிக்கின்றன. இந்த மூன்று தன்மைகள் மட்டுந்தானா அவர் கவிதைகளில் மிளிர்கின்றன? இல்லை. மற்றும் இரண்டு சிறப்புகளும் பொருந்தியிருக்கின்றன. அச்சிறப்புக்கள் எவை? அவை: எல்லோருக்கும் விளங்கக்கூடிய எளிய நடை; படிப்பவர் உள்ளத்தைத் தட்டி எழுப்பி உணர்ச்சியை ஊட்டும் உயிர்த் தன்மை என்பன:

கவிஞர்கள் தனி உலகத்தில் சஞ்சரிப்பவர்கள். கவிஞர்கள், தமது கவிதைகள் மூலமாக ஏனையோரையும் பற்பல உலகங்களில் சஞ்சரிக்கச்

செய்வார்கள். நமது நாட்டுக் கவிஞர்களோ, தாங்கள் வாழும் மண்ணுலகத்தை முற்றும் மறந்துவிட்டு, கயிலாயம், வைகுண்டம், பிரமலோகம், தேவலோகம், நரகலோகம் முதலிய கற்பனை உலகங்களில் சஞ்சரித்துக் கொண்டிருப்ப தோடு, தமது கவிதைகளைக் கற்போரையும் தம்மை மறந்து சஞ்சரிக்கச் செய்து விடுகின்றார்கள். அவர்கள் தாம் வாழும் மண்ணுலகம் மாயா உலகம் என்று கருதுபவர்கள். பாரதிதாசனவர்கள் கவிஞர் என்கிற முறையில் கற்பனா உலகங்களில் சஞ்சரிப்பவர் என்றாலும், நமது மண்ணுலகத்திலே தான் அதிகமான சஞ்சரித்து வருகிறார். மண்ணுலகத்திலும், பெருங் குடிமக்களாக ஏழைகள் இடையே இவர் அதிகமாகப் பழகி வருகிறவர். இராஜாக்கள், சிற்றரசர்கள், ஜமீன்தார்கள், செல்வந்தர்கள் முதலியவர்கள் இடையே சஞ்சரிக்க இவருக்கு நேரம் இல்லை. ஆகவே இவர்களைப் பற்றிக் கவிதை இயற்ற இவருக்குச் சந்தர்ப்பம் இல்லை. கிராமங்களில் எளிய வாழ்க்கை நடாத்தும் குப்பன், முனியன், முருகன், கண்ணம்மாள், அழகம்மாள், பொன்னம்மாள் முதலிவர்களைத் தான் பாரதிதாசன் காண்கிறார். அவர்கள் இடையே காணப்படும் வறுமை, துன்பம், அநீதி, கொடுமை, இழிவு முதலிய வற்றைப் பார்க்கிறார். சமுதாயத்தில் மாதர்கள் வைக்கப்பட்டுள்ள இழி நிலையைக் காண்கிறார். தொழிலாளர்களின் வறுமை நிலையையும் சோம்பேறிகளின் செல்வ வாழ்க்கையையும் பார்க்கிறார். மக்களை மூடத்தனத்தில் அமிழ்த்தி வைக்கும் மத போதகர்களைக் காண்கிறார். தாழ்த்தப்பட்டுள்ள ஆதிதிராவிடர்களின் பரிதாப நிலையைக் காண்கிறார், உள்ளம் குமுறுகிறார்; பெருமூச்சு விடுகிறார். வீரசக்தி அவரிடம் தோன்று கிறது. இந்த அநியாயங்களையும் அக்கிரமங்களையும் ஒழிக்க வேண்டும் என்று நினைக்கிறார். ஆனால், வாள் எடுத்து வீசவில்லை; பேனா எடுத்துக் கவி எழுதுகிறார். பாரதிதாசன் அவர்களின் கவிதைகள் பெரும்பாலன வற்றில், உண்மை, இனிமை, அழகு இவை மிளிர்கின்றன. இவற்றுடன் எளிதில் விளங்கும் தன்மையும், மன எழுச்சியை உண்டாக்கி உணர்ச்சி கொடுக்கும் உயிர்த் தன்மையும் பொருந்தியுள்ளன. இந்த இயல்புகள் இவரது கவிதைகளுக்குச் சிறப்புத் தருகின்றன.

பாரதிதாசன் அவர்கள் புரட்சிக் கவி, தமிழ் நாட்டின் தேசியக்கவி, உணர்ச்சியை உண்டாக்கும் வீரக்கவி. ஆகவே மக்கள் இவரது கவிதைகளை ஆவலோடு படிப்பதில் அதிசயம் இல்லை. பாரதிதாசன் வாழ்க! நமது புரட்சிக் கவி வாழ்க! கனக சுப்புரத்தினம் வாழ்க!

பாவேந்தர் மலர் 1946

# 45. வண. பண்டித ஹிஸ்ஸெல்லெ தருமரதன தேரோ

இலங்கையிலே கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஹிஸ்ஸெல்லெ என்னும் ஊரில் கருணாநாயக பதிரன்ன ஹெலாகே என்று பெயர் பெற்ற உயர்தரக் குடும்பத்தில் அருள் திரு. தருமரதன தேரோ பிறந்தார். இவருடைய தந்தையாரின் பெயர் ஹெர்மானிஸ் அப்புஹாமி என்பது; தாயார் திருமதி புஞ்சினோனா குமாரசிங்க ஹாமினே என்பவர். இவர்களுக்கு மூன்றாவது குமாரனாகப் பிறந்த இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் தர்மபாலர் என்பது. தர்மபாலர் 1914 ஆம் ஆண்டு தை மாதம் 26ஆம் தேதி பிறந்தார். இளமையிலேயே இவர் கல்வி பயில்வதில் ஆர்வமுடைய வராய்ப் பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்றார்.

இளைஞரான தர்மபாலர் தம்முடைய பதினாறாவது வயதில் பிக்ஷுவாக எண்ணங் கொண்டு, தம்முடைய உறவினரான திரு. ஞானோதய தேரரிடஞ் சென்று அவருக்குச் சீடரானார். 1930 ஆம் ஆண்டில் புத்த சங்கத்தைச் சேர்ந்து துறவியானார். பிக்ஷுவானவுடன் தருமரதன தேரோ என்று பெயர் பெற்றார்.

பிக்ஷுவான தருமரதன தேரோ, ஞானோதய மகாதேரரால் நிறுவப்பட்ட சரஸ்வதி பிரிவேணா என்னும் கலா சாலையில் சேர்ந்து பாலி, சமஸ்கிருதம், சிங்களம் என்னும் மொழிகளையும், மற்றும் சில சாத்திரங் களையும் கற்றார். 1936 ஆம் ஆண்டில் முதல் பரீட்சையிலும், 1939 ஆம் ஆண்டில் மத்திய பரீட்சையிலும் தேறிப் பின்னர் 1945 ஆம் ஆண்டில் பண்டி தர் பட்டம் பெற்றார். சரஸ்வதி பிரிவேணையில் கல்வி பயின்று கொண்டி ருந்தபோதே இவர், அப்பிரிவேணையின் ஆசிரியராகவும் இருந்து பிள்ளை களுக்குக் கல்வி கற்பித்து வந்தார். தம்மரதன தேரோ அவர்கள் தமிழ் கற்ற வரலாறு குறிப்பிடத்தக்கது. கொழும்பு நகரத்தில் ஆங்கிலம் பயில்வதற்காகத் தேரோ அவர்கள் சென்றபோது தமது சொந்த ஊராகிய ஹிஸ்ஸெல்லெ நகரத்தில் தங்கினார். அவ்வூரில் அப்போது (1945) ஆஸ்பத்திரியின் தலை வராக இருந்தவர் யாழ்ப்பாணத்துத் தமிழரான டாக்டர் ஏ. சின்னதம்பி சிங்கள மொழியை நன்றாகக் கற்க விரும்பி, அங்கு வந்திருந்த தருமரதன தேரோவைக் கண்டு தமக்குச் சிங்கள பாஷையைப் படிப்பிக்கும்படி கேட்டார்.

தேரோ அவர்கள் இந்த வாய்ப்பைத் தமக்குப் பயன்படுத்திக் கொள்ள எண்ணி, ஒரு நிபந்தனையின்மேல் அவருக்குச் சிங்களம் கற்பிப்பதாக உடன் பட்டார். அந்த நிபந்தனை என்னவென்றால், தேரோ அவர்கள் டாக்டருக்குச் சிங்களம் கற்பிப்பதென்பதும், டாக்டர் அவர்கள் தேரோவுக்குத் தமிழ் கற்பிக்க வேண்டும் என்பதுமாகும்.

தேரோ அவர்கள் விரைவில் தமிழைக் கற்றுக்கொண்ட படியால், டாக்டர் சின்னதம்பி அவர்கள் தேரோவை யாழ்ப்பாணத்துக்குப் போய் அங்கே இந்துக் கல்லூரியில் சேர்ந்து தமிழ் படிக்குமாறு கூறினார். தேரோ அவர்கள் யாழ்ப்பாணம் சென்று, இந்து கல்லூரியில் தமிழையும் ஆங்கிலத்தையும் நன்கு பயின்றார்.1946 ஆம் ஆண்டு தமிழில் பண்டித பரீட்சையில் தேறியதோடு, கொழும்பு நகரில் நடைபெற்ற ஓ. எஸ். எஸ். தமிழ்ப் பண்டித பரீட்சையிலும் வெற்றி பெற்றார். இவ்வாறு தமிழ்க் கற்றுத் தேர்ந்ததேரோ அவர்கள். யாழ்ப்பாணத்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆசிரியராக அமர்ந்து மாணவர்களுக்குச் சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்பித்துவந்தார். அதே சமயத்தில், இலங்கைச் சர்வகலா சாலைப் பிரவேச பரீட்சைக்கும் படித்துக் கொண்டிருந்தார். அக்காலத்தில்தான் இவர், தமிழ் சிங்கள மா அகராதியின் முதல் பாகத்தை எழுதி அச்சிட்டார்.

1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கைச் சர்வகலா சாலைப் பிரவேச பரீட்சையில் தேறியவுடன், இலங்கைச் சர்வ கலாசாலையில் சேர்ந்து ஏனைய பாடங்களுடன் சிங்களத்தை முதல் மொழியாகவும் தமிழை இரண்டாவது மொழியாகவும் பயின்று, 1953 ஆம் ஆண்டு பி.ஏ. பரீட்சையில் கௌரவப் பட்டம் பெற்றார்.

பின்னர், இலங்கை மத்திய மாகாணத்தைச் சேர்ந்த நாவலப்பிட்டியில் உள்ள கதிரேசன் கல்லூரியில் ஆசிரியராக அமர்ந்து, ஏறத்தாழ ஐந்து ஆண்டு கல்வி கற்பித்து வந்தார். 1957 ஆம் ஆண்டு கதிரேசன் கல்லூரியைவிட்டு சஹிரா கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகக் கல்வித் தொண்டு செய்தார். அவ்வாண்டு இறுதியில், தம்முடைய குருவாகிய மகாதேராவின் விருப்பப்படி அக் கல்லூரியைவிட்டு சரஸ்வதி பிரிவேணைக்கு வந்து, அதன் துணை முதல்வராகக் கடமை ஏற்றுக் கொண்டு கல்வித் தொண்டினைச் சிறப் பாகச் செய்து கொண்டு வருகிறார்.

சரஸ்வதி பிரிவேணையில் தருமரதன தேரோ அவர்கள் ஆசிரியராக வந்தபிறகு அக் கல்வி நிலையத்தைப் பெரிதும் வளர்ச்சிபெறச் செய்தார். முன்பு கற்பிக்கப்பட்டுவந்த சிங்களம், சமஸ்கிருதம், பாலி, பௌத்த தருமம், சரித்திரம் முதலிய பாடங்களுடன் புதியவாக ஆங்கிலம், தமிழ், சரித்திரம், கணிதம் முதலிய பாடங்களையும் கற்பிக்க ஏற்பாடு செய்தார். S.S.C., H.S.C., U.E. (University Entrance) முதலிய வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. கல்வி பயிலும் மாணாக்கர்களின் தொகை அதிகரித்துக்கொண்டு வந்தது. ஏறத்தாழ 650 மாணாக்கர்கள் கல்வி கற்று வருகின்றனர். பல பௌத்த பிக்குகளும் இலவசக் கல்வி பயின்றுவருகிறார்கள். 1963 ஆம் ஆண்டு இந்த சரஸ்வதி பிரிவேணை, வித்தியோதயப் பல்கலைக்கழகத்துடன் சேர்க்கப் பட்டு, சரஸ்வதி வித்யோதயப் பிரிவேணை என்று பெயர் பெற்றது.

1958 ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பி.ஏ. பரீட்சையில் தேறினார்.

இவ்வாறு பல மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலவராக விளங்கும் தருமரதன தேரோ அவர்கள், பேர்பெற்ற எழுத்தாளராகவும் விளங்குகிறார். இளமையிலேயே இவர் கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதத் தொடங்கினார். இப்போது இலங்கையில் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்கிறார். பல எழுத்தாளர் சங்கங்களிலும் இலக்கியச் சங்கங்களிலும் தலைவராகவும், துணைத் தலைவராகவும் அங்கத்தினராகவும் இருக்கிறார்.

சென்ற ஆண்டு மலாயா நாட்டின் தலைநகரமாகிய கோலாலம்பூரில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டிற்குச் சென்று அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

1962ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் கொழும்பு சஹிரா கல்லூரியில் கூட்டிய கூட்டத்தில் தருமரதன தேரோவுக்கு வெள்ளி விளக்கை வழங்கிக் கௌரவப்படுத்தியது.

1960ஆம் ஆண்டு, இலங்கையிலுள்ள பதுளை நகரத்தில் உள்ள மலையக் கலை இலக்கிய மன்றம் இவருக்கு வெள்ளிப் பதக்கம் அளித்துப் பாராட்டியது.

இவர் எழுதியுள்ள பத்தினி தெய்யோ, தென் இந்திய பௌத்த வரலாறு முதலிய நூல்களுக்கு இலங்கை அரசாங்கமும், இலங்கை சாகித்திய மண்டலமும், யூனெஸ்கோ (Unesco) தாபனமும் பரிசுகள் வழங்கியுள்ளன.

இப்போது சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தாராகிய நாம் இவருக்கு வெள்ளிப் பதக்கம் வழங்கிக் கௌரவப்படுத்தி மகிழ்கிறோம்.

பேராசிரியர் தருமரதன தேரோ அவர்கள் எழுதியுள்ள நூல்களாவன:

1. தமிழ் - சிங்கள மா அகராதி (முதல் பாகம்), 1948.

2. இரகுவமிச கதாமிருத அரும்பதவுரை, 1949

3. மணிமேகலைச் சம்பு (மணிமேகலை என்னும் தமிழ்க் காவியத்தின் சிங்கள மொழிபெயர்ப்பு), 1950.

4. பத்தினி தெய்யோ (சிலப்பதிகாரக் காவியத்தின் சிங்கள மொழி பெயர்ப்பு) 1958. (இலங்கை அரசாங்கத்தின் ரூபாய் 1500 பரிசு பெற்றது).

5. சிங்கள மொழிமேல் தமிழ் மொழி செலுத்திய ஆதிக்கம் (Tamil Influence of Sinhalese Language - சிங்கள பாஷையில் எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல்), 1961.

6. தென் இந்தியாவில் பௌத்தமத வரலாறு (சிங்களத்தில் எழுதப்பட்ட நூல். 1964-ல் இந்நூலுக்கு ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலம் ஒரு பரிசையும், யூனெஸ்கோ நிலையம் ஒரு பரிசையும் வழங்கியுள்ளன).

7. தமிழ் இலக்கணம் (சிங்கள மொழியில் எழுதப்பட்டது),1965

8. மகாவமிசம் (தமிழ் மொழிபெயர்ப்பு. இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி பாலி பாஷையிலிருந்து, மொழி பெயர்க்கப்பட்டது), 1960 (அச்சில்)



9. ஆர்திக வித்யா பிரவேசம் (சிங்களப் பொருளியல் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. இலங்கை அரசாங்க மொழிப் பகுதியின் வேண்டுகோளின்படி எழுதப்பட்டது).

10. சீவகசிந்தாமணி என்னும் பெருங்காப்பியத்தின் சிங்கள மொழிபெயர்ப்பு (அச்சில்).



பாரதி 14 வது தமிழ் எழுத்தாளர் மாநாட்டுச் சிறப்பு மலர்
- பெங்களூர் தமிழ்ச்சங்கம் - 1968

## 46. சிறப்புரை

தமிழகத்துக்கு மிகவும் தேவையாக இருந்த காலத்திலே நீதிக்கட்சி என்றும் சுயமரியாதை (பகுத்தறிவு) இயக்கம் என்றும் இரண்டு இயக்கங்கள் தோன்றி. தமிழ்நாட்டு அரசியலிலும் தமிழ்ச் சமுதாயத்திலும் பெரிய புரட்சிகளைச் செய்து வெற்றியடைந்தன. ஜஸ்டிஸ் பார்ட்டி (நீதிக்கட்சி)யை 1916 - ஆம் ஆண்டு சர். பி.தியாகராச செட்டியார் தோற்றுவித்துத் திராவிட மக்களை (பார்பனரல்லாதாரை) உறக்கத்திலிருந்து விழிக்கச் செய்தார்.

*1925 - ஆம் ஆண்டில் ஈ.வெ.ரா. பெரியார் சுயமரியாதை (பகுத்தறிவு) இயக்கத்தை உண்டாக்கிப் பார்ப்பனரல்லாத திராவிட மக்களை இழிவிலிருந்து உயரச் செய்தார்.*

*இரண்டு இயக்கங்களும், பார்ப்பன இனம் காங்கிரசுக் கட்சியைத் தங்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொண்டு பார்ப்பனரல்லாதவரைக் கட்டுப்பாடாக அரசியலிலும் சமுதாயத்திலும் உயராமல் அடக்கி அழுத்தி வைத்துக் கொண்டிருந்த காரணத்தினால் தோன்றியவை. நீதிக்கட்சி, அரசியலில் பார்ப்பனரல்லாதாரை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அரசியலிலும் ஆட்சியிலும் திராவிட மக்கள் பங்கு பெற உழைத்த நீதிக்கட்சி ''அரசியல் பார்ப்பனர்களை நம்பாதே'' என்று குரல் கொடுத்து மக்களை எழுப்பிற்று. பார்ப்பனரல்லாத திராவிட மக்களைச் சமூகத் தாழ்விலிருந்து உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட சுயமரியாதை இயக்கம், திராவிட மக்களை மூடப் பழக்கவழக்கங்களில் அழுத்தி, அவர்களை முன்னேற விடாமல் தடைசெய்து கொண்டிருப்பவர் வைதீகப் பார்ப்பனர் என்று கண்டு ''வைதீகப் பார்ப்பனரை நம்பாதே'' என்று குரல் எழுப்பிற்று. மதம், சாமி, கோயில், குளம், வேதம், புராணம் இவைகளைக் காட்டி, தமிழரை முன்னேற விடாமல் வைதீகப் பார்ப்பனர் அமிழ்த்திக் கொண்டிருந்ததைச் சுயமரியாதை இயக்கம் விளக்கிப் பாமர மக்களுக்குச் சுயமரியாதை உணர்வை ஊட்டியது.*

*இந்த இரண்டு இயக்கங்களும் நாட்டில் செல்வாக்கடைந்து தாங்கள் கண்ட கொள்கையில் வெற்றிபெற்றன. பிற்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியைப் பெரியார் ஈ.வெ.ரா. ஏற்றுக்கொண்டு திராவிடர் கழகம் என்னும் பெயரினால் நடத்தினார். அதாவது அரசியல் கட்சியையும் சமுதாய முன்னேற்ற இயக்கத்தையும் ஒன்றாக இணைத்து நடத்தினார். ஜஸ்டிஸ் கட்சி என்னும் நீதிக் கட்சியை வளர்த்தவர்கள் பலர். அவர்கள் எல்லோரும் ஆங்கிலத்தில் பேசியே கட்சியை வளர்த்தவர்கள். ஜே.எஸ். கண்ணப்பர் (ஜனக சங்கர கண்ணப்பர்) ஜே.என். இராமநாதன். டி.வி. சுப்பிரமணியம் ஆகிய மூவர் மட்டும் அக்காலத்தில் நீதிக்கட்சியின் பிரசாரகர்களாக இருந்து தமிழில் பேசி நீதிக்கட்சியை வளர்த்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக 'ஜஸ்டிஸ்' என்னும் ஆங்கில தினசரிப் பத்திகையும் 'திராவிடன்' என்னும் தமிழ் தினசரிப் பத்திகையும், ஒரு தெலுங்கு தினசரிப் பத்திரிகையும் வெளியிடப்பட்டன. ப்ர்ப்பனர் ஆண் பெண்களும் குஞ்சுகுட்டிகளும் கூட தமிழரைச் சூத்திரர் என்று கூறுவது சர்வ சாதாரணமான தினசரிப் பேச்சாக இருந்தது. அப்போது*

'சூத்திரன் என்றால், ஆத்திரங் கொண்டடி' என்று நாட்டில் சுலோகங்கள் எழும்பின.

ஈ.வெ.ரா. பெரியார் அமைத்த சுயமரியாதை இயக்கம் நாட்டின் தாய்மொழியாகிய தமிழில் பேசிப் பிரசாரம் செய்தது. ''குடி அரசு' என்னும் வாரப்பத்திரிகையும் 'பகுத்தறிவு' 'ரிவோல்ட்' என்னும் பத்திரிக்கைகளும் வெளியிடப்பட்டன. வைதீகப் பார்ப்பனர், சாமியின் பேரால், மதத்தின் பேரால், புராண இதிகாசங்களின் பேரால் 'உயர்ந்த' சாதி 'தாழ்ந்த' சாதிகளை உண்டாக்கித் திராவிட மக்களை இழிவான தாழ்ந்த நிலையில் வைத்திருப் பதையும் 'உயர்ந்த சாதி' என்று தங்களைக் கூறிக்கொண்டு பார்ப்பனருக்கு ஆதரவு காட்டிக்கொண்டிருக்கும் சாதி இந்துக்களின் அறியாமையையும் எடுத்துக்காட்டி சுயமரியாதை பிரசாரஞ் செய்தது. இந்த இயக்கத்துக்கு நாட்டில் பேராதரவு இருந்தது அதே சமயத்தில் வைதீகர்களின் எதிர்ப்பும் 'உயர்சாதி' யாரின் எதிர்ப்பும் சுயமரியாதை இயக்கத்துக்கு உண்டாயின. சுயமரியாதை இயக்கத் தலைவரைப் பற்றி இழிவாகப் பேசி வைத்ததல்லாமல் வைதீகரும் அவரைச் சார்ந்தவர்களும் காலிகளையும் விட்டு, சுயமரியாதைக் கூட்டங்களில் சாணி உருண்டை எறிவதும் கல்வீசுவதும் குழப்பம் செய்வது மாக இருந்தார்கள்.

பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்கத்தை அவருடன் சேர்ந்து வளர்த்தவர் பலர். அவர்களில் தோழர் குருசாமியும் ஒருவர். கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்ட தோழர் குருசாமி, குடியரசு பத்திரிகையைத் தொடர்ந்து படித்து வந்த காரணத்தினால், சுயமரியாதைக் கட்சியில் ஈடுபட்டு, பெரியாரிடம் வந்து சேர்ந்தார். இயக்கப் பிரசாரகர் ஆனார். சொற்பொழிவு கள் செய்வதும் கட்டுரைகள் எழுதுவதும் அவருக்கு தினசரி வேலையாக இருந்தன. தோழர் குருசாமி அவர்கள் உயர்ந்த தமிழ்நடையில் எழுதவும் பேசவும் வல்லவர். ஆனால் எல்லோருக்கும் புரிவதற்காக அவர் சாதாரண எளிய நடையை மேற்கொண்டார். குருசாமி அவர்கள் தீவிர பகுத்தறிவுவாதி, சீர்திருத்தக்காரர், மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தவர். பேச்சிலும் எழுத்திலும் மட்டுமல்ல, செயலிலும் செய்து காட்டியவர். தொண்டை மண்டல முதலியார் என்னும் 'உயர்ந்த' குலத்தவர் என்று கருதப்பட்ட குலத் தில் பிறந்த இவர், தாழ்ந்தகுலம் என்று கருதப்பட்ட இசைவேளாளர் இனத்தில் பிறந்த குஞ்சிதம் அம்மாளைத் தம்முடைய குலத்தவரின் எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் திருமணம் செய்து கொண்டார். இவர் செய்தது

கலப்பு மணம் மட்டும் அன்று; வைதீகச் சடங்கு இல்லாத சீர் திருத்தத் திருமணம் ஆகும். குஞ்சிதம் அம்மையார் குருசாமியைப் போலவே பி.ஏ. பட்டம் பெற்றவர்.

குஞ்சித அம்மாளின் தங்கையும் குருசாமியின் மைத்துனியும் ஆகிய திருமதி காந்தம் அம்மாளும் கல்லூரியில் உயர்தரப் படிப்புப் படித்துப் பட்டம் பெற்றவர். காந்தம் அம்மாளைத் திருமணம் செய்து கொண்டவர் தோழர் சுந்தரவடிவேலு அவர்கள். (இப்போது 'பத்மஶ்ரீ' என்னும் தாமரைச் செல்வர் விருதுபெற்று சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்கிறார்) சுந்தரவடிவேலு அவர்கள் 'உயர்ந்த' முதலியார் குலத்தில் பிறந்தவர். இவர் சுயமரியாதைக் கொள்கையுடையவர். பகுத்தறிவுவாதி. இவரும் காந்தம் அம்மையாரைக் கலப்புமணம் செய்து கொண்டார். கலப்புமணம் மட்டும் அன்று, சீர்திருத்தத் திருமணம், அதிலும் பதிவுத் திருமணம் செய்து கொண்டவர். இவர்களைப் போல பல தோழர்களும் தோழியரும் கலப்புத் திருமணங்களையும் சீர்திருத்தத் திருமணங்களையும் அக்காலத்தில் செய்து கொண்டார்கள். கலப்புத் திருமணங்களைச் செய்துகொண்ட பல தம்பதி களின் படங்கள் அச்சிடப்பட்ட 'காலண்டர்' அக்காலத்தில் இயக்கத் தோழர் களின் வீடுகளை அலங்கரித்தன. இக்காலத்தில் கலப்புத் திருமணங்களும் சீர்திருத்தத் திருமணங்களும் சாதாரணமாகி விட்டன. அக்காலத்தில் கலப்புத் திருமணங்கள் செய்து கொள்வதற்கு மனவுறுதியும் தைரியமும் வேண்டியிருந்தது.

இக்காலத்தில் பகுத்தறிவு இயக்கம் சுயமரியாதை இயக்கம் என்றால் கவுரவமாகவும் சிறப்பாகவும் கருதப்படுகிறது. சமுதாயத்தில் நன்கு மதிக்கப் படுகிறது. ஆனால், அந்தக் காலத்தில் சுய மரியாதைக்காரருக்குச் சமுதாயத் தின் ஏளனமும் ஏக்கமும் பேச்சும் தான் கிடைத்தது.

இவ்வாறு சுயமரியாதை, பகுத்தறிவு இயக்கங்களை வளர்த்து வந்தவர்கள் பலரில் தோழர் குருசாமி, பெரியார் ஈ.வெ. ராவுக்கு அடுத்த படியாகக் கருதப்பட்டார். இயக்கத்தில் ஆழ்ந்த பற்றும், உறுதியும், தன்னல மில்லாத தியாகமும், பிரசாரமும், தொண்டும், எழுத்தும் ஆகிய இவை யெல்லாம் தோழர் குருசாமியைப் பெரியார் அவர்களுக்கு அடுத்த நிலையில் உயர்த்திவிட்டன. தோழர் குருசாமி எண்ணியிருந்தால் அரசாங்க உத்தி யோகத்தில் உயர்ந்த பதவியைப் பெற்று, தன்னளவில் சுகமாகவும் சிறப் பாகவும் வாழ்ந்திருக்கலாம். ஆனால், இயக்கக் கொள்கைகளைப் பரப்பு

வதையே குறிக்கோளாகக் கருதியபடியால் பெரிய உத்தியோகப் பதவியை நாடவில்லை. எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். தமிழ்நாட்டில் சுய மரியாதை இயக்கத்தைப் பரவச் செய்து வளர்க்கக் காரணமாக இருந்தவருள் முன்னோடி இவரே.

1927 முதல் 1965 ஆம் ஆண்டுவரையில் 38 ஆண்டுகளாக இயக்கத்தை வளர்த்த தோழர் குருசாமி மறைந்துபோனார். அவர் மறைந்து பத்து அண்டுகள் ஆகின்றன. சுயமரியாதை இயக்கம் பகுத்தறிவு இயக்கங் களின் ஆதரவாளன் என்னும் முறையில் இயக்கத் தலைவர்கள் தொண்டர் முதலான பலர் எனக்கு அறிமுகமானவர்கள். அவர்களில் தோழர் குருசாமி யுடன் நான் நெருங்கிப் பழகியவன்.

இயக்கத்துக்காக உழைத்துப் பாடுபட்ட தொண்டர்கள் பலர் மறைந்து போனார்கள். அவர்களுடைய பெயர்கள்கூட மறக்கப்பட்டுவிட்டன. குருசாமியின் பெயர்கூட மறக்கப்படுமோ என்று நான் அடிக்கடி கருதிய துண்டு. இந்தச் சமயத்தில், குருவிக்கரம்பை திரு. வேலு அவர்கள் தோழர் குருசாமி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வெயிடுவதைக் கண்டு உவகையடைந்தேன்.திரு. வேலு அவர்கள் விரும்பியபடி இந்நூலுக்கு முகவுரை எழுதினேன். திரு. வேலு அவர்கள் இந்த நூலை எழுதி வெளியிடா மலிருந்தால், தோழர் குருசாமியின் பெயரே காலப் போக்கில் மறக்கப்பட்டு மறைந்துபோயிருக்கும். குருசாமி அவர்களின் வாழ்க்கை வரலாறு அவருடைய பெயரை நிலைபெறச் செய்வது மட்டுமல்ல; அவர் இயக்கத் துக்குச் செய்த தொண்டுகளை நினைவு கூரத்தக்க ஒரு சான்றாகும். தமிழ் இலக்கியங்களில், வாழ்க்கை வரலாறு என்னும் பகுதியில் வெளிவந்த நூல்கள் மிகச் சிலவே. அதிலும் சுயமரியாதை, பகுத்தறிவு இயக்கத்தில் சேர்ந்தவர்களின் வாழ்க்கை வரலாறு மிகமிகச் சில.

இந்தச் சிலவற்றில் ஒன்று குருசாமியின் இந்த வாழ்க்கை வரலாற்று நூல்.

இந்த நூல், சுருக்கமும் இல்லாமல் பெருக்கமும் இல்லாமல் கச்சிதமாக எழுதப்பட்டிருக்கிறது. கடினமான நடையில் இல்லாமல் எல்லோரும் படித்துப் புரிந்துகொள்ளும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது. சிரமப்பட்டுச் சான்றுகளைத் தேடிப்பிடித்து இந்நூலை எழுதி அச்சிட்ட குருவிக்கரம்பை வேலு அவர்களைத் தமிழுலகம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இந்

நூலைப் படிக்கும்போது, இந்நூலில் கூறப்படுகிற பல தோழர்களை நேரில் சந்திப்பது போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் சுய மரியாதை - பகுத்தறிவு இயக்கத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நான் அவர்களை எல்லாம் நன்கறிந்தவன். குருசாமியோடு பழகிய நண்பர் கள் பலர் இன்றும் உயிரோடு வாழ்கிறபடியால், அவர்களுக்கு இந்த நூல் நல்ல விருந்தாக இருக்கும். மற்றவர்களுக்கும் இந்நூல் ஒரு பகுத்தறிவு வாதி யின் வாழ்க்கையை அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். இதுபோன்ற வேறு சில நூல்களைக் குருவிக்கரம்பை வேலு அவர்கள் எழுதித் தமிழுல கத்துக்கு உதவுவார்களாக.

**'குத்துசி குருசாமி' என்னும் நூலுக்கு வழங்கிய**
**சிறப்புரை - 1975**

# 47. நற்பண்பாளர்

அவரைப்பற்றி எழுதத் தொடங்கும்போது சிந்தனை சிதைகிறது. மனம் பதறுகிறது. மனிதப் பண்புள்ள ஒரு நல்ல நண்பரைத் திடீரென்று இழந்து விட்டோமே என்கிற கவலை மேலெழுகிறது. மனிதவாழ்க்கை எவ்வளவு மின்னல் வேகத்தோடு செல்லுகிறது என்பது புலனாகிறது. பகுத்தறிவாளராக வாழ்ந்து, 'விடுதலை' 'குத்தூசி' என்னும் பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்து நாட்டுக் குத்தொண்டாற்றிய குருசாமி அவர்கள், எதிர்பாரத வண்ணம் திடீர் என மறைந்துவிட்டது பெருந் திகைப்பை உண்டாக்கி விட்டது. அவருடைய துணைவியார் மறைவு ஏற்கனவே துன்பத்தில் ஆழ்த்தியது. குருசாமியின் மறைவு. அத்துன்பத்தை மேலும் அதிகப்படுத்தி விட்டது.

அவர்களை நினைக்கும்போது அவருடைய துணைவியார் குஞ்சிதம் அம்மையாரை எண்ணாமல் இருக்கமுடியாது. குருசாமி என்றால் குஞ்சிதம். குஞ்சிதம் என்றால் குருசாமி. இருவரும் பிரித்தறிய முடியாத ஒத்த வாழ்க்கையுடைவர்கள். இருவரில், எவரால் எவர் வாழ்க்கை சிறப்படைந்தது என்று பிரித்துரைக்க முடியாது. இருவரும் பகுத்தறிவு கொள்கை, மனிதப் பண்பு உடையவர்கள்.

பகுத்தறிவு இயக்கம் (சுயமரியாதை இயக்கம்) தமிழ் நாட்டில் பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்தது; அவ் வியக்கத்தில் சேர்ந்து உழைத்தவர்கள் பலர். அப்பலரில் முக்கியமானவர் திரு.சா. குருசாமி அவர்கள், சென்னை நகர வட்டாரத்திலே திரு. குருசாமி அவர்களும்

குஞ்சிதம் அம்மையாரும் பகுத்தறிவு இயக்கத்துக்கு அடிகோலினார்கள். சென்னையிலே கடற்கரைகளிலும், மற்ற இடங்களிலும் பகுத்தறிவு இயக்கக் கூட்டங்கள் பலவற்றை அவர்கள் நடத்தினார்கள். அவ்வியக்கம் நாடெங்கும் பரவிற்று.

மேடையில் ஏறி வாய்ப்பேச்சில் பகுத்தறிவு பேசுவதும், ஏட்டில் எழுதுவதும் மட்டுமல்ல, அவர்களின் செயல், வாழ்க்கையிலே அக்கொள்கை களைச் செய்து காட்டினார்கள்.

குஞ்சிதம் அம்மையார், நகைகளை அணியும் வாய்ப்புப் பெற்றிருந் தும் நகைகளை அணிவது இல்லை. பெண்கள் நகை அணிவது முட்டாள் தனம் என்று அவர் கருதினார். தலையில் பூச்சூடுவது இல்லை. நெற்றியில் குங்குமம் அல்லது சாந்து அணிவது இல்லை. இவைகளை அணிவது பகுத்தறிவுக்கு ஏற்றதன்று, அவை சமயச் சடங்குகள், மதச்சடங்குகள் என்று அவர் கருதினார்.

நகையணியாமலிருப்பது சரிதான். தலையில் பூ அணிவது மதக் கொள்கையா? அழகுக்காக ஏன் பெண்கள் பூ அணியக் கூடாது? நெற்றியில் குங்குமம் அணிவது மதக் கொள்கையா? ஏன் அழகுக்காகப் பெண்கள் குங்குமம் அணியக் கூடாது? என்று அவருடன் நான் வாதிப்பது உண்டு.

இவர்களுக்கு நாடெங்கும் நண்பர்கள் உண்டு. அந்த நண்பர்கள் எல்லோரும் பகுத்தறிவு இயக்க நண்பர்கள் என்று கூறமுடியாது. பல கட்சி, பல இயக்க, மதத்தைச் சேர்ந்தவர்களும் அவர்களுக்கு நல்ல நண்பர்களாக இருந்தார்கள். இதன் காரணம் என்னவென்றால், இவர்கள் இருவரும் நல்ல மனிதப் பண்புடையவர்கள். மாற்றுக் கட்சியாருங்கூட, இவர்களைத் தனிப்பட்ட முறையில் நட்புக் கொண்டாடினார்கள்.

பகுத்தறிவு வாழ்க்கையே இவர்களுக்குக் குறிக்கோளாக இருந்தது. இந்தக் கொள்கைக்காகவே இவர்கள் செயலாற்றினார்கள் இவர்களின் குடும்பச் சூழ்நிலையும் இதற்கு ஏற்றதாக அலமந்திருந்தது. கடைசிவரையில் இவர்கள் பகுத்தறிவு சுயமரியாதை வாழ்க்கையே வாழ்ந்தார்கள்.

இவர்கள் பெயரைச் சொல்ல நல்ல காலமாக இவர்களுக்கு இரண்டு மக்கள் பிறந்தனர். என்ன! இது ஒரு புதுமையா என்று வாசகர் கருதக்கூடும். ஆம்! இவர்கள் வாழ்க்கையில் இது ஒரு புதுமைதான். குருசாமி அவர்களும் குஞ்சிதம் அவர்களும் பல ஆண்டுகளாகக் கருத்தடை செய்து வந்தனர்.

வேண்டுமென்றே அவர்கள் திட்டமிட்டுச் செய்த செயல் இது. இந்தக் கட்டுப் பாடு 'நாயனா' (திரு. சுப்பிரமணியப் பிள்ளை) அவர்களுக்கு மன வருத்த மாக இருந்தது. பேரன் பேத்திகளைக் காண வேண்டும் என்பது அவருடைய ஆசை.

இவர்கள் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்; ஓரிரண்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளக் கூடாதா என்று அவர் என்னிடம் கூறுவதுண்டு. குடும்ப நண்பராகப் பழகிய நான் இவர்களோடு வாதித்தேன். முதலில் இவர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. பகுத்தறிவுக் கருத்துள்ள காரணத்தைக் கூறியபோது அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஒரு மகனும் ஒரு மகளும் இவர்களுக்குத் தோன்றினார்கள். பிறகு மீண்டும் கருத்தடை செய்துவிட்டார் கள். 'நாயனா'வுக்குப் பேரன் பேத்திகளைக் கண்டு உண்டான மகிழ்ச்சி சொல்லி முடியாது. இவ்விளைஞர்கள் நீடு வாழ்க!

இவர்கள், தங்கள் தொழில் நேரம் தவிர ஏனைய ஓய்வு நேரங்களில் எல்லாம் பகுத்தறிவுப் புத்தகங்களைப் படிப்பதும், ஆராய்ச்சி செய்வதும். கூட்டங்களில் பேசுவதும், மாநாடுகளில் பங்கு கொள்வதுமாக இருந்தார்கள். தமிழ்நாடு முழுவதும் இவர்கள் பெயரை அறியாதவர் இல்லை. மனிதனாகப் பிறந்தவன் எந்தத் துறையிலாவது புகழ்பெற வேண்டும். இவர்கள் அந்தப் புகழைப் பெற்று இருந்தனர்.

இவர்கள் வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அவற்றை யெல்லாம் தொகுத்து இவர்களின் வாழ்க்கைச் சரித்திரமாக வெளியிடுவது நலம்.

குருசாமி, குஞ்சிதம் இவர்களின் வாழ்க்கை இனிய நல்ல மகிழ்ச்சி கரமான வாழ்க்கையாக இருந்ததைக் கண்டேன். அந்தக்காட்சி எனக்கு மகிழ்ச்சி கரமாக இருந்தது. இவர்கள் ஆன்மா சாந்தி பெறுவதாக.

**அமைதி, அமைதி, அமைதி.**

**- குத்தூசி குருசாமி நினைவுமலர் 1966**

# 48. நான் கண்ட பெருந்தமிழன்

தமிழறிஞர் உலகத்திலே, பல்லாவரம் என்றால் மறைமலை அடிகள் என்றும், மறைமலை அடிகள் என்றால் பல்லாவரம் என்றும், எண்ணம்

உண்டாவது மரபு. பல்லாவரத்திற்குச் சென்று மறைமலை அடிகளைக் கண்டு அவருடன் அளவளாவித் திரும்பி வரும்போது, ஒரு புனிதமான இடத்திற்கு யாத்திரை சென்று வழிபட்டு மன அமைதியோடு திரும்பி வருவதுபோன்று உணர்ச்சி எனக்கு ஏற்படுவது உண்டு. இதன் காரணம் யாது? சமயப் பற்றா? அன்று. சாத்திரப் பற்றா? அதுவும் அன்று. பின்னை என்னை எனின், அப் பெரியாரிடத்தில், அவரது பேச்சிலும் எழுத்திலும் காணப்பட்ட தூய தனித் தமிழ்! கலப்பற்ற நல்ல இனிய தமிழ்! அடிகளார் பேசும் மெல்லிய இனிய அழகிய தமிழைக் கேட்கும்போது, அவரது கலப்பற்ற தூய தமிழைச் செவிமடுக்கும்போது, உள்ளத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் உணர்ச்சியும் பெருகும். நாமும் தனித்தமிழ் பேசவேண்டும் என்னும் ஊக்கம் பிறக்கும். அடிகளார் இயற்றிய நூல்களைப் படிக்குந்தோறும் இவ்வித உணர்ச்சிகளே உண்டாக்கின்றன. மறைமலையைக் கண்டு அளவளாவியது எனது வாழ்நாட்களில் ஐந்து தடவை மட்டுந்தான். (அடிகளார் சொற்பொழிவு களைப் பலமுறை கேட்டு அவரது ''செந்தமிழால் செவி கழுவி'' யுள்ளேன்) ஒவ்வொரு தடவையும், அடிகளாரிடம் குடி கொண்டிருந்த தூய தனித்தமிழ், அவரிடம் பெருமதிப்புக் கொள்ளச்செய்தது. அவரைப்பற்றி நினைக்கும் போதெல்லாம், அடிகள் ஒரு பெருந்தமிழன் என்று என் உள்ளம் சொல்லிக் கொண்டது.

சில ஆண்டுகளுக்கு முன்னர், பல்லாவரத்தில், அடிகளார் மாளிகை யில், பொதுநிலைக் கழக விழா நடைபெற்றது. அடிகளார் தலைமை தாங்கி னார்கள். பல பேச்சாளர்களுள் திரு. மறை. திருநாவுக்கரசு அவர்களும் ஒருவர். திருநாவுக்கரசு அவர்கள், தமது சொற்பொழிவில், உரிமையோடு அடிகளாரைப்பற்றிச் சில கூறினார்கள். அவற்றில், ''அடிகளார் மிக்க கெர்வமுடையவர்,'' என்பதும் ஒன்று. உடனே, தலைமை தாங்கிய அடிகளார் மலர்ந்த முகத்துடன் ''கர்வம் என்று சொல்லாமே இறுமாப்பு என்று சொல்,'' என்று திருத்தினார்கள். தம்மைக் குறை கூறுவதாக இருந்தாலும் அதனைத் தூய தனித் தமிழிலே கூறவேண்டும் என்பது அத்தமிழ்ப் பெரியாரின் தனிமாண்பு. ''பைந்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் பெருமான்'' என்று ஒரு பெரியார் தமது வழிபடு கடவுளைப் பற்றிக் கூறியது அவ்வமயம் நினைவுக்கு வந்தது.

தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்து, அதனைத் தமது வாழ்நாள் வரையில் பேச்சிலும் எழுத்திலும் வாழ்க்கையிலும் இடைவிடாது நிறை

வேற்றிய பெருந்தமிழன் மறைமலையடிகளாரின் பருவுடல் மறைந்து விட்டது. ஆனால், அவரது புகழுடம்பு தமிழ் நாடெங்கும் தமிழ்க் காற்றுடன் கலந்து வீசுகிறது. வாழ்க அவர் புகழ்.

மறைமலையடிகளின் அமைதியான தோற்றமும், இனிய குரலும், தனித்தமிழ்ப் பேச்சும் எமது மனத்தை விட்டகலா. அவரை நினைக்கும்போ தெல்லாம் என் மனம், அடிகள் ஒரு பெருந்தமிழன் என்று கூறுகிறது.

**செந்தமிழ்ச்செல்வி - சிலம்பு 25**

# 49. கவிமணிக்கு அஞ்சலி

நம்முடைய தலைமுறையில் வாழ்ந்த கவிஞர் பெருமக்களில் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களும் ஒருவர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களைத் தமிழுலகம் நன்கு அறியும். அவர் தேசிய இயக்கத்தில் சார்ந்திருந்தப்படியாலும் தேசிய விநாயகம் பிள்ளை என்றும் கூறுவது உண்டு. கவிமணி அவர்கள் தமிழ்க் கவிதைகளைப் பாடித் தமிழ் இலக் கியத்தை வளர்த்தார்கள். அவருடைய செய்யுட்கள் அழகு இனிமை உண்மை தெளிவு முதலிய நற்பண்புகள் பெற்று மிளிர்கின்றன. கவிமணி என்னுஞ் சிறப்புப் பெயர் அவருக்குச் சாலப் பொருந்தும். அவர்கள் இயற்றிய பாடல்கள் பலவகைப்பட்டவை. சிறுவர் முதல் முதியவர் வரையில் எல்லோருக்கும் அவர் கவிதை இயற்றினார். சமரச நோக்குடைய அவர் எல்லா மதங்களையும் போற்றினார். அவர் வாழ்ந்த காலம் தேசிய இயக்கக் காலம். மகாத்மா காந்தியடிகள் இந்திய சுதந்திரப் போரை நடத்தின காலம். சீர்திருத்தம், தீண்டாமை ஒழிப்பு முதலான சீர்திருத்தங்கள் நடைபெற்ற காலம். உலக மகாயுத்தங்கள் நடந்த காலம். இவற்றின் சாயல்கள் கவிமணியினுடைய சில கவிதைகளில் காணப்படுகின்றன. கவிமணி அவர்கள் ஆங்கிலம் பயின்றவர்கள். ஆங்கில மொழிச் செய்யுட்களை அறிந்த அவர் அம்முறையில் தமிழ்ச் செய்யுட்களைப் பாடியுள்ளார்.

தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் சமகாலத்தில் வாழ்ந்த புலவர்கள். சுதந்திரப் போராட்டம் நடந்த அக்காலத்தில் காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களில் சுப்பிரமணிய பாரதியாரின் தேசியப் பாடல்கள் பாடப்படுவதுண்டு. அந்தப் பாடல்கள் மக்களுக்கு உணர்ச்சியையூட்டின. கவிமணி அவர்கள் பாரதியின் பாடல்களைப் பாராட்டி னார். பாராட்டினது மட்டுமன்று, மனமாரப் புகழ்ந்து மகிழ்ந்தார். பாம்பின்கால்

பாம்பறியும் என்பது பழமொழி. கவிஞரின் கவிதைகளைக் கவிஞரே நன்கறிவார்கள். 'பாரதி பாடலும் பட்டிக்காட்டானும்'' என்னும் செய்யுளில் கவிமணி அவர்கள் பாரதியின் பாடல்களைப் புகழ்ந்து பாடுவது இனிமை யாக இருக்கிறது.

**பாட்டுக்கொரு புலவன் பாரதியடா - அவன்**
**பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா**
**கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா - அந்தக்**
**கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா**

என்று தொடங்கிப் பாரதியின் கவிதையின் சிறப்பைப் பாடி மகிழ்கிறார் கவிமணி. பாரதியின் 'கரும்புத்தோட்டம்,' 'செந்தமிழ் நாடு', 'பாப்பாப் பாட்டு', 'பாஞ்சாலிசபதம்,' 'வந்தே மாதரம்' 'எங்கள் நாடு', 'சின்னஞ் சிறுபாட்டு', 'தொண்டுசெய்யுமடிமை' முதலான பாரதியின் பாட்டுக்களைக் கவிமணி பாராட்டிப் பாடுகிறார்.

ஓர் எழையின் பிராத்தனை' என்னுஞ் செய்யுளிலே கவிமணி அவர் கள், ஐரோப்பா கண்டத்தில் மூண்ட இரண்டாம் உலகப் போரினால் ஏனைய நாடுகள் அடைந்த துன்பங்களையும் துயரங்களையும் பாடுகிறார். சிங்கப் பூரையும் பர்மாவையும் ஜப்பான் பிடித்துக் கொண்டதையும் உலகத்தில் பஞ்சமும் பட்டினியும் பரவினதையும் தேசியத் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதையும் மற்றும் போர்க்காலத்து இன்னல்களையெல்லாம் கூறுகிறார். 'தீண்டாதார் விண்ணப்பம்', 'தீண்டாமைப்பேய்,' 'காங்கிரஸ் கப்பல்', 'கதர் விற்பனை,' 'வட்டமேசை மகாநாடு' போன்ற இவருடைய கவிதைகள் இவர் காலத்தில் நமது நாட்டில் இருந்த முக்கியமான பிரச்சினைகள்.

இயேசு கிறிஸ்து, புத்தர் பெருமான், மீராபாய் போன்ற பெரியவர் களைப் பற்றிக் கவிமணி அவர்கள் பாடியுள்ளார். இயேசு கிறிஸ்துவைப் பற்றி 'இரக்ஷகர்' என்னும் செய்யுளிலும், புத்தரின் வரலாற்றில் ஒரு பகுதியைச் 'சித்தார்த்தர் கேட்ட தேவகீதம்' என்னும் செய்யுளிலும், மீராபாய் வரலாற்றை 'அன்பின் வெற்றி' என்னும் செய்யுளிலும் பாடியுள்ளார். எர்வின் அர்னால்டு என்னும் ஆங்கிலக் கவிஞர் புத்தர் பெருமானின் அழகான வரலாற்றை கவிதையாக எழுதியுள்ளார். அந்தக் கவிதை நூலைப் பின்பற்றிக் கவிமணி அவர்கள் 'ஆசிய ஜோதி' என்னும் கவிதை நூலை அழகாகப் பாடியுள்ளார். இச்செய்யுட்கள் இனிமையாக உள்ளன.

இனிமையும் அழகும் உள்ள கவிதைகளுக்குப் பாரசீக மொழி பேர் போனது அறிஞர் மெச்சிப் புகழ்கிறார்கள். பாரசீக மொழிக் கவிதைகளில் உமார்கயாம் என்னும் கவிஞர் இயற்றிய ருபையத் என்னும் செய்யுட்கள் பேர்போனவை. இந்த உலக வாழ்க்கையில் இன்பங்களை அச்செய்யுட்களில் உமார்கயாம் பாடியுள்ளார். அந்தக் கவிதைகளை மேல் நாட்டார் விரும்பிப் படித்து மகிழ்வர். உமார்கயாம் செய்யுட்கள் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கவிமணி அவர்கள் அவற்றில் சில பாடல்களைத் தமிழில் பாடியுள்ளார். அவை 'உமார்கயாம் பாடல்கள்' என்பவை. உமார் கயாம் தம்முடைய செய்யுட்களில் மதுக்கிண்ணத்தையும், அழகான மங்கை யும், பாரசீகக் கவிதைகளில் தலை சிறந்த ஒரு நூலின் பெயரையும், இனிய இசைகளையும் புகழ்ந்துள்ளார். அப்பாடலை மொழிபெயர்த்துப் பாடிய கவிமணி அவர்கள், உமார்கயாம் மெச்சின பாரசீகக் கவிதை நூலுக்குப் பதிலாக கம்பனுடைய இராமாயணத்தைக் கூறுகிறார் அச்செய்யுள்:

**'வெய்யிற் கேற்ற நிழலுண்டு**
**வீசுந் தென்றற் காற்றுண்டு**
**கையிற் கம்பன் கவியுண்டு**
**கலசம் நிறைய மதுவுண்டு**
**தெய்வ கீதம் பலஉண்டு**
**தெரிந்து பாட நீயுண்டு**
**வையத் தருமில் வனமன்றி**
**வாழும் சொர்கம் வேறுண்டோ.'**

வேறு சில பாரசீகக் கவிதைகளைக் கவிமணி அவர்கள் 'பாரசீகத் தனிப் பாடல்கள்' என்னும் தலைப்பில் செய்யுட்களாகப் பாடியுள்ளார்.

வெள்ளக்கால் திரு.வெ.ப.சுப்பிரமணிய முதலியாரவர்கள். கவிமணி யவர்கள் காலத்தில் வாழ்ந்த புலவர். இருவரும் நெருங்கிய நண்பர்கள். சுப்பிரமணிய முதலியார் அவர்கள், நெல்லைச் சிலேடை வெண்பா, கோம்பி விருத்தம், சுவர்க்க நீக்கம் முதலான செய்யுள் நூற்களை இயற்றிய புலவர். கவிமணியவர்கள் முதலியார் அவர்களை 'எண்பதாண்டான இளைஞர்' என்று பாராட்டியுள்ளார். (கவிமணியின் உரை மணிகள் என்னும் நூலைக் காண்க) முதலியார் அவர்களைப் பற்றிக் கவிமணி எழுதுகிறார்.

''வெள்ளக்கால் திருவாளர் வெ.ப. சுப்பிரமணிய முதலியாரவர் களை நெருங்கிப் பழகினவர் ஒருவரேனும் அவரை ஒரு குடுகுடு கிழவ ரென்று

கூறத்துணியாரென்பது உறுதி. அவரது சுறுசுறுப்பைக் கண்ட எந்த இளைஞனும் அவர் முன் நாணித் தலை குனிந்து விடுவான். ஏதேனும் ஒரு விஷயத்தைக் குறித்து முதலியாரவர்களோடு வாதப் பிரதிவாதம் செய்யத் தொடங்கினால் போதும்; அவருக்கு ஊக்கம் எப்படியோ உண்டாகிறது; விருத்தர் குமரராகி விடுகிறார்'' என்று எழுதுகிறார். பிறகு.

**'எண்பதாண் டான இளைஞனே! இன்னமுதின்**
**பண்பெலாங் காட்டு தமிழ்ப்பாவலனே! - நண்பனே!**
**வெள்ளகாற் செல்வனே! வேள்சுப் பிரமணிய**
**வள்ளலே! வாழ்க மகிழ்ந்து'**

என்று வாழ்த்துகிறார்.

வெ.ப.சு. அவர்களை 'எண்பதாண்டான இளைஞர்' என்று கவிமணிய வர்கள் கூறுவது முற்றிலும் உண்மை; வெறும் புகழ்ச்சி, உயர்வு நவிற்சி என்று கருதவேண்டா. திரு. வெ.ப.சு. அவர்களை இக்கட்டுரையாளர் பல ஆண்டு களுக்கு முன்பு நேரில் கண்டு இருக்கிறார். அப்போது, வெ.ப.சு. அவர்களின் முதுமையில் இளமையைக் கண்டு வியந்தார். இக்கட்டுரையாளர் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில், முத்தமிழ்ப் பேராசிரியர் தவத்திரு விபுலாநந்த அடிகளாரோடு இருந்தபோது, திரு. வெ.ப.சு. அவர்கள் அடிகளாரைக் காண வந்தார்கள். அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர் களாகையால் அடிகள் முதலியாரை வரவேற்று அளவளாவினார்கள். அடிகள் அமரச் சொல்லியும் அமராமலே திரு. வெ.ப.சு. நின்றுகொண்டே அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். இக்கட்டுரையாளரும் அருகில் நின்று கொண்டே முதலியாரவர்களைக் கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந் தார். முதிர்ந்த வயதிலும் முதலியார் அவர்கள் சுறுசுறுப்புள்ள இளைஞராகக் காணப்பட்டார். அவருடைய மெல்லிய உடம்பில் இளமையும் உவகையும் தென்பட்டன. திரு.வெ.ப.சு. விடை பெற்றுச் சென்ற பிறகு, விபுலாநந்த அடிகள் 'இவர்தான் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார்' என்று கூறி னார்கள். கவிமணி அவர்கள் வெ.ப.சு. அவர்களை, எண்பதாண்டான இளைஞர் என்று கூறுவது முற்றிலும் உண்மையே. முதுமையிலும் இளமை யோடிருந்தவர் திரு. வெ.ப.சு. அவர்கள்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள், தமிழ் மொழி வளர்ச்சியைப் பற்றிக் கூறிய கருத்து கருதத்தக்கது. 1951-ம் ஆண்டு ஏப்ரல்

மாதம் திருச்சி ரேடியோ நிருபர், கவிமணியவர்களைப் பேட்டி கண்டபோது கவிமணியவர்கள் இதுபற்றிக் கூறியது:

'தமிழ் வளர்ச்சிக்கு முதலாவது வேண்டியது கலாசாலைகளில் தமிழின் மூலமே எல்லாப் பாடங்களும் கற்பிக்க வேண்டும். காரியாலயங்கள் அனைத்திலும் கடிதப் போக்குவரத்துக்குத் தமிழையே உபயோகப் படுத்தவேண்டும். அப்பொழுதுதான் அவசியமும் ஆர்வமும் உண்டாகும். பல புஸ்தகங்கள் வெளிவரும் மொழிவளரும். இங்கிலீஷ், பிரஞ்சு, ஜெர்மன் முதலிய பாஷைகளிலுள்ள நூல்கள் தமிழ் மொழியில் நமக்கு வேண்டும். மொழி பெயர்ப்பு முக்கியமானது. அநேக நூல்களை வேறு பாஷைகளிலிருந்து மொழி பெயர்க்க வேண்டும். முதல் நூல்களைத் தமிழ் மொழியிலேயே எழுத வேண்டும் என்பது சொல்லவே வேண்டியதில்லை. கற்றவர்கள் தாங்கள் எழுதும் முதல் நூல்களைத் தாய் மொழியிலேயே எழுத வேண்டியது அவசியம்.'' (எனது லட்சியம். கவிமணியின் உரைமணிகள்)

இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கவிமணி அவர்கள் கொண்ட கருத்து இப்போது ஓரளவு செயற்பட்டு வருகிறது.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களுக்கு இசைக்கலையிலும் ஆர்வமும் பயிற்சியும் உண்டு. 'தேசக் கொடி' என்னும் செய்யுளை அவர் இசைப்பட்டாகவே பாடியுள்ளார். இசைப் பாடலைப்பற்றி அவர் கொண்ட கருத்துக்கள் போற்றத்தக்கவை. அவர் கூறுகிறார்:

''பாடல்களைப் பண்ணோடு பாடும் போதுதான் அதற்கு உயிர் உண்டாகிறது; பொருள் விளக்கம் ஏற்படுகிறது; பூரணமாகிறது. ஒருவனது மனக் கருத்து முழுமையும் அலுங்காத குலுங்காத வெறும் வார்த்தைகளைக் கொண்டு வெளிப்படுத்திவிட முடியாது. வெறும் சொற்களுக்கு அந்தச் சக்தி இல்லை. அவற்றோடு எடுத்தல், படுத்தல், நீட்டல், குறுக்கல் முதலான உச்சரிப்பு வேறுபாடுகள் கலக்கவேண்டும். அதாவது பாவத்தை வெளிப் படுத்தும் இசை கலக்கவேண்டும். இசையும் வார்த்தையும் கலந்தால்தான் இதயம் பூர்ணமாய்த் திறந்ததாகிறது.

**''ஐயா நீ அருள் செய்ய வேண்டும் - உன்றன்**
**அடியிணை யன்றிவே றொருதுணை அறியேன்.**

என்ற அடிகளைப் பண்ணோடு இசைப்பதனால் உண்டாகின்ற பொருள் வெறும் வாசிப்பினால் மட்டும் உண்டாகுமா? ஒரு நாளுமில்லை.''

இசை பாடுகிற பாடகர்கள் கவனிக்க வேண்டிய சில விஷயங்களை அவர்களுக்குக் கவிமணி கூறுகிறார்: - ''கீர்த்தனைகளைப் பாடும் பாகவதர்கள் கவனிக்க வேண்டியவை நிறைய உண்டு. முதலாவது, சங்கீதத்தைப் போலவே அவர்கள் சாகித்தியத்தையும் மதிக்க வேண்டும். இரண்டாவது, பாட்டின் பொருளை அவர்கள் நன்கு தெரிந்து அப்பொருள் விளங்குமாறு தெளிவுபட உச்சரிக்க வேண்டும். இசை ஒன்றையே கவனித்து நெடிலைக் குறுக்கியும், குறிலை நீட்டியும் சில எழுத்துக்களை விழுங்கியும் தேய்த்தும் உச்சரித்துப் பொருட் பிழை உண்டாக்கக் கூடாது. மூன்றாவது சொற்களைப் பிரிக்கும்போது பொருளற்ற முறையில் பிரிக்காமல் ஏற்றவாறு பிரித்தும் இசைத்தும் பாடவேண்டும், எல்லாவற்றுக்கும் பாவம் நன்கு வெளிப்படுத்தப் படல் வேண்டும். அதாவது பாடல் இயற்றின ஆசிரியனின் பாவம் வெளிப் படுமாறுள்ள இசை தாளங்களை அமைத்து, அந்த உணர்ச்சி வசத்தனாக நின்று கேட்போரும் அதே நிலை யடையுமாறு சுவைத்து ரசித்துப் பாடவேண்டும். இதுதான் மிகமிக முக்கியமானது.''

இவை போன்ற இன்னும் சில செய்திகைளக் கூறுகிறார், (தமிழிசை, கவிமணியின் உரைமணிகள்)

தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் கவிபாடும் கலைஞர் மட்டுமல்லர். கல்வெட்டுச் சாசன ஆராய்ச்சிகளிலும் வரலாறு எழுதுவதிலும் பயிற்சியுள்ளவர். கல்வெட்டு ஆராய்ச்சி கடினமான தொன்று. இந்தத் துறையில் புகுந்து ஆராய்ச்சி செய்கிறவர் மிகச் சிலர். கல்வெட்டுகளைப் பற்றியும் தென்னிந்திய வரலாறுகள் பற்றியும் கவிமணி அவர்கள் கட்டுரைகளை எழுதியுள்ளார். இத்துறைகள் அவருக்கு விருப்பமானவை என்று அவரே கூறியுள்ளார்.

''கவிகளைத் தவிர நான் விரும்பிக் கற்கும் விஷயம் தென்னந்தியக் கல்வெட்டுகளும், தென்னிந்திய சரித்திரமும், தமிழோடு இணைந்திருப்பதால், இவற்றை ஆராய்ந்து கட்டுரைகளும் எழுதியிருக்கிறேன். தமிழுக்கு இத்தகைய ஆராய்ச்சி மிக்க அவசியம் என்பதை நான் அனுபவத்தில் அறிந்திருக்கிறேன் அதுபோலவே தென்னிந்தியக் கல்வெட்டுகள் பற்றிய ஆராய்ச்சிக்கும் தமிழ்மொழியில் நல்ல பயிற்சி அவசியம் என்பதில் யாதும் ஐயமில்லை'' (எனது லட்சியம். 1951 - ஆண்டு ஏப்ரல் மாதம் திருச்சி ரேடியோ நிருபருக்கு அளித்த பேட்டி கவிமணியின் உரைமணிகள்.)

'சாசன ஆராய்ச்சி' என்னும் கட்டுரையில் கவிமணி அவர்கள் சாசனங்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:- 'இச் சாசன காலம் முதற்

கொண்டே ஒரு நாட்டின் ஆட்சிப் பரம்பரையை நம்மால் அறியமுடிகிறது. இவைகளில்லாவிட்டால் பழமையைப் பொறுத்த அளவில் நாம் குருடர் களாகவன்றோ இருப்போம்? ஆகவே சாசனங்களை, இருண்டு கிடந்த பழங் கால வரலாற்றை விளக்கிக் காட்டும் ஒளி விளக்குகள் என்று சொன்னால் குற்றமாகாது.'

சாசன ஆராய்ச்சி செய்வோருக்கு இருக்க வேண்டிய பண்புகளைக் கவிமணி விளக்கமாகவும் தெளிவாகவும் கூறுகிறார். இவற்றைச் சாசன ஆராய்ச்சி செய்வோர் ஊன்றிக் கவனிக்கக் வேண்டும். கவிமணி கூறுவது வருமாறு:

''நாம் இங்கே சாசனம் என்று குறிப்பிடுவது கல்லெழுத்து, செப்பேடு, ஓலைப்பிரமாணம் முதலியவற்றையாகும். பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சாசனங்களைப் படித்தறிந்து அக்கால வரலாறுகளையும் வழக்கங் களையும் அறிந்து கொள்வதென்பது எளிதல்ல. இதற்கு முதலாவது, அக்கால வரிவடிவங்களாக வட்டெழுத்து, கோலெழுத்து, மலையாளம், கிரந்த லிபி போன்றவற்றில் நல்ல பயிற்சியும் பாண்டித்தியமும் வேண்டும். இரண் டாவது, தமிழிலக்கியத்தில் தேர்ச்சியும், சுற்றுப்புற மொழிகளில் ஓரளவு அறிவும் வேண்டும். மூன்றாவது, ஒரு காலத்தைப்பற்றி ஆராயப் புகும்போது அக்காலப் பழக்க வழக்கங்கள் இவையாயிருக்கலாம் என்னுணர்தற்கேற்ற பரந்துபட்ட அறிவு அமைந்திருத்தல் வேண்டும். நான்காவது, நாடோடிப் பேச்சு வழக்கைப் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வளவுக்கும் மேலாகத் தன்னபிமானம் என்ற மாசு நீங்கி உண்மை காண வேண்டுமென்ற ஆசை சுரக்கின்ற மனநிலை அமைந்திருத்தல் வேண்டும். இவ்வளவும் பொருந்தப் பெற்றோரே ஆராய்ச்சிக்குத் தகுதியுடையோராவர்.

'இருண்டு கிடக்கும் பண்டைக் கால வரலாறுகளைத் துலங்க வைக்கும் தீபங்களாயிருப்பவை சாசனங்கள் என்பதற்கு ஐயம் இல்லை. பழக்க வழக்கங்கள், பண்பாடு, சொற்கள் பொருளேற்று நிற்கும் நிலை முதலிய பலவும் சாசனங்களாய் விளங்கக் கூடியனவாம். அவற்றை அறிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பத்தால் அத்துறையில் இறங்கியவர்கள், நாளடைவில் தம்மை மறந்த நிலையில் ஒருவகைப் புத்தின்பம் துய்ப்போராகி விடுவர். சாசன ஆராய்ச்சி அவ்வளவுக்கு இன்பம் தருவதெனினும் அதனைப் படிப்பதும் உணர்வதும் நேர் எதிராக அந்த அந்த அளவுக்குத் துன்பம் தருவனவாம். எத்துணைப் பழக்கமுடையோரையும் ஏமாற்றிவிட வல்லவை

*சாசனங்கள். வாசித்து அறிவதிலும் பொருள் கொள்வதிலும் எத்தனையே பதிப்பாசிரியர்கள் வழிதவறிப் போயிருக்கிறார்கள்'' (சாசனங்களும் வியாக்கியானங்களும் என்னும் கட்டுரை).*

*சுசீந்திரம் தேவாரப் பாடசாலையில் எட்டாவது ஆண்டு விழாவில் (15-9-1924) தலைமை தாங்கிப் பேசின தலைமையுரையிலும் கவிமணிய வர்கள் கோயிலில் உள்ள கல்வெட்டுகளைப் பாதுகாப்பது பற்றிக் கூறி யுள்ளார். (தலைமையுரை, கவிமணியின் உரைமணிகள்)*

*''சாசனங்களோ சீரழிந்து கொண்டு வருகின்றன. அவற்றைக் கவனிப் பாரில்லை. சாசனக் கற்களைத் துண்டுபடுத்துகிறார்கள். அவற்றின் மேல் சுண்ணாம்பு பூசுகிறார்கள். இப்படி விலையறிய முடியாதவர்களால் சாசனங் கள் பெரிதும் அழிந்து வருகின்றன. அதிகாரிகள் இவற்றில் சற்றுக் கவனம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாசனங்களைத் துலக்கிச் சாயமிட்டு, ''யாவரும் படிக்குமாறு செய்ய வேண்டும். அவற்றின் பக்கத்தில் சிறு குறிப்புக் கூடக் கொடுக்கலாம்.*

*கவிமணியவர்கள் சாசன எழுத்துக்களைப் படித்து ஆராய்ந்து சில கட்டுரைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியிருக்கிறார்கள். புலைப்பேடி, சாசனங்களும் விநோத வியாக்கியானங்களும், திரிபுவன தேவி சாசனம், சோழபுரம் சாசனம், உலகமுழுதுடையாள் சாசனம், பராந்தக பாண்டியன் சாசனம் முதலான கட்டுரைகள், வரலாறுகளைச் சாசன அடிப்படையில் ஆராய்கிற கட்டுரைகளாகும்.*

*கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையவர்கள் சிறந்த கவிஞர். கவிஞருக்கு இருக்க வேண்டிய பரந்த உள்ளம் படைத்தவர். தேச பக்தர் கல் வெட்டாராய்ச்சியாளர். வரலாற்று ஆசிரியர் அடக்கமாக வாழ்ந்து கவிதை களையும் நூல்களையும் எழுதியுள்ளார். அவருடைய பாட்டுகள் உயிருள் ளவை. ஆகவே அவை அழியாப் புகழ்படைத்தவை. நம்முடைய காலத்தில் வாழ்ந்து நற்றொண்டாற்றின அவருக்கு நம்முடைய அஞ்சலியை செலுத்துகிறேன்.*

**- கவிமணி தேவிமலர் - 1975**

***



மயிலை சீனி. வேங்கடசாமி

# தமிழுக்கு வழங்கிய கொடை

3